அச் 2003

10-9-2001

உள்ளடக்கம்


086 பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 635-655

(ஆ) குறுகிய கால வினாக்கள் 656-661

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

(அ) தமிழக மீனவர்கள் ஆந்திர கொள்ளையர்களால் கடத்தப்படுதல் 662-667

திரு. பரிதி இளம்வழுதி 662-663,666

திரு. சி. ஞானசேகரன் 663-664

திரு. டி. மணி 664-665

*மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் 665-666

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 666-667

(ஆ) மாணவிகள் eve-teasing கொடுமையால் துன்புறுத்தப்படுதல் 667-679

*திரு. எ.வ. வேலு 668-669

திரு. சி. ஞானசேகரன் 669-671

திரு. ஐ. கணேசன் 671-672

திரு. டி. மணி 672-673

திரு. வை. சிவபுண்ணியம் 673-674

திரு. ஆஸ்டின் 675-676

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 677-679

223951
சென்னை-600 008

பக்கங்கள்

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன் வடிவு, 2001. — 680

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 2001 — 680-681

4. அறிவிப்புகள்—

(அ) புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு — 681

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து தள்ளிவைப்பு — 681

(இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கல் — 718

5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு
(ஆ) கோரிக்கை எண். 34—நுகர்பொருள் வழங்கல் } 682-811

*மாண்புமிகு திரு. ப. தனபால் — 680, 687,691, 762-804

*திரு. ப. ரங்கநாதன் — 692-700

திருமதி டி. யசோதா — 708-717

*திரு. அ. நடராஜன் — 718-725

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் — 725-733

5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு

(ஆ) கோரிக்கை எண். 34—நுகர்பொருள் வழங்கல்—தொடர்ச்சி

பக்கங்கள்

*திரு. பி.எஸ். உலகரட்சகன் — 734-740

*திரு. இரா.தா. இன்பத் தமிழன் — 740-744

திரு. வை. சிவபுண்ணியம் — 744-751

*திரு. கே.சி. கருணாகரன் — 751-756

*திரு. பெ. பழனியப்பன் — 756-762

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— — 812

D
V2'',3' P01
P01.11.3

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஆவணி 25, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2032**
**2001 செப்டம்பர் 10, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை."*

இருப்போர், இல்லாதோர் என்று இல்லாமல் கிடைத்ததைப் பகிர்ந்துண்டு எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சம நிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண். 67. திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**67—**

**சட்டப் பல்கலைக்கழகம்**

***1535—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

*மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, பள்ளிக்கரணையில் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பள்ளிக்கரணை கிராமத்தில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு 3-7-2000 நாளிட்ட வருவாய்த் துறை அரசாணை (நிலை) எண் 363-ல் அரசு ஒதுக்கியுள்ள 17.87 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஆரம்பக்கட்ட வேலையாக சட்டப் பல்கலைக் கழகத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் மண் நிரப்பி சரிமட்டம் செய்வதற்கும், முள் கம்பி வேலி அமைப்பதற்கும் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அளித்துள்ள கருத்துருக்கள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பல்கலைக்கழகம் கட்டுவதற்கான இடமாற்றம் எப்போது நிறைவேற்றப்படும்? அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் மண் நிரப்பி, வேலி அமைத்து கட்டடங்கள் கட்டுவதற்காக எவ்வளவு நிதியினை இந்த அரசு ஒதுக்கிட இருக்கிறது? அதை இந்த ஆண்டே செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நிலக்கிரயத்திற்காக 6 கோடியே 10 இலட்சத்து 84 ஆயிரத்து 60 ரூபாய் ஒதுக்கீடு செய்வது பற்றி அரசின் பரிசிலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூரில் உள்ள National Law School பாடத் திட்டங்களை நம்முடைய மாநிலத்தில் அம்பேத்கர் சட்டக் கல்லூரி மற்றும் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் உள்ள நமது மாணவர்கள் பயில அரசு பரிசிலிக்குமா? Bar Council of India மற்றும் மத்திய அரசிடமிருந்து அந்தப் பாடத் திட்டங்களை அறிந்து இங்கே நம்முடைய மாணவர்கள் பயில



அரசு பரிசிலிக்குமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இட்ட ஆணைக்கேற்ப International standard—உலகத் தரத்திற்கு தற்போதிருக்கின்ற World Trade Organisation—உலகமயமாக்கல் தொடர்பான சட்டங்களையும் உள்ளடக்கிய ஞானம் கிடைக்க வேண்டும்; அது International standard--ஆக இருக்கவேண்டும் என்ற அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தற்போது அரசு முடிவெடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பல்கலைக்கழகத்தில் International தரத்திற்கேற்ப ஞானம் கிடைப்பதற்கான வழியை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு, ஞானசேகரன் தொகுதியான வேலூர் தொகுதியிலே சென்ற ஆட்சியிலே சட்டக் கல்லூரி கொண்டு வருவதாக அறிவிப்பு செய்தார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே வந்தது. இந்த ஆண்டு, அந்தச் சட்டக் கல்லூரி தொடங்கப்படுமா? International level-ல் இருக்கக்கூடிய அந்தப் பாடத் திட்டங்கள் அங்கே வைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் உள்ளிட்ட இன்னும் சில பகுதிகளிலும்கூட புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்படலாம் என்ற ஒரு முடிவினை அரசு தற்போது எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தனியார் சட்டக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான தடை ஏதும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

[2001 செப்டம்பர் 10

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Distance studies—தொலைதூரக் கல்வி என்கிற அடிப்படையில் பல பட்ட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆனால், சட்டப் பல்கலைக்கழகத்தில் அப்படி நடத்தப்படுவதில்லை. இப்போது வழக்கறிஞர்கள் அதிகமாக நாட்டிற்குத் தேவை என்கிற அடிப்படையில் Distance studies—தொலைதூரக் கல்வித் திட்டம் சட்டப் பல்கலைக்கழகத்திலும் கொண்டுவர இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பு இறுதியாண்டில் பயிற்சி முகாமையும் உள்ளடக்கியிருக்கின்ற காரணத்தால், அதுபோன்ற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. பல பகுதிகளில் சட்டக் கல்லூரி கொண்டு வரலாம் என்ற ஒரு நோக்கம் இருக்கிற காரணத்தால், அதை ஈடேற்றுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் ஈடேறிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செ.மா. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் சட்டமேற்படிப்பு கொண்டுவர அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைப் பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமேற்படிப்பு ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரங்கநாதன். ஏன் பள்ளி கொண்டீரய்யா, ரங்கநாதரே. உட்காருங்கள். திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது சட்டக் கல்லூரி, வேலூரைப் போல பல பகுதிகளிலும் தொடங்குவதற்கான எண்ணம் அரசுக்கு இருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். கடலூர் மாவட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த சட்டக் கல்லூரி இப்போது இல்லாத சூழ்நிலையில், பல பகுதிகளில் சட்டக் கல்லூரி அமைகின்ற ஒரு நிலை பற்றி, யோசிக்கிறோம் என்று அமைச்சர் சொன்ன நிலையில், அதில் கடலூரும் இருக்கிறதா—கடலூர் இருக்க வேண்டும் என்ற அந்த எண்ணத்தையும் வெளிப்படுத்தி—என்று கேட்க விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. புகழேந்தி, பல பகுதிகள் என்றால் அதிலே கடலூர் இருக்குமா என்பது தனியாகக் கேட்க வேண்டும். திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் என்ன திருவண்ணாமலை பற்றியா?

**திரு. கு. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயிருக்கிற சட்டக் கல்லூரிகளில் மொத்த இடங்கள் எத்தனை? அதற்காக இந்த ஆண்டு விண்ணப்பித்தவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? அதிக அளவில் இருக்கக்கூடிய அவர்களுக்கு இடம் கிடைக்கக்கூடிய வகையிலே புதிய சட்டக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த தகவல் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை சட்டக் கல்லூரிகளை அரசு அமைக்கவிருக்கிறது என்பதை அவையின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. குறுகிய காலத்திலேயே முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 68, மாண்புமிகு கல்வி அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 69, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

69—

[2001 செப்டம்பர் 10

## தொகுப்பு வீடுகள்

***889—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, வடக்கு பொன்னிரை கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆலத்தம்பாடி ஊராட்சியைச் சேர்ந்த பொன்னிரை கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தில், நடப்பு ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வீடுகள் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகள் இந்த நிதியாண்டுக்குள் கட்டி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலத்தம்பாடி, பொன்னிரை கிராமத்துக்கு 10 வீடுகள் கட்டுவதற்காக அனுமதிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்திலே, ஒரு தெருவிலே 30 அல்லது 40 குடியிருப்பு மனைப்பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த இடத்திலே, குறைந்தபட்சமாக 25 வீடுகளாவது கட்டுவதற்கு அரசு அனுமதிக்குமா? அதோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கக்கூடிய பூமி களிமண் பூமியாக இருப்பதாலே, அங்கே கட்டப்படுகிற தொகுப்பு வீடுகள் அனைத்திலும், கட்டிய சில மாதங்களிலேயே வெடிப்பு ஏற்பட்டு விடுகிறது. அது அந்தக் குடியிருப்புகளுக்குப் பாதகமாக அமைந்துவிடுகிறது. ஆகையினால், அந்த வீடு கட்டுகிற திட்டத்தில் 34,000 ரூபாயை 40,000 ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா, தரமான வீடு கட்டுவதற்கு அரசிடத்தில் திட்டம் உள்ளதா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளைக் கட்டுவதற்கான தொகையை நிர்ணயிப்பது மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பாக இருக்கின்ற காரணத்தினால், மாநில அரசு தன்னுடைய பங்காக ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயிக்கிறது. ஒரு வீடு இவ்வளவு ரூபாய்க்குள்தான் கட்டப்பட வேண்டுமென்று மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், இன்றைக்குள்ள விலைவாசியைப் பொறுத்த அளவில், வீடுகள் கட்டுவதற்கு இந்தத் தொகை குறைவானது என்பதை மத்திய அரசுக்கு எழுதி கூடுதல் தொகை பெறுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, ஒவ்வொரு ஊராட்சியிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள் அதிகப்படியாக இருந்தால் அங்கே ஊராட்சி ஒன்றியங்களில் பட்டாக்கள் பதிவு செய்யப்பட்டு சுழற்சி முறையில் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே ஆதிதிராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே 10 வீடுகள் என்பது குறைவானது என்று சொல்கின்றபோது, வரக்கூடிய நிதியாண்டில் அந்தக் கிராமத்தில் மேலும் வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிஎம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,15 ஆண்டுகளுக்கு முன்பு ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவை சில இடங்களிலே பழுதடைந்துள்ளன. அவற்றைப் பழுது பார்த்து சரி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி, முன்பு கட்டப்பட்டு இப்போது இடிந்த நிலையில் இருக்கின்ற வீடுகளைப் புதுப்பிப்பதற்கு, கச்சா வீடுகள் என்ற திட்டத்தின் அடிப்படையில் ரூபாய் 10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பகுதியில் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நிதியொதுக்கீடு செய்து, ஊராட்சியின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அந்த வசதி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்படுகின்ற சமயத்திலே 100-க்கு 85 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 15 வீடுகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்கப்படுகின்றன. இந்தக் காலக் கட்டத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழே மிகவும் பாதிக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். எனவே, இந்த அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி 100-க்கு 15 வீடுகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்பதை 30 விழுக்காடாக உயர்த்தி கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கிராமப்புறங்களில் மட்டும்தான் ஒதுக்கப்படுகிறது. பேரூராட்சி சம்பந்தப்பட்ட எல்லைக்குள் இதுவரை ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பேரூராட்சியிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இதனை விரிவுபடுத்துமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகள் நகர் பாலிகா சட்டத்தின்படி நகரிலே அமைந்திருக்கிற காரணத்தால், கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு வீடுகள் கட்ட நம்முடைய மத்திய அரசு ஆணையிட்டிருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, நகர்ப்புறங்களிலே கட்டுவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.



2001 செப்டம்பர் 10]

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-லிருந்து 1996 வரை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே, நம்முடைய உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, பேரூராட்சிப் பகுதிகளிலும் ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. கடந்த கால ஆட்சியில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. பேரூராட்சிப் பகுதிகள் கிராம அளவிலே பெரிய ஊராக இருந்தாலும்கூட, அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல், 1996 ஆம் ஆண்டிற்குப் பின்புதான் உள்ளாட்சித் தேர்தல் அமைப்புச் சட்டங்கள் எல்லாம் திருத்தப்பட்டு கிராமப்புற ஊராட்சிகள், நகர்ப்புற ஊராட்சிகள் என்று மத்திய அரசு புதிய சட்டத்தை உருவாக்கியதன் காரணமாக, பேரூராட்சிப் பகுதிகள், நகராட்சிப் பகுதிகள், மாநகராட்சிப் பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு, நகர்ப்பகுதியிலே வரக்கூடிய காரணத்தால் பேரூராட்சிப் பகுதிகளில் வீடுகள் கட்ட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். நான் நன்றி சொல்லப் போகின்றபோது என்னிடம் சுமார் 3000 கோரிக்கை மனுக்கள் வந்து குவிந்தன. என்னுடைய பகுதி தாழ்த்தப்பட்ட மக்களை மிகவும் உள்ளடக்கிய பகுதியாகும். ஆகவே, இந்த நிதியாண்டில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் வாயிலாக, கூடுதலாக என் தொகுதி மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போட வேண்டும் அம்மா. இதற்கு, தனிக் கேள்வி போடவும். அமைச்சர் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் முன்பெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள்

[2001 செப்டம்பர் 10

பரிந்துரையைப் பெற்று பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டன. தற்சமயம் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இனிவரும் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஊராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையிலும், கிராம சபை தீர்மானத்தின் அடிப்படையிலும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள பயனாளிகளைத் தேர்வு செய்கிற திட்டம். அவ்வாறு விதிமுறை இருக்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர் பெருமக்களோ ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் தலையிட இயலாது என்பதைத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அ. இரா. மலையப்பசாமி:

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு எந்த அடிப்படையில், தொகுப்பு வீடுகள் கட்ட இடமும், பயனாளிகளும் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்றும், ஒரு தொகுதிக்கு எவ்வளவு வீடுகள் கட்ட இருக்கிறார்கள் என்றும் யாராவது கூறியதுண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு, ஒரு தொகுதிக்கு இத்தனை வீடுகள் என்று இல்லை. மாவட்ட அளவில் எத்தனை வீடுகள் என்று மக்கள் தொகையைக் கணக்கிட்டு மத்திய அரசாங்கமே நேரிடையாக ஒதுக்கீடு செய்கிறது. மேலும், பட்டா வழங்குதல் மற்றும் தேர்வு செய்வதெல்லாம் ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலமாகவும், ஒரு தொகுப்பு வீட்டிற்கு இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இவ்வளவு ரூபாய் என்று மத்திய அரசுதான் நிர்ணயம் செய்கிறது. இதில் மாநில அரசு ஒரு பங்குத் தொகையாகக் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே. சுதர்சனம்.



2001 செப்டம்பர் 10]

**திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் குடி தண்ணீருக்காக மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு நிதியும் இல்லாததால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுதர்சனம், இது தொகுப்பு வீடுகள் பற்றிய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. ஆஸ்டின், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**70—**

**வேலைவாய்ப்பு**

***3949—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 31-3-2001 நிலவரப்படி வேலை கோரி பதிந்துள்ள தொழிற்கல்வி பட்டதாரிகள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் மருத்துவப் பட்டதாரிகள் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 31-3-2001 நிலவரப்படி வேலை கோரி பதிந்துள்ள தொழிற்கல்வி பட்டதாரிகள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | தொழிற்கல்வி பட்டதாரிகள் | 46,781 |
| 2. | பட்டதாரி ஆசிரியர்கள் | 1,05,342 |
| 3. | மருத்துவப் பட்டதாரிகள் | 5,670 |

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற் கல்வி பட்டதாரிகள் கிட்டத்தட்ட 46 ஆயிரம் பேரும், பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் பேரும், மருத்துவப் பட்டதாரிகள் 5670 பேரும் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து, பணி கிடைக்காமல் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுக்கு எத்தனை ஆண்டு காலத்திற்குள்ளாக

[2001 செப்டம்பர் 10

அரசால் வேலைவாய்ப்பு வழங்க முடியும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கான காலியிடங்கள் எவ்வளவு வேகமாக வருகிறதோ அதற்கேற்றாற்போல் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பிறகு கூப்பிடுகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகம் என்பதற்கு பதில், வேலைவாய்ப்பு கொடுக்க முடியாத அலுவலகம் என்ற அளவில்தான் இப்போது நம்முடைய வேலைவாய்ப்பு அலுவலகங்கள் எல்லாம் வேலையே கொடுக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய தமிழகத்தில் இப்படி நிறைய பேர் குறிப்பாக, தந்தையும் மகனும் இருவருமே சேர்ந்து **renewal-க்குப்** போகக்கூடிய ஒரு நிலை பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இவர்களுக்கெல்லாம் எவ்வளவு வேகமாக காலியிடங்கள் வருகிறதோ அவ்வளவு வேகமாக வேலை கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்திருக்கிறார்கள். அமைச்சர் கணக்கிட்டிருக்கிற இந்த வேகத்தைக் கணக்கிட்டுப் பார்ப்போம் என்று சொன்னால், இன்னும் எத்தனை ஆண்டுகளில் இந்தத் தொழிற் கல்வி படித்திருக்கிற பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும்? அதேபோல, பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும்; மருத்துவம் படித்து இருக்கக்கூடிய ஐயாயிரத்துச் சில்லரை....

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், அமைச்சர் ஒன்றும் ஆலமரத்தடி ஜோதிடர் அல்ல. எப்போது காலியாக இருக்குமோ அப்போது வேலை கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார். மறுபடியும் ஏன் அவரைப்போய்க் கேட்கிறீர்கள்?



2001 செப்டம்பர் 10]

**திரு. சி. ஞானசேகரன்:** எந்தெந்தத் துறையில் எத்தனை காலியிடங்கள் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவைக்குத் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன். டாக்டருக்கு எவ்வளவு vacancy இருக்கிறது? அதேபோல பட்டதாரி ஆசிரியர்களுக்கு எவ்வளவு vacancy இருக்கிறது? தொழிற்கல்வி பட்டதாரி ஆசிரியர்களுக்கு தமிழகத்தில் எவ்வளவு vacancy இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இது வேலைவாய்ப்பு அலுவலகம்தான்; வேலை வழங்கும் அலுவலகம் அல்ல. வேலைக்கு interview அனுப்புவதுதான் இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தினுடைய பொறுப்பே தவிர, வேலைவாய்ப்பு அலுவலகம் appointment authority அல்ல. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எனவே, முன்பு போல, எல்லா வேலைகளுக்கும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெயர் பட்டியல் அனுப்பப்படுவதில்லை. ஏனென்றால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகத் தேர்வாணையங்கள் இப்போது இருக்கின்றன. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (Union Public Service Commission) என்று ஒன்று இருக்கிறது. இரயில்வே பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஆகிய தேர்வாணையங்கள் செயல்படுவதோடுகூட, ஆயுள் காப்பீட்டுக் கழகம், Banking Service Recruitment Board இப்படி தனித்தனியாக recruit செய்யப்படுவதால், கணக்கு என்று வருகிறபோது, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வழங்கப்படுவது மிகக் குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலியிடங்களைப் பொறுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது நம்முடைய அரசிலே ஏற்படக்கூடிய காலியிடங்களைப் பொறுத்து அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று சொன்னால் பல பேருக்கு வயது வரம்பு கடந்து விடக் கூடிய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டுவிடும். எனவே, தொழிற்கல்வி படித்தவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், மருத்துவப் பட்டதாரிகளுக்கும், அவர்களுடைய படிப்புக்கு ஏற்ப அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்காக ஏற்கெனவே, நாங்கள் கடந்த இரண்டு,

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பு நிதி உதவிக் கழகம் ஒன்றை தொடங்கவேண்டுமென்று சொல்லி, முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் மனு கொடுக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** அந்த மனுவின் அடிப்படையிலே முன்னாள் முதலமைச்சர் ஒரு கமிஷனை அமைத்து, அந்த கமிஷன் இப்போது அரசுக்கு அறிக்கையைத் தந்திருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையிலே சுய வேலைவாய்ப்பு நிதி உதவிக் கழகம் ஒன்றைத் தொடங்கி, தொழிற்பட்டதாரிகளுக்கும், மருத்துவப் பட்டதாரிகளுக்கும், அவர்களுடைய படிப்புக்கு ஏற்ப தொழில் தொடங்க உதவுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் வேலைவாய்ப்பு இருக்கிறது என்று தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், தனியார் கம்பெனிகளில் எங்கெங்கே வேலையிருக்கிறது என்று கண்டறிந்து, தனியார் துறைகளிலும் பணியமர்த்தச் செய்ய வேண்டிய நடவடிக்கையையும் இந்த அரசு முனைப்புடன் செய்துவருகிறது. அதைத் தொடர்ந்து எல்லா மாவட்ட அளவிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க வேண்டுமென்று பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதேபோல, எல்லா முயற்சிகளும் இதற்கு எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ஏற்கெனவே முந்தைய அரசு அப்படி முயற்சி செய்திருக்குமேயானால், அது என்ன என்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு, பட்டதாரி ஆசிரியர்களுக்கு, வயது வரம்பு 35 என்பதைக் குறைத்திருப்பதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் பலபேர் பதிவுசெய்து வேலை கிடைக்காமல், மனவெறுப்பின் காரணமாகவே மறுபதிவு செய்யாமல் விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 18 மாதம் என்பதைத் தளர்த்தி, மீண்டும் அந்த seniorityபடி பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்வதற்கு அரசு ஆணையிடுமா, அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க அரசு முயற்சி எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இந்த அரசு ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அதாவது 1-1-1999 முதல் 31-12-2000 வரை பதிவு செய்து விடுபட்டுப்போயிருக்கிற பதிவாளர்கள் தங்களுடைய பதிவை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சீ. அன்பழகன்,

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளிலே 5,6 வருடங்கள் வேலை செய்தும், தொழிலாளர்களை நிரந்தரமாக்கி ஊதியம் வழங்கப்படவில்லை. சில தனியார் கம்பெனிகள், ஹூண்டாய் போல்...

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலைவாய்ப்பு அலுவலகத்திலே வேலைவாய்ப்புக்குரிய பட்டதாரிகளுடைய எண்ணிக்கையைப் பற்றிய கேள்வி இது. அடுத்து, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருந்தும், காத்திருப்பவர்களுக்கு நேர்காணல் அனுப்பும்போது, அந்த விவரத்தை மாவட்டம் வாரியாக அவர்கள் முன்பதிவு செய்த ஆண்டு, பட்டம் பெற்ற விவரம் போன்ற விவரங்களைப் பத்திரிகைகளிலே அறிவிப்பு கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யாருக்குப் பேட்டி அனுப்பப்படுகிறது என்று seniority அடிப்படையில் அந்த விவரங்கள் அலுவலகத்தின் வெளியே Notice Board-ல் ஒட்டப்படுகின்றன. யாருக்கு ஐயம் இருக்கிறதோ, அவர்கள் அதை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். வேறு ஏதாவது விவரங்கள் சேகரிக்க வேண்டும் என்று கருதினால், தன்னுடைய seniority விட்டுப்போயிருக்கிறது என்று யாராவது தனிப்பட்ட முறையிலே புகார் கூற விரும்பினால்கூட, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களை அணுகி அவர்களுடைய அடையாள அட்டையைக் காண்பித்து, அதற்குரிய பதிலைப் பெற்றுக் கொள்ளலாம். யார் வந்து கேட்டாலும் அதற்குரிய விளக்கங்களை அளிக்க

[2001 செப்டம்பர் 10

வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, பத்திரிகைகளில் விளம்பரம் என்பது, அது தேவையற்றது என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டப் படிப்பு மற்றும் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கு வயது வரம்பை 40-ஆக அரசு உயர்த்துமா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியொரு திட்டம் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே இப்போது மூன்று நிலைகளிலே இருப்பவர்களுடைய பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இவர்களே கிட்டத்தட்ட 1 இலட்சத்து 57 ஆயிரம் பேர் என்று அறிவித்திருக்கிறார்கள். இதேபோல் பல துறைகளிலே பட்டம் பெற்றவர்கள் பல இலட்சம் பேர் காத்திருக்கிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற பெயர், வேலைவாய்ப்புப் பயிற்சித் துறையினுடைய நிருவாகம் என்ற முறையிலேதான் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையிலேதான் அவர்கள் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை அல்லது அந்த அலுவலகத்தின் மூலமாகப் பதிவு செய்திருக்கிறவர்கள் எண்ணிக்கையை துறை வாரியாகத் தொகுக்கச் செய்ய வேண்டும். ஆண்டுதோறும் பட்டதாரிகள் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருக்கிறது. இலட்சக்கணக்கானவர்கள் படித்துக்கொண்டே இருக்கிறார்கள்; பட்டம் பெற்றுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், வேலைவாய்ப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையை இழந்துகொண்டிருக்கிற சூழ்நிலையை மாற்றுவதற்காக ஒரு திட்டத்தை வேலைவாய்ப்புத் துறையின் மூலமாகத் தயாரித்து அரசுக்குத் தெரிவித்து, அரசும் கலந்து பேசி, புதிய முயற்சிகளை எடுப்பதற்கான திட்டம் அரசிடத்திலே இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கு, எல்லா நிலைகளிலேயும் அரசு ஆலோசித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதன் ஒரு படியாகத்தான், தனியார் துறைகளிலேயும் பணியமர்த்தங்களைச் செய்கின்ற முயற்சி இப்போது வேகமாக முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித்தலைவர்களுடைய தலைமையிலே அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற தனியார் துறையைச் சேர்ந்த கம்பெனிகள், அல்லது தொழிற்சாலைகளில் உள்ள காலியிடங்களை அறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் Counselling போன்று நடத்தி, அதிவேகமாக வேலை வாய்ப்பு இன்மையைக் குறைக்க வேண்டும் என்று அரசு முயன்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்கள் அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், என்னுடைய தொகுதியிலே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிந்த சில பட்டதாரிகள் விருதுநகர் மாவட்டத்திலே வேலைவாய்ப்பு நிறைய கிடைக்கிறது என்று ஆசைப்பட்டு அங்கே பதிந்துவிட்டார்கள். இப்போது என்ன ஆகிவிட்டது என்றால், அங்கேயும் வேலை கிடைக்கவில்லை. திரும்ப மதுரை மாவட்டத்திலே வந்து பதிந்தால், அவர்களுக்கு சீனியாரிட்டி பழையபடி இருக்க வேலைவாய்ப்புத் துறை ஏற்றுக் கொள்ளுமா என்பதனை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் நாவினால் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது சட்டத்திற்கு உட்பட்டு இருக்குமானால் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[2001 செப்டம்பர் 10

71—

## கட்டட வசதி

***4512—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்னும் எத்தனை வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடங்கள் இல்லை? அடுத்து, திருக்கழுக்குன்றம், எடப்பாடி போல எத்தனை ஊர்களிலே அரசுக் கட்டடங்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அவற்றை உடனடியாகக் கட்ட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வருவாய்த் துறை அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணிக்காக நிதிநிலைக்கேற்ப ஆண்டுதோறும் பகுதி-2, திட்டத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 206 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. போடிநாயக்கனூர், தேனி, வேப்பந்தட்டை, பூந்தமல்லி,



2001 செப்டம்பர் 10]

பள்ளிப்பட்டு மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு 11-வது நிதிக் குழுவின் மானியத் தொகையிலிருந்து கட்டடம் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம் உள்ளிட்ட இதர 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டியிருப்பதால், திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகம் கட்டடம் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அலுவலகங்கள் இயங்கும் பல சொந்தக் கட்டடங்கள் damage ஆகியிருக்கின்றன. அவற்றிற்கு வேறு வருமானமும் இல்லை. எனவே, எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.க்கள் நிதியிலேயிருந்து கட்டுவதற்கு அனுமதி அளிப்பது பற்றி அரசு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், மாண்புமிகு அமைச்சரால் வட்டாட்சியர் அலுவலகத்திற்குத்தான் பதில் தர முடியும். ஒன்றிய அலுவலகத்தைப் பற்றிக் கேட்டால் அவரிடம் பதில் இருக்காது.

வினா எண் 72, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 73, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

73—

## கால்நடை மருத்துவமனை

***3401—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், 2-வது தொகுதி, செட்டிசாவடிப் பகுதியில் நடப்பாண்டில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், 2-வது தொகுதி செட்டிசாவடிப் பகுதியிலும் ஏற்காடு மலை அடிவாரப் பகுதியிலும், அருகிலே இருக்கின்ற கருங்காலி, குறுவம்பட்டி ஆகிய கிராமப் பகுதிகளிலும் பல்வேறு கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலே இதுவரை கால்நடை மருத்துவமனை இல்லாமல் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரவேண்டுமென்றால் நகரப் பகுதிக்கு வரவேண்டியிருக்கிற காரணத்தினால் அரசு கால்நடை மருத்துவமனை ஒன்று அங்கு அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகத்திற்கும் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கக் கோரும் கிராமத்திற்கும் இடையே சுமாராக 8 கிலோ மீட்டர் தூரம் இருத்தல் வேண்டும். சேலம் ஊராட்சி ஒன்றியம் செட்டிசாவடி கிராமத்திற்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் முறையே மேட்டு ஐயம்பொன்பட்டி என்னும் இடத்தில் கால்நடைக் கிளை நிலையமும், வினாயகம்பட்டி என்னும் இடத்தில் பார்வைக் கிளை நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் சர்க்கார் கொல்லம்பட்டி என்னும் இடத்தில் கிளை நிலையமும், ஐயம்பெருமாள்பட்டியில் பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால் செட்டிசாவடி கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேற்கண்ட கால்நடை நிலையங்கள் மூலமாக சிகிச்சை அளிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால், சேலம் ஊராட்சி ஒன்றியம் செட்டிசாவடி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. லா. சந்தானம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

74—

**தொழிற்சாலை**

***681—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 செப்டம்பர் 10]

உசிலம்பட்டி தொகுதியிலுள்ள செல்லம்பட்டி ஒன்றியப் பகுதியில் வேலைவாய்ப்பு அளிக்க தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதியில் உள்ள செல்லம்பட்டி ஒன்றியத்தில் வேலைவாய்ப்பு அளிக்க தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் இருக்கையில் இல்லை. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதியும், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். அவற்றில் ஏதாவதொரு தொழிற்சாலை அமைத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நேரடியாக எந்தத் தொழிற்சாலையையும் ஆரம்பிப்பதில்லை. டிட்கோ மூலமாக தொழில் முனைவோர், நல்ல திட்டங்களுடன் வந்தால் டிட்கோ ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதனால் அந்தத் தொகுதியிலே டிட்கோ மூலமாகவோ அல்லது மற்ற வழிகளிலோ தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல வசதி படைத்த ஒரு தொழில் முனைவரை அழைத்து வந்தால் நாங்கள் உதவி செய்ய தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 10

## (ஆ) குறுகிய கால வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 2, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

2—

### மருத்துவர்கள்

**9424—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு வட்ட மருத்துவமனைக்கு அன்றாடம் சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை சராசரியாக எவ்வளவு?

(ஆ) அவ்வாறு சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கு அரசு மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், வட்ட மருத்துவமனைக்கு தகுதிக்கேற்ப மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு வட்ட மருத்துவமனைக்கு சராசரியாக நாளொன்றுக்கு 652 வெளி நோயாளிகள் வந்து சிகிச்சைப் பெறுகின்றனர்.

(ஆ) சிகிச்சைக்கு வரும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப அரசு மருத்துவர்கள் அந்த மருத்துவமனையிலே பணியாற்றுகின்றனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது, 652 பேர் வருகிறதாகக் குறிப்பிட்டார்கள். நான் நேற்று அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். சராசரியாக 662 பேருக்கு மேல் வருவதாகவும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு 125 பேர் மாதம் ஒன்றுக்கு வருவதாகவும், இரத்தப் பரிசோதனைக்கு



2001 செப்டம்பர் 10]

மட்டும் 1,080 பேர் நாள் ஒன்றுக்கு வருவதாகவும் அங்கே கணக்கிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1939 ஆம் ஆண்டு மருந்தகமாகத் தொடங்கப்பட்டது. 1-11-1972-ல் அரசு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. அந்த தாலுக்கா மருத்துவமனைக்கு போதுமான டாக்டர்கள் இல்லை என்பதை மட்டும் மாமன்றத்தின் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவ்வளவு நோயாளிகளுக்குப் போதுமான டாக்டர்களை நியமிக்க வேண்டும். அதேபோல் பெண் டாக்டர்களை உடனடியாக நியமிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கணக்கு சராசரி கணக்குத்தான். எனவே, நோயாளிகளின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு கூடுதலாகவும், குறைவாகவும் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கணக்கு சரியாகக் கூட இருக்கலாம். எனவே, இன்றைக்கு அந்த மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளின் கணக்கை வைத்துதான் டாக்டர்கள் நியமனம், செவிலியர்கள் நியமனம் எல்லாம் செய்யப்படுகிறது. அப்படிக் கூடுதலாக நோயாளிகள் சிகிச்சைக்கு வரும் பட்சத்தில் நிச்சயமாக அதற்கேற்ப, விகிதாச்சாரத்திற்கேற்ப, டாக்டர்கள், செவிலியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல 1972 ஆம் ஆண்டிலே நகராட்சி மருந்தகமாக இருந்த இந்த மருந்தகம், எடப்பாடி தாலுக்காவாக மாற்றப்பட்டவுடன், தாலுக்கா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. அந்தவகையில்தான் அங்கே இப்பொழுது Lab Technician, Radiographer போன்ற பணியிடங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இன்னும் அந்த மருத்துவமனை விரிவாக்கம் செய்யப்படவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக நோயாளிகளின் வருகைக்கேற்பவும், நிதி வசதிக்கேற்பவும் அந்த மருத்துவமனை தரம் உயர்த்தப்படும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-10-1939 அன்று ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட மருந்தகம் அது. நகராட்சி மருந்தகமாக 1-11-1972-ல் தொடங்கப்பட்டது. அங்கு வரக்கூடிய நோயாளிகளுக்குப் போதுமான டாக்டர்கள் இல்லை

[2001 செப்டம்பர் 10

என்பதை இந்த அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அதற்காக நன்றி. Season காலத்திலே மிகச் சிரமம். 1,000, 1,200 பேருக்கு மேலே வருகிறார்கள். T.B. சிகிச்சைக்கு மிக அதிகமாக வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் தனிப் பிரிவு கட்ட வேண்டும். 1939 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அதே மருந்தகத்தில்தான் இப்போது வெளி நோயாளிகளுக்கு சீட்டு கொடுக்கும் இடம், சிகிச்சைப் பிரிவு, சித்தா பிரிவு, கட்டு கட்டும் இடம், பெண்களுக்கு புண் ஏற்படும்போது கட்டு கட்டும் இடம் அனைத்தும் அந்தச் சிறிய இடத்திலேயே இருப்பதினால், போதுமான இடமும் இல்லை. மருத்துவர்களும் அங்கே இல்லை. இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, ஒரு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த மருத்துவமனையிலே பெண் டாக்டர் இல்லை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. நான் சென்ற வாரம் பதில் சொல்கிறபோது, அந்த மருத்துவமனைக்குப் பெண் டாக்டர்கள் விரைவிலே நியமனம் செய்யப்படுவார்கள் என்று சொன்னேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தனிப் பிரிவுகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், அந்த மருத்துவமனையிலே தனிப் பிரிவுகளுக்கான வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே அந்த மருத்துவமனை வளாகத்தில் கிட்டத்தட்ட 37 பேர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அதிலே 13 பேர் சங்ககிரி சிவில் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அதிலே ஒரு நபர் தடையாணையும் பெற்றிருக்கிறார். எனவே, மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு வருவாய்த் துறையினுடைய உதவியை நாடியிருக்கிறது. வருவாய்த் துறையும் வழக்கு நிலுவையிலே இருப்பதினாலே தங்களாலே செய்ய முடியவில்லை என்று தங்களுடைய இயலாமையைச் சொல்லியிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக இன்னும் கூடுதலாக, 10,000 ரூபாயை மருத்துவத் துறைச் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அதுகுறித்தும் இந்தத் துறை பரிசீலித்து வருகிறது.



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், மறுபடியும் கேட்க வேண்டுமா?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியிலே இது மிக முக்கியமான பிரச்சினை. அரசு மருத்துவமனை வளாகத்திலே ஆக்கிரமிப்பு இருப்பது உண்மை. அதை அகற்ற வேண்டிய பொறுப்பு அரசிடம் உள்ளது. தாலுக்கா மருத்துவமனையாக அந்த மருத்துவமனையின் அந்தஸ்தை உயர்த்தியபோது அந்த இடங்களிலே உள்ளவர்களைக் காலி செய்ய வேண்டுமென்று அங்கு ஆக்கிரமிப்பு செய்தவர்கள் அனைவரையும் அழைத்துக் கேட்டிருந்தோம். மாற்று இடம் கொடுத்தால் ஆக்கிரமிப்பை அகற்றி விடுகிறோம் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதை தாலுக்கா அலுவலகத்திலும் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கு ஏதாவது ஒரு இடத்திலே மாற்று இடத்தைக் கொடுத்து விட்டு, மருத்துவமனைக்குச் சொந்தமான இடத்தை அரசு உடனடியாக தன் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய முயற்சிக்கு அரசும் ஒத்துழைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 3, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

3—

**வீட்டு மனைகள்**

**9244—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஒன்றியம், முதலிப்பாளையம் ஊராட்சி, மானூர் கிராமம் அருகில் வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடு கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தி மனைகள் சீர் செய்த பின்னர் மனைகள் விலை அதிகமாக உள்ளதால், விற்கப்படாமல் உள்ளதை விலை குறைத்து விற்க அரசு முன்வருமா?

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திருப்பூர் நகரத்தின் அருகிலுள்ள முதலிப்பாளையம் ஊராட்சியில் 99.88 ஹெக்டேர் நிலத்தை ரூ. 219.26 இலட்சத்திற்குக் கையகப்படுத்தி, 90 சதவீதம் உலக வங்கி நிதியுதவியின் கீழும் மற்றும் 10 சதவீதம் ஹட்கோ நிதியுதவியின் கீழும் 8,339 மேம்படுத்திய காலி மனைகளை 1997 ஆம் ஆண்டு விற்பதற்கு ஆரம்பித்துள்ளது. இதுவரை 2,774 மனைகள் விற்கப்பட்டுள்ளன. மீதம் 5.565 மனைகளை ஆய்வு செய்து, தேவைப்படின் விலை குறைப்பு பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமாகத் திகழ்கின்ற திருப்பூர் நகரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொந்தமான மாவட்டமான மதுரை மற்றும் விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல் போன்ற பல்வேறு மாவட்டங்களிலிருந்து மக்கள் வந்து திருப்பூர் நகரில் உள்ள பனியன் கம்பெனிகளில் தொழில் செய்து வருகிறார்கள். இதனால் குடியிருக்க வீட்டு மனைகள் அவசியம் தேவைப்படுகிறது. இதைக் கருத்தில்கொண்டு கடந்த காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் திருப்பூர் நகரின் அருகில் முதலிப்பாளையத்தில் சுமார் 250 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அடிப்படை வசதிகளைச் செய்தனர். அதற்குப் பிறகு வந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில் வீட்டு மனைகள் விற்கப்படவில்லை. இதனால் வீட்டுமனைகளின் விலை அசலுடன், வட்டியும்கூட மிகவும் அதிகமாக உயர்ந்து விட்டது. அங்கே வெளி மார்க்கெட்டில் குறைவான விலைக்கு இடங்கள் கிடைப்பதாலும் மேலும், அரசுக்கு நஷ்டத்தைத் தவிர்க்கின்ற விதமாக வட்டியைத் தள்ளுபடி செய்தும், உடனடியாக விற்பனை விலையைக் குறைத்து அரசு அறிவிப்பு வெளியிட்டால் வீட்டு மனைகளை வாங்குவதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்கப்படாமல் இருக்கிற வீடுகள் மற்றும் காலி மனைகளை விற்பனை செய்வதற்காக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து துறைகளினுடைய



2001 செப்டம்பர் 10]

அதிகாரிகளையும் அழைத்து, ஆய்வுக் கூட்டத்தினை நடத்தியபோது, விரைவிலே விற்பதற்காகவும், ஏன் இந்த மனைகள் விற்கப்படவில்லை என்கிற காரணத்தைக் கண்டறிவதற்காகவும் ஓர் உயர் மட்டக் குழுவினை நியமிக்கவேண்டுமென்று, ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். கூடிய விரைவிலே அந்த உயர்மட்டக் குழுவினை நியமிக்கவிருக்கிறோம். அந்த உயர்மட்டக் குழு அளிக்கும் பரிந்துரையின் பேரிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற வீட்டுமனைகளை வாங்குவோருக்கு வீடுகட்டுவதற்கு குறைவான வட்டியில் கடன் வசதி செய்து தரப்படுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு வீடு கட்டுவதற்குக் கொடுக்கப்பட்டிருந்த E.W.S. திட்டம் இரண்டு ஆண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே இதுபற்றி எடுத்துக்கூறியபோது இதை இந்த ஆண்டிலேயே செயல்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். நாளையதினம் நடைபெற இருக்கின்ற என்னுடைய மானியக் கோரிக்கையிலே இது சம்பந்தமான விளக்க அறிக்கையை அவையில் சமர்ப்பிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[2001 செப்டம்பர் 10

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) தமிழக மீனவர்கள் ஆந்திர கொள்ளையர்களால் கடத்தப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடலில் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை ஆந்திர கொள்ளையர்கள் கடத்திச் சென்றது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. பரிதி இளம்வழுதி, திரு. சி. ஞானசேகரன், மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். கவன ஈர்ப்பாக திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். அறிவிப்பை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டமைக்கு தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை கடலோரப் பகுதிகளிலே வாழ்கின்ற மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்ற நேரத்தில் பலவிதமான இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகிறார்கள். உதாரணமாக, ஆந்திரப் பகுதியிலே அவர்கள் மீன் பிடிக்கச் செல்லுகிறபோது அங்கே ஆந்திர கடல் கொள்ளைக்காரர்களால் கைது செய்யப்பட்டு, கடத்திச் செல்லப்பட்டு, சிறை வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள். இது குறித்து ஏற்கெனவே இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த சபையிலே எழுப்புகின்ற நேரத்திலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள்கூட இது என்னுடைய தொகுதியைச் சார்ந்தது, பிரச்சினை முடிந்துவிட்டது, அவர்கள் எல்லாம் திரும்பி வந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார் மின் துறை அமைச்சர். மீன் துறை அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. பரிதி இளம்வழுதி:** அது அவருடைய தொகுதி என்று சொன்னார். உள்ளபடியே திரும்பி வந்திருந்தால் மகிழ்ச்சி. அதில் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் இப்படி கடத்திச் செல்லப்பட்டு, சிறை



2001 செப்டம்பர் 10] [திரு. பரிதி இளம்வழுதி]

வைக்கப்பட்டு, அந்தச் செய்தி தெரிந்தபிறகு, இங்கே இருக்கின்ற நம்முடைய மீனவப் பெருமக்கள், அவர்களுடைய உறவினர்கள் அல்லது வசதிபடைத்தவர்கள் பணம் எடுத்துச் சென்று, அதைக் கொடுத்துவிட்டு அதன் பிறகுதான் அவர்களை மீட்டுவரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவ்வாறு அடிக்கடி நடைபெறுகிறது. எனவே கடலையே நம்பி வாழ்கின்ற அந்த மீனவப் பெருமக்கள், அவர்களுடைய தொழிலை ஒழுங்காக அச்சமின்றி நடத்தவேண்டுமானால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்புத் தன்மையை நாம் உருவாக்கித் தரவேண்டும். அந்த அடிப்படையிலே இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நேராமல் இருப்பதற்கு முறைப்படி ஆந்திர அரசாங்கத்தோடு பேச்சு நடத்தி, அதேபோல நம்முடைய கடல் காவல் படையை அவர்களுக்குத் துணையாக, பாதுகாப்பாக அந்தப் பகுதியிலே இயங்கச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை கேள்வியாகக் கேட்டு இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 படகுகளிலே சென்ற காசிமேடு பகுதியைச் சார்ந்து இருக்கின்ற 120 மீனவர்கள் சென்ற வாரம் ஆந்திர கொள்ளைக்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டு, பிரகாசம் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் சிறை வைத்து, அவர்களை எல்லாம் தாக்கி பணம் பறிக்கின்ற வேலையிலே கொள்ளைக் காரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த குப்பத்து மீனவர்களுடைய தலைவர்கள், சங்கத்தினுடைய தலைவர்கள் எல்லாம் சென்று அந்த இடத்திலே மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அவர்களுக்கு ஏதாவது லஞ்சமாக சில தொகையைக் கொடுத்து விட்டுத்தான் அவர்களை மீட்க வேண்டும் என்கிற அவலநிலை இப்போது வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக இராமேஸ்வரத்தைச் சார்ந்த மீனவர்கள், மற்றவர்கள் எல்லாம் இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்படுவதோ அல்லது தாக்கப்படுவது என்பதோ வேறு. அது நாட்டுக்கு நாடு இருக்கக்கூடிய பிரச்சினை. எல்லையைத் தாண்டிவிட்டார்கள் என்று வேண்டுமானால் அவர்கள் சொல்லக்கூடும். ஆனால் ஆந்திரத்திற்கும், தமிழகத்திற்கும் எல்லை என்று ஒன்று கிடையாது. அப்படி இருக்கின்றபோது, எந்த எல்லையிலும் கடலிலே இந்தியர்கள் என்ற முறையிலே மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற உரிமை உண்டு. ஆந்திரப் பகுதியிலே இருக்கின்ற கடலிலேயும் அவர்களுக்கு உரிமை உண்டு. அப்படி உரிமை இருக்கின்றபோது, இவர்கள் எல்லையைத் தாண்டி

விட்டார்கள் என்று சொல்லி கடத்த முடியாது. ஆனால், ஆந்திரப் பகுதியிலே இருக்கக்கூடிய சிலபேர், நம்முடைய மீனவர்களை அச்சுறுத்தி கடத்திக்கொண்டு போய், பணம் பறிப்பது என்பது இப்போது வாடிக்கையாக நிகழக்கூடிய ஒரு நிகழ்வாக மாறிவிட்டது. நம்முடைய அரசும் கடலோர காவல் படையை வைத்திருக்கிறது. அந்தக் கடலோர காவல் படையினர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? இவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பை, அவர்களால் கொடுக்க முடியாதா? இப்போதுகூட பார்த்தோம் என்று சொன்னால், கடந்த 4, 5 நாட்களாக இவர்கள் அங்கே சிறைபிடித்து வைக்கப்பட்டபோதுகூட, அரசும் ஏதோ ஒரு ஆய்வாளரை மட்டும் அனுப்பி, அதிலேகூட பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு செய்திதான் வந்து கொண்டிருந்தது. அங்கேயிருக்கக்கூடிய முதல்வரோடு, அங்கேயிருக்கக்கூடிய D.G.P. போன்றவர்களோடு பேசி, அடுத்தகணமே இவர்களை மீட்டுவரக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏன் உருவாக்க முடியாது? இனியாவது, இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலை தமிழகத்து மீனவர்களுக்கு வராமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு பழமொழி சொல்வோம், 'பாம்பு கடித்தவன் தலையிலே, இடிவிழுந்தது மாதிரி' என்று. ஏனென்றால், 2 வருடங்களுக்கு முன்னர், இதேமாதிரி கடல் அலையால் பாகிஸ்தான் எல்லைக்குள் 2 பேர் அடித்துச் செல்லப்பட்டு இறந்து போய், அந்தப் பிணங்களை அவர்கள் கடலில் தூக்கிப் போடவேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலை அன்றைக்கு ஏற்பட்டது. ஆனால், இப்போது இந்தியாவிற்குள்ளே இருக்கக்கூடிய கடலில், நம்மவர்களால் எங்கேயும் சுதந்திரமாக மீன்பிடிக்கப் போக முடியவில்லை என்ற ஒரு நிலை தொடருமேயானால், அது நம்முடைய குடியரசுத் தன்மைக்கும் அல்லது நம்முடைய சுதந்திரத்திற்கும் பாதுகாப்பாக இருக்காது, சரியாக இருக்காது. எனவே, காசிமேடு மீனவர்கள், நம்முடைய கடலோரப் பகுதிகளில் மீன்பிடிக்கின்றபோது, இவர்களைக் கொள்ளையடிப்பதுதான் அவர்களுடைய நோக்கம். இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் சமீபகாலமாக நடந்திருக்கிறது, நடந்து





கொண்டிருக்கிறது. எனவே, இந்தக் கொள்ளையடிக்கின்ற நிலையைப் போக்குவதற்கு, நம்முடைய காவல் படை அல்லது கடலோரப்படை இவர்களால் எதையாவது செய்ய முடியுமா? அல்லது எல்லையை வகுத்து, செல்லக்கூடாத இடம் என்று ஒரு வழிமுறையை நாம் நடத்தமுடியுமா என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசிக்கவேண்டும்.

இதிலே இன்னொன்று, கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்பதற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? அதுதான் இதிலே முக்கியம். அப்படி ஏதாவது அந்த அரசோடு பேசி, இந்தக் கொள்ளைக்கூட்டம் யார் என்பதைக் கண்டுபிடித்து, அதிலே ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொள்கின்றபோதுதான், மீண்டும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் தடுத்து நிறுத்த முடியும். அந்தவகையிலே அரசு இதிலே கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மீனவர்கள் பொதுவாக ஆந்திரக் கடல் பகுதிக்குச் சென்று மீன் பிடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு செல்லும்போது, ஆந்திர மீனவர்களால் பிடித்து வைக்கப்பட்டு, அதற்காக தமிழக மீனவர்கள், குறிப்பிட்ட தொகையைச் செலவு செய்து, மீனவர்களையும், படகுகளையும் மீட்டு வருகின்றனர். இவ்வாறான நிகழ்ச்சிகள் குறித்து, ஏற்கெனவே இருமாநில மீன்வளத் துறை இயக்குநர்கள் மற்றும் உயரதிகாரிகள், மீனவப் பிரதிநிதிகளுடன் 2-9-1999 மற்றும் 24-9-1999 ஆகிய தேதிகளில் கூட்டம் நடத்தப்பட்டது.

அக்கூட்டத்தின் முடிவில், தமிழக மீனவர்கள், ஆந்திர மாநில கடலோர ஒழுங்குபடுத்தும் சட்ட விதிகளுக்குட்பட்டு, மீன்பிடிக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. இதுகுறித்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட விசைப்படகு மீனவர்கள் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 2 மாநில மீனவர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, தீர்வு காணலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் சென்னையிலிருந்து, ஆந்திரப் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற 20 மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் 120 மீனவர்கள் ஆந்திர மாநிலம், ஓங்கோல் மற்றும் பிரகாசம் ஆகிய மாவட்டங்களில், ஆந்திர மண்ணூர் மற்றும் இராமச்சந்திரபுரம் ஆகிய இடங்களில் ஆந்திர

[திரு. கே. பி. இராஜேந்திர பிரசாத்][2001 செப்டம்பர் 10

மீனவர்களால் பிடித்து வைக்கப்பட்டுள்ளதாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட விசைப்படகு மீனவர் சங்கம், 5-9-2001 அன்று தகவல் அளித்தது. அதன்பேரில், இப்போது மீன்துறை இணை இயக்குநர் அவர்கள் தலைமையில், ஆந்திர மாநில மீன் துறையைச் சார்ந்த அதிகாரிகளுடன் விவாதித்து, அதிகாரிகள் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, தமிழக மீனவர்கள் அவர்களது படகுகளுடன் விடுவிக்கப்பட்டனர் என்ற தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டில் eve-teasing கொடுமையால், (குறுக்கீடு) 'இல்லை, பரிதி அவர்களே, அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். அத்தோடு முடியுங்கள். (குறுக்கீடு) அதற்கு மேலே என்ன கேள்வி? நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவர், உங்களுக்கு விதி தெரியும் அல்லவா? உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. பரிதி இளம்வழுதி:** மீனவர்கள் மீட்டு வரப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு ரொம்ப சந்தோஷம். மேற்கொண்டு அவ்வாறு நடக்காமல் இருப்பதற்கு, என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் பேசும்போது, மேற்கொண்டு எதிர்காலத்திலே இதுபோன்ற நடவடிக்கைகள் இருக்கக்கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஏதோ இன்றைக்கு இந்தப் பிரச்சினை ஏற்பட்டது என்பது அல்ல. கிட்டத்தட்ட 15 ஆண்டு காலமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. காரணம், ஆந்திரா என்று சொல்லும்போது, கிருஷ்ணா, கோதாவரி ஆகிய ஆறுகள் அங்கே கடலில் கலப்பதன் காரணமாக அந்த area விலே ஒரு potentiality இருக்கிறது. எனவே, அதிகமான அளவிற்கு breeding ground ஆக இருக்கின்ற காரணத்தினால், அங்கே நம்முடைய மீனவர்கள் மீன்பிடிக்கக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, கடந்த ஐந்தாண்டு காலம் என்று எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 432 படகுகள் கடத்தப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 3592 மீனவர்கள் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவேதான், 1991-96 ஆம் ஆண்டு காலத்திலே, இதுவும் அப்போது இருந்தது. அப்படி இருந்த உடனே நம்முடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர்



2001 செப்டம்பர் 10] [திரு. டி. ஜெயக்குமார்]

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு குழுக்களை ஏற்படுத்தினார்கள். ஒன்று உயர்மட்டக் குழு. அதாவது, I.A.S. அதிகாரிகள் அளவில், அந்த மாநில அதிகாரிகள், நம்முடைய மாநில அதிகாரிகள். அதேபோன்று, lower level-லிலே ஒரு குழு இருந்தது. அதிலே, அங்கு இருக்கின்ற Collector, இங்கே இருக்கின்ற Collector, அதேபோன்று, அங்கே இருக்கிற Assistant Director of Fisheries, இங்கே இருக்கின்ற Assistant Director of Fisheries என்று இரண்டு குழுக்கள் இருந்தன. கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்தக் குழுக்களால் ஆய்வு செய்யப்பட்டதா; அந்தக் குழு கூடியதா என்ற விவரம் எங்களுக்கு இல்லை. எனவே, அந்த Government Order இப்போது review செய்யப்பட்டுள்ளது. அந்தக் குழுக்கள் அடிக்கடி சந்தித்து, மீனவப் பிரதிநிதிகளோடு சந்தித்தால் இந்தப் பிரச்சினை நிச்சயமாக இருக்காது என்று கருதுகின்றேன். அதே நேரத்தில், ஒரு Solatium Fund கூட உருவாக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகளிலே நம்முடைய மீனவர்கள் பணம் கொடுத்து, ஆந்திர மீனவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏறக்குறைய 5 இலட்சம் ரூபாய், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே ஒரு Solatium Fund create செய்யப்பட்டு, அது மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திலே இருக்கிறது. அந்தப் பணத்தைக்கூட கடந்த ஐந்தாண்டு காலத்திலே, இதுபோன்ற நிகழ்வுகளிலே முந்தைய ஆட்சியிலே எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, இதுபோன்று எதிர்காலத்திலே நடைபெறாத அளவிற்கு நிச்சயமாக நம்முடைய அம்மா, புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) மாணவிகள் Eve-teasing கொடுமையால் துன்புறுத்தப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டில் eve-teasing கொடுமையால் மாணவிகள் துன்புறுத்தப்படுவது குறித்து ஒத்திவைப்பு அறிவிப்பாக திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஐ. கணேசன், திரு. எ.வ. வேலு, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. டி. மணி ஆகியோர் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஆஸ்டின் மற்றும் திரு. லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கவன ஈர்ப்பாக திரு. ஆஸ்டின் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது சிறப்புக் கவன ஈர்ப்பாக

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 10

எடுத்துக்கொள்ளப்படுவதற்கு அனுமதி அளிக்கிறேன். அறிவிப்பை மட்டும் சுருக்கமாக எடுத்துக்கூற அழைக்கிறேன். திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, eve-teasing என்ற கொடுமையான வியாதி இப்போது சமுதாயத்திலே பற்றிக்கொண்டிருக்கிறது. எப்படி. காலரா, பிளேக், டெங்கு போன்ற வியாதிகள் சமுதாயத்திலே ஒரு காலத்திலே இருந்தனவோ, அதைப்போல சமுதாயக் கொடுமையாக இப்போது பரவலாக eve-teasing நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஜூன் மாதம் 18 ஆம் தேதி ஈரோடு, அரசலூரிலே ஜோதிமணி, ஜூன் மாதம் 29 ஆம் தேதி ஆரணியிலே கலையரசி, ஜூலை மாதம் 15 ஆம் தேதி தாம்பரத்திலே கல்லூரி மாணவி, ஜூலை மாதம் 29 ஆம் தேதி சென்னை மணலியிலே மாணவிகளை படம் எடுக்கிற கொடுமை, ஆகஸ்ட் மாதம் 3 ஆம் தேதி விருத்தாசலத்தில் ஜெயமேரி என்ற பெண்ணிற்கு நடுரோட்டில் முத்தம் கொடுக்கப்படுகிறது. ஆகஸ்டு மாதம் 6 ஆம் தேதி கன்னியாகுமரி தக்கலையில் சபிதா, சரிதா என்ற பெண்கள் மீது ஆசிட் வீசப்பட்டிருக்கிறது. ஆகஸ்ட் மாதம் 14 ஆம் தேதி செங்கத்திலே வெண்ணிலா என்கிற பெண் கடத்தப்பட்டிருக்கிறாள். ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி வாணியம்பாடியிலே சுமதி என்கிற பெண் மீது ஆசிட் வீசப்பட்டிருக்கிறது. ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதி நாகர்கோவில், ஆசாரிப்பள்ளத்தில் அமுதா என்கிற பெண்ணிற்கு விஷம் கொடுத்து கொல்லுகிற நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகஸ்ட் 27 ஆம் தேதி, கடலூரிலே ஜெயசாந்தி என்கிற பெண்—இதுபோன்ற கொடுமைகளுக்கு தொடர்ந்து பெண்கள் தமிழ்நாட்டிலே ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், ஏதோ கல்லூரி மாணவர்கள்தான் இதைச் செய்கிறார்கள் என்கிற அடிப்படையில்தான் எடுத்துக் கொள்கிறதேயொழிய, சமுதாயத்திலே இருக்கிற விஷமிகள், வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கிற வீணர்கள், இதுபோன்ற காரியங்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, திரைப்படங்களிலே இதுபோன்ற காட்சிகளெல்லாம் அமைக்கப்படுகிற காரணத்தினால், இந்தக் கொடுமையான நிகழ்ச்சிகளெல்லாம் கல்லூரி மாணவர்கள் என்பதை விட ப்ளஸ் 2 மாணவர்கள் வரை போயிருக்கிறது. எனவே, திரைப்படம் இப்போது ஒரு காரணமாக அமைந்தாலும், சமுதாயத்திலே பல சமூக விரோதிகள் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு இதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நாங்கள் அறியவிரும்புவதோடு மட்டுமல்லாமல்,



2001 செப்டம்பர் 10] [திரு. எ. வ. வேலு]

இது ஒரு சமுதாய நோயாக இருக்கிற காரணத்தினால், ஏதோ சென்னையில் மட்டும்தான் நடக்கிறது; எனவே சென்னையில் மட்டும் பறக்கும் படை என்கிற அடிப்படையில் இல்லாமல், இப்போது என்னால் சொல்லப்பட்ட பட்டியலிலே, சென்னையை அடுத்து இருக்கிற பல்வேறு மாவட்டப் பகுதிகளிலேதான் பெரும்பான்மையான eve-teasing நடைபெற்று இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் பறக்கும் படை அமைத்து, இதற்காக தனிச் சட்டங்களை இயற்றி இந்தக் கொடுமையான சமுதாய வியாதியிலிருந்து பெண்களையெல்லாம் காப்பாற்ற வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். பெற்றோர்கள் எல்லாம் பெண்களை கல்லூரிகளுக்கு அனுப்பி விட்டு, பள்ளிகளுக்கு அனுப்பி விட்டு, வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எனவே பெண் சமுதாயத்தை, மாதர்குல மாணிக்கங்களைக் காப்பாற்றுவதற்காக, இந்த அரசு பறக்கும் படை அமைக்கும் திட்டங்களைத் தீட்டி, கடுமையான சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று, இந்த அரசின் கவனத்தை நான் ஈர்க்க விழைகின்றேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, eve-teasing என்கின்ற கொடுமையால், இப்பொழுது பல பெண்கள் நம்முடைய தமிழகத்திலே, எல்லா மாவட்டங்களிலும் பெரும் பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறார்கள். குறிப்பாக சென்னையிலேகூட சென்ற வாரம் புரசைவாக்கம் பகுதியிலே ஒரு பெண் மாநகரப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறார். 5 பேர், மூன்று மோட்டார் சைக்கிள்களில் அந்தப் பேருந்துக்குப் பின்னாலே தொடர்ந்து வருகிறார்கள். பிறகு பேருந்திலே ஏறுகிறார்கள்; இறங்குகிறார்கள்; கலாட்டா செய்கிறார்கள்; இப்படியே அவர்கள் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிற்கு அந்தப் பெண்ணைத் துரத்தி Eve-teasing செய்து கொண்டிருக்கின்றபொழுது, அந்தப் பேருந்திலே பயணம் செய்து கொண்டிருந்த மற்ற பயணிகளே எரிச்சலடைந்து பேருந்தை நிறுத்தி இவர்களையெல்லாம் பிடிக்கப் போய் புரசைவாக்கத்திலே ஒரு மணி நேரத்திற்கு Traffic Jam ஆகியது. இந்த அளவிற்குத் தொந்தரவு கொடுத்த அந்தச் சமூக விரோதச் செயலைச் செய்திருக்கிற 5 இளைஞர்கள் யார் என்பது இதுவரை போலீசாரால் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதேபோல வாணியம்பாடி பகுதியிலே சுமதி என்கிற பெண் மீது ஆசிட் வீச்சு. மூன்று நாட்களுக்கு முன்னாலே வேலூரிலே சத்துவாச்சாரியில் 9-ம் வகுப்பு படிக்கிற அனிதா என்கிற மாணவி கடத்தப்பட்டிருக்கிறார். அதுமாதிரி, இந்தக் கடத்தல், திராவக வீச்சு எல்லாம் நடந்திருக்கின்றன. தற்கொலை செய்துகொள்ளக்கூடிய சூழ்நிலைக்கு அமுதா என்கின்ற ஒரு பெண் தக்கலையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தள்ளப்பட்டு. இப்போது eve-teasing காரணமாக ஒரு பெண் இறந்தே விடுகிறார்.

சரிகாஷா, எத்திராஜ் கல்லூரி மாணவி இறந்து சில ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த eve-teasing முடிந்துவிட்டது என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில் அது தொடர்கதையாக இன்னும் தமிழகத்திலே ஆங்காங்கு தொடர்ந்து வந்து கொண்டிருப்பது என்பது நிச்சயமாக சமுதாயத்தில் நாம் அதனை கட்டுப்படுத்திட வேண்டியதொன்றாகும். அது அனுமதிக்கக்கூடாத ஒன்று. நம்முடைய காவல் துறை ஸ்காட்லாந்து யார்டுக்கு இணையான போலீஸ் என்று பெயர் பெற்றிருக்கிற அந்த போலீஸ் ஏனோ இதுபோன்ற வழக்குகளில் அவர்கள் நாட்டத்தைச் செலுத்தாமல், வேறு வகைகளிலேதான் அவர்கள் நாட்டத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குற்றங்களை அவர்கள் சரிவர கட்டுப்படுத்துவதற்குத் தவறியிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு நம்முடைய அவை முன்னவருடைய கவனத்திற்கும், தமிழக அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வர கடமைப்பட்டிருக்கின்றேன். அரசு இதில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? பொதுவாக, தமிழகத்திலே இப்படிச் சீரழிந்த கலாச்சாரம் இருந்ததேயில்லை. மற்ற மாநிலங்களில் வேண்டுமானால் eve-teasing அதிகமாக இருந்து இருக்கிறது. ஆனால் பண்பாட்டிற்குப் பெயர்பெற்ற நம்முடைய தமிழகத்தில் இன்று ஏனோ இந்த அளவிற்கு ஒரு கலாச்சாரச் சீர்கேடு வந்து சேர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? ஒரு வேளை தொலைக்காட்சிகளில் வரக்கூடிய சீரியல்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களே விளக்கம் எல்லாம் சொல்லக்கூடாது. இதுகுறித்து அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த அரசு ஏதாவது ஒரு திட்டத்தை உடனடியாகத் தீட்டி, இப்போது இதிலே கல்லூரி மாணவர்கள்





ஈடுபடவில்லையென்று நாம் சொல்ல முடியாது. கல்லூரி மாணவர்களும் இதிலே ஈடுபடுகிறார்கள். சமூக விரோதிகள், வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறவர்கள் இதையே வேலையாக எடுத்துக்கொண்டு சிலபேர் இந்த நாசவேலையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இரும்புக்கரம் கொண்டு அவர்களை நீங்கள் அடக்கி, முடிந்தால் 100, 200 பேரைப் பிடித்து முதலிலே குண்டர் சட்டத்திலேயாவது போட்டீர்கள் என்று சொன்னால்தான், நிச்சயமாக இதிலே நீங்கள் இந்தக் குற்றத்தையே தடுக்க முடியும். இல்லையென்று சொன்னால் இந்தக் குற்றம் அனுமார் வால் போல நீண்டு கொண்டே போய்க் கொண்டிருக்கும். ஆகவே, நான் கேட்க விரும்புவது தமிழக அரசு உடனடியாக இதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன திட்டம் தீட்டியிருக்கிறது; எத்தனைபேர் இதுபோன்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், தற்போது eve-teasing மிகக் கொடுமையான முறையிலே இருக்கிறது. நாடு தழுவிய பிரச்சினையாக மாறிக்கொண்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய திரு. வேலுவிலிருந்து, த.மா.கா. உறுப்பினர் வரை தமிழகத்தில் எத்தனை இடங்களிலே, எந்தெந்த தேதிகளிலே எவ்வாறு மாணவிகளை இந்தக் கொடுமைகளில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அதிலே விட்டுப்போனது விழுப்புரம் நகரம் போலீஸ் நிலையத்திலே 9-வது வகுப்பு படிக்கக்கூடிய ஒரு பெண், காவல் நிலையத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறாள்.

முற்பகல் 11-05

விழுப்புரம், காந்தி சிலை அருகே இருக்கக்கூடிய ஆட்டோ ஓட்டுநர்கள், பள்ளிக்குச் செல்லக்கூடிய அந்தச் சின்னஞ்சிறு மலர்களை, கண்ட இடத்திலே, கேலியாக, கிண்டலாக மற்றும் தகாத வார்த்தைகளிலே பேசி, அந்தப் பெண்களையெல்லாம் அவமானப்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பெண்களில் ஒரு பெண், இதைத் தடுக்காவிட்டால் நாங்கள் தற்கொலை செய்துகொள்வோம் என்று காவல் நிலையத்திற்குக் கடிதம் எழுதி, அதன்

பிறகு நடவடிக்கை எடுத்த சம்பவங்கள்; இதுபோன்ற எத்தனையோ சம்பவங்கள் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றன. இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாற்போல நம்முடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சினிமா, அதிலே வரக்கூடிய பாடல்கள், அதிலே வரக்கூடிய ஆபாசங்கள், இளைஞர்களுடைய மனதைக் கெடுக்கின்றன. அதைத் தடுக்க தணிக்கைக் குழு சற்றுத் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைக் கண்டிக்கிற வகையிலேதான் நேற்றைக்கு முந்தைய நாள் நடந்த பூம்புகார் மாநாட்டிலேகூட, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய இயக்கம் தீர்மானமே நிறைவேற்றி இருக்கிறது. பெண்களை கேலி, கிண்டல் செய்து எடுக்கும் படங்களைத் தணிக்கைக் குழு தடை செய்ய வேண்டும்; அதேபோல், ஆபாசமான பாடல்களை, திரைப்படம் வருவதற்கு முன்பாக வெளியிட்டுவிடுகிறார்கள். அதனால் அந்தப் பாடல்கள் பிரபலமாகி, அதனால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. அதையும் தணிக்கை செய்ய வேண்டும் என்பது போன்ற தீர்மானங்கள், எங்களுடைய, பெண்கள் மாநாட்டிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே, நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், இதனால் சின்னஞ்சிறு மலர்கள் கசக்கப்படுகின்றன; பல விளைவுகள் ஏற்படுகின்றன; அதனால், நாட்டை நல்ல பாதையிலே எடுத்துச் செல்ல இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும், எங்கள் இயக்கத்தினுடைய கோரிக்கையையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பெண்களைக் கொடுமை செய்கின்ற இந்த நிகழ்ச்சி, சமீப காலத்திலே, இந்த நான்கைந்து ஆண்டுகள்கூட இருக்காது; அதற்குள்ளாகவேதான் இவ்வளவு அதிகமாக தமிழகம் தழுவிய அடிப்படையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆரம்பித்து, அதுவும் களியக்காவிளை பக்கத்திலே இருந்து ஆரம்பித்து, சென்னை தலைநகரத்திலே மிகப் பெரிய கொடுமைகள் நடக்கின்ற நிகழ்ச்சியைப் பார்க்கிறோம். ஆசாரிப்பள்ளத்திலே ஒரு பெண், கல்லூரியிலே படிக்கின்ற அந்தப் பெண், இப்படி ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்தியதால், வாழ வழியில்லை என்ற காரணத்தால், அமுதா என்ற அந்தப் பெண், தற்கொலை செய்து கொண்டாள் என்ற நிகழ்ச்சி, இதையெல்லாம் கொடுமையான



நிகழ்ச்சிகளாக நாம் பார்க்கிறோம். எனவே, இதற்குக் காரணங்கள் என்ன என்பதை நாம் ஆராய வேண்டிய நிலையிலே இருக்கிறோம். கலாச்சார சீரழிவிலிருந்துதான் இந்த நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, தொலைக்காட்சி, சினிமா, அதோடு இன்னும் கொடுமை என்னவென்றால், சுவரொட்டிகள், அந்தச் சுவரொட்டிகளிலே வரக்கூடிய ஆபாசங்களை எல்லாம் எந்த அளவுக்கு நாம் தடுக்க முயன்றிருக்கிறோம்? இவை தடுக்கப்படவில்லை என்று சொன்னால், இவை வளருவதற்கான வாய்ப்புகள்தான் அதிகமாகும். எனவே, காவல் துறையை எவ்வளவு முடுக்கிவிட்டாலும், அவர்கள் கொஞ்சம் வழக்குகளைத்தான் பதிவு செய்திருக்கிறார்கள். அவற்றை முழுவதுமாக தீர்த்துவிட்டோம் என்று நாம் கருத முடியாது. எப்படி மதுபானங்கள் அருந்துகிறவர்களை நாம் கட்டுப்படுத்த முடியவில்லையோ அதேபோல், கலாச்சார சீரழிவினால் இப்படிப்பட்ட நிலைகள் நடக்கின்றன; அந்தவகையிலே, இந்த நிலைகளையெல்லாம், சினிமாவிலேயும் சரி, தொலைக்காட்சிகளிலும் சரி, சுவரொட்டிகளிலும் சரி, அவற்றை தணிக்கை செய்கின்ற ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதோடு இன்னும் கொஞ்சம் நம்முடைய காவல் துறையை முடுக்கிவிட்டு, அந்தச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில், அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, eve-teasing கொடுமை பற்றி இங்கே பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது. அது தொடர்ந்து நடைபெறுகிறது. குறிப்பாக, இதைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டம் என்ன செய்கிறது என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. அந்தச் சட்டம் போட்டதற்குப் பின்னாலே, எத்தனை வழக்குகள் எடுக்கப்பட்டன? எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதெல்லாம் வெளி உலகத்திற்குத் தெரியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்தச் சட்டம் முறையாக, சீராக, விரைவாக, செயல்படுவதற்குரிய முயற்சிகள் இருக்கின்றனவா என்பது இன்றைக்கு கேள்விக்குரிய ஒன்றாக இருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி, கோவை, கடலூர், சிதம்பரம், தாம்பரம் போன்ற பகுதிகளிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்னும் பல இடங்களிலே அன்றாட நிகழ்ச்சியாக நடைபெற்றுக்கொண்டேதான் இருக்கிறது.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2001 செப்டம்பர் 10

முற்பகல் 11-10

குறிப்பாக, மாணவிகள், மாணவர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற செய்தி அதிகமாக வருகிறது. அதேபோல சமூக விரோதிகளாலும் அப்படிப்பட்ட பாதிப்பு வருகிறது. கல்லூரி, பள்ளி மாணவிகளுக்கு என்று தொடங்கி அலுவலகத்திலே பணிபுரிகின்ற பெண்களுக்கும் அப்படிப்பட்ட பாதிப்புகள் இருக்கத்தான் செய்கிறது. அன்றாடம் அவர்கள் அனுபவித்துக் கொண்டே இருக்கிறார்கள். வெளியில் சொல்ல முடியாத இக்கட்டான நிலையிலே இருக்கிறார்கள். இந்த நாடு ஜனநாயக நாடு என்ற காரணத்தினாலேயோ என்னவோ over ஜனநாயகம் இதற்கு வழங்கப்பட்டுவிட்டதாகவே நான் கருதுகிறேன். ஆகவே இதைத் தடுப்பதற்கான முயற்சியை அரசு ஒரு தனித்த சிந்தனையோடு செயல்படுத்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். குறிப்பாக மாணவர்கள் பல தவறான வழிகளுக்கு அடிமைகளாக்கப்பட்டு விட்டார்கள். போதை மாத்திரைகள், போதைப் பொருட்கள் சாப்பிடுகிற காரணத்தினாலே இன்னும் பலவிதமான செயல்களாலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக பெண் என்று சொல்லப்படுகின்றபோது பெண், சிசுவாக இருக்கின்றபோதே அதைக் கண்டுபிடித்து கொலை செய்வதில் தொடங்கி பள்ளிப் பருவம், கல்லூரிப் பருவம், அலுவலகத்திலே பணியாற்றுகிறவர்கள் வரையிலும் பார்த்தால் அவர்களுக்கு எல்லா வகையிலுமே சமூக ரீதியாக நீதி வழங்காமல், அவர்களுக்கு இடையூறு செய்யப்படுவது என்பதை இவ்வளவு வளர்ந்த நிலையில் பொறுத்துக்கொள்ள முடியாத, சகித்துக்கொள்ள முடியாத ஒரு செயலாகத்தான் நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இந்தப் நிகழ்ச்சியின் மூலமாக நம் தமிழகத்திலே இருக்கிற இப்படிப்பட்ட செயல்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற மாணவர்களுக்குக்கூட இந்தப் பொறுப்பு வாய்ந்த மன்றத்தின் மூலமாக நான் வேண்டுகோளாகவும் வைக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதென்பது குறிப்பாக நம்முடைய தமிழ் சமுதாயத்திற்கு உகந்ததாக அல்ல, ஒன்றுபட்ட நமது இந்திய நாட்டினுடைய பெருமைக்குரிய மாநிலம் ஆக இருக்கிற இந்த மாநிலத்திலே இது நடக்காமல் தடுக்கப்படுவதற்கான முயற்சியை விரைவாகச் செய்வதற்கு நமது அரசு முனைப்பான காரியங்களிலே ஈடுபட வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.



2001 செப்டம்பர் 10]

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Eve-teasing கொடுமையினால் தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு அவர்கள் தேதி வாரியாக இங்கே குறிப்பிட்டார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே கடந்த 2 ஆண்டுகளிலே தொடர்ந்து அங்கே உள்ள பள்ளி மாணவிகள், கல்லூரி மாணவிகள் இந்தக் கொடுஞ்செயலுக்கு ஆளாக்கப்பட்டு தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். சரிதா, சபிதா என்ற இரண்டு பள்ளி மாணவிகள் முகத்திலே ஆசிட் வீசப்பட்டு கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அதைத் தொடர்ந்து, ஆசாரிப்பள்ளத்தைச் சார்ந்த அமுதா என்ற மாணவி eve-teasing கொடுமைகள் காரணமாக தற்கொலை செய்துகொள்ளக்கூடிய அளவிற்கு நிலைமை போய் இருக்கிறது. காவல் துறையினர் பல்வேறு பிரிவுகளிலே வழக்குகளைப் பதிவு செய்து கைது செய்திருக்கிறார்கள். சில வழக்குகளில் குண்டர் தடுப்புச் சட்டத்தில்கூட கைது செய்திருக்கிறார்கள். இதிலே சம்பந்தப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சில இடங்களிலே சம்பந்தப்படாதவர்கள்கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே ஒரு சம்பவம் நடைபெற்று அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பது என்பது வேறு. இதைப்போன்ற கொடுமைகள் நடைபெறாமல் தடுப்பது என்பது வேறு. எனவே, இப்போதைய சூழ்நிலையிலே இதைப்போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கக்கூடிய ஒரு ஆயுதத்தை காவல் துறை கையிலே எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக Special Police Force ஒன்றைப் போட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கே இதைப்போன்ற சம்பவங்கள் நடைபெறும் என்று அவர்கள் கருதுகின்றார்களோ, பஸ் நிலையத்திலோ அல்லது கல்லூரிகளிலோ, பள்ளிகளுக்கு முன்போ அந்த இடங்களில் Special Police Force காலையிலும் மாலையிலும் கண்காணிப்பார்கள் என்று சொன்னால் ஓரளவு இது குறையும். இதில் கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல வேலை இல்லாத இளைஞர்கள் ஈடுபடுகின்றார்கள், சமூக விரோதிகள் ஈடுபடுகின்றார்கள். தக்கலையில் நடைபெற்ற சம்பவத்தில்கூட ஒரு இறைச்சிக் கடையில் வேலை செய்யக்கூடிய ஒரு இளைஞன் ஆசிடை எடுத்து வீசியிருக்கின்றான். எனவே, இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பய உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்று சொன்னால் காலையிலும் மாலையிலும் மாணவிகள் கல்லூரிகளுக்கோ, பள்ளிகளுக்கோ செல்கின்ற நேரத்தில் ஒரு Special

Police Force இதற்காகத் தனியாக ஏற்படுத்தி இதை கண்காணிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொது இடங்களிலும், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், பஸ் நிலையத்திலும் ஒரு புகார் பெட்டி வைக்க வேண்டும். ஏனென்றால் இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற அன்றே அந்தக் கொடுமை நடைபெறுவதில்லை. தொடர்ந்து ஆசிட் வீசப்படுகிறது என்று சொன்னால் மாதக் கணக்கிலே அந்த இளைஞன் அந்த மாணவியைப் பின்தொடர்ந்து கேலி செய்ததின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அமுதா என்ற மாணவி அங்கே தற்கொலை செய்து கொண்டிருக்கிறார் என்றால் தொடர்ந்து 6 மாதம் 7 மாத காலமாக அந்தக் கொடுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். இந்தப் புகார்களை எல்லாம் காவல் நிலையத்திற்குச் கொண்டு செல்வதற்கு மாணவிகளுக்குப் பயம் ஏற்படுகிற காரணத்தால் இந்தப் புகார்கள் காவல் துறையின் கவனத்திற்கு வரவில்லை. எனவே, ஆங்காங்கே அந்தந்த இடங்களிலே, கல்லூரிகளிலோ அல்லது பள்ளிகளிலோ, பஸ் நிலையங்களிலோ ஒரு புகார் பெட்டியை வைத்து, தினமும் அந்தப் புகார் பெட்டியிலே சம்பந்தப்பட்டவர்கள் புகாரை எழுதிப் போடலாம், யார் யார் இந்த மாதிரி கொடுமைகளைச் செய்கின்றார்கள் என்ற புகாரைச் சொல்லலாம். அதன் அடிப்படையில் காவல் துறை நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னால் இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு சேர்த்து பெண் காவலர்களை மாறுவேடத்தில் காலையிலும் மாலையிலும் பஸ் நிலையத்திலோ அல்லது பெண்கள், மாணவிகள் கூடக்கூடிய இடத்திலோ மாணவிகளோடு மாணவிகளாக நின்று கண்காணிக்க வேண்டும். பெண் காவலர்களை மாறுவேடத்திலே uniform இல்லாமல் நீங்கள் பயன்படுத்தினால் சமூக விரோதிகளை நாம் கண்டுகொள்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, இந்த eve-teasing கொடுமையினால் இன்றைக்கு தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்பை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். இந்த அரசு பெண் முதலமைச்சரைக் கொண்ட அரசாக இன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்றும், இந்த அரசில் பெண்களுக்குப் பல்வேறு பாதுகாப்புத் திட்டங்களையெல்லாம் கொடுப்போம் என்றெல்லாம் சொல்லி வருகின்றீர்கள். பெண்களுக்கு எதிர்காலத்திலே கொடுக்கிற பாதுகாப்பைவிட இப்போது இருக்கக்கூடிய மாணவிகளுக்குப் பாதுகாப்பைக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா எனக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.





முற்பகல் 11-15.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-8-2001 அன்று கிருஸ்தவ ஆலயத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த அமுதாவை, ஜோன்ஸ், (தகப்பனார் பெயர் கிரிகோரி) என்பவர் கேலி செய்துள்ளார். அமுதா இந்த விவரத்தை தன் பெற்றோர்களிடம் தெரிவிக்க, அவர்கள் ஜோன்சின் பெற்றோர்களிடம் கூறி இருக்கிறார்கள். அமுதா வீட்டின் சொந்தக்காரர் செல்லம்மாள் 23-8-2001 அன்று அமுதாவின் வீட்டிற்குச் சென்று அமுதாவையும் அவரது பெற்றோரையும், ஏன் இந்த விவகாரத்தைப் பெரிதுபடுத்துகிறீர்கள்; உங்கள் நடத்தையே சந்தேகத்திற்கு உரியதுதானே என்று தகாத வார்த்தைகளால் திட்டி இருக்கிறார். இந்த விஷயத்தைப் பெரிதுபடுத்தினால் வீட்டை காலி செய்யவேண்டி இருக்கும் என்று மிரட்டி இருக்கிறார். இந்தத் தகாத வார்த்தைகளைத் தாங்க முடியாத அமுதா 24-8-2001 அன்று காலையில் விஷம் அருந்தியதில் நாகர்கோவிலில் ஜெயசேகரன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்திருக்கிறார்.

தகப்பனார் ஐயப்பன் புகாரின் பேரில் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையம் குற்றப்பிரிவு எண் 282/2001, பிரிவு 306, 509, (4) பெண்களை கேலி செய்வதைத் தடுக்கும் சட்டப் பிரிவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. புலன் விசாரணையில் அமுதாவிற்கும் ரமேஷ் என்பவருக்கும் இருந்த காதலைப் பயன்படுத்தி ஜோன்ஸ் மற்றும் அவரது கூட்டாளிகள் அமுதாவை கேலி செய்துள்ளனர் என்றும் ஜோன்ஸின் தூரத்து உறவினரான செல்லம்மாள் அமுதாவையும் அவரது குடும்பத்தாரையும் தனது உறவினருக்காக தகாத வார்த்தைகளால் திட்டி மிரட்டி இருக்கிறார் என்றும் இதன் காரணமாக அமுதா தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. எதிரிகளில் ஆசாரிப்பள்ளத்தைச் சேர்ந்த அருள் ரமேஷ், ஆரோக்கிய ரமேஷ் மற்றும் வீட்டுச் சொந்தக்காரர் செல்லம்மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டு நாகர்கோவில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு அடைப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஜோன்ஸ் மற்றும் இரண்டு எதிரிகள் தலைமறைவாக உள்ளனர். அவர்களைக் கைது செய்ய தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அமுதாவின் மரணத்திற்குக்

காரணமான, பெண்களைக் கேலி செய்யும் பழக்கத்தை கண்டித்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 9 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் 27-8-2001 அன்று வகுப்புகளை புறக்கணித்துள்ளனர்.

மாண்புமிகு உறுப்பினர்கள் eve-teasing முறையைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்தப் பெண்களின் நலனில் அக்கறை கொண்டு இருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வளரினப் பெண்களை பாதிக்கக்கூடிய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவு இட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு அவர்கள் பேசுகிறபோது, ஜூன் மாதத்திலே இருந்துதான் இதுமாதிரி குற்றங்கள் நடைபெற்று இருப்பதாகச் சொன்னார். இந்தக் குற்றங்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், eve-teasing குற்றங்கள், காலங்காலமாக, ஏதாவது ஒரு இடத்திலே நடைபெறுகிற சம்பவம், அதன் எதிரொலியாக பல இடங்களிலே பரவி விடுகிறது. 2001 செப்டம்பர் வரை 9 மாத காலத்தில் 445 கற்பழிப்பு வழக்குகள், 1614 பாலியல் பலாத்காரங்கள், 224 பெண்கள் கடத்தல்கள், 146 வரதட்சணை மரணங்கள்; 2422 ஆபாசமாகப் பேசியவர்கள் மீது குற்றப் பதிவு; 758 வரதட்சணைக் கொடுமைகள், இதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை, பெண்கள், ஆண்கள் காவல் நிலையத்திற்கே சென்று புகார் சொல்வதற்கு தயங்கி இருப்பதை அவருக்கு வந்திருக்கின்ற செய்தியின் அடிப்படையிலே மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டு, அவை என்ன காரணத்தினாலோ சில காலங்கள் செயல்படாமல், அவர்களுடைய பணிகள் துரிதப்படாமல் இருந்த காரணத்தால், இதுபோன்ற குற்றங்கள் நம்முடைய நாட்டிலே அதிகமாகப் பெருக்கெடுத்து விட்டன.

முற்பகல் 11-20

அதுவும் குமரி மாவட்டத்தைப்பற்றி சொல்கிறபோது அதிகமான சம்பவங்கள் நடைபெற்று இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே கல்வி அறிவு பெற்றவர்கள் அதிமாக இருக்கிறார்கள். அவர்கள் Internet Centre, Video Centre இதுபோன்ற இடங்களுக்கு போய், பார்க்கக் கூடாத சில





சம்பவங்களைப் பார்த்துவிட்டு இதுபோன்ற கொடுமையான செயலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியாக பெண்கள் பிரச்சினைகளை, அவமானப்படுத்தக்கூடிய விதத்தில் சினிமா தியேட்டரிலே காட்டினாலும் சரி; இல்லை, சுவரொட்டியாக ஒட்டி இருந்தாலும் சரி, Interne: Centre-லே இதுபோன்ற கொடுமைகள் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளைக் காட்டினாலும் சரி, Video Library-யில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்தாலும் சரி, சோதனை செய்து அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்காகவே ஒரு பெண் I.G.-யை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமித்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திலகவதி, ஐ.பி.எஸ். அவர்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்த ஒன்று. அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதுபோன்ற சம்பவங்களைக் கடுமையாகத் தண்டிப்பதற்கு, ஜாமினிலே வரமுடியாத அளவிற்கு இதைப் பெரும் குற்றமாக மாற்றுவதற்கு புதிய சட்டம் கொண்டுவந்து கடும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

சினிமா தணிக்கைக் குழு ஆபாசக் காட்சிகளை தடுப்பதற்கும் கடும் நடவடிக்கை எடுக்க அரசின் செயல்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சம்பவங்களில் ஈடுபடக்கூடியவர்கள் மாணவர்களாக இருந்தாலும் சரி, அவர்களில் பெரும்பாலோர் வேலை இல்லாமல் வெட்டித்தனமாக சுற்றிக்கொண்டு இருப்பவர்கள்தான் ஈடுபடுகிறவர்களாக இருந்தாலும் சரி. இவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்காக கருத்தரங்குகள் நடத்தி, அவர்கள் இதுபோன்ற கொடுஞ் செயல்களுக்கு ஆட்படாத அளவிற்கு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், இந்தச் செயலைத் தடுப்பதற்கும் அம்மா அவர்கள் உத்திரவிட்டு இருக்கிறார்கள். இன்னும் இதுபோன்ற eve-teasing கொடுமைகளை, மகளிருக்கு எதிராக தவறு இழைக்கக்கூடிய குற்றங்களைத் தடுப்பதற்கு இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் தங்களின் மேலான ஆலோசனைகளை அரசுக்குத் தெரிவித்தால் அம்மா அவர்களால் நிச்சயமாக பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 10

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2001 செப்டம்பர் 10] [திரு. ப. தனபால்]

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் இன்று மாலை 4-30 மணியளவில் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10-வது தளத்தில் உள்ள மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளதால், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கருத்தரங்கை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து தள்ளிவைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 13 ஆம் தேதி மாலையில் நடைபெறுவதாக இருந்த முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து அளிக்கிற நிகழ்ச்சி, பேரவை உறுப்பினர்கள் பலருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 10

## 5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23 — கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34 — நுகர்பொருள் வழங்கல்

### (அ) கோரிக்கை எண் 23 — கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 23–கூட்டுறவு. மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.174,29,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3612, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒட்டன்சத்திரம் தொகுதியில் புதிதாக வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 142, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயிகளின் கூட்டுறவுக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 589, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீலகிரி மாவட்டத்திலுள்ள மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களை உடனடியாக பணி நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3163, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் அர்பன் கூட்டுறவு வங்கி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1388, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயிகளின் பயிர்க் கடன் தொடர்பாக அரசு வழங்கியுள்ள சலுகைகள் நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்கு உடனடியாக சென்றடைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1824, திரு. மு. அப்பாவு. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1874, திரு. க. முருகவேல் ராஜன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2707, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3193, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 873, திரு. ரா. ஈஸ்வரன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 766, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண். மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1968, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2961, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3093, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3424, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் கிராமத்தில் கூட்டுறவு டீசல் விற்பனை நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.'

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1478, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1259, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நலிவுற்ற அரூர் தொகுதி, தருமபுரி கூட்டுறவு நூற்பாலையை சீர்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3061, திரு. செ. கு. தமிழரசன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1630, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு நிறுவனங்களின் நுழைவு புத்தகங்களில் உறுப்பினர்களின் தற்போதைய வயதைக் குறிப்பிட திருத்தம் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்,

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3052, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க நீலகிரி மாவட்டம், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பணியாற்றி வந்த தொழிலாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் பலர் பணி ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகியும், சம்பந்தப்பட்டவர்களுக்கு விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின் பலன்கள் உடனடியாகக் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2001 செப்டம்பர் 10] [திருமதி எஸ். மகேஸ்வரி]

'கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.174,29,63,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

## (ஆ) கோரிக்கை எண் 34-நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34, நுகர்பொருள் வழங்கல். மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.1694,44,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 747, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 696, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் தொகுதியில் குடும்ப அட்டை இல்லாதவர்கள் விண்ணப்பித்து பல மாதங்கள் ஆகியும் இன்னும் குடும்ப அட்டைகள் வழங்காதவர்களுக்கு விரைந்து அவற்றை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 581, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் கோத்தகிரி வட்டங்களில் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3271, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3585, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோவில் தொகுதி மற்றும் ஈரோடு மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் போதிய அளவு மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2001 செப்டம்பர் 10] [திரு. மு. பெ. சாமிநாதன்]

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3105, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட பொது விநியோக நியாய விலைக் கடைகளில் அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் இதர பொருட்களை சரியான எடையுடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3072, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2677, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3212, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

[திரு. மு. கார்த்தி] [2001 செப்டம்பர் 10

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 763, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2019, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருக்கழுக்குன்றம் வட்டம், பாண்டூர், கொல்லைமேடு, கண்டிகை ஆகிய கிராமங்களில் புதிய நியாயவிலைக் கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3104, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2001 செப்டம்பர் 10] [திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்]

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 726, திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேதாரண்யம் தாலுகா, தலைஞாயிறு ஒன்றியத்தில் நுகர்பொருள் சேமிப்புக் கிடங்கு ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.1694,44,15,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்காக பேரவைமுன் வைக்கப்படுகின்றன. மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடங்குகிறது. திரு. ப. ரங்கநாதன்.

---

@179 முதல் 226 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆகவும் 227 முதல் 266 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆகவும் அச்சிடப்பட்டுள்ளன.

[2001 செப்டம்பர் 10

*திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கும், தொடர்ந்து மூன்றாவது முறையாக, புரசைவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் வாக்களித்து தேர்வு செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறை குறித்து என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கின்றேன்.

முற்பகல் 11-30

கடந்த 1991 முதல் 1996 வரையில் ஆட்சியில் இருந்து, 1996 தேர்தலிலே அ.இ.அ.தி.மு.க. அரசு தோல்வியுற்றது. 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேற்றபோது, 1996 ஆம் ஆண்டு மார்ச் வரையில் அரசு கிடங்குகளிலே 3.79 இலட்சம் டன் அரிசி கையிருப்பு வைத்திருந்தது. கடந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியினர் 2001 ஏப்ரல் மாதம் வரையில் 14 இலட்சம் டன் அரிசி கையிருப்பாக கிடங்குகளிலே வைத்துள்ளார்கள்.

அதேபோன்று, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களிலே காவிரி டெல்டா பகுதிகளில் நெல் கொள்முதலை கடந்த ஐந்தாண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்துகொண்டிருந்தார்கள். அப்படி நெல் கொள்முதல் செய்கின்ற நேரத்தில் கடந்த ஆண்டு 2.65 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்திருக்கின்றார்கள். கடந்த ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏகபோக கொள்முதல் 17.57 இலட்சம் டன். ஆனால் 1991-1996 வரையில் கடந்த அண்ணா திராவிட முன்னற்றக் கழக ஆட்சியில் இதுபோன்ற ஏகபோக கொள்முதல் செய்ததாக எந்தவிதமானக் குறிப்பும் குறிப்பேடுகளில் பார்க்க முடியவில்லை.

அதேநேரத்தில் 1991 இறுதியில் தமிழகத்திலே மொத்த நியாய விலைக் கடைகள் 22,015. ஆனால், 1996-2001 ஏப்ரல் வரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 27,733 கடைகள். பகுதி நேரக் கடைகள், முழு நேரக் கடைகள் என்று அனைத்து நியாய விலைக் கடைகளும் சேர்ந்து கடந்த ஐந்தாண்டுகளிலே மட்டும் 5018 கடைகள் கூடுதலாக கடந்த ஆட்சியில் திறந்துள்ளார்கள். அந்தப் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் சேரும்.

அதேபோன்று, நீங்கள் பதவியேற்றவுடன் டி.கே.9 ரக நெல் மற்றும் அரிசியை வெளிமாநிலங்களுக்குக் கொண்டு சென்று விற்பதற்கு 100 சதவிகித லெவியை இரத்து செய்து உள்ளீர்கள். அது காவிரி டெல்டா



2001 செப்டம்பர் 10] [திரு. ப. ரங்கநாதன்]

பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குப் பயனளிக்கின்ற ஒரு நல்ல திட்டம்; நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதேநேரத்தில் நம் மாநிலத்திலுள்ள நவீன அரிசி ஆலைகள் எல்லாம் இயங்காமல் போனால் அந்த அரிசி ஆலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குப் பணி இல்லாத சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தினால் நாங்கள் ஒரு ஆலோசனையை இந்த அரசுக்கு வழங்கலாம் என்று நினைக்கின்றோம். அதாவது, அரிசி, நெல் இரண்டும் எடுத்துச் செல்வதற்கு பதிலாக அந்த ஆணைக்கு பதிலாக நெல்லை மட்டும் கொண்டு செல்கின்ற ஒரு ஆணையை நீங்கள் மாற்றிப் பிறப்பித்தால் இங்கே இருக்கின்ற அரிசி ஆலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் பிரச்சினை தீரும் என்பது என்னுடைய பொதுவான வேண்டுகோள்.

அதேபோன்று, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஐந்தாண்டு காலமும் குடிமைப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள். அதில் ஒரு சில பொருள்களைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2001 மே மாதம் வரை துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.25.50 காசுகள். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த 115 நாட்களுக்குள் விலையைப் பாருங்கள், ரூ.31.95 காசுகள். கடலை எண்ணெய் மே மாதம் 2001 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ.37.34 காசுகள். ஆனால் உங்களுடைய ஆட்சியில் ரூ.41.45 காசுகள். கடந்த ஆட்சியில், எஸ்.வி.எஸ். ப்ராண்ட். தேங்காய் எண்ணெய், தலைக்கு தேய்க்கின்ற எண்ணெய், ஹேர் ஆயில் வி.வி.டி., எண்ணெய் ரூ.40.96 காசுகள். உங்களுடைய ஆட்சியில் 46 ரூபாய் 80 காசுகள். தேங்காய் எண்ணெய், சமையலுக்குப் பயன்படுத்துகிற தேங்காய் எண்ணெய் தி.மு.க. ஆட்சியில் 39 ரூபாய் 90 காசு. உங்களுடைய ஆட்சியில் 47 ரூபாய் 90 காசு; நல்லெண்ணெய் தி.மு.க. ஆட்சியில் 37 ரூபாய் 05 காசு; வி.வி.எஸ்., உங்களுடைய ஆட்சியில் 51 ரூபாய் 95 காசு. குண்டு மிளகாய் காய்ந்தது தி.மு.க. ஆட்சியில் 29 ரூபாய் 10 காசு. உங்களுடைய 115 நாட்கள் ஆட்சியில் 40 ரூபாய். உளுத்தம் பருப்பு தி.மு.க. ஆட்சியில் 30 ரூபாய் 50 காசு. உங்களுடைய ஆட்சியில் 37 ரூபாய் 50 காசு. கடலைப் பருப்பு, தி.மு.க. ஆட்சியில் 23 ரூபாய் 75 காசு. உங்களுடைய ஆட்சியில் 30 ரூபாய் 95 காசு. தனியா 38 ரூபாய் 65 காசு தி.மு.க. ஆட்சியில்; உங்களுடைய ஆட்சியில் 43 ரூபாய் 95 காசு. இப்படி எல்லாவற்றிற்கும் நான் பட்டியல் வைத்திருக்கின்றேன். அந்தப் பட்டியலைக்கூட அமைச்சர் கையிலே கொடுக்க நான் தயாராக இருக்கின்றேன். நீங்கள் தெரிந்துகொள்ளலாம். (குறுக்கீடு)

*முறபகல் 11-35*

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது எனக்காக அல்ல. ஒட்டுமொத்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிரச்சனைதான் இது. எனக்கு மட்டும் பிரச்சினை கிடையாது. நான் எதற்காக சொல்கிறேன் என்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசுவது எல்லாம் முறையற்றது. திரு. ரங்கநாதன் பேசிக்கொண்டிருக்கிறார், பேசி முடிக்கட்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** இது தமிழகத்தினுடைய 6 கோடி மக்களுடைய பிரச்சினைதான். எப்போதுமே ஒரு அரசு பொது விநியோகத் திட்டத்தில், செயல் இழந்தால் அல்லது குடிமைப் பொருட்களுடைய விலை ஏறினால் அந்த ஆட்சிக்கு நிச்சயமாக பொது மக்கள் மத்தியிலே கெட்ட பெயர் உண்டாகிவிடும். அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். விலைவாசியைக் குறையுங்கள் என்ற கோரிக்கையைத்தான் நான் இங்கு வைக்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் பணிபுரிந்த விற்பனையாளர்கள்.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உணவுப் பொருட்களைப் பொறுத்தவரைக்கும் உற்பத்தியாகி, அறுவடை ஆகிற நேரத்தில் விலை குறைவாக இருக்கும். Off-season-ல் விலை அதிகமாகி விடும். துவரம் பருப்பாக இருந்தாலும் சரி, கடலைப் பருப்பாக இருந்தாலும் சரி, பாசிப் பயிராக இருந்தாலும் சரி, அறுவடை காலங்களில் விலை குறைவதும், அந்தப் பயிர் வயலிலே இல்லாத நிலையிலே அறுவடைக்குப் பின்னர் 4 மாதம், 5 மாத காலமானால் விலை உயர்வதும் நடைமுறையில் இருக்கின்ற ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறுக்கிடக் கூடாது, இறுதியிலே பதில் சொல்லலாம் என்றுதான் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். இருந்தாலும் அவர் தவறான தகவல்களைத் தொடர்ந்து இந்த அவைக்கு தரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அவர் ஒரு விலைவாசிப் பட்டியலைப் படித்தார்கள். இறுதியில் நானும்கூட பதிலுரையிலே சொல்கிறபோது, விலைவாசிப் பட்டியல்களையெல்லாம் சொல்ல இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படிக்கிற விலைவாசிப் பட்டியல் அரசுக்



கடைகளிலே விற்பதிலே இருந்து படித்ததாகத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களைச் சார்ந்த கடைகளிலே விற்கிற விலைப்பட்டியலைப் படிக்கிறாரா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தெரிவித்தால் நன்றாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, திரு. ரங்கநாதன் அவர்கள் த.மா.கா. ஜனநாயகப் பேரவையைச் சார்ந்தவர், தி.மு.க. வினுடைய கூட்டணி, அவர் ஜனநாயகப் பேரவையில் இருக்கிறார். தி.மு.க. கூட்டணி.

**திரு. ப. ரங்கநாதன்**: நான் த.மா.கா. ஜனநாயகப் பேரவைக் கட்சியைச் சார்ந்தவன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணியிலே இருக்கின்றேன். வேறு ஒன்றும் கிடையாது. நீங்கள் தவறாக நினைக்கக்கூடாது. அவர்கள் எழுதிக் கொடுத்தால் படிக்க வேண்டும், அந்தக் கட்சிக்காரர்கள் கையில் இருந்து வாங்கிப் படிக்க வேண்டும் என்ற அவசியம் எனக்குக் கிடையாது.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தச் சின்னத்திலே போட்டியிட்டு சட்டமன்றத்திலே இப்போது இருக்கிறார் என்பதையும் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

**திரு. ப. ரங்கநாதன்:** இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அது வேறு. இப்போது நான் பேச வந்தது வேறு. கடந்த 5 ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மக்கள் நலனில் அக்கறை வைத்து இந்தக் குடிமைப் பொருட்களுடைய விலையை ஒரே சீராகக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள், அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை என்னவென்றால், அவர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியம் குறைவாக இருக்கிறது என்பதாகும். 525 ரூபாய் ஆக இருக்கிறது என்று அந்த 525 ரூபாயை 1640 ரூபாய் என 1-4-2000 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது தி.மு.க ஆட்சியில்.

முற்பகல் 11-40

அதேநேரத்தில் தொகுப்பு ஊதியம் பெறும் விற்பனையாளர்களுக்கு 900 ரூபாயிலிருந்து 1300 ரூபாயாக உயர்த்தப்பட்டது அவர்கள் ஆட்சியில்தான்.

அதேபோல, கட்டுனர்களின் தொகுப்பு ஊதியம் 800 ரூபாயிலிருந்து 1150 ஆக உயர்த்தப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில்தான்.

அதேபோல விவசாயிகளுடைய நலன் கருதி, திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த 5 ஆண்டுகளில் மிகப் பெரிய அளவிற்கு விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் நிலங்களிலே விளைகின்ற நெல்லைக் கொள்முதல் செய்கின்ற நேரத்தில் பல்வேறு சலுகைகளை அளித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், இரண்டு மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** என்ன தலைவரவர்களே, இப்படித்தான் நீங்கள் செய்கிறீர்கள். இப்போதுதான் ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்பது மணித் துளிகளுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** நீங்கள் எங்களிடம் 25 மணித் துளிகள் என்று காலையிலே சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவருக்கும் 10 மணித் துளிகள்தான். நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மன்னிக்க வேண்டும். நீங்கள் 20 நிமிடங்களாவது கொடுத்தால்தான் முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20 நிமிடங்கள் எல்லாம் கொடுக்க முடியாது. இன்னும் இரண்டு மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** தற்சார்புச் சங்கம் என்று சொன்னால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மன்னிக்க வேண்டும். Self-relied Co-operative Society என்றுதான் குறிப்பிட்டேன்.

1995-96-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பொது ரகத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை, ஒரு குவிண்டாலுக்கு 360 ரூபாய். சன்ன ரகத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை ஒரு குவிண்டாலுக்கு 375 ரூபாய், அதுவே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2000 வரையில், பொது ரகத்திற்கு ஒரு குவிண்டாலுக்கு கொடுக்கப்பட்ட தொகை ரூ.510. சன்ன ரகத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகை ரூ.540.



இதைக்காட்டிலும், விவசாயிகளுடைய நலனுக்காக, மத்திய அரசு நிர்ணயித்த இந்த விலையை வழங்குவதுடன், இணைக் கொள்முதல் செய்கிற காலத்தில் இடை நிகழ்வு செலவாக கடந்த கால தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு 4½ ஆண்டு காலத்தில் சுமார் 228 கோடியே 30 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது. ஆனால் 1991-1996 வரையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இடை நிகழ்வு செலவு விவசாயிகளுக்கு கொடுக்கப்படவில்லை என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

அதேபோன்று, நெல் கொள்முதலிலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு ஓராண்டுக்கு 17 இலட்சத்து 57 ஆயிரம் டன் ஏகபோக நெல் கொள்முதல் செய்திருக்கிறது.

அடுத்து, ரேஷன் கடைகள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்தில் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. நுகர்வோருக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று சுமார் 296 தானியங்கி நிலையங்களை ஏழை மக்களுக்கு தி.மு.க. ஆட்சியில் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதேநேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தின் கடைசி கால கட்டத்தில் 1-1-1996 அன்று 12 கிலோ அரிசியை 20 கிலோவாக உயர்த்தி வழங்குவதற்கு உத்தரவிட்டார்கள். ஆனால், 1996 தேர்தலிலே தி.மு.க. ஆட்சி வந்த பின்பு அந்த 20 கிலோ அரிசியை—அது தற்காலிகமான உத்தரவு, 1-1-1996 இல் அவர்கள் போட்டது. அந்த 20 கிலோ அரிசியை—தொடர்ந்து 5 ஆண்டுகளாக வழங்கி வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், உங்கள் நண்பர்களுடைய பாராட்டுரையோடு இந்த உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள். இதுவரை 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ப. ரங்கநாதன்:** இன்னும் பத்து நிமிடங்களாவது கொடுங்கள். கூட்டுறவுத் துறையைப் பற்றி பேசி முடித்துவிடுகிறேன்.

அண்மையிலே உச்ச நீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. 63 கிலோ அரிசி வழங்கலாம், அந்த அளவுக்கு உணவு தானியம் கையிருப்பு இருக்கிறது என்று அரசு கூறுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், நான் கேட்டுக்கொள்வது, உங்களுடைய ஆட்சிக் காலத்தில்,—

மக்கள் பெருவாரியாக வாக்களித்து, நீங்கள் வெற்றிபெற்று வந்திருக்கிறீர்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 50 கிலோ அரிசி வழங்கினால் உங்களுக்குத்தான் நல்லது என்று நான் சொல்கிறேன். உள்ளாட்சித் தேர்தல் வருகிறது. 50 கிலோ என்று நீங்கள் வழங்கினால் ஜெயிக்கலாம். தப்பு கிடையாது. அதை ஏற்றுக்கொள்கிறோம். நல்லதைச் செய்தால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். வரவேற்கிறோம்.

விவசாயிகளுக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுமார் 300 கோடி ரூபாய் அளவுக்கு மானியம் வழங்கியிருக்கிறார்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகின்றேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமருங்கள்.

முற்பகல் 11-45

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியாலும், 1996-ல் ஏற்பட்ட வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றிய விதத்தில் அபராத வட்டித் தொகை தள்ளுபடி 50 கோடி ரூபாய்.

1997-98-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய கால கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியதால் ஏற்பட்ட செலவு, அன்றைக்கு 62 கோடியே 37 இலட்சம் ரூபாய்க்கு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். 1998-99-ல் குறுகிய கால பயிர்கடன்களை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்குக் கடன் தொகையில் 6.25 சதவிகித வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது. இதனால் 1,47,554 பேர் பயனடைந்தார்கள். அரசு 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவழிந்துள்ளது. 1999-2000-ல், வட்டி ஊக்குவிப்புத் தொகை கூடுதலாக 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 2,42,817 விவசாயிகளுக்கு 19 கோடியே 72 லட்சம் ரூபாய் அளவிற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இன்று நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னீர்கள். நாங்கள் எல்லாம் வரவேற்றோம். ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு கொடுக்கிறபோது 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். அந்த 100 கோடி ரூபாயில் இதுவரையில் விவசாயிகள் சலுகை பெற்றது 56



கோடி ரூபாய்தான். அதற்குக் காரணம் சர்க்கரை ஆலைகளில், தனியார் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் விவசாயிகளிடமிருந்து கரும்பை அவர்கள் பெற்றுக்கொண்டு இதுநாள்வரையில் அவர்களுக்குப் பணம் தரவில்லை. பட்டுவாடா செய்யவில்லை. அதிலே 200 கோடி ரூபாய் சர்க்கரை ஆலைகளிலே நிற்கிறது. அதேபோன்று நீங்கள் குறுவை நெல் செப்டம்பர் மாதத்துக்குள்ளே கொள்முதல் செய்யவில்லை. இந்த இரண்டு பிரச்சினையாலும் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். அவர் முடித்துவிடட்டும். திரு. ரங்கநாதன், இரண்டு மணித்துளிகளிலே முடித்துவிடுங்கள். இல்லையென்றால் அடுத்தவரை அழைத்துவிடுவேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** முடித்து விடுகிறேன். இந்தப் பிரச்சினையாலே நீங்கள் அந்த விவசாயிகளுக்கு அளித்த சலுகைகள், எப்படி அவர்களாலே பணம் இல்லை என்று சொன்னால் திருப்பிச் செலுத்தமுடியும். ஆனால் ஒட்டுமொத்தமாக நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று சொன்னால் - பத்திரிகையிலே வந்தது 310 கோடி ரூபாய் தள்ளுபடி. ஆனால் உண்மையிலேயே நிதியமைச்சர் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு கொடுத்து இதுவரையில் பயனடைந்தவர்கள் 56 கோடி ரூபாய் அளவிற்குத்தான். அதிலே இன்னொரு பிரச்சினை இருக்கிறது. இதிலே ஒழுங்காக கடன் வாங்கி செலுத்திய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் செலுத்திய பின்பு அவர்களுக்கு வழங்கிய சலுகையிலே நீங்கள் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் (குறுக்கீடு) இந்த கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று நீண்ட நாள் பிரச்சினை. தமிழ்நாடு கூட்டுறவு சங்கம் 1904 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் திரூர் என்ற ஊரில் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. அந்தச் சங்கத்துக்காக அன்றைக்கு இருந்த வெள்ளையர்களுடைய ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாண அரசாங்கம் 1912 ஆம் ஆண்டு, முதல் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கினார்கள். அதை அடுத்து 1932 ஆம் ஆண்டு ஒரு சட்டம், 1961-63 ஆம் ஆண்டில் ஒரு சட்டம். 1983 ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தை நிறைவேற்றி 1988 ஆம் ஆண்டு அதன் விதிகளைச் சேர்த்துள்ளார்கள். ஆனால் கடைசியாக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தில் பல்வேறு குறைகள் இருக்கின்ற காரணத்தால் அந்தச் சட்டத்தை மாற்றி மத்திய அரசின் திட்டக் குழுவால்

அங்கீகரிக்கப்பட்டுள்ள Model Act மாதிரி சட்டம், அதை இந்த மாநிலத்தில் நீங்கள் கொண்டுவர வேண்டும் அல்லது கேரள சட்டத்தையாவது அல்லது ஆந்திராவிலே இருக்கிற கூட்டுறவு சட்டத்தையாவது இந்த மாநிலத்துக்கு நீங்கள் அறிமுகம் செய்ய வேண்டும். அதேபோன்று ஆந்திராவில் சார்பு சங்கங்கள்-Self-relied Co-operative Society-சார்பு சங்கங்களைத் தொடங்கலாம் என்று அந்த அரசு அறிவித்துள்ளது அல்லது எந்தச் சட்டமும் தேவையில்லை என்றாலும் 1961-63, அந்தச் சட்டமாவது (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். திரு. ரங்கநாதன் பேச்சு முடிகிறது. நிறைவடைகிறது. மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அவர் சார்பு சங்கம் என்று சொன்னார். அது தற்சார்புச் சங்கம். Self-relied Society என்றால் தற்சார்புச் சங்கம். சார்புச் சங்கம் அல்ல.

**திரு. ப. ரங்கநாதன்:** தற்சார்புச் சங்கங்கள் என்றுதான் சொன்னேன். Self-relied Co-operative Society ஆக இதுபோன்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திருமதி யசோதா, அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க (குறுக்கீடு) இல்லை. சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏதோ கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நலத்தையெல்லாம் கருத்திலே வைத்து மாண்புமிகு உறுப்பினர் விலைவாசிப் பட்டியலையெல்லாம் சொல்லி வந்தார். ஆனால் வெங்காயத்தினுடைய விலையைப் பற்றி சொல்ல மறந்துவிட்டாரே என்றுதான் அதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒரு கிலோ வெங்காயம் 40 ரூபாய்க்கு விற்றது கடந்த ஆட்சிக் காலத்திலேதான், அதைச்சொல்ல மறந்துவிட்டது ஏனோ என்பதை தங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, என்ன திரு. ரங்கநாதன் அவர்களிடம் ஏதாவது கேட்க வேண்டுமா? (குறுக்கீடு) சரி கேளுங்கள்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், உங்கள் நண்பர் ஏதோ கேட்க வேண்டும் என்கிறார்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் குறிப்பிடும்போது 50 கிலோ அரிசி தாருங்கள், உள்ளாட்சிமன்றத் தேர்தல் வருகிறது. நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களுக்கு அவை அடக்கத்தோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மறைந்த மனிதப் புனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் இன்றையதினம் இந்தத் தமிழ்நாட்டை ஆட்சி செய்துகொண்டிருக்கிற மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் மக்களிடம் வாக்கு பெறுவதற்காக இந்த இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்காக தொடங்கப்பட்ட இயக்கம்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டு காலம் நடைபெற்ற ஆட்சியில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, திரு. ரங்கநாதனிடம் ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபோது இதுசமயம் விவசாயிகளுக்குக் கிட்டியிருப்பது வெறுமனே 50 கோடி என்று கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 56 கோடி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 56 கோடி என்று கூறியிருக்கிறார்கள். நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பை எடுத்துப் பார்த்தாலே தெரியும் அதிலே பக்கம் 17-ல், 70 கோடியே 23 இலட்சம் ரூபாய் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் வெறுமனே 3.79 இலட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டது என்று கூறியிருக்கிறார். ஒன்றை அவை புரிந்துகொள்ள வேண்டும். இதுதான் திறமையான ஒரு பொருளாதார

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 10

நிர்வாகம் என்பதை எடுத்துக்காட்டுகிறமுகத்தான் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே 3 இலட்சத்து 79 ஆயிரம் டன் நெல்லை மட்டும் கொள்முதல் செய்து-Public Distribution System-பொது விநியோக முறையை மிகச் செம்மையாக நடைமுறைப்படுத்திக் கொண்டு வந்தார்கள். ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியிலே 15 இலட்சம் டன் எனக் கொள்முதல் செய்தது தேவையற்ற ஒன்று. அரசினுடைய பணத்தைத் தேவையற்ற முறையிலே பயன்படுத்தி ரிசர்வ் வங்கியிலும் 1400 கோடி ரூபாய்க்கு மேல் கடனை வாங்கி, அந்த நெல்லை எல்லாம் Godown-களில் வைத்து, கெட்டுப்போய்விடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கெட்டுப் போய்விட்டது என்று சொல்லி குறைந்த விலைக்கு ஏலம் விட்டு அதிலே முறைகேடுகளை மேற்கொண்டு தவறுகள் நடந்தது கடந்த கால ஆட்சியிலே என்பதை நான் அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைவிட மிக முக்கியம் தற்போது பசுமைப் புரட்சி காரணமாக இந்தியத் துணைக் கண்டத்திலே நெல் உற்பத்தி மிக அதிகமான அளவு கடந்த 5, 6 ஆண்டு காலமாக இருந்து வருகிறது. Food Corporation of India is flooded with surplus paddy என மைய அரசே தெரிவித்திருக்கிறது. 7 நாள் நோட்டீசிலே எத்தனை இலட்சம் டன் நெல் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளக்கூடிய அளவிற்குத்தான் கடந்த 5 ஆண்டு காலமாக Food Corporation of India-வினுடைய stock அளவும் இருக்கிறபோது எதற்காக வீணாக 15 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்து stock வைத்து பிறகு கெட்டுவிட்டது என்று சொல்லி அதை வெளியிலே விற்க முறைகேடுகள் நடப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இடம் தந்தது கடந்தகால அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும் என்பதற்காக இதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அண்ணன் கோ.சி. மணி அவர்கள்.

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தேவையற்ற முறையில் நெல்லைக் கொள்முதல் செய்து அதிகமான அளவிற்கு வாங்கி சேதப்படுத்தி இருப்பதாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆட்சியில் விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்காமல் அவர்களிடம் வாங்க வேண்டிய நெல்லை வாங்காமல் இரட்டைக் கொள்முதல் என்று



2001 செப்டம்பர் 10] [திரு. கோ. சி. மணி]

அறிவித்துவிட்டு சாக்கும் கொடுக்காமல், தொகையும் கொடுக்காமல் அவர்களைச் சந்தியிலே விட்டு அவர்கள் நெல்லை விற்க முடியாமல் தவித்துக்கொண்டு இருந்த நேரத்தில் அந்த ஆட்சி முடிந்ததற்குப் பிறகு தி.மு.க. ஆட்சியில் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த அவையிலே எடுத்த தீர்மானத்தின் அடிப்படையிலும், அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்து 45 ரூபாய் அவர்களுக்கு இடைநிகழ்வு தொகையாக கொடுக்கப்பட்டு, வாங்கப்பட்டது என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல நுகர்பொருளை வாங்கி சாப்பிடுபவர்களுக்கு மட்டும் பாதுகாப்பு அளிப்பது, அதை உற்பத்தி செய்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடாது என்ற முறையை அண்ணா தி.மு.க. ஆட்சியில் நீங்கள் ஏற்படுத்தியிருப்பதாக நான் கருதுகிறேன். இந்த அவையில் அதைக் கண்டிக்கிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன், செம்மையான பொருளாதார நிதி நிர்வாக அணுகுமுறையைக் கடந்தகால ஆட்சி கடைபிடிக்கவில்லை என்று சொன்னேன். தற்போதுகூட புரட்சித் தலைவி என்ன செய்தார்கள்? டி.கே.எம். 9 வகையை அரசு பணத்தைப் போட்டு ரிசர்வ் வங்கியிலே கடனை வாங்கி, பிற இடங்களில் கடனை வாங்கி கொள்முதல் செய்வதைவிட, உழவர்களே அந்த அரிசியை வெளிச்சந்தையில் விற்றுக்கொள்ளலாம் என்று ஒரு ஆணையிட்டதால், விவசாயிகள் பலன் அடைந்திருக்கிறார்கள் என்று திரு. ரங்கநாதன் அவர்களே சொல்லவில்லையா? அத்தகைய அணுகுமுறையை நீங்கள் மேற்கொண்டு இருக்கக் கூடாதா? விவசாயிகள் இந்த நெல்லை வெளியிலே விற்க நீங்கள் ஏன் அனுமதி தரவில்லை. உபரி நெல்லை ஏன் விற்க அனுமதி தரவில்லை. எதற்காக, நீங்கள் அரசு பணம் 1400 கோடி ரூபாய் போட்டு அந்த நெல்லை வாங்கி Godown-ல் வைத்து கெடக்கூடிய நிலையை உருவாக்கி, பிறகு குறைந்த விலைக்கு ஏலம் விடக்கூடிய சூழ்நிலையை எந்த நோக்கோடு, எந்த லாப நோக்கோடு நீங்கள் உருவாக்கினீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ப. ரங்கநாதன்:** விவசாயிகளுடைய நலன்...

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைபாக்குக்கு விலை சொல்லக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு வேளை பட்டுக்கோட்டையில் விலை குறைவாக இருக்கலாம். அண்ணன் மணி அவர்களே, அண்ணா அவர்களே இந்த உவமைக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கோ. சி. மணி:** நான் கேட்பது, விவசாயிகளிடமிருந்து நெல்லை தேவையற்ற முறையில் வாங்கி கொள்முதல் செய்தது தவறு என்பது அவருடைய வாதம். என்னுடைய வாதம் வாங்கித் தின்பவர்களுடைய நிலைமையையும் உணர்ந்து, உற்பத்தி செய்கிற விவசாயிகளுடைய நிலைமையையும் உணர்ந்துதான் அன்றைக்கு இடைநிகழ்வு கொடுக்கப்பட்டு, 35 ரூபாய் 40 ரூபாய் கட்டாயக் கொள்முதல், இரட்டைக் கொள்முதல் என்ற பிரச்சினையை ஏற்றுக்கொண்டுதான் அந்த அரசு, இந்த அவையில் முடிவு எடுத்தும், மந்திரி சபை கூட்டத்தில் முடிவு எடுத்தும், இங்கே எதிர்க் கட்சியாக அப்போது இருந்தவர்களுடைய வேண்டுகோள்படியும் முடிவு எடுத்துத்தான் வாங்கப்பட்டதே தவிர, வாங்கி வைக்க வேண்டும், அதை நஷ்டப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் செல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர்களிடமிருந்து கொள்முதல் செய்வதை தவறு என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்று கவனியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆனால், உழவர்களிடமிருந்து கொள்முதலை (குறுக்கீடு) நான் சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அமைச்சரைச் சொல்லவிடுங்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உழவர்களிடமிருந்து கொள்முதல் செய்வது தவறு என்று சொல்லவில்லை. உழவர்கள் நலனைக் காக்க வேண்டும். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு என்ன செய்தார்கள்? உங்களைப் போன்று கஜானா காலியாக இருந்த நிலைமையிலும்கூட ரிசர்வ் வங்கியிலே 1400 கோடி ரூபாய் கடனை வாங்கி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்கள் அமைச்சராக இருந்தவர். அமைச்சர் விளக்கம் சொல்லும்போது குறுக்கிடக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் பேசி முடித்த பிறகு மாண்புமிகு மணி அவர்கள் பேசலாம். கஜானா காலி என்ற நிலையிலும்கூட ரிசர்வ் வங்கியிடம் O.D. facility வாங்கி, ஸ்டேட் பேங்கில் கடனை வாங்கி 1400 கோடி ரூபாய் வாங்கி என்ன செய்தீர்கள்? ஸ்டாக் வைத்தீர்கள்.

**திரு. கோ.சி. மணி:** எடுத்துச் செல்லவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அதைத்தான் சொல்ல வருகிறேன். கெட்டுவிட்டது என்று பிறகு ஏலத்திலே விடப்படுகிறது. அதற்குப் பதிலாக உழவர்களை நேரடியாக எங்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருந்தால் இன்று நீங்கள் பாராட்டுகிறீர்களே டி.கே.எம். 9 கொள்கையை, அந்தக் கொள்கையை அப்போது ஏன் நீங்கள் கடைபிடிக்கவில்லை. இந்திய துணைக் கண்டத்திலே ஏகப்பட்ட நெல் இருக்கின்ற நேரம். Food Corporation of India-விடம் surplus paddy stock இருக்கின்ற நேரம். Distribution-க்குத் தேவையென்றால் Food Corporation of India-ல் எந்த நேரத்திலும் நீங்கள் வாங்கிக்கொள்ளலாம். Lesser quantum of cash-in-hand இருந்தாலே போதும், தற்போது 500 கோடி ரூபாய் ரிசர்வ் வங்கிக்கும், ஸ்டேட் பாங்கிற்கும் கொடுக்க முடியாத ஒரு நிலையை, கடன் சுமையை நீங்கள் ஏற்றிவிட்ட காரணத்தால் சம்பா கொள்முதலுக்குக்கூட பணம் கிட்டாத நிலை உருவாகியது. Surplus stock-ஐ நீங்கள் வாங்கி பணத்தையெல்லாம் அங்கே முடக்கிவிட்டு, அரசு கஜானாவை காலி செய்துவிட்டீர்களே, இந்தத் தவறான நிர்வாக முறையை ஏன் மேற்கொண்டீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர். (குறுக்கீடு) கூட்டுறவு அமைச்சர் விளக்கம் சொல்ல வேண்டும் என்கிறார். (குறுக்கீடு) கூட்டுறவு அமைச்சர் சொல்லி முடித்தவுடன் அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் மீண்டும், மீண்டும் இந்த அவையைத் தவறான வழிக்கு எடுத்துச் செல்கிற முயற்சியை செய்து கொண்டிருக்கிறார். இந்த ஆட்சியிலே இப்போது இருக்கின்ற நிதிநிலைமை பற்றி நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவாக வெள்ளை அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறார், இப்போதும் தெளிவாக விளக்கியிருக்கிறார். இந்த ஆட்சி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி விவசாயிகளுடைய நலன் காக்கின்ற ஆட்சி. ஆகவேதான் இந்த ஆட்சி அமைந்தவுடனேயே 15-வது நாளிலேயே நீங்கள் ஐந்து ஆண்டுகாலம் நபார்டு வங்கியைக் காரணம் காட்டி ஒதுக்கி வைத்திருந்த அந்த விவசாயிகளுடைய வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து, இன்றைக்கு விவசாயப் பெருமக்களுக்குப் பெரு நன்மைகளைச் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, என்னுடைய உரையிலே பின்னாலே உணவுக் கொள்கையிலே நீங்கள் எவ்வளவு தவறுகளைச் செய்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்ல இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அந்தளவு விவசாயிகள் மீது அக்கறை வைத்திருக்கிற இந்த அரசு தொடர்ந்து விவசாயிகளுடைய நலனை பேணிக் காக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் டி.கே.எம்.9 ரக அரிசியை வீணாக வாங்கி வைக்கக்கூடாது. விவசாயிகளும் நலன் பெறவேண்டும், மற்றவர்களும் பலன் அடையவேண்டும் என்பதற்காகத்தான் டி.கே.எம். 9 ரக அரிசியை வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்கிற உரிமையை வழங்கியதால், விவசாயப் பெருமக்களிடையே இந்தத் திட்டத்திற்கு மிகப்பெரிய வரவேற்பு பெற்றிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி பேசட்டும்.



**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலே கடந்த காலங்களிலே விளைபொருள்கள் விற்காமல் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்ட நிலை ஏற்பட்டது. அதேபோல, தமிழகத்திலே, விளைந்த நெல்லுக்கு, விலை கிடைக்காமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதன் காரணமாகத்தான் அரசாங்கம் நெல் கொள்முதல் செய்தது. மத்திய அரசாங்கத்திலே கூட இன்றைக்கு அதிக அளவிலே ஸ்டாக் இருக்கிறது என்றால் விவசாயிகளுடைய வாழ்க்கைக்காகத்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை விளக்கம் முடிந்தது. பிரச்சினை நீண்டுகொண்டே போகக்கூடாது. விடுங்கள். சொல்ல வேண்டியதை சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) திருமதி டி. யசோதா, அவை முன்னவர் அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் திருப்பித்திருப்பி சொன்னதையே சொல்கிறார்கள். நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். டி.கே.எம். 9-ஐ எப்படி நாங்கள் வெளிச்சந்தையில் வாங்கிக்கொள்ளலாம் என்று ஆணையிட்டோமோ, அதுபோன்று எங்கு வேண்டுமானாலும், நெல்லை எடுத்துச் செல்லலாம் என்று ஆணையிட்டிருந்தால், அந்த பணத்தட்டுப்பாடு, இந்த பண முடக்கம், அதையொட்டிய நிர்வாகச் சீர்கேடுகள் நடந்தேயிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஒரு பொருளாதார அணுகுமுறையாக நீங்கள் மேற்கொண்டிருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி அவர்கள்.

**திரு. கோ.சி. மணி:** ஒரேயொரு நிமிடத்தில் விளக்கம் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுவை சாகுபடியில் கிடைக்கிற வருவாய் தாளடியில் கூடக் கிடையாது. ஒவ்வொரு முறையிலும் அனுபவத்தின் அடிப்படையில் மக்களுக்கு உணவு வழங்க வேண்டுமென்பதைக் கட்டாயமாக மனதில் வைத்துக்கொண்ட காரணத்தால்தான் தேக்கி வைக்கப்பட்டது.

இன்னொன்று, ஏற்கெனவே, தி.மு.க. ஆட்சியிலே ஒரு முறை வெளியிலே அனுப்ப வேண்டுமென்று சொன்னபோது என்னென்ன பேசினார்கள்? என்னென்ன எழுதினார்கள்? இப்படியெல்லாம் பேசியவர்கள், எழுதியவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** இப்போது ஏன் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்கிறீர்கள்? வைத்தது தப்பா? (குறுக்கீடு) இல்லை, ஆயிரம் கோடி, 500 கோடி என்றெல்லாம் திட்டம் போட்டிருக்கிறீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 23 (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது. வண்டி விழுப்புரத்தைத் தாண்டிப் போய்விட்டது. நீங்கள் விடுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம் சம்பந்தப்பட்ட என்னுடைய கருத்துக்களை நான் உங்கள் முன்னால் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற சித்தாந்தம் தமிழகத்தில் வேரூன்றிய ஒன்று. பெருந் தலைவர் காமராஜரின் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கூட்டுறவு இயக்கம் ஒரு மாபெரும் இயக்கமாக மக்கள் இயக்கமாகவே உருவானது. கூட்டுறவு இயக்கத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட கூட்டுறவாளர்கள் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. இந்தியாவிலே ஒரு சில துறைகளிலே மிகச்சிறந்த இடத்தைப் பெற்றது நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் என்பதை நான் மிக்க பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, விவசாயக் கூட்டுறவு, நெசவாளர் கூட்டுறவு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் புரட்சியினையும், பொருளாதார மேம்பாட்டினையும் புரிந்துள்ளது. குறிப்பாக, தமிழகத்திலே செயல்படுகின்ற பல கூட்டுறவு நகர வங்கிகள் அகில இந்திய அளவிலே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கூட்டுறவு நன்கு உணரப்பட்டிருந்தாலும், கடந்த சில ஆண்டுகளில் அத்துறையில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதை நாம் மறுக்கமுடியாது. கூட்டுறவு இயக்கம் அரசியலுக்கு அப்பாற்பட்ட இயக்கமாக இருந்தவரையில் அத்துறை மிகச்



சிறப்பான இடம் வகித்தது. கிட்டத்தட்ட ஒரு அரசுக்கு இணையான அமைப்பினைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் அரசியல் சார்புநிலை மேற்கொண்ட காரணத்தினால், அக்கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமே சிதறுண்டு போய்விடுமோ என்கிற அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

பிற்பகல் 12-05

முதலாவதாக, கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கும் நிர்வாகிகளின் தேர்தல்களை நடத்துவதற்கு இந்த அரசு விரைவிலே உத்தரவிடும் என்று நான் நம்புகிறேன். கூடியவரையில் கட்சி, அரசியல் சார்பின்றி தேர்தலை நடத்திட அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

இச்சமுதாயத்தில் நல்ல சிந்தனைகளையும், நிர்வாகத் திறனும், ஆற்றலும் பெற்ற தகுதி வாய்ந்தவர்கள், பல கூட்டுறவுச் சங்கங்களில் அரசியல் ஆதிக்கம் நிலவுவதால்தான், ஒதுங்கிவிடுகின்றனர். அவர்கள் பங்கு பெறும் வகையில் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்க உறுப்பினரும் கூடிப்பேசி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வழிவகை காண வேண்டும்.

ஒரு கூட்டுறவுச் சங்கம் என்றாலே மக்களிடையே நெருக்கமாக நேரடியாகத் தொடர்பு கொண்ட ஓர் அமைப்பு ஆகும். அதன் பணியாளர்கள் பெரும்பாலோர் உறுப்பினர்களை நன்கு அறிந்தவர்களாகவே இருப்பார்கள். அதனாலே கூட்டுறவு வங்கிகளில் மக்கள் தாமாகவே ஆர்வம் காட்டி, உறுப்பினர்களாகி தங்கள் பணத்தை deposit ஆக முதலீடு செய்வதும், அவர்களுடைய தேவைகளுக்குக் கடன்களைப் பெறுவதும் மிகச் சுலபமான ஒன்றாக இருந்து வருகின்றது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக மாற்றப்பட்டு, அதன் செயல்பாடுகளிலே வணிக வங்கிகளுக்கு நிகராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பாராட்டும்படியாக உள்ளன. அதே நேரத்தில் வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்கள், தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் பயிற்சியைப் பெற இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பல இலட்சக்கணக்கான பணம், நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டிருந்தன. பல இடங்களில், அதன் ஊழியர்களே ஊழல் புரிந்த செய்திகளும் வந்தன. இதுபோன்ற சம்பவங்கள், இனிமேல்

நடைபெறாத வண்ணம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு Computer ஊழல் நடந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனியதிகாரி, பொது மேலாளர் எல்லோரும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து-முன்னால் அமைச்சருக்குக்கூட அதிலே மிகப்பெரிய பங்கு இருக்கும் என்று நான் நினைக்கிறேன்-கிட்டதட்ட பினாமி நிறுவனமான Caravan Agency-யிடமிருந்து சுமார் 50 இலட்சத்திற்கு மேல் பண ஊழல் செய்து, 1 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு அங்கே Computer-கள் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு கிளைக்கும் 5 Computer-கள் அனுப்பி, Furniture Register-ல் பதிவு செய்து, 4.65 இலட்சம் ரூபாய்க்கு வங்கிக் கணக்கில் லேவாதேவி செய்துள்ளனர். ஒரு Computer machine-னுடைய தற்கால விலை அதிகபட்சம் 50 ஆயிரம் ரூபாய். ஆனால் இதைக்கூட சென்ற மாதம் 18 ஆம் தேதி இந்து பத்திரிகையிலே 39,990 ரூபாய் ஒரு Computer-னுடைய விலை என்று அதிலே விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆனால், இவர்கள் அன்றைக்கு அதிகபட்சமாக Computer-க்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தால்கூட 5 Computer-கள் தான் வாங்கியிருக்கிறார்கள். என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலே இருக்கின்ற கூட்டுறவு வங்கியில் இது நடந்தது என்று சொல்கின்றேன். 5 Computer-கள் வாங்கினால் 50 ஆயிரம் என்று சொன்னால்கூட, 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்தான் வரும். ஆனால் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் Caravan Agency-யிடத்திலே, தனியாரிடத்திலே கொடுத்து, இவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த ஊழலை நீங்கள் கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அரசு நிறுவனமான எல்காட் நிறுவனத்தில் இவர்கள் வாங்கியிருந்தால்கூட இதுபோன்ற தவறுகளைச் சென்ற அரசாங்கம் செய்வதற்குரிய ஒரு வாய்ப்பு இருந்திருக்காது என்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். தற்போது ஒரு Computer-னுடைய விலை 35 ஆயிரம் ரூபாய். ஆகவே, இந்த முழுமையான விவரங்களை நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-10

அடுத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மைப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, கடன் வசதி அளித்தால் அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற மூலப்பொருட்களைக் கொண்டு தொடங்கும் தொழில்களை ஊக்கப்படுத்தும் வகையில் கடன் வசதி அளிக்க வேண்டும். இதற்கான ஒரு தனித் திட்டத்தினை வகுத்து தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடலாம். உற்பத்தி சாரா இனங்களுக்குக் கடன் வசதி அளிப்பதைக் குறைத்துக்கொண்டு சுய தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத உப தொழில்களுக்கு உதவ முன்வரவேண்டும். ஏன் இதை நான் சொல்கின்றேன் என்றால், பல இடங்களில் consumer loan என்ற பெயரில் இரு சக்கர வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், ரெஃப்பிரிஜெரேட்டர்கள் வாங்குவதற்கு கடன் அளிக்கப்படுகின்றன. இவற்றில் பெரும் முறைகேடு நடப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன். யாரும் தவறாக எடுத்துகொள்ளக் கூடாது. கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் Two wheeler-க்கும் கடன் போடுகிறார்கள். ரெஃப்பிரிஜெரேட்டருக்கும் கடன் போடுகிறார்கள். தொலைக்காட்சிப் பெட்டிக்கும் கடன் போடுகிறார்கள். மொத்தம் அந்த ஒரு குடும்பத்திற்கே 30,000/- ரூபாய் போய்ச் சேருகிறது. அதற்குப் பிறகு அந்த கடனைச் செலுத்த முடியாத சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதைவிட, தொழில் தொடங்குவதற்கும், அந்தத் தொழிலினால் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு ஒரு சந்தையை நாம் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நிச்சயமாக ஒரு வழிகண்டால் அது ஒரு ஏற்றமிகு எதிர்காலத்தை உருவாக்கித் தரும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையேனும் உறுப்பினராக்கும் திட்டம் 1980, 1982 ஆம் ஆண்டுகளில் புரட்சித் தலைவர் காலத்திலிருந்தே செயல்பட்டு வருகின்றது. மத்திய மாநில அரசுகளினுடைய உதவியுடன் இத்திட்டத்தில் பங்கு மூலதனம் செலுத்த ரூபாய் 100/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் வட்டியில்லாத கடனாக 250 ரூபாய் இதுவரையிலும் கொடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அதை 500 ரூபாயாக வழங்க

உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, 500 ரூபாய் என்பது ஒரு சாதாரண தொகைதான். அதனாலே எந்தவொரு காரியத்தையும் எடுத்துச் செய்ய முடியாது. ஒரு ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவருக்கு உடல்நலம் குன்றியிருந்தாலேகூட அந்த 500 ரூபாயாலே எந்தப் பயனும் ஏற்படாது. ஆகவே, அதைப் பெரிய மனதோடு 1000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற இளைஞர்கள், குறிப்பாக ஆதிதிராவிட இளைஞர்கள் சுய தொழில்களை, தாங்கள் வசிக்கும் பகுதிகளிலேயே மேற்கொள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தாராளமாகக் கடன் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறப் பெண்களிடத்தும்கூட நல்ல விழிப்புணர்வு தற்போது ஏற்பட்டு வருகிறது. வங்கி தேசியமயம் என்பது அருமை அன்னை இந்திரா காந்தி அவர்களால் உருவாக்கி நடத்தப்பட்டது. தற்போது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பெண்கள் நல்ல பயன் பெற்று வருகிறார்கள். சுய உதவிக் குழு என்ற கோட்பாடு கிராமப்புறப் பெண்களிடத்திலேயும் பிரபலமாகி வருவதால், அவர்கள் வளர்ச்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குஜராத்தில் ஆனந்த் மாவட்டத்தில் செயல்படும் அமுல்-Anand District Milk Producers Co-operative Union Limited-சாதனை படைத்திருக்கிறது, அந்த அமுல் நிறுவனம், அமுல் வெண்ணெய், அமுல் சீஸ், அமுல் சாக்லேட் என்று எத்தனையோவகையான உப பொருள்களைப் பாலில் இருந்து தயாரித்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய கூட்டுறவுத் துறையின் மூலமாக இதுபோன்ற ஏதாவதொரு திட்டத்தை எடுத்து, நம்முடைய தமிழகத்திற்கு வளம் சேர்ப்பதற்கு நாம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலத்திலே இருக்கிற சேகோ செர்வ். சேலம் ஜவ்வரிசி ஸ்டார்ச் சேவா சங்கம் விவசாயிகளுக்கும், ஜவ்வரிசி ஸ்டார்ச் உற்பத்தியாளர்களுக்கும் சேவை செய்து உதவுகிறது. இதற்கு கூட்டுறவுத் துறை அதிகமான அளவுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காய்கறிகள், பழங்கள், மலர்கள் இவையெல்லாம் கூட்டுறவுச் சங்கம் மூலம் ஒருங்கிணைந்து அவர்கள் சாகுபடி செய்யும் பொருள்களுக்கு



cold storage வசதி செய்து கூட்டுறவுச் சங்கம் மூலம் அந்தப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கின்றபோது அவர்கள் விற்பதற்கு, நாம் அதற்கும் உதவியாக இருக்கலாம். உதாரணத்திற்கு கல்வராயன் மலை. அந்த மலை அடிவாரத்திலே இருக்கின்றவர்கள் ஏழை மக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஏதோ ஊருக்குப் போவதாகச் சொன்னார்கள்.

**திருமதி டி. யசோதா:** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதனாலே உரையை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி டி. யசோதா:** அங்கே கல்வராயன் மலை அடிவாரத்திலே உள்ள கிராமங்களிலெல்லாம் ஏழை எளிய மக்கள் கடுக்காய் மரத்தை வளர்த்து வருகிறார்கள். அந்தக் கடுக்காய் மரத்திற்கு மலை மேலே இருக்கிற கேரளாவைச் சேர்ந்த ஒரு முதலாளி ஒரு மரத்திற்கு 1000 ரூபாய் கொடுப்பார்கள். 1000 ரூபாய் அவர்கள் முன்பணமாகக் கொடுக்கின்ற காரணத்தினாலே, அந்த மரம் வளர்ந்து வந்ததற்குப் பின்னாலேயும் அவர்கள் சொல்கின்ற விலைக்குத்தான் இவர்கள் கொடுக்க வேண்டுமென்ற அடிமை சாசனத்தைப் போன்று இருக்கின்ற நிலைமையை மாற்றுவதற்கும், அதுபோன்று விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக நாம் முன்பணம் கொடுத்து, தனியார் இப்படி ஏழை விவசாயிகளை அடிமைப்படுத்துவதை நீங்கள் நீக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்து, சென்ற ஆண்டிலே திருச்செங்கோட்டில் மூன்று லாரி முருங்கைக்காய்க்கு உரிய விலை இல்லை என்று சொல்லி ரோட்டில் கொட்டி லாரியை ஏற்றி அதைச் சிதைத்தார்கள் என்று நான் பத்திரிகையிலே படித்தேன்.

அதேபோல, கிருஷ்ணகிரியிலே தக்காளிப் பழம் ஒரு கூடை என்று சொன்னால் 10 கிலோ, அந்த 10 கிலோவிற்கு உரிய விலை கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலே ஒரு கூடைப் பழம் 8 அணா, 1 ரூபாய் என்று சொன்ன காரணத்தினாலே, உற்பத்தி செய்த விவசாயிகள் தெருவிலே அதைக் கொட்டி லாரியை ஏற்றி மிதித்து துவம்சம் செய்தார்கள் என்று நாம் பார்க்கின்றோம். இது அத்தனையும் உற்பத்தி செய்தவனுக்கு ஏற்பட்ட அந்தக் கோபம். அதை எடுத்து நாம் பாதுகாப்பதற்கு cold storage போன்ற அந்தப் பொருட்களுக்குரிய பாதுகாப்பைக் கொடுக்கக் கூடிய பெட்டகங்களைத் தயார் செய்து கொடுப்போம் என்று சொன்னால்,

அதற்கு உதவி செய்வோம் என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஏழைகளுக்கு அவர்களின் உழைப்பிற்குரிய ஊதியம் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பழங்குடியின மக்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வந்து, அவர்கள் சேகரிக்கும் இலைகள், விதைகள், மரப் பட்டைகள், காய்கறிகள் இவற்றை டெண்டர் விடுகிறார்கள். டெண்டர் மூலமாக பல கோடி ரூபாய் அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிறது.

அதேபோல, நம்முடைய பகுதியிலேகூட பொது இடங்களிலே புகைப்பிடிப்பது தப்பு என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், பீடித் தொழில் போகவில்லை. அது இன்னும் இருக்கிறது. அந்த பீடித் தொழிலை நம்பி பல குடும்பங்கள் இருக்கின்றன அந்த பீடி இலை, அதுபோல நம்முடைய பகுதியிலே இருக்கின்ற அந்த மரப் பட்டைகள், இவற்றையெல்லாம் சேகரித்து கூட்டுறவுத் துறையின் மூலமாக அந்த மலை வாழ் மக்களுக்காக, பெண்களுக்காக என்று சங்கங்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக அதைச் சேமித்து, அதை ஒட்டுமொத்தமாக டெண்டர் விட்டு, அதனுடைய பலன் அந்த மக்களுக்குக் கிடைப்பதற்கான வழிவகைகளை நீங்கள் காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய ஊரில், மலைவாழ் பகுதிகள் அல்லாத மற்றப் பகுதிகளில் மூலிகைக்குப் பயன்படும் செடிகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையும் நாம் பயன்படுத்த வேண்டும். வரகு, சாமை, தினை போன்றவற்றைப் பயிரிடச் செய்து, அதன் பயனை மக்கள் அறியச் செய்து விற்பனை செய்யலாம். இவையெல்லாம் மலைவாழ் மக்களுக்கு, மலைப் பகுதிகளிலே இருக்கின்ற பெண்களுக்கான திட்டத்தினை நாம் அறிமுகப்படுத்த வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பவர்களுக்கு வாழ்வு தர வேண்டும். பள்ளிகளில் கூட்டுறவு ஒரு பாடமாக இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது, வரவேற்க வேண்டியதுதான். படிப்பு முடித்து பள்ளிகளிலே கூட்டுறவு ஆசிரியர்களாக அவர்களை நியமிக்க வேண்டும். இல்லை என்று சொன்னால், படித்துவிட்டு வந்த அத்தனை பேருக்கும், கூட்டுறவுப் பயிற்சியை முடித்தவர்கள் அனைவருக்கும் வேலை இல்லாமல் போய்விடும்.

உதாரணத்திற்கு என்னிடத்திலே ஒரு மனு இருக்கிறது. அந்த மனுவிலே கூட்டுறவுத் துறையிலே பணிக்கான நேர்முக தேர்விற்கு வந்து, அரசாங்கத்தின் மூலமாக நேர்முகத் தேர்விற்கு வந்து தேர்ச்சி பெற்றவர்களைப் பணி அமர்த்துகின்ற நேரத்திலே யாரோ ஒருவர்



கோர்ட்டுக்குப் போய் வழக்குத் தொடுத்து, அந்த வழக்கிலேயும் வெற்றி பெற்று வந்திருக்கின்றவர்களுக்கு 35 வயது ஆகிறது. இவர்கள் அத்தனை பேரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இப்படி 35 வயது நிரம்பிக் கொண்டிருக்கின்றவர்களுடைய இந்தப் பிரச்சினை ஒரு ஜீவாதாரப் பிரச்சினை. இப்போது அப்படியே அது நின்று கொண்டு இருக்கிறது. 21 பேர் சென்ற ஆட்சியிலே தேர்வு செய்யப்பட்டு அதற்குப் பிறகு அவர்களுக்கே ஒரு சந்தேகம் ஏற்பட்டு, நீதிமன்றத்திற்குப் போன அந்த 21 பேர் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அந்தப் பணிக்காக மனு செய்தவர்கள் அந்த வழக்கில் வெற்றி பெற்று வந்ததற்குப் பிறகும்கூட இன்றுவரையிலும் அவர்களுக்கு அந்தப் பணி கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இதையும் நான் தங்களிடம் நேரிலே கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் கோரிக்கையை இந்த அரசு ஏற்கெனவே பரிசீலித்திருக்கிறது. பழைய அரசாங்கத்தாலே 1:1 என்ற திட்டத்தின் கிழே அந்த 21 பேருக்கும் Interview கொடுக்கப்பட்டது. அதிலே தகுதியுள்ளவர்கள் 10 பேர் என்ற காரணத்தினாலே மற்றவர்களுக்குப் போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்போது புது G.O. அரசு வெளியிட வேண்டும் என்று Employment துறைக்குக் கோரிக்கை வரும்போது வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையிலே இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

**திருமதி டி. யசோதா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள் ஒரு கோரிக்கையை என்னிடத்திலே வைக்கச் சொல்லியிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டம், மத்தியக் கூட்டுறவு வங்கியில் 7 பேர் மற்றும் sub-staff ஆகிய காலிப் பணியிடங்களை நிரப்ப கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக சான்றிதழ் சரிபார்க்கும் பணி முடிவடைந்தது. இந்தப் பணிக் காலியிடங்களை நிரப்ப 1 : 1 என்ற ஒற்றைச் சாளர முறை மற்றும் பதிவு மூப்பு, வயது என்ற அடிப்படையில் சான்றிதழ் சரிபார்க்கும் பணி முடிவடைந்துவிட்டது. வேலைவாய்ப்பு அலுவலகக் கடிதம் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சென்று 5 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

ஆனால் இன்னும் பணி கிடைக்கவில்லை. அதைப் பற்றியும் தாங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லாம் முடிந்துவிட்டது. அமைச்சரிடம் கொடுத்துவிட்டீர்கள் இல்லையா? பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி டி. யசோதா:** கடைசியாக நுகர்பொருள் வாணிபம். 10 இலட்சம் போலி ரேஷன் கார்டுகள் இருப்பதாக வெள்ளை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 10 இலட்சம் போலி ரேஷன் கார்டுகள் என்று சொன்னால், அந்த 10 இலட்சம் போலி ரேஷன் கார்டுகளுக்கும் அரசாங்கம் எல்லாவிதமான உணவுப் பொருட்களையும் வழங்க வேண்டும் என்று இருக்கின்ற இந்த நிலையிலே, உடனடியாக இதை—தீ விபத்து ஏற்பட்டால் எப்படி Fire Service பறந்துகட்டிக்கொண்டு வேலை செய்கிறதோ அதுபோல இந்த 10 இலட்சம் போலி ரேஷன் கார்டுகளை உடனடியாக அரசு கண்டுபிடித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விலைவாசியைப் பற்றி ஒரு சகோதரர் அவர்கள் இங்கே படித்தார்கள். நான் குறிப்பாகச் சொல்கிறேன். சூரியகாந்தி எண்ணெயை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து இங்கே விற்கிறார்கள். தங்கம் நல்லெண்ணெய் என்ற பெயரிலே, அந்த என்ணெயினுடைய விலை, முன்னாலே கடந்த மாதம் 36 ரூபாயாக இருந்தது. தற்போது 45 ரூபாயாக ஆகியிருக்கிறது. அதனை இறக்குமதி செய்து இங்கே வெறுமனே பேக்கிங்தான் செய்கிறார்கள். அந்த தங்கம் நல்லெண்ணெய் என்பது வெறும் சூரியகாந்தி எண்ணெய்தான்—கூட்டுறவு முறையிலே வெளி நாடுகளிலிருந்து அந்த சூரியகாந்தி எண்ணெயை நாம் இறக்குமதி செய்து, நம்முடைய கூட்டுறவு அங்காடிகளிலே அதை நாம் ஏன் விற்கக்கூடாது? அரசாங்கத்தினுடைய பொருள் என்று சொன்னால் அதற்கு ஒரு மதிப்பும் மரியாதையும் வேறு. ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நியாயவிலைக் கடைகளில் நிறைய தவறுகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், கூடியவரைக்கும், இனிமேலாவது, பெண்களுக்கு அதிகமான நியாய விலைக் கடைகளை ஒதுக்கீடு செய்து தருமாறு உங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தரமான அரிசியையும் (மணியடிக்கப்பெற்றது) தரமான உணவுப் பொருட்களையும் நாம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே



மொத்தமாக, குத்தகையாக வாங்கி வைத்துக்கொண்டு, காலம் வரவர எடுத்துப்போடலாம் என்று சொன்னால் அரசு என்னதான் பாதுகாப்பு செய்தாலும், கீழே கட்டை, நடுவிலே கட்டை வைத்து, அதற்கு மேல் பெரிய ஸ்கிரீன் போட்டு மூடியெல்லாம் வைத்திருந்தால்கூட, ஒரு காலகட்டத்திற்குப் பிறகு அரிசி தாங்காது. தாங்காத அந்த அரிசியை வாங்குவதற்கு வசதியில்லாத அந்த ஏழைகளின் தலையில் கட்டவேண்டாம். வாங்கினவர்கள் அந்த அரிசியை சாப்பிடுவார்களா? வாங்கியவர்களால் அந்த அரிசியை சாப்பிட முடியாது. ஆகையினால் ஏழையெளிய மக்களுக்கு அந்தத் தரமில்லாத அரிசியைக் கொண்டுபோய்க் கொடுப்பதைவிட தரமான அரிசியைக் கொடுத்து அவர்களுக்கும் இந்த நாட்டிலே பங்கிருக்கிறது; அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள்; அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேன்.

சர்க்கரை விலை ரேஷனில் என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அதே விலைக்குத்தான் வெளி மார்க்கெட்டிலும் விற்கப்படுகிறது. அதனால் ரேஷனில் சர்க்கரை வாங்குவது தற்போது குறைந்துபோய்விட்டது. அதைப்போல, மண்ணெண்ணெயும் சரியாகக் கிடைக்கவில்லை என்கிற மாதிரி இருக்கிறது. ஆகவே, மண்ணெண்ணெயை விற்பதற்கு நிறைய கிளைக் கடைகளை அரசு தொடங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசி முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** நிறைய கிளைக் கடைகளை அரசு தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தரம் வாய்ந்த பொருட்களை கூட்டுறவு அங்காடிகள் மூலமாக அரசு விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுக்குத் தேவையான பொருட்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகத்தான் போகிறது. சத்துணவுக்கும் நல்ல உணவுப் பொருட்களைக் கொடுப்பதற்குரிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுத்தமான பொருட்களைக் கொடுங்கள். வெளியே கோதுமை வாங்கினால் சுத்தமாக இருக்கிறது. ரேஷன் கடைகளில் வாங்கினால் சுத்தமாக இல்லை. 1 ரூபாய்தான் வித்தியாசம். இங்கே ஒரு கிலோ 9 ரூபாய், வெளியிலே 10 ரூபாய். ஆகவே, இங்கே நாம் சுத்தமாக விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக விற்கப்படுகிற அந்தப் பொருட்களும் சுத்தமாக இருந்தால் நிச்சயமாக ஏழையெளிய மக்களுக்கு அதனுடைய பலன் முழுமையாகக் கிடைக்கும் என்பதைக் கூறி வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

## 4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறையின் சார்பாக சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர், vegetarian உணவுதானே?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு வகையான உணவும், vegetarian உணவு, non-vegetarian உணவு, இரண்டும் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு வகையான உணவும் வழங்கப்படுகிறது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2001-2002 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்—தொடர்ச்சி

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன்.

* **திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து, முஸ்லீம், கிருத்தவர்கள் ஒற்றுமையாக வாழ்வதை உலகுக்கு உணர்த்துகின்ற வகையில், திருக்கடையூர், நாகூர் தர்கா, வேளாங்கன்னி மாதா ஆகிய புண்ணியத் தலங்களைத் தன்னகத்தே கொண்ட நாகப்பட்டினம் மாவட்டம், இதய தெய்வம் புரட்சித் தலைவியின் திருக்கரங்களால் முதன் முதலில் தொடங்கப்பட்டது. அந்த மாவட்டத்திலுள்ள குத்தாலம் தொகுதியில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து கழகம் தோன்றிய காலம் முதல் தொண்டனாகவும், பிறகு கழக மாவட்ட துணைச் செயலாளராகவும், தற்சமயம் புரட்சித் தலைவி பேரவையின் மாவட்ட இணைச் செயலாளராகவும், இரண்டு முறை ஊராட்சி மன்றத் தலைவராகவும் இருந்த என்னை குத்தாலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த தேர்தலில் தமிழகத்தில் புதிய வரலாறு கண்ட எங்கள் தாயை முதல்வராக்க எனக்கு வாக்களித்த குத்தாலம் தொகுதி வாக்காளர்களுக்கும், எங்கள் கழகக் குடும்பத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக்கழகப் பொறுப்பாளர்களுக்கும், மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், இம்மாமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி எனது கன்னிப் பேச்சை பேசத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், முந்தைய தி.மு.க. ஆட்சியில் இருந்த சபாநாயகரைப் போல் அல்லாமல் முழுக்க, முழுக்க 100 சதவிகிதம் நடுவர் என்ற இலக்கணத்திற்கு இலக்காகத் திகழ்கின்ற காரணத்தால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த எங்களுக்கு இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு நேரம் மிகவும் குறைக்கப்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாம் விட்டுக்கொடுக்கும் தன்மை படைத்தவர்கள். அதனால் நம்முடைய நேரத்தையும் கொஞ்சம் விட்டுக்கொடுக்க வேண்டும்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மக்கள் சக்தியின் மூலமாக மகத்தான வெற்றி பெற்று தமிழக மக்களால் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியினை குறுக்கு வழியில் பிடித்துவிடலாம் என்பவர்களை தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள்; மக்கள் மன்றத்திலிருந்து அவர்களை நிரந்தரமாக தமிழக மக்கள் தூக்கி எறிவார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க.-வினர் விஞ்ஞான ரீதியில் ஆட்சியைப் பிடிக்கக் கையாளும் அனைத்து முயற்சிகளையும் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் தோற்கடிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி' என்பதை உணர்ந்த புரட்சித் தலைவி அரசு எங்கள் மாவட்டத்திற்கு முதன்முதலில் எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரை வேளாண்மைத் துறை

அமைச்சராக்கி அத்தோடு 311 கோடி ரூபாயை விவசாயக் கடன் வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்த எங்கள் புரட்சித் தலைவியை நாகை மாவட்ட விவசாயிகள் உளமாற வாழ்த்துகிறார்கள்.

வேளாண் வணிக வரித் துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தியதற்கும், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகளைக் காப்பாற்ற டி.கே.எம்.9 நெல்லை வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்ய சிறப்பு அனுமதி கொடுத்ததற்கும் மாண்புமிகு அம்மாவை விவசாயிகள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்கள் பேசுகின்றபோது அவர்களுடைய ஆட்சியில் வெளி மாநிலங்களுக்கு நெல்லை எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளித்ததாகச் சொன்னார்கள். அந்த நிலை எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அந்த நேரத்தில் எங்கள் கட்சியினர் அதை எதிர்த்ததாகவும் சொன்னார்கள். உண்மை நிலவரம் என்னவென்றால், அரிசி பற்றாக்குறையான நேரத்தில் தி.மு.க. வியாபாரிகள் இலாபம் அடையும் நோக்கத்தில் வெளி மாநில அனுமதியை அவர்கள் அளித்தார்கள். அதனால் தமிழகத்தில் அரிசிப் பஞ்சம் தாண்டவமாடியதை தமிழக மக்கள் மறக்கவில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றுபட்ட தஞ்சை விவசாயிகளின் நிலைமைகளை நன்கு உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவிரி நீர் பெறுவதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, மத்திய அரசை வலியுறுத்த நடவடிக்கை எடுத்த எங்கள் அம்மாவை ஒன்றுபட்ட தஞ்சை விவசாயிகள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட விவசாயிகள் மேட்டூர் அணை நீரை நம்பிக் கஷ்டப்படுகிறார்கள். தி.மு.க. அரசு அமைத்த காவிரி நதி நீர் ஆணையம் குளறுபடியால் தண்ணீர்ப் பிரச்சினை தீராத பிரச்சினையாக விவசாயிகளுக்கு உள்ளது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தை மத்திய அரசிடம் வலியுறுத்திப் பெற்றுத் தந்தால் விவசாயிகள் வறட்சி, வெள்ளம் போன்ற கஷ்டம் நீங்கி நிரந்தரமாகக் காப்பாற்றப்படுவார்கள்.

பிற்பகல் 12-30

மாணவர்கள் நலன் கருதி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கியதற்கும், அதற்கு அடிப்படை வசதிகள் செய்ய ஊரக



அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டிற்கு ரூ. 30.00 கோடி ஒதுக்கியதற்கும், அரசு மற்றும் தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கும் மாணவர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர முறையை நடைமுறை செய்ததற்கும், கிராம வட்டாரப் பள்ளிகள், ஒன்றியப் பள்ளிகள் வரை உள்ள ஆசிரியர் காலியிடங்களை நிரப்புவதற்கு பெற்றோர்-ஆசிரியர் சங்கத்திற்கு அதிகாரம் அளித்த எங்கள் அம்மாவை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் சார்பாக மனதார வாழ்த்துகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு பகல் பாராமல் உழைக்கும் காவல் துறையினருக்கு ரூ.115 கோடி செலவில் குடியிருப்புகள் கட்டித்தர திட்டங்கள் வழங்கியும், சமூகத்தில் இளைஞர்களையும், மாணவர்களையும், காப்பாற்றும் பொருட்டு புகையிலை சம்பந்தப்பட்ட போதைப் பொருட்களுக்குத் தடை விதித்தும் இளைஞர்கள் வாழ்வு வளம் பெறச் செய்த எங்கள் அம்மாவிற்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்கள்தோறும் இளைஞர்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்து, கல்வி, விளையாட்டு, தொழிற்பயிற்சி, சுயவேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்ததற்கும், ஆதிதிராவிட மாணவர்கள் தங்கிப் படிக்க மாணவர் விடுதி கட்டித்தர ரூ. 25.00 கோடி நிதி ஒதுக்கியதற்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளை மேம்படுத்த ரூ. 20 கோடி ஒதுக்கியதற்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி கூறுகிறேன்.

'அனைவருக்கும் தொடக்கக் கல்வி' என்ற திட்டத்தின்கீழ் பள்ளிப் படிப்பைப் பாதியிலே நிறுத்திய மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்துப் படிக்க வசதி ஏற்படுத்திய எங்கள் இதய தெய்வத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகளிர் மேம்பாடு திட்டத்தின்கீழ் கிராமங்கள்தோறும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம், மகளிர் சுயவேலைவாய்ப்பை அதிகரிக்க 5 இலட்சம் மகளிருக்குப் பயிற்சி அளித்து; தொழில் தொடங்க கடன் வசதியும் செய்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் சுய நிதி ஆதார மையங்களைத் தொடங்கி, மகளிருக்கு கணினிப் பயிற்சி அளிக்க அனுமதி அளித்த அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

கிராமங்கள்தோறும் கழிவறை, குளியலறை தண்ணீர் வசதியுடன் செய்து தர 98 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டியதற்கும், மகளிர் திருமண

உதவிக்கு ரூ. 10,000 வழங்க ஆணை வழங்கியதற்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள புது தம்பதியினருக்கு இலவச gas இணைப்பு கொடுக்கும் திட்டம் அளித்ததற்கும், இரண்டு பெண் குழந்தை மட்டும் இருந்தால் ரூ.14,450 உதவித் தொகையும், ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால் ரூ. 20,650 உதவித் தொகையும் வழங்க திட்டம் தீட்டியதற்கும், ஆதிதிராவிட பிளஸ் 1, பிளஸ் 2 மாணவர்களுக்கு ரூ. 20 கோடி செலவில் இலவச சைக்கிள் வழங்கியதற்கும், ஆதிதிராவிட மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கத் திட்டம் தீட்டியதற்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அவர்கள், சத்துணவுத் திட்ட மேம்பாட்டிற்காக ரூ. 25 கோடி நிதி அளித்ததற்கும், பத்திரிகையாளர்களில் பலர் எங்கள் அம்மாவுக்கு ஆதரவாக எழுதாவிட்டாலும் ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொகுதி குறித்துப் பேசுங்கள்.

**திரு. அ. நடராஜன்:** மாற்றாந் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை உணர்ந்த, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பத்திரிகையாளர்கள் வாழ்வு மேம்பாடு அடைய, அவர்கள் இறந்தால் ரூ.2.00 இலட்சம் வழங்க ஆணை வழங்கியதற்கும், கிராமங்கள்தோறும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகம் கட்டித் தர ஆணை வழங்கியதற்கும் முதலமைச்சர் டாக்டர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்களை மாற்றம் செய்ததில் counselling முறையைக் கொண்டு வந்த எங்கள் அம்மாவை ஆசிரியர் சமுதாயம் நெஞ்சார வாழ்த்துகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் அனைத்து தர மக்களுக்கும், சலுகைகள் உள்ளன என்று தமிழகமே நெஞ்சாரப் பாராட்டுகின்றது.

இந்த அரசு விவசாயிகளின் அரசு.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற வள்ளுவர் அவர்களின் வாக்கிற்கிணங்க, விஞ்ஞானிகள் உலகை எங்கு அழைத்துச் சென்றாலும், உலக மக்கள் உழவர்களை நம்பித்தான் உள்ளார்கள். ஆகவேதான் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுக்குப் பல சலுகைகளை வழங்கியுள்ளார்கள்.



எனவே, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, எனது தொகுதி பிரச்சினையை இங்கே விவரிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை சிறு, குறு விவசாயிகள் புரட்சித்தலைவர் ஆட்சிக்காலத்தில் மின் வசதியுடன் பம்பு செட் அமைப்பதற்குக் கடன் வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளி விளக்கேற்றினார்கள். ஏழை விவசாயிகளின் விரோதியான தி.மு.க. ஆட்சியில் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு ரூ. 50,000 முதல் ரூ. 1 இலட்சம் வரை deposit கட்டவேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். எனவே, விவசாயிகளின் வாரிசாக உள்ள எங்கள் தங்கத் தலைவியே, விவசாயிகளுக்கு deposit தொகையினைக் குறைத்து, தாராளமாக மின் இணைப்பு கொடுத்து, மின்கட்டணமாக டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் இருந்ததுபோல, ஒரு குதிரைச் சக்திக்கு ரூ.100 அல்லது ரூ. 150 வரை வசூல் செய்யும் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டுகிறேன்.

ஒன்றுபட்ட தஞ்சை விவசாயிகளுக்கு குறுவை நெல் கொள்முதலுக்கு ஊக்கத்தொகையினை ஒரு குவிண்டாலுக்கு ரூ.50 ஆக உயர்த்திக் கொடுத்து, ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதல் கொள்முதல் செய்யவும், உடனடியாக கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டியும் எங்களுடைய புரட்சித்தலைவி அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் அறுவடைக் காலங்களில் களம் வைக்கவும், விதை நெல் உலர்த்தவும், கிராமங்கள்தோறும் சிமெண்ட் களம் அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-35

விவசாயிகள் நிதியோடு, அரசு நிதி கொடுத்து கிராமங்கள்தோறும் பாசனச் சங்கம் அமைத்து, அந்தச் சங்கமே வாய்க்காலைத் தூர் வாறி, நீர் பங்கிடுதல் முதலியவற்றைப் பராமரிக்கும் திட்டத்தை ஊக்கப்படுத்த வேண்டுகிறேன். தி.மு.க. ஆட்சியில் ஆறுகளில் மணல் எடுத்து, பள்ளமாகியுள்ளதால் விவசாயத்திற்குத் தண்ணீர் செல்வதில்லை. ஆகவே, எனது தொகுதியில் தடுப்பு அணைகள் கட்டித் தரவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

[திரு. அ. நடராஜன்] [2001 செப்டம்பர் 10

குத்தாலம் தொகுதியில் கல்லூரிகளே இல்லை. ஆகவே, குத்தாலம், குடவாசல் பகுதிகளில் அரசுக் கலைக் கல்லூரியும், நாகை மாவட்டத்தில் சட்டக் கல்லூரியும் அமைத்துத் தர பணிவுடன் வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம். மங்கை நல்லூர், ஸ்ரீகண்டபுரம், பெரம்பூர், விஷ்ணுபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், காங்கேய நகரம், கண்டிரமாணிக்கம், எண்ணக்குடி ஆகிய பள்ளிகளுக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தரவும், கிளியனூர், தேரழுந்தூர், கோனேரிராஜபுரம், மங்கைநல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்டதாக மேம்படுத்தவும், டாக்டர்களை நியமித்துக் கொடுக்கவும், குடவாசல், குத்தாலம் ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகளை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனைகளாக ஆக்கித் தரவும், எரவாஞ்சேரியில் துணை மருத்துவமனை அமைத்துத் தரவும், புதுகுடி, மேலபாளையூர், நெம்மேலி, திருவாடுதுறை, பொரும்பூர் ஆகிய ஊர்களில் கால்நடை மருத்துவமனைகள் தொடங்கித் தரவும், மயிலாடுதுறையில் மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் தொழிலாளர்கள் படும் கஷ்டத்தை உணர்ந்து, அங்கே தேங்கிக் கிடக்கும் நூல் விற்பனையினைத் துரிதப்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடு செய்து தரவும் வேண்டுகிறேன். குத்தாலம் தொகுதியில் 15-க்கும் மேற்பட்ட ஆறுகள் ஓடுகின்றன. எனவே, பாலங்கள் அதிகம் தேவைப்படுகின்றன. அதையும் அமைத்துத் தர பணிவுடன் வேண்டுகிறேன். மழைக் காலத்தில் கடலில் வீணாகும் தண்ணீரைத் தடுப்பதற்கு கொள்ளிடத்தில் தடுப்பு அணை கட்டித் தரவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

மேலும், நாகை மாவட்டத்தில், நாகப்பட்டினம் துறைமுகத்தில் மீனவர்கள் கடலுக்குச் சென்று திரும்புகிற நேரத்தில், அவர்களுடைய மீன்பிடிப் படகுகள் தண்ணீரில் சாய்ந்துள்ள காங்கிரீட் பில்லர்களில் மோதி, இலட்சக்கணக்கில் நஷ்டமடைகிறார்கள். எனவே, அந்த நிலையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நிதிநிலை அறிக்கையானது, விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஏழையெளிய ஆதிதிராவிட மக்கள் அனைவரும் நலம் பெறுகின்ற வகையிலே அமைத்துள்ளது. இருந்தபோதிலும், அதில் ஒருசில குறைகள் உள்ளன.



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. திருஞானசம்பந்தம். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள். நன்றி என்று சொல்லிவிடுங்கள்.

**திரு. அ. நடராஜன்:** ஒன்றுபட்ட தஞ்சை விவசாயிகளுக்குப் பயன்படாத காவிரி நதி நீர் ஆணையம் அமைத்தோம் என்ற ஏமாற்றுத் திட்டம் இல்லை. விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய நபார்டு வங்கியைக் காட்டி ஏமாற்றிய திட்டம் இல்லை. கால்வாய் வெட்டும் பணி முடிவடையாமலே கிருஷ்ணா நீர் சென்னைக்கு வந்ததாக ஏமாற்றிய திட்டம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மீண்டும் பணியாற்றிட எனக்கு வாய்ப்பினை வழங்கிய, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற எங்களது இதய தெய்வம், மக்கள் தலைவர், ஐயா, மூப்பனார் அவர்களை வணங்கி, எங்களையெல்லாம் தஞ்சை மாவட்டத்திலே அடையாளம் காட்டி, வழிகாட்டிக் கொண்டிருக்கிற, சோழ மண்டலத்தினுடைய தளபதி ஐயா ஜி.ஆர். மூப்பனார் அவர்களுக்கும், . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். உறுப்பினர் நடராஜன் அவர்கள், நன்றி என்று சொல்லி விடுங்கள்.

**திரு. அ. நடராஜன்:** கூட்டுறவுத் துறை மானியத்திலே பேச வாய்ப்பு அளித்த அரசுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, வாழ்க புரட்சித் தலைவி, வளர்க புரட்சித் தலைவர் ஆட்சி என்று கூறி, அம்மாவை வணங்கி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** தமிழக இளைஞர்களின் எழுச்சிமிகு தலைவராக எங்களையெல்லாம் வழிநடத்திக் கொண்டு இருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ஐயா, ஜி.கே. வாசன் அவர்களுக்கும், எங்களுக்கெல்லாம் நல்லாதரவு தந்து, எங்களை வெற்றி பெறச் செய்து, இன்று, சரித்திரம் போற்றும் நல்லாட்சியைத் தொடங்கியிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எனது பேராவூரணி தொகுதி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பல ஆண்டுகாலம் மழை, வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டு, பல்வேறு கடன் சுமைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயிகள் நலன் கருதி, அவர்களுடைய நெஞ்சங்களிலே பால் வார்க்கின்ற வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், பொறுப்பினை ஏற்ற இந்த மூன்று மாத காலத்திலே விவசாயிகளுடைய கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியை நீக்குகின்ற வகையிலே ஏறக்குறைய 311 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுடைய கடனுக்கான வட்டியை இரத்து செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பாக எனது நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12.40*

இந்தச் சலுகை மூலம் 30-8-2001 வரை, ஏறக்குறைய 70 கோடி ரூபாய் அரசுக்கு செலுத்தப்பட்டிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் வரவேற்பதோடு, தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் தற்போது, தண்ணீர் வராமல் பயிர்கள் எல்லாம் மிகவும் வாடிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் இன்னும் விவசாயத்தினைத் தொடங்காத சூழ்நிலையிலே, இந்தக் கடனை உரிய காலத்திலே செலுத்த முடியாத சூழ்நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே இந்தச் சலுகையை இன்னும் 6 மாத காலத்திற்கு நீட்டித்துத் தர வேண்டுமென தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக அரசுக்கு இந்தக் கோரிக்கையினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தச் சலுகை கூட்டுறவு நிலவள வங்கிகளிலே தற்போது வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. நிலவள வங்கிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடனுக்கும் இந்தச் சலுகையை அறிவிக்க வேண்டும். மேலும், தற்போது, விவசாயிகளுக்கு கூட்டுறவு நில வள வங்கிகளிலே ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்கு வங்கிக் கடன் வழங்கப்படாமல் இருக்கிறது. அவற்றை வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது விவசாயிகள் எல்லாம் விவசாயம் செய்கின்ற நேரம். அவர்களுக்கு நகைக் கடன் வழங்கப்படுகின்றபோது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே 12 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆனால், கூட்டுறவு வங்கிகளிலே 16 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, தேசிய வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகளிலும் வட்டியைக் குறைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து மத்திய கூட்டுறவு, தொடக்க வேளாண்மை வங்கிகள் எல்லாம் தற்போது யார் தொழில் தொடங்க இருந்தாலும் சரி, வேளாண் தொழில் மட்டுமல்லாமல் கார் வாங்க, லாரி வாங்க மற்றும் சிறு தொழில்கள் தொடங்குவதற்கெல்லாம் கடன் கொடுக்கின்றன. இந்த அரசால் அறிவிக்கப்பட்ட சிறந்த சலுகையானது, அதாவது ஏறக்குறைய 25 சதவிகிதம் கிராமப்புற மாணவர்களுக்கு பொறியியல் துறையிலே, மருத்துவத் துறையிலே, வேளாண்மைத் துறையிலே முன்னுரிமை வழங்கப்படுகிறது. இந்த முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தாலும்கூட, கிராமப்புறத்திலே இருக்கின்ற ஒரு விவசாயியின் மகன் முன்னுக்கு வர வேண்டும் என்று சொன்னால், அவனுக்கு நிதியாதாரம் தேவைப்படுகிறது. படிப்பதற்கு பணம் இல்லாத காரணத்தினாலே பல்வேறு மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்ல கஷ்டப்படுகின்ற சூழ்நிலையிலே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே தொடர்புகொள்கிறபோது, அங்கே 100 பேர்கள் தொடர்பு கொண்டால் 5 பேர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. இதையும் தொடக்க வேளாண்மை வங்கிகள் மூலம், அந்தப் பகுதியிலேயிருக்கின்ற விவசாயிகளுடைய மகன்கள் நேரிடையாகப் பயன்படக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களிலே கூட்டுறவு பட்டயப்பயிற்சி முடித்த மாணவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர் படித்துவிட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆட்சி காலத்திலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகச் சொல்லி, நேர்முகத் தேர்வுகள் எல்லாம் நடத்தப்பட்டு, ஆனால் இதுநாள் வரை அவர்களுக்கு அந்த வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றுள்ள இந்த நேரத்திலே நிச்சயமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே பணிபுரிகின்றவர்கள் தொடர்ந்து 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று ஓரே இடத்திலே பணியாற்றுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு பணிபுரிகின்றபோது, பல்வேறு தவறுகள் செய்வதற்கு வாய்ப்பும் இருக்கிறது. மேலும் அவர்கள் விரும்புகிற இடத்தில் அவர்கள் பணிமாறுதல் கிடைக்காமல் இருக்கின்றார்கள். அவர்கள் வெவ்வேறு மாவட்டங்களிலே பணியாற்றுவதற்கு பணிமாறுதல் வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றியவர்களுக்கு இதுவரை அரசு பென்ஷன் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு pension வழங்கப்படவேண்டும். கூட்டுறவு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு, சென்ற இரண்டு ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை. அதற்குரிய agreement போடப்படாமல் இருக்கிறது. அதற்கும் விரைவிலே ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மை வங்கிகளிலே பணியாற்றுகின்ற செயலாளர்கள் தொடர்ந்து பல ஆண்டு காலமாக ஒரே தொடக்க வேளாண்மை வங்கியிலே பணிபுரிகிறார்கள். சென்ற ஆட்சிக் காலத்திலே அவர்கள் வேறு தொடக்க வேளாண்மை வங்கிகளுக்குச் செல்கின்ற வகையிலே பணி மாறுதலுக்காக ஆணையிடப்பட்டது. ஆனால், தொடக்க வேளாண்மை வங்கிகளினுடைய செயலாளர்களுடைய கூட்டமைப்பு சார்பாக இதற்கு ஒரு தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையாணை இருக்கின்ற காரணத்தினாலே ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றுகின்ற செயலாளர்கள், அவர்கள் இடத்திற்குப் பல்வேறு தவறுகளைச் செய்து இன்று பணக்காரர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு விரைவிலே நடவடிக்கை எடுத்து அந்தத் தடையாணையை நீக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே 1904 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. கூட்டுறவுச் சட்டத்தின் மூலம் இன்று தமிழகத்திலே, இந்திய அளவிலேயுள்ள ஒரே மாதிரியான ஒரு முன்மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை நாம் கொண்டுவருவது அவசியமாக இருக்கிறது. அவ்வாறு model கூட்டுறவுச் சட்டத்தை உடனே கொண்டு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலூர் நகரமானது வளர்ந்து வருகிற மிகப்பெரிய நகரம். மாநகராட்சி அளவிலே வளர்ந்து கொண்டிருக்கிறது. அங்கே தினந்தோறும் ஆயிரக்கணக்கான பேருந்துகள் வந்து சென்று கொண்டிருக்கின்றன. அங்கே புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு கூட்டுறவு பழத் தொழிற்சாலைக்குச் சொந்தமான ஏறக்குறைய 9 ஏக்கர் நிலத்தை, 10 வாரங்களில் கையகப்படுத்த வேண்டுமென்று, சென்னை உயர் நீதிமன்றம் ஆணை வழங்கி 10 வாரங்களுக்குமேல் 2 மாதங்களாகிவிட்டன. இன்னும் நிலம் கையகப்படுத்தப்படவில்லை. கூட்டுறவுத் துறை, உடனடியாக அங்கு பேருந்து நிலையம் அமைக்க அனுமதியை வழங்கி, அதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-45

சிறைச்சாலைகளுக்கு உணவுப் பொருள்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட வேண்டுமென அரசாணை இருந்தும், அது கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஒருசில ஏஜெண்டுகள், அவர்களுக்கு வேண்டிய கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரிலே, பினாமியாக பொருள்களைச் சப்ளை செய்து, கோடி, கோடியாகக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வேலூரிலே இருக்கிற கற்பகம் கூட்டுறவுச் சங்கம் அவ்வாறு மூடப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) அச்சங்கத்திற்கான ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பொருள் குறித்து ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே பதில் சொல்லியாகிவிட்டது. இது கடந்த ஆட்சியிலே, அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்து, நடைபெற்று வந்தது. அந்த ஊழலையெல்லாம் ஒழிக்கின்ற வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இப்போது சிறைச்சாலைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களை கூட்டுறவுக் கடைகளிலே, சிந்தாமணி போன்ற கூட்டுறவுக் கடைகளிலே நேரடியாக சிறைச்சாலைகளே வாங்கிக் கொள்கின்றன. இடைத்தரகர்கள் யாரும் இப்போது நியமிக்கப்படவில்லை. இடைத்தரகர்கள் அறவே ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கத்தைத் தந்தாலும்கூட, எங்களுடைய வேலூரில் கற்பகம் கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டுதான், சிறைச்சாலைகளுக்கு — மத்திய சிறைச்சாலை, பெண்கள் சிறைச்சாலைக்கெல்லாம் — உணவுப் பொருள்களை வழங்கக்கூடிய ஓர் அமைப்பாக இருந்து கொண்டிருந்தது. ஆனால், கற்பகம் சூப்பர் மார்க்கெட் என்பது மூடுவிழாவை, எங்களுடைய வேலூரிலே கண்டுவிட்டது. ஏற்கெனவே அந்த இடத்திலே, முந்தைய ஆட்சிக் காலத்திலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சேர்மேன் 12 கோடி ரூபாய் ஊழல் செய்தும், இன்றுவரை அவர் கைது

செய்யப்படவும் இல்லை; அவர்மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அதனால், இன்னும் அதே ஏஜெண்டுகள் மூலம்தான் வேலூரிலே இருக்கக்கூடிய சிறைச்சாலைகளுக்கு அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, சிறைத் துறை மற்றும் உங்களுடைய கூட்டுறவுத் துறை இணைந்து ஒரு புதிய அமைப்பினை ஏறபடுத்தி நிச்சயமாக அரசாணையின்படி, இடைத்தரகர்கள் இல்லாமல் சிறைக்கு அந்தப் பொருள்களை வழங்குவதற்கு, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொல்கிற கற்பகம் கூட்டுறவுச் சங்கத்திலே, முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் செய்த ஊழலுக்காக, முறையான C.C.I.W. மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. F.I.R., file செய்யப்பட்டுவிட்டது. விரைவிலே நடவடிக்கை தொடரும். சிறைத் துறையைப் பொறுத்தவரையில், உணவுப் பொருள்களை, கூட்டுறவுக் கடைகளிலே, அவர்கள் — சிறைத் துறையைச் சார்ந்தவர்களே — வாங்கிக் கொண்டு போக வேண்டுமென்ற விதியினைக் கடுமையாக இந்த அரசு பின்பற்றுகிறது. அதிலே தவறு இருந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது அதிகாரிகளுக்கு அறிவுரையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள். 2 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள். ஏனென்றால், உங்களுடைய நேரத்தை உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** தஞ்சை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கிற சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திலே இருக்கிற மருங்கபள்ளம் தொடக்க வேளாண்மை வங்கியிலே தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒன்றிய பெருந்தலைவருடைய கணவரும், செயலாளரும், ஏறக்குறைய 20 இலட்சம் ரூபாய் நகை மோசடி செய்திருக்கிறார்கள். சென்ற ஆட்சிக் காலத்தில் அது நடைபெற்றிருந்தாலும், அப்போதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுவரை அதுகுறித்து இந்த அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதுகுறித்து அமைச்சர் விளக்கவேண்டும். மேலும், தற்போது பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைகளைப் போக்குகின்ற



விதத்திலே, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைக்க முன்வந்த இந்த அரசை நான், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாகப் பாராட்டுகிறேன்.

தற்போதுள்ள நிதிநிலை குறித்து கொடுக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையிலே, ஏறக்குறைய 10 இலட்சம் போலிக் குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 10 இலட்சம் போலிக் குடும்ப அட்டைகள் இருந்தால், அதனுடைய பயன் எந்தவிதத்திலே ஏழையெளியவர்களைச் சென்றடையும்? நிச்சயமாக, ஏழையெளியவர்கள், இதுபோன்ற போலி கார்டுகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்தத் தவறைச் செய்கின்றவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதோடு, இந்த ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், தற்போது 15 இலட்சம் மக்கள் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். இன்னும் அது கிடைக்காமல் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மனு நீதி நாட்களிலே கேட்கின்றபோதும் அங்கே உரிய முறையிலே கொடுக்கவில்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்றவர்களுக்கு உரிய நேரத்திலே குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-50

தற்போது ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே காவிரி டெல்டா பகுதிகளிலும், ஆழ்குழாய்கள் அமைக்கப்பட்ட பகுதிகளிலும் நெல் அறுவடை ஆகின்றது. தமிழக அரசின் சார்பாக இதுவரை நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. அதை விரைவிலே செய்யத் தொடங்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் ஒரு நல்ல அரசுக்கு முன்னுதாரணமாக உரிய நேரத்திலே ஒரு நல்ல முடிவை மேற்கொண்டிருக்கிறது. உதாரணமாக டி.கே.எம்.9 என்ற ரக நெல்லை வெளிச் சந்தையிலே விற்கலாம் என்ற முடிவின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளும். தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளும் முழுமையாக அதிலே பயன்பெறுவதோடு தமிழக அரசுக்கு நிதிச் சுமையும் குறைந்து இருக்கிறது. அந்த நிதியின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்று கூறி இப்படிப்பட்ட இந்த ராஜதந்திர முடிவை எடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாகப் பாராட்டுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள். பேசி முடிக்கிற மாதிரி வந்தீர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** டி.கே.எம். 9 ரக நெல்லோடு 1009 ரக நெல்லையும் உற்பத்தி செய்ய வேண்டும். அதேபோல் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே குறுவை மற்றும் சம்பா நெல் கொள்முதல் நிலையங்களிலே இந்த 3 மாவட்டங்களிலும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்கின்றபோது 3 மாத காலம் கொள்முதல் செய்யப்படுகின்ற நெல் சாலை ஓரங்களில் இன்னும் பல்வேறு இடங்களில் எல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் உரிய முறையிலே காலத்திலே எடுத்துச் செல்ல வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் கடைசியில் பதில் சொல்வார். (குறுக்கீடு) அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இதற்கென ஒவ்வொரு Godown-தயார் செய்து அங்கே நெல் வைக்கப்பட்டால் அரசினுடைய பணம் வீணாகாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் சார்பாக தற்போது நவீன அரிசி ஆலைகள் மற்றும் அதற்குரிய ஹல்லிங் ஏஜெண்டுகள் எல்லாம் நெல் அரைக்கின்றபோது, அரிசி எடை கூட வேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கே அரிசியை 2, 3 முறை ஊற வைத்து அரைக்கின்றார்கள். இதனாலே எங்கள் பகுதியிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், சத்துணவு கொடுக்கும் பள்ளிகளுக்கு எல்லாம் கொண்டு செல்லப்படுகின்ற அரிசி நாற்ற நிலையிலே இருக்கிறது. பழுப்பு நிறத்திலே இருக்கிறது. அவற்றைப் போக்குகின்ற வண்ணம் இந்த நவீன அரிசி ஆலையிலே ஒரு முறை அரிசி பாலிஷ் செய்யப்பட்டாலே நல்ல அரிசியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

என்து தொகுதியிலே இருக்கின்ற திருச்சிற்றம்பலம், சிறுவாவிடுதி வடக்கு, பாதரங்கோட்டை, கோட்டாகுடி போன்ற அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிலையான கட்டடம் கட்டித்தர வேண்டும். அதுபோல சேதுபாவாசத்திரம், செல்லப்பிள்ளையார் கோயில் போன்ற இடங்களிலே அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட வேண்டும்.





இன்று தமிழக விவசாயிகளுடைய நிலை மிக மோசமாக சென்றுகொண்டு இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் இருக்கிறது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதியிலே தென்னை விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அங்கே தேங்காய்கள் விலை மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சென்ற ஆட்சிக் காலத்திலே அரசு சார்பாக தேங்காய், கொப்பறை கொள்முதல் செய்யப்பட்டது. அதுபோல் இந்த ஆண்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நேரடியாக விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே தேங்காய் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தாற்போல், தொழிற்சங்கச் சட்டத்தின்படி அந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளிகள் 15% பேர் தொழிற்சங்க உறுப்பினர்களாக இருந்தால் அச்சங்கத்தை அங்கீகரிக்கலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த விதிமுறையின்படி தமிழ்நாடு Civil Supplies Corporation ஊழியர்கள் சங்கத்தில், இந்நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 15%-க்கு அதிகமான உறுப்பினர்கள் check up system-படி இருந்தபோதிலும் பலமுறை நிர்வாகத்திடம், அரசிடம் கோரிக்கை வைத்தபோதிலும் இன்னும் ஐ.என்.டி.யு.சி தொழிற்சங்கம் அங்கீகரிக்கப்படாமல் இருக்கிறது. அதை அங்கீகரிக்க வேண்டும்.

அடுத்து பொதுத் துறை நிறுவனங்களாகிய தமிழ்நாடு மின்சார வாரியம், அதுபோல போக்குவரத்துக் கழகத்தில் உள்ள ஊழியர்களுக்குப் பென்ஷன் Pension வழங்கப்படுகிறது. அதுபோல் அவர்களுக்கும் pension வழங்கப்பட வேண்டும். தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பணிபுரிகின்ற, பருவகால கொள்முதல் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். அதுபோல சுமை தூக்கும் தொழிலாளர்கள் 10 ஆண்டுக்காலம் பணி முடித்தவர்கள் மட்டுமே பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 5 ஆண்டு, 10 ஆண்டு நிறைவு செய்யாத பல்வேறு தொழிலாளர்கள் தஞ்சை மாவட்டத்தில் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய செங்கம் தொகுதியிலே கற்பகம் கூட்டுறவுச் சங்க ரேஷன் கடையிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்னாலே 200 மூட்டை அரிசி திருட்டு போயிற்று. ரெவின்யூ தாசில்தாரை வைத்துப் பிடித்து அரிசியை recover பண்ணினோம். இரண்டு நாட்களுக்கு முன்னாலே...

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், இதற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள். கடைசியிலே பதில் சொல்லுவார்.

**திரு. போளூர் வரதன்:** திரும்பவும் 300 மூட்டை அரிசி திருடு போய் ரெவின்யூ தாசில்தார் பிடித்து இருக்கிறார். அந்த மாவட்டத்திலே இருக்கிற J.R., D.R., போன்ற அதிகாரிகளிடம் நான் நேரடியாகச் சென்று complaint கொடுத்து இருக்கிறேன். இந்த மாதிரி அரிசி திருடு போகிறது, திருடு போகிறது என்று J.R. இடம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் complaint கொடுத்தால் அந்த அதிகாரி என்ன செய்கிறார் என்றால், எல்லா கூட்டுறவுக் கடைகளில் உள்ளவர்களையெல்லாம் கூப்பிட்டு எம்.எல்.ஏ-வுக்கு against-ஆக போராட்டம் பண்ணுங்கள் என்று சொல்லி தூண்டி விடுகிறார். இப்படிப்பட்ட அதிகாரிகள் மாவட்ட அளவிலே இருக்கின்ற காரணத்தினாலேதான்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், பின்பு விரிவாகப் பேசலாம். உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எஸ். உலகரட்சகன். (குறுக்கீடு) விரிவான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கடைசியிலே கேளுங்கள், உட்காருங்கள். திரு. பி.எஸ். உலகரட்சகன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், இனமானக் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவே நாட்டின் உயர்வு என்பதைப் போல, இந்த நாட்டுக்கு ரேஷன் பொருட்களைத் தகுந்த முறையில் விநியோகம் செய்வதன்



மூலம்தான் நல்லமுறையில் இந்த ஆட்சியினர் நல்லதைச் செய்கின்றார்கள் என்று மக்கள் பேசிக்கொள்கின்ற ஒரு நிலை ஏற்பட வேண்டும் என்றால் மக்களுக்குக் கொடுக்கின்ற உணவுப் பொருட்கள் தற்சமயம் 75 சதவிகிதம் முதல் 82 சதவிகிதம் வரைதான் ஒரு கார்டுக்கு விநியோகம் செய்கின்ற முறை மாற்றப்பட்டு 100 சதவிகிதம் வரை அவர்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்தால், மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் இருப்பவர்கள் அனைவரும் பயன்பெறுவார்கள். இதற்கு ரேஷன் கடைகளிலே பரிசோதனை செய்யச் செல்கின்றபொழுது, அவர்களிடம் நீங்கள் ஏன் ஒரு கார்டுக்கு அரிசி கம்மியாகக் கொடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அவர்கள், ஒரு மூட்டைக்கு 5 கிலோ அரிசி கம்மியாக வருகிறது என்று கூறினார்கள். அவர்களுக்கு எப்படி அந்த 5 கிலோ கம்மியாக வருகிறது என்று பார்த்தால், Civil Supplies Corporation Godown-லிருந்து அரிசி எடுத்துச் செல்லப்படுகின்றபொழுது, சரியான எடையாகச் செல்கின்ற அரிசி, வழியிலே லாரியிலே செல்கின்றபொழுது அதில் செல்கின்ற ஊழியர்களால் அறுக்கப்பட்டு அந்த அரிசி எடுக்கப்படுவதை நான் அந்த லாரியை மடக்கி பரிசோதனை செய்த அந்தப் படத்தையும் பத்திரிகையிலே பிரசுரம் செய்திருக்கிறேன் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையினால், வழங்கப்படுகின்ற உணவு அளவினை 100 சதவிகிதம் ஒரு கார்டுக்குக் கிடைப்பதற்கு இந்த அரசு வகை செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதுவரை சீரும் சிறப்புமாக நடைபெற்றுக்கொண்டு இருந்தாலும் இதில் சில குறைகளும் இருக்கின்றன. இந்தக் குறைகளைக் களைவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவு வங்கிகளிலே நடைபெறும் திருட்டைத் தடுப்பதற்காக ஒரு அலாரம் பொறுத்தப்பட வேண்டும். பெரும்பாலான கட்டடங்கள், கூட்டுறவு வங்கிகளினுடைய கட்டடங்கள் கிராமப்புறங்களில் ஒதுக்குப்புறத்தில் இருப்பதால் இதுபோன்ற திருட்டுகள் நடைபெறுகின்றன. இதைத் தடுக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், அபராத வட்டித் தொகையான ரூ.310 கோடியே 50 லட்சத்தைத் தள்ளுபடி செய்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒன்றாகும். அதேபோல, நிலவள

வங்கிகளிலும் உள்ள அபராத வட்டித் தொகையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மிகவும் அன்புடனும் பணிவன்புடனும் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் கருத்துப்படி தாலுகா அளவில், சமுதாய தானியங்களை (குறுக்கீடு) மன்னிக்கவும், டாக்டர் எம்.எஸ். சாமிநாதன் அவர்களின் கருத்துப்படி தாலுகா அளவில் சமுதாய தானிய வங்கிகளை "Community Food Fund" அமைத்தால் எல்லாப் பகுதி மக்களுக்கும் சீரான முறையில் தானியங்களை விநியோகிக்க முடியும் என்பதால், இந்த அரசு அதற்குண்டான முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் விளையும் மக்காச் சோளத்திற்கு நல்ல விலை கிடைத்திட தமிழக அரசே நேரடியாகக் கொள்முதல் செய்து, நாமக்கல் மாவட்டப் பகுதியிலுள்ள கோழித் தீவன உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டுமாய் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குடும்ப அட்டைகளை வழங்குவதில் உள்ள குறைபாடுகளையும் தாமதத்தையும் நீக்கி தகுதியானவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

மேலும் அரசின் வருவாயைப் பெருக்க, இந்த நேரத்திலே அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்தி குறைத்தாலே இந்த அரசுக்கு மாபெரும் நிதிச் சுமை குறையும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன், தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து அவற்றை உடனடியாக ரத்து செய்து, சீரான தட்டுப்பாடற்ற விநியோக முறைக்கு வழி வகுத்துத் தருமாறு மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைகள் குறித்து ஆய்வு செய்தல், உணவு மானியம் உட்பட பொது விநியோக முறையைச் சீரமைப்பது குறித்து கருத்துக்களை வழங்குதல் போன்றவற்றிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ள இந்த நேரத்தில், மேற்படி குழு பரிந்துரை செய்யும் ஆலோசனைகளை நிறைவேற்ற அந்தந்த தொகுதியில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் ஆய்வுக் குழு அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அரசு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு கொசுக்கடியிலிருந்து விடுபட, தமிழ்நாட்டிலேயே உற்பத்தியாகி மிக எளிய விலையில் கிடைக்கக்கூடிய எச்.டி.வி.ஈ. கொசு வலைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மானிய விலையில் வழங்க மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நபர் ஒருவருக்கு 500 கிராம் சர்க்கரை குடும்ப அட்டைக்குக் கொடுக்கும் இந்த நேரத்திலே, நாம் சர்க்கரையை இறக்குமதி செய்து அவர்களுக்கு மேலும் 500 கிராம் சேர்த்து ஒரு கிலோவாகக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். கரும்பு ஆலையிலிருந்து சர்க்கரையைத் தயாரிப்பதற்குப் பதிலாக, எத்தினால் எனப்படும் ஒரு வகை மூலப் பொருளைத் தயாரித்தால் சர்க்கரை இறக்குமதி செய்து மலிவான விலையில் விற்பதற்கும், கரும்பு ஆலைகள் அனைத்தும் லாபத்தில் இயங்குவதற்கும் ஏதுவாக இருக்கும் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள். அதை இந்த அரசு ஆலோசனை செய்து, ஆய்வு செய்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

மேலும் நீலகிரி மாவட்டத்திலுள்ள 234 சிறு தேயிலை விவசாயிகளின் இன்னல்களைக் களையவும், அங்கு விளையும் தேயிலைக்கு நல்ல விற்பனை விலை கிடைக்கவும் வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். மேலும் ஊட்டி டீ என்ற பெயரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்வதற்கு உத்தரவிட்டு மேற்படி திட்டத்தை 28-8-2000-ல் தொடங்கி வைத்து, மேலும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் காசு இல்லாமல் டீத்தூள் வழங்கியதற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காசு இல்லாமல் ஊட்டி டீ என்கின்ற டீ தூளை இலவசமாக வழங்கினார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம், மாண்புமிகு தமிழகத்தினுடைய தானைத் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தங்களுடைய சொந்தச் செலவிலே மாமன்றத்தினுடைய அத்துணை உறுப்பினர்களுக்கும் ஊட்டி டீ என்கின்ற தேயிலைத் தூளைக் கொடுத்து இருக்கின்றார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகரட்சகன் அவர்கள் அதை இன்னும் வாங்கிக்கொள்ளவில்லையா?

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய காசு இல்லாமல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதைக் கொடுத்ததற்காகத்தான் எங்களுடைய நன்றியை இங்கே தெரிவித்துக்கொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் கடன் நிலுவை அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம், கடன் பெற்றவர்கள் அதனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற எண்ணம் இல்லாத காரணத்தால், அரசு கடன் வசூல் செய்யும் பணியை முறையாக, முனைப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயிகள் கேட்கும் கடன் தொகையை அவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கிடவும், இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில், சங்கச் செயலாளரும் தலைவரும சேர்ந்து அதிக அளவில் ஊழல் செய்து இருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த ஒரு குழு அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கோடானுகோடி மக்கள் பயன் அடையக்கூடிய நியாயவிலைக் கடைகளில் எந்தவித ஊழலும் இல்லாமல் அவை சீராகவும் சிறப்பாகவும் நடைபெறுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

பிற்பகல் 1-05

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பல மாவட்டங்களில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணி நியமனம் நடைபெறவில்லை. வேலூர், திருவண்ணாமலை, சேலம், ஈரோடு போன்ற மாவட்டங்களில் இந்த மாதிரி பணிகளை நியமனம் செய்ய அரசு முன்வர வேண்டும். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் பட்டியல் பெற்று பதிவு அடிப்படையில் நியமனம் செய்ய இந்த அரசு முன்வர வேண்டும். தினச் சம்பளம் அடிப்படையில் சிலரை வங்கியில் சேர்த்தவர்களை பணி நிரந்தரம் செய்யக் கூடாது என்பதை இங்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மேலும் தமிழ்நாட்டில், கூட்டுறவுத் துறை வங்கிகள், சங்கங்கள், ஒன்றியங்கள், நிறுவனங்களில் கடந்த 20 வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ள சுமார் 50 ஆயிரம் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு இந்த அரசு ஆணையிட வேண்டும். முந்தைய தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவுத் துறையின் கீழுள்ள ரேஷன் கடைகளில் விற்பனையாளராக சுமார் 3 ஆயிரம் பேரை கூட்டுறவுச் சட்ட விதிகளை மீறி, முறைகேடாக 1998 ஆம் ஆண்டு பணி நியமனம் செய்துள்ளார்கள் என்று தமிழ்நாடு கூட்டுறவு பயிற்சி பெற்ற வேலையில்லா மாணவர்கள் நலச் சங்கத்தின் சார்பாக முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியில் உள்ள பிரச்சினைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். செய்யாறு அரசினர் கலைக் கல்லூரிக்கு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும், கட்டடங்கள் இல்லாத காரணத்தினாலும் கல்லூரி முதல்வர் அவர்கள், பணி இடங்களை நிரப்புவதற்குப் பயந்துகொண்டு நிரப்பியிருக்கிறார். ஆகவே அந்தக் கல்லூரிக்குக் கட்டடங்களைக் கட்டித் தரவும், ஆசிரியர்களை நியமனம் செய்யவும் இந்த அரசு முன்வர வேண்டும். 1991 முதல் 1996 வரை ஆண்ட அரசு காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாமண்டூர் மாங்காள் கூட்டு. ரோடு என்ற இடத்தில் 800 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு சிப்காட் வளாகம் என்ற பெயர்ப் பலகை பொருத்தப்பட்டு ஐந்தாண்டு காலமாக எந்தவித முன்னேற்றமும் இல்லாத அளவில் அது அப்படியே காட்சி அளிக்கிறது. அதை விற்ற விவசாயிகள் இப்போது அதிலே பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 800 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு சிப்காட் தொழில் வளாகம் என்ற பெயர்ப் பலகையும் 1996 ஆம் ஆண்டு வைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா.தா. இன்பத் தமிழன். (குறுக்கீடு)

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். என்னுடைய குடும்பத்தில் சின்ன கலவரத்தால் 120 பேர் மேல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கும் நான் அவை முன்னவரிடம்

தெரிவித்திருக்கிறேன். அடுத்தபடியாக, இரண்டு இலட்சம் பி.டி. ஆசிரியர்கள் பணியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணி வழங்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

***திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய குடும்பத்தினர் என்னை ஒதுக்கிவைத்தபோது, எனக்கு அடைக்கலம் தந்த தாயே! எனக்கு முகவரி தர வேண்டும் என்ற காரணத்தினால் ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து என்னை வெற்றி பெறச் செய்த தாயே! அம்மா அவர்களை முதல்வராக்க வேண்டும் என்ற காரணத்தால் என்னை வெற்றி பெறச் செய்த ஸ்ரீவில்லிப்புத்தூர் வாக்காளப் பெருமக்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலம் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதிக்கு நிறைய பணிகளை இந்த நூறு தினங்களுக்குள் செய்துள்ளார்கள். ஆண்டாள் திருத்தேர் மழையின் காரணமாக நனைந்துகொண்டு மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அதற்காக ரூ.3,40,000/-ஐ உடனடியாக ஒதுக்கி சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீவில்லிப்புத்தூர், ஆண்டாள் கோவில் நகரமாக உள்ளதால் அதன் சீரமைப்பு நலப் பணிகளுக்கு ரூ.12 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கேரள அரசு போக்குவரத்துப் பேருந்துகளில், அவ்வரசின் சின்னமான இரட்டை யானை பொறிக்கப்பட்டுள்ளது. அதேபோல, தமிழக அரசு போக்குவரத்துப் பேருந்துகளில் அரசுச் சின்னமான ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம் சின்னம் பொறிக்கப்பட வேண்டும் என, அம்மா அவர்களிடம், திருப்பாதம் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சியில் செயற்கையின் காரணமாக குடிநீர்ப் பிரச்சினை உள்ளது. ஏனென்றால் அங்குள்ள நகராட்சி சேர்மன், நான் சட்டமன்ற உறுப்பினர் ஆகக் கூடாது என்றும், எனக்கு ஓட்டு போட்டது நகராட்சி மக்கள் என்பதாலும் அவர்களைப் புறக்கணிக்கும் வகையில் பொதுமக்களுக்குச் சரியாக வேண்டுமென்றே தண்ணீர் தராமல் ...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அங்கே நகராட்சி சேர்மன் யார்?

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** நகராட்சி சேர்மன் தாமரைக்கனி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பொதுமக்களுக்கு உடனடியாக தண்ணீர் வழங்காத காரணத்தால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். அம்மா அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து தண்ணீர் வழங்க வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

நெசவாளர்களுக்கு நூல் கோ-ஆப்டெக்ஸ் மூலம்தான் வழங்கப்படுகிறது. அவர்கள் வெளி மார்க்கெட்டில் வாங்கும் அளவுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டால், வெளி மார்க்கெட்டில் வாங்கி போதிய அளவு அவர்கள் நூலை வெளியிலே எடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்று அம்மா அவர்கள் திருப்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் 1991-96 ஆம் ஆண்டில் அம்மா அவர்களின் ஆட்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு இட ஒதுக்கீடு செய்தது மட்டுமல்லாமல், ரூ.8 கோடி செலவில் அந்த கட்டடம் கட்டுவதற்கும் உத்தரவிட்டார்கள். கடந்த தி.மு.க. அரசு வேண்டுமென்றே புரட்சித் தலைவி அவர்கள் போட்ட உத்தரவின் காரணமாக அதை நிறுத்தி வைத்தார்கள். அதை நிறுத்தி வைத்ததன் அடிப்படையில் இப்போது அந்த நீதிமன்றம் கட்டுவதற்கு 11 கோடி ரூபாய் என்று estimate போடப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. அரசினால் 3 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டமாகி இருக்கிறது. இதற்கு முழுப் பொறுப்பு தி.மு.க. அரசாங்கம்தான். ஆகவே, மேற்கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டித் தருமாறு அவர்களுடைய திருப்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் வத்திராயிருப்பு ஒன்றியத்திலுள்ள நெசவாளர்களுக்கு காடா நூல் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. கடந்த தி.மு.க. அரசு நெசவாளர்களுக்குக் குறைவான நூலினைக் கொடுத்ததால் நெசவாளர்கள் வயிற்றுப் பசியோடு மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்குக் காடா நூல்

[திரு. இரா.தா. இன்பத் தமிழன்] [2001 செப்டம்பர் 10

அதிகப்படுத்திக் கொடுக்கும்படி மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்புப் பகுதியில் தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு நிதி வழங்குமாறு அம்மா அவர்களுடைய திருப்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

வத்திராயிருப்புப் பகுதியில் அரசு கருவூலம் அமைப்பதற்கு ஆவன செய்து உதவும்படி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வத்திராயிருப்பு, பிளவக்கல், கோவிலாறு அணையில் கண்மாய்க்கு வரும் வரத்துக் கால்வாய்கள் தூர் வாராமல் சீரழிந்து உள்ளதால் மழைக் காலங்களில் தண்ணீர் பெருக்கு அதிகமாக இருப்பதால் கிராமங்களில் பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகிறது. அதைச் சீரமைக்குமாறு அம்மா அவர்கள் திருப்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

சுந்தரபாண்டியம் முதல் அகத்தாபட்டி ஆற்றுப் பாலத்தில் வெள்ளப் பெருக்கு மழை நேரங்களில் உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. அதைச் சீரமைக்குமாறு, புதிய பாலங்கள் கட்டித் தருமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வத்திராயிருப்பில் பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு நிர்வாக வசதிக்காக புதிய தாலுகா அலுவலகம் அமைப்பதற்கு ஆவன செய்து உதவுமாறு அம்மா அவர்களின் திருப்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும், பழங்கள் பதப்படுத்தும் குளிர் சாதன வசதியும் செய்து உதவுமாறு அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் இயங்கிவரும் கல் உடைக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மலையில் கல் உடைப்பதற்கு டெண்டர் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் வத்திராயிருப்பு ஒன்றியம், அருள்மிகு சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் அடிவாரத்தில் தங்கியுள்ள மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு உதவி செய்யுமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 10] [திரு. இரா.தா. இன்பத் தமிழன்]

மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகாவிற்குட்பட்ட அருள்மிகு சுந்தரமகாலிங்கம் கோவிலுக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி மகராசபுரம் கிராமத்திற்குட்பட்ட அடிவாரத்திலிருந்து மின்சார வசதியும், கல் படிக்கட்டு வசதியும் செய்து உதவுமாறு அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். இங்கு ஆண்டுத் திருவிழாவிற்கு 5 இலட்சம் பக்தர்களும் மற்றும் மாதந்தோறும் 20,000 பேரும் வருகிறார்கள். அவர்கள் வருவதற்கு, போவதற்கு வசதி இல்லாத காரணத்தால் அதைக் கூடிய விரைவில் செய்து தருமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் பிரியதர்ஷினி மில்லில் ஓராண்டு காலமாக மின்சாரத் திருட்டு நடந்து கொண்டிருந்தது. அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அது உடனடியாகக் கண்டறியப்பட்டு உடன் நடவடிக்கை எடுத்து அந்த மில் தடை செய்யப்பட்டு, மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மில் ஜெனரேட்டர் மூலமாக ஓடிக் கொண்டிருக்கிறது. உடனடியாக அந்த மில்லை தடை செய்து, மில்லை ஓடவிடாமல் செய்யுமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலும், ஏ.389 ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவுப் பண்டகச் சாலை மற்றும் எஸ்.பி.எஸ்.பி.எல். 30-தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆகிய நிறுவனங்களில் கடந்த காலங்களில் பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளது. தவறு செய்தவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் இதில் தலைவராக இருந்தவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்; தி.மு.க. வில் இன்று பொறுப்பில் இருப்பவர்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெளிவாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற பழமொழி இருக்கிறது. அந்தப் பழமொழியை மாற்றுகின்ற வகையில் கூட்டுறவைத் தங்களின் உயர்வுக்காகப் பயன்படுத்திக்கொண்ட கடந்த கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுச் சங்கங்களில் பதவி வகித்தவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்கள் யார் என்று மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும் எனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேதனைகளை சாதனைகளாக ஆக்கி சரித்திரம் படைத்தவர்கள். அம்மா அவர்கள் நிரந்தர முதலமைச்சர், அதை எந்தக் கொம்பனாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத்

[திரு. இரா.தா. இன்பத் தமிழன்] [2001 செப்டம்பர் 10

தட்டும் ஒலி) நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 1-15

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மானியத்தின்மீது பேசுவதற்கான வாய்ப்பை அளித்த தங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி, அபராத வட்டியினை சுமார் 311 கோடி ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்து, விவசாயிகளுடைய வாழ்விற்கு ஒளியேற்றியிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட்டி, அபராத வட்டி தள்ளுபடியின் மூலமாக விவசாயிகளுக்கு பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதன் மூலமாக அவர்கள் நிவாரணம் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னாலும், வட்டி, அபராத வட்டியைச் செலுத்துவதற்குரிய கால அவகாசம் முடிவடைகிற சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே, ஒரு நல்ல நோக்கத்திற்காக ஒரு திட்டத்தை அறிவித்ததற்குப் பின்னாலே கால அவகாசக் குறைவின் காரணத்தினாலே அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினாலே, 2002 மார்ச் மாதம் கடைசி வரையிலும் அந்த வட்டி, அபராத வட்டியைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீட்டிப்புச் செய்வதற்கான முயற்சியைக் கண்டிப்பாக நமது அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்தால், இந்த அவையிலே அறிவிக்கச் செய்வதற்கான முயற்சியை எடுக்கலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தினாலே அந்த அறிவிப்பைச் செய்கிற பொறுப்பு அவர்களுக்கும் இருக்கிற காரணத்தினாலே, ஓர் உத்தரவாதத்தை இந்த அவைக்கு அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச்



2001 செப்டம்பர் 10] [திரு. வை. சிவபுண்ணியம்]

செய்வதன் மூலமாகத்தான் விவசாயிகளுக்குரிய வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்த நோக்கம், முறையாக, சரியாக அவர்களுக்குச் சென்றடைவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே அதைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு டெல்லியிலே பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால், அதனால் ஏற்பட்டிருக்கிற பாதிப்பு, விவசாயத் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அந்த ஒன்றுபட்ட மாவட்டத்தில் பல இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு. எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு தடவை வெள்ளம் வரும்; மறுதடவை புயல் வரும்; மீண்டும் ஒரு தடவை வறட்சி வந்துவிடும். ஆகவே, இயற்கைச் சீற்றத்தினால் மாறி மாறி பாதித்துக் கொண்டிருக்கிற மாவட்டம் அது. இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தினாலே வேலையில்லாது தவித்துக் கொண்டிருக்கிற அந்த விவசாயத் தொழிலாளர்கள் என்ன செய்வது என்றே புரியாத நிலையில் இருக்கிறார்கள். குறுவையும் மற்ற பயிர்களுக்குமான பாதிப்பு கிட்டத்தட்ட 2000 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. அதற்கான முயற்சியை எடுத்து, அந்தப் பாதிப்புகளுக்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் விரைவாக முடிக்க விரும்புகிறேன். குடும்ப கார்டுகள் வழங்குவதிலே இன்னும் பல சிக்கல்கள் நீடிக்கின்றன. போலியான குடும்ப அட்டைகள் ஏராளமாக இருக்கின்றன என்பது உண்மை. அதேநேரத்தில் தமிழகத்திலே, உரியவர்களுக்கு குடும்ப அட்டை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை. ஆகவே, போலியானவற்றைக் கண்டுபிடித்து அதை நீக்குவதற்கு முயற்சி எடுக்கின்ற அரசு, குடும்ப அட்டை இல்லாமல் இருக்கிற குடும்பங்களுக்கு அந்தக் குடும்ப அட்டையை வழங்குவதற்கான முயற்சி, தனித்த முயற்சியாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றத்தின் பாதிப்புக்கு நமது தமிழகம் தொடர்ந்து ஆளாகிக் கொண்டே இருக்கிற காரணத்தினாலே, பல்வேறு நிதி வழங்கப்படுகிறது. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பல்வேறு நிதி வழங்கப்படுகிறது. மத்தியிலே பிரதமர் நிவாவண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. பாதிப்புகள் வருகிறபோது மத்திய அரசு நிதி கொடுக்கிறது என்று சொன்னாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற வாரத்தில் ஒரு தடவை போதுமான அளவுக்கு நிதி

வழங்காத காரணத்தினாலே ஈடு செய்ய முடியவில்லை என்று அறிவித்தார்கள். ஆகவே, இயற்கைச் சீற்றத்தின் பாதிப்பில் இருந்து மீளச் செய்வதற்காக ஒரு தனி நிதியம் ஏற்படுத்துவதற்கான முயற்சியை நம்முடைய அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது காலச் சூழ்நிலை பொருத்தம் இல்லை என்று சொன்னாலும்கூட. இயற்கைச் சீற்றத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஒரு தனி நிதியம் ஏற்படுத்துவதற்கான முயற்சியை நம்முடைய அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

1993 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தாலே அறிமுகம் செய்யப்பட்டு, ஆந்திரா, கர்நாடகம், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலே அமல்படுத்தப்பட்டு வருகிறது மாதிரி கூட்டுறவுச் சட்டம். அந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை—நம்முடைய தமிழகத்திலேயும் மேற்கொள்வதற்கான முயற்சியை—இங்கே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்றார்போல அந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கான, நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்து, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவதன் மூலமாக கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக முறையிலே, உறுப்பினர்கள், சரியாக, முறையாக பங்கெடுத்து அந்த நிர்வாகத்தை ஒழுங்கு செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய விவசாய கூட்டுறவு அமைச்சர் பொறுப்பிலே இருந்த திரு. சோம் பால் அவர்கள் ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள். தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு மறு முதலீட்டு நிதியாக கிட்டத்தட்ட 6,700 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கும் என்று நாடாளுமன்றத்திலே அறிவித்தார்கள். குறிப்பாக 1991 ஆம் ஆண்டிலே 10 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. காரணத்தினாலே கூட்டுறவு நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிற இந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கான முயற்சியாக இப்படிப்பட்ட தொகையை, சுமார் 6,700 கோடி ரூபாயை இந்த மாநிலங்களுக்கு வழங்கலாம் என்று அன்றைக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கான ஒரு குழு—தேசிய வங்கி ஆணைப்படி அமைக்கப்பட்ட—ஸ்ரீவாத்சவா குழு அந்தச் சிபாரிசை செய்திருக்கிறது, பரிந்துரையைச்



செய்திருக்கிறது, அந்தப் பரிந்துரையின்படி 1999 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியினுடைய துணை ஆளுநர் ஜகதீஷ் கபூர் என்பவருடைய தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது, இதை வழங்கலாம் என்பதற்குரிய முயற்சியாக. ஆகவே நம்முடைய சட்டமன்றத்திலே இதற்கான ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலமாக தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான மறுமுதலீட்டு நிதியை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து நிர்ப்பந்தித்து இந்த நிதியைப் பெறுவோமானால் சுமார் 500 கோடியிலிருந்து 600 கோடி ரூபாய் மறுமுதலீட்டு நிதி தமிழகத்துக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதைப் பெறுவதற்கான முயற்சியாக தனித் தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு உரிய வாய்ப்பை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குரிய ஊழியர்களுக்கான சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுடைய ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆட்சியிலே அதற்கான ஒரு முடிவு எடுக்கப்பட்டு 8-1-1997 ஆம் தேதியிட்ட அரசாணையால் பரிந்துரை செய்யப்பட்டது. ஓய்வூதியம் வழங்கப்படலாம் என்று சென்ற ஆட்சியினரால் சொல்லப்பட்டது. ஆனால் மூன்றாண்டுகாலம் கழிந்ததற்குப் பின்னாலும் அந்த ஓய்வூதியத்தைப் பற்றி எந்தவிதமான பேச்சு மூச்சே இல்லாமல் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஓய்வூதியம் கொடுப்பதற்குரிய முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைக்கூட நாங்கள் சென்ற ஆண்டு கடைசிநேரத்திலே 3-5-2000 தேதியன்று நடைபெற்ற கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது வலுவாகப் பேசுகிறபோது அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.என். நேரு அவர்கள் ஓர் அறிவிப்பை இந்தச் சட்டமன்றத்திலே செய்தார். ஓய்வூதியம் கொடுப்பதற்குரிய முயற்சியை இந்த அரசு உடனடியாக ஏற்பாடு செய்யும் என்று அறிவித்தது அதோடு நிலுவையில் இருக்கிறது. இந்த அரசு அதை எடுத்துச் செய்வதற்கான முயற்சியை, அந்த ஊழியர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கிட்டத்தட்ட 68 பெண் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். அந்தப் பணி நீக்கம் செய்யப்பட்ட பெண் தொழிலாளர்கள் சென்ற தடவை பலமுறை போராடினார்கள். அமைச்சர்களைச் சந்தித்து, முதலமைச்சரைச் சந்தித்து கோரிக்கை மனுக்கள் எல்லாம் சென்ற தடவை கொடுக்கப்பட்டன. பலன் இல்லை. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நம்முடைய சட்டமன்றக் குழுவினுடைய எங்களுடைய தலைவர் திரு. பழனிசாமி அவர்களும், தொழிலாளர் நலத் துறையினுடைய உறுப்பினர்களும் சந்தித்துப் பேசி, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி முடிவெடுத்து, பணிநீக்கம் செய்யப்பட்ட அந்த 68 பெண் தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கியிருக்கிற இந்த அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அவர்கள் 85 பெண் உறுப்பினர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மன்னிக்க வேண்டும். 85 பெண் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பொது விநியோக முறையைச் சீரமைப்பதற்காக, மானியம், மற்ற சலுகைகளைப் பற்றிப் பேசுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்படும் என்ற அந்த அறிவிப்பு வரவேற்கக்கூடியது. இதைக்கூட நம்முடைய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக பல்பொருள் அங்காடிகளைப் பல இடங்களிலே திறக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இன்னும்கூட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய எங்களுடைய மாநிலத் தலைவர்கள், தோழர் நல்லக்கண்ணு தலைமையிலே, தோழர் வரதராஜன் தலைமையிலே சென்ற வாரம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து ஒரு கோரிக்கை மனுவை அளித்தார்கள். பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை வழங்குவதோடு மட்டுமல்லாமல் இன்னும் அத்தியாவசியப் பொருள்களாக இருக்கக்கூடிய பருப்பு வகைகள், இன்னும்



பல உணவுப் பொருள்களுடைய விற்பனையை நம்முடைய கூட்டுறவுத் துறை மூலமாக விற்பனை செய்து மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளைப் பற்றிச் சிந்திக்கலாம். பல மாநிலங்களிலே, அண்டை மாநிலங்களிலே இப்படி நடைமுறைப் படுத்தப்படுகிறது. அதை முன்னுதாரணமாக வைத்து நமது மாநிலத்துக்கு ஏற்றார்போல அந்த விற்பனையைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுத்து அந்த விற்பனையைத் தொடங்கலாம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல் கொள்முதல் பற்றிச் சொல்லப்பட்டது. இதிலே பல விவாதங்கள் இருக்கின்றன. எது எப்படியிருந்தாலும் குறுவை அறுவடை தொடங்கியிருக்கிறது ஒரு பகுதியிலே. ஆகவே நெல் கொள்முதல் செய்ய வேண்டியது என்பது மிக அத்தியாவசியத் தேவையாக இருக்கிறது. கொள்முதல் செய்வதிலேயிருக்கிற சிக்கலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதை நாங்களும் உணர்கிறோம், புரிந்து கொள்கிறோம். ஆனாலும் நெல் கொள்முதலை நிறுத்துவது என்பது இயலாத காரியம். குறுவை நெல்லை நிறுத்துவது என்பது சரியல்ல. இப்போது எப்படி குறுவை நெல் பாதிப்பு பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோமோ அதேபோல அறுவடை செய்து விவசாயிகள் கையிலே வைத்திருந்தால் மிகப் பெரிய பாதிப்புக்கும், இழப்புக்கும் விவசாயிகள் ஆளாகிவிடுவார்கள். ஆகவே குறுவை நெல் கொள்முதலை உடனடியாகச் செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அதிலே பல்வேறுவிதமான கருத்துகள் இருக்கின்றன. அந்த மாவட்ட நிலைமைகளை இன்னும் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால்தான் அதிலேயிருக்கிற சிரமங்களைப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே கொள்முதலை எந்தவொரு காலகட்டத்திலும் நிறுத்த முடியாது. குறுவை நெல் கொள்முதலை அரசாங்கம் கண்டிப்பாக எடுக்க வேண்டிய அவசியத்திலேயிருக்கிறது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அழுத்தமாகச் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்து விடுகிறேன். அந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போல மத்திய அரசாங்கம் விலையை அறிவித்திருக்கிறது. 510 ரூபாயிலிருந்து 530 ரூபாயாக அறிவித்திருக்கிறது. இன்னும் அவர்கள் உயர்த்தி அறிவித்திருக்க வேண்டும். ஏனோ குறைந்த விலையை நெல்லுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எப்போதும் பகைமை பாராட்டி நம்மைப் பழி வாங்குகிற போக்கு மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. நெல்லுக்கும் அப்படி வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த

அவையின் மூலமாக நான் கண்டிக்கிறேன். இருந்தாலும் இந்த ஊக்கத் தொகை என்பதைக் குவிண்டாலுக்கு 100 ரூபாய் என்று அறிவித்து விவசாயிகள் மகிழ்ச்சியைப் பெற்று அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு உத்தரவாதம் அளிக்கிற ஒரு செய்தியாக தமிழ்நாடு அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அடுத்து, 20 ஆண்டு காலமாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிற நெல் கொள்முதல் பணியாளர்கள். அதேபோல, சுமைதூக்கும் தொழிலாளர்கள் இவர்களுடைய பணிப் பாதுகாப்பு, பணி நிரந்தரம், ஊதிய உயர்வு போன்றவற்றிற்குக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருவாரூர் மாவட்டத்திலே 15 அரைவை ஆலைகள் இப்போது நெல் அரைவை செய்யாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அரசினுடைய உத்தரவின் காரணத்தாலே. ஏற்கெனவே சென்ற ஆண்டு குறுவை நெல் அரைவை செய்யப்பட்டபோது ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டதாகச் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே இருக்கின்ற பிரச்சினைகள் குறைபாடு இல்லாமல் அரைவை செய்ய வேண்டும். அதன்மீது நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அந்த அரைவையை அறவே நிறுத்தியதன் காரணத்தினாலே 2000 தொழிலாளர் குடும்பங்கள் இதனாலே பாதிக்கப்படுகின்றனர்.. ஆகவே முறையாக, சரியாக நடவடிக்கை எடுத்து அரைவையைத் தொடங்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலே உள்ள நகரக் கூட்டுறவு வங்கியைப் பற்றி கடந்த 4 வருடங்களாக இங்கே பேசப்பட்டிருக்கிறது. அந்த நகரக் கூட்டுறவு வங்கியினுடைய செயலாளராக இருப்பவர் பெயர் மாயன், பெயரே மாயன். அவர் பல இடங்களில் மாயமாகவே மறைந்து வருகிறார். 95 கோடி ரூபாய் மூலதனத்திலே இருக்கிற அந்த நகரக் கூட்டுறவு வங்கியை அவருடைய விருப்பத்திற்கேற்ப செயல்படுத்திக் கொண்டே இருக்கிறார். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இந்த அவையிலே திரு. சுப்பராயன் அவர்களாலே பேசப்பட்டு தனியாக C.B.;C.I.D. மூலம் ஒரு விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுத்து ஆவணங்கள், தஸ்தாவேஜுகள், பொருட்கள், பணம், நகைகள் எல்லாம் [illegible] பத்திரிகைச் செய்திகள் எல்லாம் ஆதாரமாக இருக்கின்றன. ஆனால் அதற்குப் பின்னாலும் அவர் செயல்படுகிறார்.



பின்னாலே எப்படி அது நின்றது? ஏன் நின்றது என்பது புரியாத புதிராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே இப்போது நீங்கள் அந்த ஃபைல்களை எல்லாம் தூசி தட்டி எடுத்து, உரிய நடவடிக்கையை எடுத்து அந்த நகர வங்கியைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

திருப்பூர் நுகர்வோர் கூட்டுறவு மற்றும் பண்டக சாலையில் பணிபுரிந்த 48 தொழிலாளர்கள் இப்போது பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு செய்கிற வகையிலே அந்த வேலை இழப்பு செய்யக்கூடாது என்பதையும் இந்த நேரத்திலே கேட்டு இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளும் மற்றவர்களும் பயனடைகிற திட்டங்களைச் செய்கிற இந்த அரசு நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும், அதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றென்றைக்கும் ஆதரவாக இருக்கும் என்பதைச் சொல்லி நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மூன்று நிமிடத்தில் விரைவாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

***திரு. கே.சி. கருணாகரன்:** மூன்று நிமிடம் ஆகிவிட்டது என்று சொன்னால் உட்கார்ந்து கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் முன்மொழிய விரும்புகிறேன். இங்கே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல முக்கிய விஷயங்கள் எல்லோராலும் வலியுறுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றன. ஏற்கெனவே சில கட்சிகளின் பிரதிநிதிகள் இங்கே சிலவற்றை வலியுறுத்தி இருக்கிறார்கள். அதில் என்னுடைய கருத்தான கூட்டுறவு நிறுவனங்களுக்கான தனித் தேர்தல் ஆணையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தல்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் அராஜகமாக ஜனநாயக விரோதமாக கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தைக் கைப்பற்றி இருக்கிறார்கள். உண்மை உறுப்பினர்கள் தேர்தலில் ஓட்டுப் போட்டு நிர்வாகத்தைத் தேர்ந்தெடுக்கின்ற நிலைமை கூட்டுறவு அமைப்புகளில் உருவாக வேண்டும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை வழங்கிட வேண்டும். கூட்[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223957
சென்னை-600 008
D V24,31 P01 101.11.3

தேர்தலை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்திட தனித் தேர்தல் ஆணையம் உருவாக்கி தேர்தலை நடத்திட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாதிரி கூட்டுறவுச் சட்டம் பற்றி பலரும் இங்கே வலியுறுத்தினார்கள். 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மத்திய நிதித் துறை மற்றும் திட்டக் குழுவின் ஆணைப்படி கூட்டுறவாளர் சௌத்திரி பிரகாஷ் தலைமையில் கூட்டுறவுச் சட்ட விதிகளை மாற்றியமைக்க Committee ஒன்று உருவாக்கப்பட்டது சம்பந்தமாக இங்கே திரு. வை. சிவபுண்ணியம் கூட சொன்னார்கள். 1993 ஆம் ஆண்டில் அன்றைய அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. ஜி. விஸ்வநாதன் காலத்தில் கூட்டுறவு மானியக் கோரிக்கை மற்றும் கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கத்திலே இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டங்கள் அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இப்போது வரை அது நிறைவேறவில்லை. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கடந்த கால அரசு மேற்கூறிய மாதிரி கூட்டுறவுச் சட்ட விதிகளை பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட வரைவு பற்றி அரசு பரிசீலனை செய்து நடைமுறையில் உள்ள 1983 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்ய திரு. சி.டி. தண்டபாணி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டதாகவும்...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே.சி. கருணாகரன்:** இந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று பிறகு மாதிரி கூட்டுறவுச் சட்டத் திருத்தம் பரிசீலிக்கப்படும் என்றும் கூறியது. ஆனாலும் அந்தச் சட்டம் கடந்த ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தப்படவில்லை. மாதிரி கூட்டுறவுச் சட்டத்தில் மாநில அரசாங்கத்தினுடைய ஈடுபாடு குறையாத வகையிலே பதிவாளரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி கூட்டுறவுச் சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும். எனவே, புதியதாக பதவியேற்றுள்ள நம்முடைய அரசு மாதிரி கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தை அமல்படுத்திட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேமாதிரி, கூட்டுறவு துறையில் 18 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை பாதுகாப்பற்ற நிலையிலே, கூட்டுறவுத் துறைக்கு மிகப் பெரிய சவாலாக இருந்து வருகிறார்கள் என்பதை நான் பணிவன்போடு அவையின்



கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், சூப்பர் மார்க்கெட்டுகள், நிலவள வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள், பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் தொகுப்பு ஊதியம் மற்றும் தினக் கூலிகளாக சுமார் 18 ஆயிரம் பேர் 18 ஆண்டுகளாக இருக்கிறார்கள். கூட்டுறவு ஒன்றியப் பணியாளர்களும் இதில் அடங்குவார்கள். அந்தமாதிரி அவலமான ஒரு நிலைமையிருந்து கொண்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் 1980-க்குப் பின்னர் பணியில் அமர்த்தப்பட்டவர்கள். 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம்தான் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். ஆனால் பல காலகட்டங்களில் இந்த விதிமுறைகள் மீறப்பட்டிருக்கின்றன. நேரடியாக பலர் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றிய ஒருவரைப் பணி நீக்கம் செய்ய முடியாது என்று மத்திய தொழில் தகராறு சட்டம் குறிப்பிடுகிறது. எனவே, கூட்டுறவுத் துறையிலே முறையின்றி பணியமர்த்தப்பட்ட பலர் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர் நீதிமன்றத்தை நாடி பணிப் பாதுகாப்பு பெற்றுள்ளனர். எனினும் தொகுப்பு ஊதியம் மற்றும் தினக்கூலி பெறுபவர்களாக இன்னமும் உள்ளனர். இவர்களைப் பணிவரன்முறைப்படுத்த மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)**

கடந்த தி.மு.க. அரசு 12-3-2001-ல் ஓர் அரசாணை பிறப்பித்திருந்தது. 480 நாட்கள் பணியாற்றிய அனைவரையும் பணிவரன்முறைப்படுத்தும் அதிகாரம் மாநில கூட்டுறவுப் பதிவாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. இப்போதும் அது இருக்கிறது, நடைமுறைப்படுத்தவில்லை. இந்த அரசாணையில் சில விளக்கங்கள் வேண்டுமென்று பதிவாளர் கேட்டிருந்தார். அதற்குள் சட்டசபை தேர்தல் வந்துவிட்டது. அந்த அரசாணை இப்போது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. நான் நம்முடைய அரசையும் பதிவாளரையும் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த 18 ஆயிரம் தொழிலாள மக்களைத் தயவுசெய்து நட்டாற்றில் நிறுத்திவிடாதீர்கள். நியாயமான முறையில் அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பொது விநியோகம் சீரழிகின்றது என்ற பிரச்சினையிருக்கிறது. மிக முக்கியமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது, 1534 கோடி ரூபாய் நாம் இதற்கு மானியம் வழங்குவதன் மூலம் செலவழிக்கப்படுவதாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். மிக முக்கியமான விஷயம். இதிலே போலியான குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட போலியான குடும்ப அட்டைகள் இருக்கின்றனவே இதை நாம் என்ன செய்யப்போகிறோம்? வறுமைக் கோட்டிற்குக் கீழேயும் வறுமைக் கோட்டிற்கு மேலேயும் உள்ளவர்களுக்கு மொத்தமாக மானியத்தைக் கொடுக்கிறோமே அதன்மீது என்ன முடிவு எடுக்கப் போகிறோம் என்பது தெரிய வேண்டும். 10 இலட்சம் கார்டுகள் கூடுதலாக இருக்கின்றன என்று பலர் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனாலும், புதிய கார்டுகள் வேண்டுமென்று விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்றால், இந்தப் போலி கார்டுகள் இன்னும் கூடுதலாக இருக்குமோ என்று நான் சந்தேகிக்கின்றேன். அதை நீங்கள் கவனிக்க வேண்டும். இதுசம்பந்தமாக, கூட்டுறவுத் துறை கொள்கைக் குறிப்பிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கார்டுகள் வழங்கப்படுவதிலே இந்த 10 இலட்சம் கார்டுகள் எப்படி அதிகமானது? இது தவிர, Audit Report-ல் தணிக்கைக் குழுவினுடைய அறிக்கையில் "அட்டைகளை அடிப்பதில்கூட வீணான பணச் செலவு கடந்த கால அரசு செய்திருக்கிறது" இன்னும் சொல்லப்போனால், மஞ்சள் குடும்ப அட்டைகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அரசின் தீர்மானத்தினால் ரூ.30.09 இலட்சம் செலவில் ஏற்கெனவே அச்சிடப்பட்ட 5.72 இலட்சம் பச்சை நிற அட்டைகள் உபரியானது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-35

இது Audit Report-ல் இருக்கிறது. டிசம்பர் 1997 முதல் ஏப்ரல் 1998 வரை மின்னணுவியல் கழகம் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் விநியோகிப்பதற்காக 5.72 இலட்சம் பச்சை நிற அட்டைகளை அச்சடித்தது. அச்சடித்ததற்குப் பிறகு, இந்த பச்சை அட்டையை கொடுக்க வேண்டாம் என்று அரசாணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டது. அந்த, பச்சை அட்டைக்குப் பதிலாக, மஞ்சள் நிற அட்டைகள் அச்சடிக்கப்பட்டன. இதனால், ஏற்கெனவே அச்சடித்த பச்சை அட்டையால் ரூ.30.09 இலட்சம் அரசுக்கு தேவையில்லாமல் வீணாக செலவு ஏற்பட்டது. அரசின் திரும்பப் பெற்ற முடிவினால், இலக்கிடப்பட்ட பொது விநியோக முறையின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள



குடும்பங்களை அடையாளம் கண்டு சிறப்பு மானியம் அளிக்கப்பட்டு. அரிசியை வாங்க தனியாக அட்டை எதுவும் அவர்களுக்கு வழங்கப்படாததால் அட்டையை மாற்றிய அரசின் உத்தரவு தவறானது. வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் அனைவருக்கும் ஒரே விலையில் அரிசி விற்பனை செய்வதால் ஏற்படும் நஷ்டத்தைப்பற்றி வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறாக முறைகேடுகள் அல்லது தவறுகள் அல்லது சரியாக திட்டமிடாததால் ஏற்பட்ட பலகீனம் காரணமாக எல்லோருக்கும் சமமாகக் கொடுக்கப்பட்டதும் கூடுதலான செலவுகள் ஏற்பட்டதும் நடந்திருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில் அரசு இந்த 10 இலட்சம் போலி கார்டுகளை என்ன செய்யப்போகிறது என்று பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, கேள்வி நேரத்தில் கூட இந்த ரேஷன் கடைகள் சம்பந்தமாக, எடைகள் சம்பந்தமாக, இந்த பொது விநியோக முறையில் எடை சம்பந்தமாகத்தான் அதிகமாகப் பேசினார்கள். எடை குறைவு என்பது சாதாரணமாக குறை கூறிப் பேசக்கூடிய பொருளாக மாறியிருக்கிறது. எடை குறைவை தவிர்க்க உறுதியான சணல் பைகளில் பொருள்களை அடைத்துத் தரவேண்டும். எடை குறைவாகத்தான் சில்லறைக் கடைகளுக்கு வருகிறது என்ற புகார் இருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தொடங்கி, சில்லரை விற்பனைக் கடைகள் வரை இது தொடர்கதையாக நடந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. ஆர். சுந்தரம்):** தலைவர் உங்களுக்கு மூன்று நிமிடம்தான் கொடுத்தார். நான் உங்களுக்கு 10 நிமிடம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். அந்த ரேஷன் கடைகளில் ஒன்பதுக்கும் மேற்பட்ட துறைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. நான் பச்சையாக குறிப்பிட வேண்டுமென்றால், ரொம்ப வேதனையுடன் குறிப்பிடவேண்டுமென்றால், கலெக்டரைத்தவிர— அவரும் பரிசோதனைக்குச் செல்கிறார்—அவருக்குக் கீழே உள்ள அனைவரும் ரேஷன் கடைகளில் பங்கு போடுகிற கொள்ளையர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ்காரரிலிருந்து கோயில் விசேஷம் நடத்துகிற பூசாரி வரை தாசில்தார், முதல் சகல பேர்களும்

அங்கேதான் போய் நிற்கிறார்கள். ஆகவே, அவர்கள் எங்கிருந்து அளிப்பார்கள். ஆகவே, பொது விநியோகத் துறை சீராக நடக்க வேண்டும் என்றால் இதுபோன்ற நடவடிக்கைகளில் மிகக் கறாராக முடிவு எடுத்து அமல்படுத்த வேண்டும். அதேபோல, கோயம்புத்தூர், வடகோவை சிந்தாமணி மார்க்கெட், திருப்பூர் வளர்மதி மார்க்கெட் இவை நஷ்டத்தில் இயங்குவதாக, மூடப்போவதாக சொல்லப்படுகிறது. ஆகவே, உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒண்டிப்புதூரில் இருக்கிற இரண்டு கோடி மூலதனம் உள்ள எண்ணெய் ஆலை இப்போது செயல்படாமல் இருக்கிறது, ஆகவே, அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன். மூன்று நிமிடம்தான் சொல்லியிருக்கிறார்கள்.

***திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப்பேச்சு. நீங்கள் புதிய சபாநாயகராக அமர்ந்திருக்கிறீர்கள். நீங்களும் 10 நிமிடம் நன்றாக உட்கார்ந்து இருங்கள். நான் பாராட்டுகிறேன். இது என்னுடைய கன்னிப்பேச்சு என்பதால்..

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை கூற வேண்டும். பிறகு, அமைச்சரவைக் கூட்டம் இருக்கிறது. கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

**திரு. பெ. பழனியப்பன்:** விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கழகப் பணி ஆற்றுவதற்காக, ஒன்றிய கழகச் செயலாளராகவும், மக்கள் பணி ஆற்றுவதற்காக சட்டமன்ற உறுப்பினராகவும், போட்டியிட வாய்ப்பளித்து, இந்த சபையிலே நின்று பேசக்கூடிய அளவுக்கு எனக்கொரு தகுதியை வழங்கி பேருதவி புரிந்திருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த அவையிலே, இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த இந்த மாமன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை, தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும், என்னுடைய வெற்றிக்காக, நேரில் வந்து வாக்குகளை சேகரிக்கவில்லை என்று சொன்னாலும் கூட, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு வாக்காளருக்கும் கடிதம் மூலமாக அவர்களுடைய உள்ளார்ந்த எண்ணங்களை எல்லாம் எழுதிக்கொடுத்து, அவர்களுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று சொல்லி எனக்காக கடிதங்கள் அனுப்பிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்துக் கொண்டு இந்த நல்ல நேரத்தில் பேசுகிற வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், எனக்கு வாக்களித்து என்னை வெற்றிப் பெறச் செய்த மொரப்பூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சினைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 1-40

இந்த, 2001-2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே பல்வேறுபட்ட நலத் திட்டங்களை எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக மக்களுக்காக அளித்திருக்கிறார்கள். ஏழை மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் உயருவதற்காக பல்வேறுபட்ட நலத் திட்டங்களைப் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

குறிப்பாக வேளாண்-வணிகத் துறை ஏற்படுத்துதல், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், மகளிருக்காக இரண்டு இலட்சம் ரூபாய் செலவிலே கிராமங்களிலே துப்புரவு வளாகம் அமைக்கும் திட்டம், கிராம நிர்வாக அலுவலர்களுக்காக 60 ஆயிரம் ரூபாய் செலவிலே அலுவலகம் அமைக்கும் திட்டம், இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை 82 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது, பள்ளி மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள் வழங்கியது, இப்படி பல்வேறுபட்ட நலத் திட்டங்களை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இப்போது தமிழகத்திலே 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்

[திரு. பெ. பழனியப்பன்] [2001 செப்டம்பர் 10

பள்ளிகளாக ஆக்கினார்கள். நான் இதை இங்கு ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், என்னுடைய மொரப்பூர் சட்டமன்றத் தொகுதியிலே மட்டும் என்னுடைய கோரிக்கையை ஏற்று, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 6 மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் நன்கு படிக்க வேண்டும் என்று சொல்லி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, 15 விழுக்காடு ஒதுக்கீடு என்று இருந்ததை 25 விழுக்காடாக உயர்த்தி, அந்த ஏழை பள்ளி மாணவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருக்கின்றார்கள். இந்த 10 சதவீதம் உயர்வு ஏற்படுத்தியதன் காரணமாக இப்போது பல்வேறுபட்ட ஏழை மக்கள், ஏழை மாணவ, மாணவிகள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், நம்முடைய பகுதிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர் பணிமாறுதல்களைக்கூட நல்லதொரு Counselling முறையை அமைத்து, நியாயமான முறையிலே, கையூட்டு எதுவும் இல்லாமல், நேர்மையான முறையிலே இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை இப்போது நாட்டுமக்கள், பொதுமக்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறுபட்ட நலத் திட்டங்களை, நல்ல பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், இப்போது செய்துகொண்டு வருகிறார்கள்.

இன்றைக்கு நம்முடைய கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

விவசாயப் பெருமக்களுக்கு 310 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகைகள் அளித்து, விவசாயிகளுக்காக பல்வேறுபட்ட நலத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தோடு மட்டுமல்லாமல், இப்போது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றியிருக்கிறார்கள்.



2001 செப்டம்பர் 10] [திரு. பெ. பழனியப்பன்]

ரேஷன் கடைகளிலே வழங்குகிற தரமற்ற அரிசியை எல்லாம் களைந்துவிட்டு, தரமான அரிசியை இப்போது ஏழை மக்களுக்காக நம்முடைய புரட்சித் தலைவி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கூட்டுறவே நாட்டுயர்வு என்ற வாய்மொழிக்கு ஏற்ப கூட்டுறவுத் துறை நன்றாக இருந்தால்தான், இந்த நாடும், நாட்டு மக்களும் முன்னேற முடியும். ஆனால், கடந்தகால ஆட்சியிலே அந்தக் கூட்டுறவுத் துறையிலே பல்வேறு முறைகேடான வழிகளிலே தேர்தல்களை நடத்தி அப்போது கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பல்வேறுபட்ட முறைகளிலே, தவறான முறைகளிலே தேர்தல்களை நடத்தி, தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய தலைவர்களும் மற்றும் அத்தனை பேர்களும் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்லாமல், கொப்பரைத் தேங்காயை எடுத்துக் கொண்டாலும், அங்கே விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் அதனுடைய பண உதவி சரியாகச் சென்றடைந்தது இல்லை. இப்படி பல்வேறு தவறான முறைகளிலே அப்போது அவர்கள் எல்லாம் அங்கு கொள்ளை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

தருமபுரி மாவட்ட கூட்டுறவு வங்கியிலே அதனுடைய இணைப் பதிவாளர் அவர்கள் அப்போது திராவிட முன்னேற்ற கழக அரசில் அமைச்சர்களாக இருந்தவர்களோடு கூட்டு சேர்ந்து சாதாரண பொறுப்புக்குக்கூட பணம் வசூல் செய்து தவறான முறையிலே அந்த நிகழ்ச்சிகளை நடத்திச் சென்றிருந்தார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதையெல்லாம் களைய நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முறையான முறையிலே நடவடிக்கை எடுத்து, அந்தக் கூட்டுறவுத் துறையை இப்போது பழுதுபார்த்து இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறை மேன்மேலும் வளர்வதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

சாதாரணமாக கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய அந்தப் பயிற்சிப் பள்ளியில் முறையான முறையிலே, தகுதியான முறையிலே இப்போது எந்தவிதமான இடையூறும் இல்லாமல், அரசியல்வாதிகளினுடைய இடையூறும் இல்லாமல், எந்தக் கையூட்டும் இல்லாமல் நேர்மையான

[திரு. பெ. பழனியப்பன்] [2001 செப்டம்பர் 10

முறையிலே அந்தப் பயிற்சிப் பள்ளியிலே படிக்கக்கூடிய அளவிற்கு மாணவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்து, விண்ணப்பித்த அத்தனை பேருக்கும் வாய்ப்பு கிடைக்கிற அளவிற்கு செய்திருக்கிறார்கள். இப்படி பல்வேறுபட்ட சாதனைகளையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்களுடைய பகுதியைச் சேர்ந்த பாப்பிரெட்டிப்பட்டியிலே நிலவள வங்கி ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை சென்ற முறையே கேட்டிருந்தேன். அதனை அமைத்து கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டியிலே நகரக் கூட்டுறவு வங்கி ஒன்று தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

பாப்பிரெட்டிப்பட்டியைத் தனி வட்டமாக அறிவித்தது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்தான். புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததோடு என்றில்லாமல் அன்றைக்கு அதனை நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு வட்டத்திற்கு தகுதியான, அங்கே வரவேண்டிய அத்துணை அடிப்படை வசதிகளையும் அலுவலகங்களையும் அங்கு கொண்டு வரவில்லை. நிலவள வங்கி வரவில்லை; வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் வரவில்லை; நகரக் கூட்டுறவுச் சங்கம் வரவில்லை. ஆகவே, அவற்றையெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மெனசியிலே ஒரு கூட்டுறவு வங்கியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மோளையானூர், இருளப்பட்டி, இருபரஹள்ளி போன்ற கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யும்படி இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மொரப்பூர் தொகுதியினுடைய வளர்ச்சியைக் கருதி இப்போது தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். இதனாலே,



2001 செப்டம்பர் 10] [திரு. பெ. பழனியப்பன்]

எங்களுடைய மாவட்டத்தினுடைய அத்தனை தொழிற் பயிற்சிக் கல்லூரி, இஞ்சினீயரிங் கல்லூரி, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகம் போன்ற நல்ல பல திட்டங்களெல்லாம், தேவைப்பட்ட நல்ல பல அலுவலகங்களெல்லாம் கிருஷ்ணகிரிப் பகுதியைச் சார்ந்திருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தைப் பிரித்திருப்பதன் காரணமாக, தருமபுரி பகுதி இப்போது பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே அந்த பின்தங்கிய மாவட்டத்திற்கு நீங்கள் மொரப்பூர் தொகுதியிலே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்திற்குக் கூடுதல் அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்திற்கு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மொரப்பூர் பகுதியிலே நீண்டகாலமாக மக்கள் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு போராடி வருகிறார்கள். ஆகவே, அந்த பால் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன், அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. பெ. பழனியப்பன்:** அதோடு மட்டுமல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. பெ. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, நான் நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். இன்னும் இரண்டு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 3 நிமிடம் கேட்டீர்கள். போதும். நன்றி சொல்லி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை, வேறு நேரம் இல்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** பேச வாய்ப்பளித்த நம்முடைய தலைவருக்கு நன்றியைச் சொல்லி, என்னுடைய தொகுதியில் சித்தேரி மலைப்பகுதி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே மின் கம்பங்களெல்லாம் பாழடைந்து போய் இருக்கின்றன. ஆகவே, கீழே விழுகிற நிலையிலே இருக்கின்ற அந்த சித்தேரி மலைப் பகுதியினைச் சேர்ந்த கிராமத்திலுள்ள அந்த மின் கம்பங்களையெல்லாம் பழுதுநீக்கம் செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்னாலே கொண்டுவரப்பட்டிருக்கிற கூட்டுறவு மற்றும் உணவு மானியத்தின் மீது பேரவையிலே இருக்கிற ஒன்பது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில்களை நான் சொல்வதற்கு முன்பாக இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே நான் 3 முறை சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியிருந்தாலும்கூட ஒரு மிகப் பெரிய விபத்திலே உட்பட்டு ஒருமுறைக்கு இரண்டு முறை விபத்திலே உட்பட்டு நான் துன்பத்திலே துவண்டபோது எனக்குத் தைரியம் கொடுத்து, மருத்துவ வசதி செய்து கொடுத்து என்னை ஒரு மனிதனாக்கி இப்போது கழகத்தினுடைய ஒரு அமைப்புச் செயலாளராக்கி, அதற்குப் பின்னாலே இன்றைக்கு என்னை இந்த மாமன்றத்திலே ஓர் அமைச்சராக அமர வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியக் கோரிக்கைகளை உங்கள் முன்னாலே கொண்டுவந்து வைப்பதற்காக என்னை உருவாக்கிய இந்தியத் திருநாட்டில் தமிழ்நாட்டை தனி முன்னேற்றம் அடையச் செய்ய அரும்பாடுபடும் அன்புத் தாய், தங்கத் தாய், அறிவுத் தாய், புனிதத் தாய், பாசத் தாய், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பாதங்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தை, என்னுடைய சார்பாகவும், என்னுடைய குடும்பத்தினுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாகவும் அந்தத் தாயினுடைய



பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய உரையினை இங்கே தொடங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-50

இப்போது அரசியல் கருத்தாக ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிட்டு அதற்குப் பின்னாலே என்னுடைய இந்த மானியக் கோரிக்கையினுடைய பதில் உரைக்கு வர விரும்புகின்றேன். இன்றைக்கு தன்னுடைய குடும்பம் வளர தமிழ்நாட்டில் பல இலட்சம் குடும்பங்களைச் சீரழிப்பவர்களும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தமிழ்நாடே செழிக்க தான் மட்டும் சிரமங்களை ஏற்றவர்தான் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தரணியிலே தன்னந்தனியாக உழைத்து 1 கோடி தொண்டர்களுக்கு வெளிச்சம் கொடுக்கின்ற, விலாசம் கொடுக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களால்தான் நான் இந்த மாமன்றத்திலே உங்கள் முன்னாலே பேசும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். எங்களை இயக்கும் உயிராகவும், எங்கள் இதய உணர்வாகவும் இருப்பவர்தான் இதய தெய்வம் அம்மா அவர்கள். தெய்வம் என்று கோயில்கள் கிடையாது. தீபம் என்று விளக்கு பெருமை தருவதில்லை. அன்னை இல்லாமல் பிள்ளைகள் இல்லை. அம்மா இல்லாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை என்பதனையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியும் இல்லை என்பதனையும் ஒவ்வொரு தொண்டனும், ஒவ்வொரு தமிழக மக்களும் உணர்ந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உண்மை அரசியல் வன்மம் கொண்ட கொடியவர்களுக்கு தெரிந்திருப்பதைப்போலவே, கொடி பிடிக்கும் தொண்டர்களாகிய எங்களுக்கும் புரிந்திருக்கிறது. இமயமலையைப் பந்தாடுகிற வலிமை இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மட்டுமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பெருங்கடல் தீர்ந்து விடும் என்று பெருச்சாளிகள் நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது. மக்கள் சக்தியை மர்ம சதியால் தோற்கடிக்க முடியாது. எப்போதும் அற்ப சந்தோஷத்தில் ஆயுள் நீடித்தது இல்லை. நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே தமிழகம் புதிய வரலாறு படைத்து வருகிறது. படைக்கப் போவதும் உண்மையிலும் உண்மை. நமது தாயின் தலைமையிலே மக்கள் தொண்டில் ஏனைய மாநிலங்களுக்கு தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக்கும் சீரிய முயற்சியை தீய சக்திகள் தடுத்துவிட முடியாது. மலைபோல் வரும் சோதனைகள் யாவும் பனிபோல் நீங்கும் எங்கள் பாசத் தாயின் புகழ் இந்த உலகிலே ஓங்கும், ஓங்கும் என்பதை

[திரு. பெ. பழனியப்பன்] [2001 செப்டம்பர் 10

முறையிலே அந்தப் பயிற்சிப் பள்ளியிலே படிக்கக்கூடிய அளவிற்கு மாணவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்து, விண்ணப்பித்த அத்தனை பேருக்கும் வாய்ப்பு கிடைக்கிற அளவிற்கு செய்திருக்கிறார்கள். இப்படி பல்வேறுபட்ட சாதனைகளையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்களுடைய பகுதியைச் சேர்ந்த பாப்பிரெட்டிப்பட்டியிலே நிலவள வங்கி ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை சென்ற முறையே கேட்டிருந்தேன். அதனை அமைத்து கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டியிலே நகரக் கூட்டுறவு வங்கி ஒன்று தொடங்க ஆவன செய்ய வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

பாப்பிரெட்டிப்பட்டியைத் தனி வட்டமாக அறிவித்தது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்தான். புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததோடு என்றில்லாமல் அன்றைக்கு அதனை நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு வட்டத்திற்கு தகுதியான, அங்கே வரவேண்டிய அத்துணை அடிப்படை வசதிகளையும் அலுவலகங்களையும் அங்கு கொண்டு வரவில்லை. நிலவள வங்கி வரவில்லை; வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் வரவில்லை; நகரக் கூட்டுறவுச் சங்கம் வரவில்லை. ஆகவே, அவற்றையெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மெனசியிலே ஒரு கூட்டுறவு வங்கியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மோளையானூர், இருளப்பட்டி, இருபரஹள்ளி போன்ற கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யும்படி இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மொரப்பூர் தொகுதியினுடைய வளர்ச்சியைக் கருதி இப்போது தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். இதனாலே,



2001 செப்டம்பர் 10] [திரு. பெ. பழனியப்பன்]

எங்களுடைய மாவட்டத்தினுடைய அத்தனை தொழிற் பயிற்சிக் கல்லூரி, இஞ்சினீயரிங் கல்லூரி, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகம் போன்ற நல்ல பல திட்டங்களெல்லாம், தேவைப்பட்ட நல்ல பல அலுவலகங்களெல்லாம் கிருஷ்ணகிரிப் பகுதியைச் சார்ந்திருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தைப் பிரித்திருப்பதன் காரணமாக, தருமபுரி பகுதி இப்போது பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே அந்த பின்தங்கிய மாவட்டத்திற்கு நீங்கள் மொரப்பூர் தொகுதியிலே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்திற்குக் கூடுதல் அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்திற்கு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மொரப்பூர் பகுதியிலே நீண்டகாலமாக மக்கள் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு போராடி வருகிறார்கள். ஆகவே, அந்த பால் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன், அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. பெ. பழனியப்பன்:** அதோடு மட்டுமல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. பெ. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, நான் நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். இன்னும் இரண்டு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 3 நிமிடம் கேட்டீர்கள். போதும். நன்றி சொல்லி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை, வேறு நேரம் இல்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** பேச வாய்ப்பளித்த நம்முடைய தலைவருக்கு நன்றியைச் சொல்லி, என்னுடைய தொகுதியில் சித்தேரி மலைப்பகுதி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே மின் கம்பங்களெல்லாம் பாழடைந்து போய் இருக்கின்றன. ஆகவே, கீழே விழுகிற நிலையிலே இருக்கின்ற அந்த சித்தேரி மலைப் பகுதியினைச் சேர்ந்த கிராமத்திலுள்ள அந்த மின் கம்பங்களையெல்லாம் பழுதுநீக்கம் செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு என்னாலே கொண்டுவரப்பட்டிருக்கிற கூட்டுறவு மற்றும் உணவு மானியத்தின் மீது பேரவையிலே இருக்கிற ஒன்பது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில்களை நான் சொல்வதற்கு முன்பாக இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே நான் 3 முறை சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியிருந்தாலும்கூட ஒரு மிகப் பெரிய விபத்திலே உட்பட்டு ஒருமுறைக்கு இரண்டு முறை விபத்திலே உட்பட்டு நான் துன்பத்திலே துவண்டபோது எனக்குத் தைரியம் கொடுத்து, மருத்துவ வசதி செய்து கொடுத்து என்னை ஒரு மனிதனாக்கி இப்போது கழகத்தினுடைய ஒரு அமைப்புச் செயலாளராக்கி, அதற்குப் பின்னாலே இன்றைக்கு என்னை இந்த மாமன்றத்திலே ஓர் அமைச்சராக அமர வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியக் கோரிக்கைகளை உங்கள் முன்னாலே கொண்டுவந்து வைப்பதற்காக என்னை உருவாக்கிய இந்தியத் திருநாட்டில் தமிழ்நாட்டை தனி முன்னேற்றம் அடையச் செய்ய அரும்பாடுபடும் அன்புத் தாய், தங்கத் தாய், அறிவுத் தாய், புனிதத் தாய், பாசத் தாய், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பாதங்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தை, என்னுடைய சார்பாகவும், என்னுடைய குடும்பத்தினுடைய சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாகவும் அந்தத் தாயினுடைய



பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய உரையினை இங்கே தொடங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-50

இப்போது அரசியல் கருத்தாக ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிட்டு அதற்குப் பின்னாலே என்னுடைய இந்த மானியக் கோரிக்கையினுடைய பதில் உரைக்கு வர விரும்புகின்றேன். இன்றைக்கு தன்னுடைய குடும்பம் வளர தமிழ்நாட்டில் பல இலட்சம் குடும்பங்களைச் சீரழிப்பவர்களும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தமிழ்நாடே செழிக்க தான் மட்டும் சிரமங்களை ஏற்றவர்தான் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தரணியிலே தன்னந்தனியாக உழைத்து 1 கோடி தொண்டர்களுக்கு வெளிச்சம் கொடுக்கின்ற, விலாசம் கொடுக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களால்தான் நான் இந்த மாமன்றத்திலே உங்கள் முன்னாலே பேசும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். எங்களை இயக்கும் உயிராகவும், எங்கள் இதய உணர்வாகவும் இருப்பவர்தான் இதய தெய்வம் அம்மா அவர்கள். தெய்வம் என்று கோயில்கள் கிடையாது. தீபம் என்று விளக்கு பெருமை தருவதில்லை. அன்னை இல்லாமல் பிள்ளைகள் இல்லை. அம்மா இல்லாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை என்பதனையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியும் இல்லை என்பதனையும் ஒவ்வொரு தொண்டனும், ஒவ்வொரு தமிழக மக்களும் உணர்ந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உண்மை அரசியல் வன்மம் கொண்ட கொடியவர்களுக்கு தெரிந்திருப்பதைப்போலவே, கொடி பிடிக்கும் தொண்டர்களாகிய எங்களுக்கும் புரிந்திருக்கிறது. இமயமலையைப் பந்தாடுகிற வலிமை இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மட்டுமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பெருங்கடல் தீர்ந்து விடும் என்று பெருச்சாளிகள் நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது. மக்கள் சக்தியை மர்ம சதியால் தோற்கடிக்க முடியாது. எப்போதும் அற்ப சந்தோஷத்தில் ஆயுள் நீடித்தது இல்லை. நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே தமிழகம் புதிய வரலாறு படைத்து வருகிறது. படைக்கப் போவதும் உண்மையிலும் உண்மை. நமது தாயின் தலைமையிலே மக்கள் தொண்டில் ஏனைய மாநிலங்களுக்கு தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக்கும் சீரிய முயற்சியை தீய சக்திகள் தடுத்துவிட முடியாது. மலைபோல் வரும் சோதனைகள் யாவும் பனிபோல் நீங்கும் எங்கள் பாசத் தாயின் புகழ் இந்த உலகிலே ஓங்கும், ஓங்கும் என்பதை

(மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு நான் இந்த மாமன்றத்தில் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல மாமன்ற உறுப்பினர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு மிகப் பெரிய மாயத் தோற்றத்தை இந்த நாட்டிலே உருவாக்கினார்கள். புரட்சித் தலைவி ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானவர்கள் போலவும், தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் யாரோ ஓர் ஆளிடத்திலே போய் சேர்ந்துவிட்டதைப் போலவும் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சம்பந்தி நாங்கள்தான், எங்களை விட்டால் தாழ்த்தப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கு ஆள் இல்லை என்று சொல்லி பொய்யான மாயத் தோற்றத்தை தமிழ்நாட்டிலே கடந்த தேர்தலிலே உருவாக்கப் பார்த்தார்கள். ஆனால் நடந்தது என்ன? தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை தாழ்த்தப்பட்ட மக்களும், தலித் பெருங்குடி மக்களும் எங்களுடைய தாயை, புரட்சித் தலைவி அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய தாயாக ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இந்த மாமன்றத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேருடைய ஆதரவும் எங்களுடைய தாய்க்குத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிறது என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குப் பணிவன்போடு ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற உறுப்பினர்களிலே அதிகப் பெரும்பான்மை உறுப்பினர்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தாழ்த்தப்பட்ட மக்களை நிற்க வைத்து வெற்றி பெற வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இன்றைக்கு அமைச்சர்களில், இரண்டு அமைச்சர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயிருந்தும், மலைவாழ் இனத்திலே இருந்து ஒரு சகோதரியும், துணை சபாநாயகராக ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தவரும் இருந்து கொண்டிருக்கிறார். இந்த அரசாங்கத்தின் சார்பாக தாட்கோ நிறுவனத்திற்குத் தலைவராக ஒரு தாழ்த்தப்பட்டவரைப் போட்டு 4 பேரை அழகு பார்க்கிற அந்தப் பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) தாயினுடைய அந்தக் கருணைக்கு ஈடு இணையேதும் இல்லை என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே தமிழகத்தினுடைய தாழ்த்தப்பட்ட மக்களுடைய தன்நிகரற்றத் தலைவியாக, தாழ்த்தப்பட்ட மக்களுடைய கலங்கரை விளக்கமாக நம்முடைய தாய் இருந்து கொண்டிருக்கிறார்கள்



ஆகவே, எத்தனை கோட்டான்கள் ஓலமிட்டாலும், ஊளையிட்டாலும் இறுதியிலே தமிழகத்து மக்களுடைய மக்கள் சக்தி, தமிழ்நாட்டினுடைய 6 கோடி மக்களும் புரட்சித் தலைவி பின்னாலே அணிவகுத்து நிற்கிறார்கள் என்கின்ற உண்மையை இந்தத் தேர்தல் நிரூபித்துக் காட்டியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை மீண்டும் ஒரு முறை சொல்லி, இன்றைக்கு என்னுடைய மானியக் கோரிக்கையின் மீது 9 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிலே பெரும்பான்மையான உறுப்பினர்கள், எனக்கு இந்த மானியக் கோரிக்கையிலே உதவி செய்கின்ற அளவுக்கு பல உண்மைகளை வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே நடந்த ஊழல்களை எல்லாம் புட்டு, புட்டு வைத்திருக்கிறார்கள். தெளிவாக இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே பல ஊழல்கள் நடைபெற்றன என்று இப்போது பேசும்போது சொன்னார்கள். நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-55

1976-லே Emergency Period அறிவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது இரண்டு கமிஷன்கள் போடப்பட்டன. ஒன்று சர்க்காரியா கமிஷன். அவர்கள் செய்த ஊழல்களைக் கண்டுபிடிப்பதற்காக நியமிக்கப்பட்டது ஒரு கமிஷன். இன்னொரு கமிஷன், பாரதி கமிஷன் என்று ஒன்று அமைக்கப்பட்டது. அந்த பாரதி கமிஷன் எதற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால், 5 ஆண்டு காலத்தில் 1972 முதல் 1976 வரை இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த கூட்டுறவுத் தலைவர்கள், கூட்டுறவு நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பு வகித்தவர்கள் செய்த ஊழல்களை, அவர்கள் செய்த முறைகேடுகளை, அவர்கள் செய்த தவறுகளை கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் பாரதி கமிஷன். அந்த பாரதி கமிஷன் இறுதியில் ஓர் அறிக்கை கொடுத்தது. அந்த அறிக்கை கொடுத்ததற்குப் பின்னாலே புரட்சித் தலைவர் 1977-லே ஆட்சிக்கு வருகிறார். ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே முதலமைச்சராக புரட்சித் தலைவர் அவர்கள் பாரதி கமிஷன் அளித்த பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார். நடவடிக்கை எடுத்து பல பேர்—பெயர் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மிகப் பெரிய பட்டியலே சொல்லலாம்—மீது வழக்குகள்

[திரு. ப. தனபால்] [2001 செப்டம்பர் 10

அந்த பாரதி கமிஷன் அறிக்கையின் பரிந்துரை பேரிலே பதிவு செய்யப்பட்டன. வழக்குகள் நடந்து கொண்டிருந்தன. வழக்குகள் நடந்துகொண்டிருந்த நேரத்திலே, அதற்குப் பின்னாலே புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்தார்கள். அதற்குப் பின்னாலே இடையிலே ஓர் ஆட்சி வந்தது. ஓர் இடைக்கால ஆட்சியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வந்தது. கிடைத்தது சந்தர்ப்பம் என்று சொல்லி, சர்க்காரியா கமிஷன் அளித்த ஊழல்களிலிருந்து இந்திரா காந்தி அம்மையாரை கெஞ்சி, கூத்தாடி அந்த வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்று ஒரு காலகட்டத்திலே செய்து கொண்டார்கள். ஆனால், இந்த பாரதி கமிஷன் அளித்த பரிந்துரையின் பேரில் போடப்பட்ட வழக்குகள் அப்படியே தொடர்ந்திருந்த காரணத்தினாலே அதைப் போக்குவதற்கு வழியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு கிடைத்த அந்த ஆட்சியைப் பயன்படுத்தி, அவர்கள் ஓர் ஆணை, ஒரெயொரு ஆணை, 30-1-1990-லே ஆட்சிக்கு வந்தவுடனே, அரசாணை எண் 65 என்று ஓர் ஆணையைப் போட்டு, போடப்பட்டிருந்த அத்தனை வழக்குகளையும்.....

**திரு. துரைமுருகன்:** Sir, Point of Order.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேசி முடித்ததும் உறுப்பினர் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அந்த ஆணையை வாசித்து முடிக்கட்டும். அவர் முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடித்ததும் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன், திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** அவர் இந்த பாயிண்டை முடித்ததும் வாய்ப்புத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்ததும் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் திரு. துரைமுருகன். அவர் சொல்லி முடித்ததும் இப்போதே அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** நான் பேசி முடித்து விடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடு) நடந்ததைத்தான் நான் சொல்கிறேன். நடக்காதவற்றை ஒன்றும் சொல்லவில்லையே? (குறுக்கீடு) இடையிலே தயவுசெய்து குறுக்கிட்டால், சொல்வதற்கு சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், ஆணையை வாசியுங்கள்.



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** நீங்கள் சொல்ல வேண்டுமென்றால் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் துரைமுருகனிடம் நேரடியாகப் பேச வேண்டாம். என்னிடம் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம்தான் பேசுகிறேன். ஒரேயொரு ஆணையைப்போட்டு, 30-1-1990-லே கிடைத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அரசாணை எண் 65 என்று சொல்லி, ஊழல்களை ஒழிக்க வந்த அந்த உத்தமர்கள்தான் ஊழல்களை நாங்கள் ஒழித்து இந்த நாட்டிற்கு அதை வெளிச்சம் போட்டுக் காட்டுவோம்; ஊழல்களை இந்த நாட்டிலிருந்து ஒழிக்க வந்த உத்தமர்கள் நாங்கள்தான்; எங்களை விட்டால் ஆட்களே இல்லை என்று பறைசாற்றிக் கொண்டிருந்தவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒரே ஆணையின் மூலமாக அந்த பாரதி கமிஷனிலே சொல்லப்பட்ட அத்தனை குற்றச்சாட்டுகளையும், அதைத் தொடர்ந்து நடந்த வழக்குகள் அத்தனையையும் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள் என்பதுதானே உண்மை. ஊழலை ஒழிக்க வந்த அவர்கள், அந்த அரசாணையைப் போடாமல், வழக்குகளைத் தொடர்ந்து நடத்தியிருப்பார்களானால்..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். திரு. துரைமுருகன், அந்த ஆணையைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் நீண்டநெடுங்காலம் இந்த மன்றத்தில் இருப்பவர். அவர் சுபாவம் அறிவேன். ஆனால் எதையும் கொஞ்சம் ஆழ்ந்து படிக்கக்கூடியவர். ஆனால் இன்றைக்கு ஏனோ கொஞ்சம் அவசரப்பட்டு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் விளக்கம் மட்டும் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** வேகமாகப் பேசுகிறார். எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த முன்னுரையெல்லாம் வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** ஆனால் ஒன்றை அவருக்குத் தெரிவிக்கிறேன். அதாவது இந்திரா காந்தியை நாங்கள் கெஞ்சி, கூத்தாடி சர்க்காரியா கமிஷனிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்று சொன்னார். சர்க்காரியா கமிஷனில் புகார் கொடுத்த மாண்புமிகு எம்.ஜி.ஆரே சொன்னார். எனக்கு ஒன்றும் தெரியாது, சேலம் கண்ணன் கொடுத்தார் என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு சர்க்காரியா கமிஷனுக்கு வராமலே போனார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த சர்க்காரியா கமிஷன் இல்லாமலே போனது.

இரண்டாவது emergency காலத்தில் ஏனென்றால் எந்த இடத்திலும் பேச்சுரிமை, எழுத்துரிமை எல்லாம் இல்லாமல், யாரோ ஒரு ஆளைப் பிடித்து, ஒரு கமிஷனிலே எழுதச் சொல்லி, அதாவது ஒரு போனிலே தஞ்சாவூர் நடராஜன் என்கிற எம்.எல்.ஏ., 30 ரூபாய் அதிகமாகப் போன் பேசிவிட்டார் என்று அவர் மேலே வழக்குப்போட்டு, ஜெயிலிலே போட்டார்கள். ஒரு போனுக்கு அப்படிச் செய்தார்கள். அந்தமாதிரி வேண்டுமென்றே போடப்பட்ட ஓர் அறிக்கை, emergency காலத்திலே போடப்பட்ட காரணத்தால் அது Political Vendatta அரசியல் பழிவாங்குவதற்காகப் போடப்பட்டது என்பதற்காக எடுத்து திருத்தியிருக்கிறோம். (குறுக்கீடு)

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி, திரு. துரைமுருகன் விளக்கம் சொல்லிவிட்டார். Emergency காலத்திலே போடப்பட்ட காரணத்தால் ஆணையிட்டு நாங்கள் அதை மாற்றிவிட்டோம் என்று சொல்லிவிட்டார்.

**திரு. கோ.சி. மணி:** நான் மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவராக அப்போது இருந்தேன். ஆகவே, பாரதி கமிஷனைப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். பாரதி கமிஷனுடைய அறிக்கையில் அவர்கள் இறுதி அறிக்கை தந்தது, அந்தந்த மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகளில் உண்மை இருந்தால் அதை நிரூபித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ற முடிவுதான் இருந்தது. அதன் அடிப்படையில் Tribunal-ல் அந்த வழக்குகள் எல்லாம் நடைபெற்றன. Tribunal-ல் பூராவும் எந்தவித குற்றமும் நடக்கவில்லை என்று ரத்து செய்து அந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. திரும்பப் பெறப்பட்டது மட்டுமல்ல, உயர் நீதிமன்றம் வரை சென்றது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தரப்பில் சொல்கிறவர், இவ்வளவு படிக்கிறார், என்னையும் சொல்லவிட வேண்டும் அல்லவா?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு விளக்கம் சொல்லி முடிக்க வேண்டும். சொற்பொழிவு ஆற்றக்கூடாது. உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது உண்மை. ரெக்கார்டில் இருக்கின்ற உண்மையைச் சொல்லுகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் போடப்பட்ட அரசாணையை வாசிக்கிறார். எந்தத் தேதியில் போடப்பட்டது என்பதைச் சொல்லுகிறார். இதில் நீங்கள் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என்பது வேறு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்லுகிறேன். திரு. மணி அவர்களே உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார வேண்டும். திரு. துரைமுருகன் அவர்கள் சொல்வதைப்போல emergency காலத்தில் போடப்பட்டது, எங்கள் மீது பழிவாங்குவதற்காகப் போட்டார்கள். ஆகவே நாங்கள் வந்து அதை இரத்து செய்தோம் என்று சொல்வதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அந்தக் கருத்தை நீங்கள் பதிவு செய்திருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்லுகிறார்.

**திரு. கோ.சி. மணி:** அதற்கு மேலும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய விளக்கத்தைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, ஊழலை ஒழிக்க வந்தோம் என்று சொன்னீர்கள் இல்லையா, உங்கள்மீது போடப்பட்ட வழக்குகளை அரசாணை எண் 65-ன் மூலம்—நீங்கள் ஓர் அரசாங்கம் வந்து—திரும்பப் பெற்றுக்கொண்டீர்கள் என்று சொன்னால் அந்த ஊழலை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள் என்றுதானே அர்த்தம்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, ஊழலை ஒழிக்க வந்தோம் என்று சொன்னவர்கள் ஆட்சியில் வாய்ப்புக் கிடைத்த உடனே தங்கள் மீது இருந்த ஊழல் வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள் என்பதுதான் உண்மை என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோசி. மணி, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) தனி சொற்பொழிவு ஆற்ற முடியாது. அமைச்சர் உரையைத் தொடருவதற்கு அனுமதியுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தமர்கள்தான் 1996-லே மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஏதாவது விளக்கம் இருந்தால் அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள், நான் அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அதே தைரியத்தில்தான் ஆட்சிக்கு வந்த உடனே, கூட்டுறவுத் தேர்தலில் எல்லோரையும் ஜனநாயக முறைப்படி நடத்துகிறோம் என்று சொல்லி, எங்கள் சட்டமன்ற உறுப்பினரை உள்ளேயே விடாமல் காவல் துறையினரை வைத்து வெளியே அனுப்பி அவருடைய பற்கள் எல்லாம் விழக்கூடிய அளவுக்கு அற்புதமான ஜனநாயக முறையில் தேர்தலை நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம் சோகமாக அமர்ந்து இருப்பதிலே இருந்து தெரிகிறது.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** தலைவர் அவர்களே, அப்படி அந்த ஆணையின் மூலமாக வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொண்ட காரணத்தினாலேதான் மீண்டும் கூட்டுறவுத் தேர்தலிலே இப்படிப்பட்ட முறைகேடுகளை நடத்தி, இந்தக் கூட்டுறவுத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியதற்குப் பின்னாலே, அவர்கள் செய்த அட்டூழியங்களையும், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட அத்தனை தவறுகளையும் அந்தத் தைரியத்தின் காரணமாக செய்ததன் விளைவாக, எந்த முறையும் இல்லாமல், எந்த வழிமுறைகளையும் பின்பற்றாமல் அந்த 5 ஆண்டு காலத்திலே அவர்கள் போட்டிருக்கின்ற முறையற்ற நியமனங்கள் 9998. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தலைவர்கள் எந்த முறையையும் பின்பற்றவில்லை. Employment Exchange நம்பர் கிடையாது. ஒரு பத்திரிகை அறிவிப்பு கிடையாது. எதுவும் கிடையாது. அவர்கள் நினைத்தால் ஒருவரை வேலைக்குப் போட்டுக் கொள்வது. இப்படி 9998 நியமனங்கள். இரண்டே, இரண்டுதான்



இல்லை, 10,000 நியமனங்கள் செய்திருக்கிறார்கள். அத்தகைய முறையற்ற நியமனங்களைப்பற்றி இந்த அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

அதேபோல, அவர்கள் சௌகரியத்திற்கு ஒப்பந்தங்கள் போட்டுக்கொண்டார்கள். 12 (1) settlement, 18(1) settlement இந்த 5 வருடங்களில் எவ்வளவு போட்டார்கள் தெரியுமா? 4089 settlement-களைப் போட்டிருக்கிறார்கள். யாருக்காகப் போட்டீர்கள்? எந்தப் பலனைப் பெறுவதற்காக, இத்தனை ஒப்பந்தங்களைப் போட்டீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வங்கி இலாபத்திலே நடக்கிறதா; இல்லை நட்டத்திலே இயங்குகிறதா என்று தெரியாமல்கூட நீங்கள் நியமனங்களைச் செய்து இருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணத்தை எப்படி சூறையாடியிருக்கிறீர்கள் என்பதற்கு, இந்த நியமனங்கள் ஓர் உதாரணமாக இருக்கிறது இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்களே, அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடு) இடையிடையே குறுக்கிடக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சு தடைப்பட்டுப் போய்விடும்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** இந்த அரசு அப்படிப்பட்ட நியமனங்களையெல்லாம் இப்போது பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-லேயிருந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். இடையிலே குறுக்கிடுவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன், அமருங்கள்.

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 10

(கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சைத் தொடருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நீங்கள் பேச்சைத் தொடருங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. துரைமுருகன் நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து நான் சொல்ல விரும்புவது.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) அநாவசியமாக எதற்குப் பிரச்சினை செய்கிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், நீங்கள் பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** நான் சொல்ல விரும்புகிற அடுத்தக் குற்றச்சாட்டு... (குறுக்கீடு) அடுத்தக் குற்றச்சாட்டைக் கொஞ்சம் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) தயவுசெய்து மாமன்ற உறுப்பினர்கள் உரையைக் கேட்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு, நீங்கள் கேள்வியைக் கேட்பதற்கு-திரு. துரைமுருகன் அவர்களோ, அண்ணன் மணி அவர்களோ, திரு. பிச்சாண்டி அல்லது திரு. பொன்முடியோ அல்லது யார் வேண்டுமானாலும் கேள்வியைக் கேட்பதற்கு நான் வாய்ப்பைத் தருகிறேன். இடையிலே மாண்புமிகு அமைச்சருடைய பேச்சிலே குறுக்கிடுவது தேவையற்றது. அவர் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் விளக்கம் கேளுங்கள். வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு தயவுசெய்து இடையூறு இல்லாமல் (குறுக்கீடு) ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று நான் பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, திரு. துரைமுருகன் விளக்கம் கேட்க விரும்புகிறார். திரு. துரைமுருகன் கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்திலே ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்)



2001 செப்டம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். காரணம், தாங்களும் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். Co-operative Society-ல் Central Bank-ல் நியமனம் போட்டுவிட்டார்கள் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் என்ன விளக்கம் கேட்பதாக இருந்தாலும், அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு நான் உங்களை அழைக்கிறேன். நீங்கள் விளக்கம் கேளுங்கள். கேள்வியைக் கேளுங்கள். இப்போது அவசரப்படாதீர்கள், உணர்ச்சிவசப்படாதீர்கள், துடிக்காதீர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புவது . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. அமர்ந்துகொண்டே எதுவும் பேசக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** தயவுசெய்து நான் பேசி முடிக்கும் வரை யாருடைய வேண்டுகோளுக்கும் செவி சாய்க்க விரும்பவில்லை. I am not yielding to anybody else. என்னுடைய பேச்சை முழுமையாகப் பதிவு செய்ய பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடர்கின்றேன்.

அடுத்து, இந்த ஊழல்களை ஒழிக்க வந்த அந்த உத்தமர்களுடைய ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்ற ஒரு சம்பவத்தை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். கொப்பரைத் தேங்காய் ஊழல். (மேசையைத் தட்டும் ஒலி) கொப்பரைத் தேங்காயில் ஊழல். அது என்ன என்று கேட்டீர்கள் என்றால், அந்தத் திட்டத்தின் மூலமாக மத்திய அரசாங்கம் ஆதார விலை கொடுத்தது. அந்த ஆதார விலையைப் பயன்படுத்தி, இந்தத் தமிழ்நாட்டிலே எவ்வளவு சூறையாடி இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைத் தருகிறேன். அதாவது, இதேமாதிரி இந்தத் திட்டம் 1995-96-ல் இருந்தது. அப்போது கொள்முதல் எவ்வளவு என்று கேட்டீர்கள் மொத்தம் தமிழ்நாட்டிலே நடந்த கொள்முதல் 251.292 இலட்சம் டன்கள்

தான் ஆகியிருக்கிறது. அதன்பிறகு, 1996-97-ல் திட்டம் இல்லை. 1997-98-ல் திட்டம் இல்லை. 1998-99-லே 1001 டன்தான் தமிழ்நாட்டிலே கொள்முதல் நடந்திருக்கிறது. ஆனால், அந்த ஆதார விலை 10 ரூபாய் கூட்டி, 22.00 ரூபாயிலிருந்து, 32 ரூபாய் 50 காசு என்று அறிவிப்பு வந்ததற்குப் பின்னாலே, தமிழ்நாட்டிலே செய்த அந்தக் கொப்பரைத் தேங்காயினுடைய கொள்முதல் அளவு எவ்வளவு என்று சொன்னால் 1,12,012 டன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-10

இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் NAFED நிறுவனத்தின் மூலமாக எவ்வளவு கொள்முதல் நடந்திருக்கிறது என்று சொன்னால், 2 இலட்சத்து 25 ஆயிரம் டன்தான் இந்தியா பூராவும் நடந்திருக்கிறது. அதிலே, 1 இலட்சத்து 12 ஆயிரம் டன், பாதிக்குப் பாதி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே நடந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு முந்தைய ஆண்டிலே அதற்கு வரலாறு இருந்திருக்கும் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம். திடீரென்று அந்த விலை உயர்ந்த உடனே, 1 இலட்சத்து 12 ஆயிரம் டன் கொள்முதல் நடந்திருக்கிறது என்று சொன்னால், என்ன அநியாயம்? (கூச்சல்-குழப்பம்) இது எப்படி நடந்தது; எப்படி இடையிலே நடந்தது என்கின்ற உண்மையை இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா? அதிலேதான் ஊழல் நடந்தது என்று பல அரசியல் கட்சிகளும் (மேசையைத் தட்டும் ஒலி) பல நிறுவனங்களும் இந்த நாட்டிலே கேள்வி கேட்டார்கள் என்பதிலே..... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** இந்த மாதிரிப் பேசினால் எப்படி? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ஆகவே, தவறுகள் நடந்தன என்பதை.... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கங்களைச் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு நடந்துள்ளது என்பதை நான் சொல்லவில்லை. தவறு நடந்தது என்று இப்போது நான் சொல்லவில்லை. ஏற்கெனவே வெளியிலே



நாங்கள் எல்லாம் பேசி, அதற்கான ஊர்வலம், போராட்டங்களெல்லாம் பண்ணிவிட்டோம். (கூச்சல்-குழப்பம்)

**திரு. கு. பிச்சாண்டி:** அவையிலே ஆதாரத்தோடு பேச வேண்டும். ஆதாரம் இருந்தால் சொல்லச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரத்தைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரைத் தேங்காயிலே நடந்த ஊழலைபற்றி 22-7-2000 அன்று ஈரோடு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக இருந்த..... (கூச்சல்-குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** கொள்முதல் பண்ணியதிலே என்ன ஊழல்?

(உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு இருந்தார்.)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தாலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள். அவர் ஆதாரத்தைச் சொல்கிறார். சொல்லி முடித்தவுடன் நீங்கள் விளக்கம் ஏதாவது இருந்தால் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) ஆதாரத்திலே தவறு இருந்தாலும் நீங்கள் விளக்கம் கேட்கலாம். அவர் சொல்கிற ஆதாரத்திலே குற்றம் இருந்தாலும் விளக்கம் கேட்கலாம். அவர் ஆதாரத்தைச் சொல்கிறார். (கூச்சல்-குழப்பம்) அவர் விளக்கங்களைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊழலைப்பற்றி முதன்முதலாக 22-7-2000 அன்று ஈரோடு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக இருந்த, அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தாலே நியமிக்கப்பட்ட அதிகாரி, கருத்தையா பாண்டியன், ஐ.ஏ.எஸ். என்ற ஓர் அதிகாரி, அரசாங்கத்தினுடைய செயலாளருக்கு 22-7-2000 அன்று ஒரு கடிதம் எழுதுகிறார். அதிலே அவர் எழுதுகிறார், இந்தக் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் முறையாக நடைபெறவில்லை. அரசினுடைய influence-னாலே நடைபெறுகிறது. அந்த அரசிலே பொறுப்பிலே இருப்பவர்கள் நிர்பந்தம் செய்து, அவர்கள் சொல்கிற ஆட்களிடம்தான் கொப்பரைத் தேங்காய் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். முறையாக நடைபெறவில்லை, எதுவும்

சரியாக இல்லை என்று அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை அனுப்புகிறார். அந்த அறிக்கையிலே அவர் சொல்கிறார்; "My confidential enquiry reveals that the Co-operative Marketing Society has purchased on priority many lots that were specifically authorised by Thiru Dhanasekaran, Chairman of Dharapuram Co-operative Marketing Society, Thiru M.P. Saminathan, M.L.A. of Vellakoil (மேசையைத் தட்டும் ஒலி) and Thiru Rajendran, Husband of Thirumathi Saraswathy, M.L.A., of Dharapuram. (மேசையைத் தட்டும் ஒலி) This has been endorsed by the Managing Director, Dharapuram Co-operative Marketing Society during the enquiry" என்று அவர் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலே அவர் சொல்கிறார்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்; திரு. சாமிநாதன் அவர்கள் இப்போது சட்டமன்றத்திலே உறுப்பினராக இருப்பவர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அவர் விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் குற்றச்சாட்டு சொல்வதனால், திரு. சாமிநாதன் அவர்கள் ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், திரு. சாமிநாதனுக்கு உள்ள இந்தப் பெருந்தன்மை உங்களுக்கு வரமாட்டேன் என்கிறதே? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அந்தக் கடிதத்திலே மீண்டும் அவர் சொல்கிறார். அந்த கருத்தையா பாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர்; Therefore, the transactions made by the Co-operative Marketing Society are not bonafide and genuine. There is a prima facie case of foul-play in the process of procurement by the Dharapuram Co-operative Marketing Society and TANFED under the political influence என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கடிதத்தினை 22-7-2000 அன்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்புகிறார். நேர்மையான அரசாங்கமாக இருந்தால், ஊழலை ஒழிக்க வந்த ஓர் அரசாங்கமாக இருந்தால், Transperant Government-ஆக இருந்தால், என்ன செய்திருக்க வேண்டும்? இந்தக் கடிதத்தின் மீது உரிய நடவடிக்கையை உடனே தொடங்கி, ஊழல் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமா; வேண்டாமா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



பிற்பகல் 2-15

ஆனால், அதைக் கிடப்பிலே போட்டார்கள். அரசியல் கட்சிகள் போராடினோம். இதற்காக எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடுத்தார், கோபி நாடாளுமன்ற உறுப்பினர் தொடுத்த வழக்கிலே அந்த நீதிமன்றம் சொல்லியது, உடனடியாக இதுகுறித்து விசாரணையைத் தொடங்கி எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் சொன்னது. ஆனால், உயர் நீதிமன்றத்தினுடைய அந்த வேண்டுகோளைக்கூட ஏற்காமல் கிடப்பிலே போட்டு வைத்து, ஆட்சி முடிகின்ற வரை இதன்மேல் எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் போனவர்கள் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்களா? கேட்கிறார்கள் நாட்டு மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இதைப்பற்றிய ஓர் உண்மை நாட்டிற்குத் தெரிய வேண்டும். ஊருக்குத் தெரிய வேண்டும். உலகிற்குத் தெரிய வேண்டும். தவறுகளை யார் செய்திருக்கிறார்கள்? அதை வெளிக்கொண்டுவர வேண்டுமென்பதற்காக, இன்றைக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் C.B., C.I.D. Enquiry-க்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்திலே அவர் இறுதியாகக் கேட்டார், "In public interest, I request, that agency like C.B., C.I.D. may be entrusted with the investigation of the entire gamut of transaction to unearth all the persons involved as middlemen in the case" என்று அந்த கருத்தையா பாண்டியன் கேட்டார். எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே அமர்ந்ததற்குப் பின்னாலே, கொப்பரைத் தேங்காயிலே நடந்திருக்கிற இந்த ஊழல், ஊழல் என்று சொன்னால் ஒரு டன்னுக்கு 10 ரூபாய் என்று சொன்னால், 1 இலட்சத்து 12 ஆயிரம் டன்னுக்கு 112 கோடி ரூபாய், இடையிலே யாருக்குப் போனது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, இடையிலே இருந்தவர்கள் 112 கோடி ரூபாயை யார் சுருட்டிக் கொண்டு போனார்கள், யார் யார் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நாட்டிற்கு கொண்டு வருவதற்காகத்தான் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் C.B.C.I.D. Enquiry-க்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த Enquiry இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனை நான் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு, கொப்பரைத் தேங்காயில் ஒன்றுமே செய்யவில்லையே என்று கேட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய பதிலாக இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, கொஞ்சம் இருங்கள். திரு. சாமிநாதன் நீங்கள் சொல்லுங்கள்.

***திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் ஈரோடு மாவட்டத்திலே நடைபெற்ற கொப்பரைத் தேங்காய் கொள்முதல் குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குக் கடிதம் எழுதியதாகவும், அதிலே என்னைப் பற்றி குறிப்பிட்டுள்ளதாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தத் தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவல். அங்கே கொள்முதல் செய்த கொப்பரைத் தேங்காய் விஷயத்தில் நான் நான் அதில் எந்தவிதமான தலையீட்டையும் அங்கே செய்யவில்லை. அதேபோல அங்கே விசாரித்தளவிலே, விவசாயிகளிடத்திலே நேரிடையாக, அதுவும் கிராம நிருவாக அலுவலர்களிடத்திலே Certificate வாங்கிச் செய்ததாகத்தான் அங்கே எனக்கு தெரிந்த தகவல். அங்கேயிருந்த தனி அலுவலர் என்னுடைய தொகுதியிலே C.S.R.-ஆக பணியாற்றியவர். Public distribution-ல் சரியாக அவர் நடவடிக்கை எடுக்காததால், அவரை நான் ஒருசில நேரங்களில் கடிந்திருக்கின்றேன். அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அவர் தவறானத் தகவலை கொடுத்திருக்கலாம். அந்த அடிப்படையிலே எழுதிய கடிதம். ஆனால், அங்கேயிருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் பெரும்பாலும் V.A.O.-வின் Certificate-ஐகூட அவர்களே தயாரித்து, அந்தக் கொப்பரைத் தேங்காய் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், இதில் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டை.....

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, கொஞ்சம் உட்காருங்கள். விளக்கம் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதிய கடிதத்தை வாசித்துக் காட்டியிருக்கிறார்கள். என்னிடத்திலே வந்து அனுமதி கேட்டார்கள். நான் அப்போது கேட்டேன், இப்போது சட்டமன்ற



ஓர் உறுப்பினரைப் பற்றி குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன என்று நான் அமைச்சரவர்களிடத்திலேகூட தெரிவித்தேன். அதற்கு அந்தக் கடிதத்தைத்தான் நான் வாசிக்கிறேன், அதற்கு நான் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். நான் அப்பொழுதே அவரிடத்திலே சொன்னேன், இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் விளக்கம் சொல்ல விரும்பினால் தாங்கள் அனுமதிக்க வேண்டும். அவர் விளக்கத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்பதை நான் தெரிவித்திருக்கிறேன். எனவே, உங்களுடைய விளக்கத்தை தெரிவித்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விசாரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகுவே அவர் விசாரிக்கட்டும். கீரைக் கடைக்கு எதிர் கடை வைப்பதைப்போல அதற்காக மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள்மீது நீங்கள் குற்றச்சாட்டு சொல்ல வேண்டிய அவ்சியமில்லை. உங்கள்மீது ஒரு குற்றச்சாட்டு, நீங்கள் விளக்கம் சொல்லி இருக்கிறீர்கள். அந்த விளக்கம் பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலேயில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அங்கே மட்டுமல்ல ஈரோட்டிலே இருக்கின்ற கூட்டுறவு Marketting Committee-யிலேயும், தாராபுரத்திலேயும் இருந்தபோது இப்படிப்பட்ட தவறுகள் நடந்தன என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும் என்பதை நான் இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கிற விளக்கத்தையும் சேர்த்து-C.B.,C.I.D. Enquiry-ல் அது ஏற்கெனவே இருக்கிற காரணத்தினாலே அவர்கள் அதை விசாரணையின்போது விசாரித்து, நாட்டு மக்களுக்கு உண்மையைத் தெரிவிப்பார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கடிதத்திற்கு கூடந்த ஒன்றரை, இரண்டு ஆண்டு காலமாக அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, நாங்கள் ஆட்சிக்கு வந்து, இப்போது அம்மா அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். உண்மைகள் எல்லாம் வெளியே வரும் என்பதை

மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

அடுத்து நான் சொல்ல விரும்புகிற விஷயம், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே சமையல் எரிவாயுவை நாட்டு மக்களுக்கு வாரி வழங்கி விட்டோம் என்று நீங்கள் சொன்னீர்கள். நாட்டு மக்களுக்கெல்லாம் சமையல் எரிவாயுவை வாங்குவதற்குக் கடன் கொடுத்து இருக்கிறோம் என்றும் சொன்னீர்கள். ஆனால், அதிலே என்ன நடந்தது? சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு ஓர் அரசாணை வெளியிடப்படுகிறது. எப்படி வெளியிடப்படுகிறது? 17-1-2001 தேதியிட்ட ஒரு கடிதத்திலே இரு இணைப்பைப் பெறுவதற்கு ரூ.3,500 என்றும் ஓர் இணைப்பைப் பெறுவதற்கு ரூ.2,600 என்றும் பதிவாளர் அலுவலகத்தாலே porposal அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே, அவர் சில விதிமுறைகளைக் கோடிட்டுக் காட்டுகிறார். ஒருவருக்குக் கடன் வழங்க வேண்டுமென்றால், ஒருவர் ஜாமீன் கொடுக்க வேண்டும்; இன்னின்ன காரணங்களுக்கு என்று கொடுக்க வேண்டும்; இதையெல்லாம் ஏற்றுக்கொண்டு இந்தத் தொகைக்குக் கடன் வழங்கலாம் என்று சொல்லி, பதிவாளர் ஒரு Proposal அரசாங்கத்திற்கு அனுப்புகிறார். செயலாளர் அதை ஏற்று என்ன உத்தரவு இறுதியிலே வெளிவருகிறது என்று சொன்னால், இந்த சமையல் எரிவாயுவுக்குக் கடன் வழங்குவதற்கு எந்த விதிமுறைகளையும் நீங்கள் பின்பற்ற வேண்டியதில்லை என்று. நியாயமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஓர் உத்தரவுப் போட வேண்டுமென்று சொன்னால், அது கீழே இருக்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிவரை அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதுதான் திட்டம். ஆனால், இந்த சமையல் எரிவாயு விஷயத்திலே என்ன சொல்கிறார்கள்? மத்திய வங்கியோடு நிறுத்திக்கொள்ளுங்கள், போதும். கீழே அனுப்பாதீர்கள்; மத்திய வங்கியோடு நிறுத்திக்கொள்ளுங்கள்; மத்திய வங்கியை வைத்துக் கடன் கொடுங்கள் என்று சொல்லி, எந்த விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டாம், மனு வந்தால் உடனடியாக நீங்கள் கடனை வழங்க வேண்டுமென்று சொல்லி உத்தரவு போடுகிறார்கள். அந்த உத்தரவு போட்டதினுடைய விளைவாக இந்தத் திட்டத்தின்கீழ், 4,29,579 பேர்களுக்கு ரூ. 114.99 கோடி கடனை 28-2-2001-லே இருந்து 31-5-2001 வரை 3 மாதத்திற்குள்ளாக அவர்கள் gas இணைப்புக்காகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கடனினுடைய மதிப்பு எவ்வளவு என்று



சொன்னால், 114 கோடியே 99 இலட்சம் ரூபாய். எவ்வளவு காலத்திற்குள்ளாகக் கொடுத்திருக்கிறார்கள்? 28-2-2001-லே தொடங்கி, 31-5-2001 வரை 3 மாதத்திற்குள்ளாக இந்த நாட்டு மக்களுக்கு அவர்கள் கொடுத்திருக்கிற கடனினுடைய அளவு எவ்வளவு தெரியுமா இந்தத் திட்டத்திலே? 114 கோடியே 99 இலட்சம் ரூபாய். இந்தக் காலம் எந்தக் காலம்? (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் எதற்காகக் கொண்டுவரப்பட்டது? (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுக்கு நன்மை செய்வோம்; நாங்கள் தவறுதலாக திட்டத்தினை யாருக்கும் பயன்படுத்தமாட்டோம் என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்காக கொண்டுவரப்பட்ட திட்டம் அல்லவா அது? ஆனால், இவ்வளவும் நேர்ந்த பின்னாலும் நாட்டு மக்கள் எங்களுடைய தலைவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்திலே என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், அடுப்பு வாங்குவதற்கு ஆயிரம் ரூபாய் என்று இந்தத் திட்டத்திலே ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டத்தைக் கீழே கொண்டுவராமல், மத்திய வங்கியோடு எதற்காக நிறுத்தினார்கள் என்று சொன்னால், தங்களுக்கு வேண்டிய Gas agent-களை நியமித்து, அவர்கள் மூலமாக அந்த அடுப்புக்கு விலையைப் பேசி, அவர்கள் மூலமாக அதை purchase செய்ய வேண்டுமென்று வாய்மொழி உத்தரவினைக் கொடுத்ததன் விளைவாக அத்தனைக் கூட்டுறவு வங்கிகளும் அதனைச் செயல்படுத்தின. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யார் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்களோ அந்தக் கையெழுத்து போனால்தான் அங்கே கேஸ் இணைப்புக் கிடைக்கும். அந்த அளவுக்கு ஒருமுகமாக திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்கள் செய்துவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேதான் மோதல் வருகிறது. அதிலே என்ன நடந்தது என்று சொன்னால், மதுரையிலே இருந்த வங்கியினுடைய M.D. இதைக் கேட்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். நீங்கள் சொல்கிற மாதிரி அந்தத் திட்டத்தை நான் கேட்கமாட்டேன்; நியாயமாகத்தான் செய்வேன் என்று சொல்லிவிட்டார்? ஓர் அடுப்பின் நியாயமான விலை 600 ரூபாய்தான். ஆனால், இவர்கள் அதற்காக ஒதுக்கியிருக்கிற பணம் ரூபாய் ஆயிரம். ஆனால், அவர் விலையைப் பேசி அந்த 600 ரூபாய்தான் கடன் கொடுப்பேன்; அடுப்புக்கு நியாயமான கடன் 600 ரூபாய்தான் கொடுப்பேன்; மேலும் 400 ரூபாய் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி மறுத்து, அந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்தினார். ஆனால், மற்ற இடங்களிலே எல்லாம் என்ன நடந்தது?

அடுப்பு வாங்குவதற்கு ஆயிரம் ரூபாய். இடையிலே அந்த 400 ரூபாய் யாருக்குப் போனது? (மேசையைத் தட்டும் ஒலி) கடன் மனுவிலே கையெழுத்துப் போட்டவர்களுக்குப் போனதா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஏழைகளுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டம் அல்லவா? ஆகவே, நாட்டு மக்களும் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலே அதைப்பற்றி ஒரு விரிவான விசாரணை தேவை என்று சொல்லி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு இந்தச் சமையல் எரிவாயுவிலே நடந்திருக்கிற ஊழலை வெளிக்கொண்டு வருவதற்காக ஒரு C.B.,C.I.D. Enquiry போட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே அத்தனை உண்மைகளும் வெளிவரும் என்பதனை இந்த நேரத்திலே நான் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-25

அடுத்து ஊழலே செய்யாத உத்தமர்களுடைய ஆட்சியிலே நடந்த இன்னொரு முறைகேட்டையும் நான் உங்களுடைய கவனத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். என்ன நடந்தது என்றால் புரட்சித் தலைவர் ஓர் அற்புதமான திட்டத்தை உருவாக்கிவிட்டுப் போனார். மதிய சத்துணவுத் திட்டத்தை உருவாக்கிவிட்டுப் போனார். அந்தத் திட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து ரொம்ப நன்றாக நடந்துகொண்டிருந்தது. அதிலே குழந்தைகளுக்கு சத்துணவு ஊட்ட வேண்டும் என்பதற்காக மசூர் டாலைச் சேர்த்து சாப்பாடு போட்டால்தான் அந்தக் குழந்தைகளுக்கு நல்ல ஊட்டம் வரும் என்று சொல்லி சத்துணவுத் திட்டத்திலே மசூர் டால் compulsary-யாக இருக்க வேண்டுமென்று அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்த மசூர் டால் எங்கே வாங்கப்படுகிறது? மசூர் டால் என்ற ஒரு டால்-பருப்பு வகை — நம்முடைய தமிழ்நாட்டிலேயே விளையாது. வட மாநிலங்களிலேதான் விளையும். வட மாநிலங்களிலே விளைகின்ற அந்தப் பருப்பினை தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்தான் ஆரம்பக் காலத்திலேயிருந்து டெண்டர் போட்டு டெண்டரிலே யார் குறைந்த விலைக்கு வருகிறார்களோ அவர்களிடத்திலே ஒப்பந்தம் செய்து கொண்டு அந்த மசூர் டாலை வாங்கி, தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை சத்துணவுக் கூடங்களுக்கும் அனுப்பி வைக்கிற பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால் என்ன நடந்தது இடையிலே? 1999 ஜனவரியிலே 22,000 டன் மசூர் டால் வாங்க வேண்டிய ஒரு டெண்டர்



வருகிறது. அந்த டெண்டரும் வாங்கப்படுகிறது. வாங்கப்பட்ட உடனேயே அந்த ஆட்சியாளர் அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களுக்கு வேண்டியவர் அந்த lowest quotation-ல் I-1-ல் வரவில்லை; I-2-லும் வரவில்லை; I-3-லும் வரவில்லை. என்ன பண்ணினார்கள்? அந்த பைலை கடைசி நாள் வரையிலும் tender last date என்றைக்கு இருக்கிறதோ அதுவரையிலும் வைத்திருந்துவிட்டு அந்த கடைசி நாள் கையெழுத்து போட்டு அனுப்புகிறார்கள். நாளைக்கு முடிகிறது என்றால் இன்றைக்கு கையெழுத்து போட்டு அனுப்பினால் எப்போது அவர்கள் கையிலே உத்தரவு போவது? உத்தரவு போகாத காரணத்தினாலே அது நிறைவேற்றப்பட முடியவில்லை. அதை ஒத்துக்கொள்ளவும் இல்லை. ஆக அந்த tender cancel ஆயிற்று.

அப்புறம் இரண்டாவது அதே வருடத்திலே 1999 ஏப்ரல் மாதத்திலே அதே 22,000 டன்னுக்கு மீண்டும் டெண்டர். மீண்டும் அதே டெண்டருக்கு அவர்கள் நினைத்த ஆட்கள் வரவில்லை. வரவில்லை என்பதால் ஓர் அற்புதமான திட்டத்தைக் கண்டுபிடித்தார்கள். காலம் காலமாக இந்த மசூர் டாலை வெளி மாநிலத்திலேயிருந்து வாங்கிக்கொண்டிருந்த அந்தத் திட்டத்தை என்ன செய்தார்கள் T.N.C.S.C.-யிடம் இருந்து எடுத்துக்கொண்டு போய் Social Welfare Department-லே வைத்து ஒரு G.O. போட்டார்கள். கூட்டுறவுச் சங்கங்களே ஆங்காங்கே மசூர் டாலை வாங்கி சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கவேண்டும் என்று ஓர் உத்தரவைப் போட்டார்கள். தமிழ்நாட்டிலே எங்கே மசூர் டால் விளைகிறது? எந்தக் கூட்டுறவுச் சங்கம் எங்கே போய் மசூர் டாலை வாங்க முடியும். இப்படிப்பட்ட உத்தரவுகளையும் போட்டார்கள். அதிலே இடையிலே நடந்தது என்ன என்று சொன்னால் முதலிலே போடப்பட்ட டெண்டரில் ஒரு மெட்ரிக் டன் 17,638 ரூபாய்க்கு quote பண்ணியிருந்தார், lowest quotation I-1 அவருக்குக் கொடுத்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். அவருக்குக் கொடுக்கவில்லை. அடுத்து ஏப்ரலில் இரண்டாவது டெண்டர் வந்தது பாருங்கள், ஒரு மெட்ரிக் டன் 20,357 ரூபாய், அவருக்குக் கொடுக்க வேண்டும். அவருக்கும் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக என்ன பண்ணுகிறார்கள்? கூட்டுறவுச் சங்கமேபோய் வாங்கிக்கொள் என்று சொல்லி உத்தரவு போடுகிறார்கள். ஒரு கிலோ 17 ரூபாய்க்கு வாங்குவதற்குப் பதிலாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்கள் ஒரு கிலோ மசூர் டால் வாங்கிய விலை 25 ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) யாருடைய பணம் சூறையாடப்பட்டிருக்கிறது? இந்த நாட்டு ஏழை எளிய மக்களுடைய பணம் சூறையாடப்படவில்லையா? இதைக்கூட நான் சொல்லவில்லை. இதிலே

ஊழல் நடந்து இருக்கிறது; இவ்வளவு பணம் misuse ஆகியிருக்கிறது; இந்த அரசாங்கம் இதை carelessஆக பண்ணிவிட்டிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. யார் சொல்கிறார்? Auditor General (மேசையைத் தட்டும் ஒலி) ஆடிட்டிலிருந்து அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை அனுப்புகிறார் (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே அவர் சொல்கிறார். அரசாங்கச் செயலாளருக்கு அவர் எழுதியிருக்கிற அந்தக் கடிதத்திலே இதையெல்லாம் சொல்லிவிட்டு இப்படியெல்லாம் தப்பு பண்ணிவிட்டீர்கள்; இப்படி தப்பு பண்ணலாமா; இதையெல்லாம் நீங்கள் avoid பண்ணியிருக்கணுமே என்று சொல்லி ஓர் அரசாங்கத்தைக் கண்டித்து Auditor General ஒரு Report அனுப்புகிறார். அதிலே அவர் சொல்கிறார் ``The prices quoted were lower than those of the previous year and that of the favourable rates that have been received." குறைவாக quote செய்த அந்த விலைக்கு, இந்த அரசாங்கம் வாங்கவில்லை என்று சொல்லிவிட்டு, கடைசியாக அந்த Auditor General என்ன சொல்லுகிறார் என்றால், அதைப் படிக்க வேண்டுமென்று சொன்னால், அரை மணி நேரமாகும், time இல்லை. கடைசியாக இருப்பதை மட்டும் படித்து விடுகிறேன்.

பிற்பகல் 2-30

Both the decisions of the Government, entrusted the procurement of the Dhal for the Noon Meal Centres/Noon Meal programme to the Co-operative Institutions and reimburse the same to the Tamil Nadu Civil Supplies Corporation. இதற்கு மத்தியிலே அந்தத் திட்டத்தை நடத்த முடியவில்லை என்று சொல்லி திரும்பவும் அதை Tamil Nadu Civil Supplies Corporation-க்குக் கொடுத்து விடுகிறார்கள். அந்த இடைப்பட்ட காலத்திலேதான் ஊழல் நடந்திருக்கிறது என்பதை நான் சொல்லவில்லை, அவர் சொல்கிறார்.

...same to the T.N.C.S.C. had been taken without taking into consideration all the factors regarding the market price, pricing adopted by the T.N.C.S.C. etc., leading to the non-availing of the benefits to the best advantage of the Government. The above hasty decision had resulted in an avoidable expenditure of Rs. 5.24 crores. எவ்வளவு பணம் தவிர்த்து இருக்கலாம் முதலில் வந்த டெண்டரை quote பண்ணி இருந்தால்; (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 5.24 கோடி, 5 கோடியே 24 லட்சம் ரூபாயை இந்த அரசாங்கம் விரயம் செய்து இருக்கிறது என்று



Auditor General கொடுத்து இருக்கிறாரே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குத் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களும், முந்தைய ஆட்சியிலே உத்தமர்களாக இருந்தவர்களும் சொல்லுகிற பதில் என்ன என்று நாட்டு மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதைப்பற்றியெல்லாம் ஒரு விரிவான விசாரணை இருக்கிறது. ஆனால் முதல் டெண்டர் என்று சொன்னேன் பாருங்கள், 17 ரூபாய், அந்த 17 ரூபாய்க்கு வாங்கி இருந்தால், 25 ரூபாயிலிருந்து 17 ரூபாயைக் கழித்தால் எவ்வளவு? 8 ரூபாய். ஏறக்குறைய 9 கோடி ரூபாய் இடையிலே சூறையாடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த டெண்டரை யார் யார் எல்லாம் எடுத்தார்கள்? அந்த டெண்டரிலே இந்த 9 கோடி ரூபாயை யார் யார் பங்கு போட்டுக் கொண்டார்கள் என்ற விவரத்தையெல்லாம் கண்டு அறிவதற்கு இந்த அரசாங்கம் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு உரிய நடவடிக்கை விரைவிலே வரும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு சரியான உத்தரவினை விரைவிலே தருவார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, விவசாயிகளுக்காக ஏதோ அவர்கள்தான் கஷ்டப்படுவதைப் போலவும், நாங்கள் எல்லாம் என்னவோ விவசாயிகளைப் புறக்கணிப்பது போலவும் நினைக்கிறார்கள். கொள்முதலுக்கு இடைநிகழ்வாகத் தருகிற அந்தப் பணத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னார்கள். இப்போது 40 ரூபாய் இடைநிகழ்வாகக் கொடுத்து விடுகிறோம் என்று சொன்னீர்கள். ஆனால் இந்த இடைநிகழ்வினை தொடங்கி வைத்தவரே எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான் என்பதனை உங்களுக்கு நான் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் முதன் முதலில் விவசாயிகளுடைய கஷ்டத்தைப் பார்த்து அவர்களுக்கு இடைநிகழ்வாக 15 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற விலைக்கு மேலே இடைநிகழ்வாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி உத்தரவிட்டவர் எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவர். அவர்கள் போட்ட உத்தரவைத் தொடர்ந்து தான் நீங்கள் இப்போது 40 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறீர்கள். எனவே, அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த பெருமை எங்களுடைய தலைவர் புரட்சித் தலைவருக்குத்தான் என்பதனை உங்களுக்கு அன்போடு (மேசையைத் தட்டும் ஒலி).

தெரிவித்துக்கொள்கிறேன். 1984-லே அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது என்பதனையும் உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 311 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டி, நிவாரணம் புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். இதில் நீங்கள் என்ன பண்ணினீர்கள்? கம்மியாககொடுத்து விட்டீர்கள் என்கிறீர்கள். சொல்வது இருக்கட்டும் அப்பா; நீங்கள் 5 வருடம் ஆட்சி செய்தீர்களே, கொடுத்தீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முதலமைச்சர், கையெழுத்து போடாததையே, நபார்டு-க்கு கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டார்கள்; கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டார்கள் என்று ஒரு தவறான தகவலை திரும்பத் திரும்ப இந்த அவைக்குக் கொடுத்திருக்கிற முதலமைச்சரை என்ன என்று சொல்லுவது? எங்கள் தலைவி எந்தக் கையெழுத்தும் போடாமல், 1992-லே இந்தத் திட்டத்தை கொண்டுவந்தார்கள். வட்டியையும் அபராத வட்டியையும் இன்றைக்குத் தள்ளுபடி செய்து இந்த நாட்டு மக்களுக்கு நன்மை அளித்து இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2-35

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரைச் சொல்லவில்லை.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ அதைக் கடைசியில் கேட்க அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** I am not yielding. நான் சொல்ல வேண்டிய விஷயங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அபராத வட்டியை, வட்டியைத் தள்ளுபடி செய்ததன் மூலமாக நேற்றுவரை 2,47,098 விவசாயிகள் பலன் பெற்று இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் 75 கோடி ரூபாயை இதுவரை அரசாங்கத்தினுடைய மானியத் தொகையாக பெற்று பலன் அடைந்து இருக்கிறார்கள். மீதி இருக்கிற விவசாயிகளும் வழங்குவார்களேயானால் அந்த 311 கோடி ரூபாயும் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதற்கு இந்த அரசாங்கம் முழுமையான ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறது; புரட்சித் தலைவி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார் என்பதனை இந்த நேரத்திலே நான் இந்த மாமன்றத்திற்குத்



தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்த அரசாங்கம் அமைந்ததற்குப் பின்னால், வட்டியை, விவசாயிகளுக்காகத் தள்ளுபடி செய்து இருக்கிறோம்.

இன்னும் ஒன்று சொன்னார்கள். மனித உரிமை பற்றி எல்லாம் பேசுகிறோம் நாம். ஊட்டியிலே தேயிலை விவசாயிகளை நாம் யாராவது நினைத்துப் பார்த்தோமா? போலீஸை வைத்து அடித்தோம். போலீஸை வைத்து அடித்துவிட்டு, மனித உரிமையைப் பற்றி பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி). என்னுடைய தலைவி புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்தார். வந்த உடனே, அந்த விவசாயிகளுடைய நலனைப் பாதுகாப்பதற்காக, விவசாயிகளுடைய துயரைத் துடைப்பதற்காக நியாயவிலைக் கடைகளிலே அந்த ஊட்டி தேயிலையை விற்க வேண்டுமென்று சொல்லி அந்தத் திட்டத்தை தொடங்கி, அந்தத் திட்டம் இப்போது வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்று சொன்னால், விவசாயிகள் மீது அக்கறை இருக்கிற அரசாங்கம் யாருடைய அரசாங்கமாக இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தலைவி இருக்கிற காரணத்தினாலேதான், ஆட்சி அமைந்த 3½ மாதத்திற்குள்ளாக அடுக்கடுக்கானத் திட்டங்களை விவசாயிகளுக்கு செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

அடுத்து, டி.கே.எம். 9 அரிசி பற்றி நினைத்துப் பார்த்தார்களா? கேட்டை என்னுடைய தலைவி நினைத்துப் பார்த்தார்கள். விவசாயிகளுக்கு திறந்துவிட்டார்கள். இன்றைக்கு என்ன ஆயிற்று? நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சி. மகிழ்ச்சி; வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி; அப்படிப்பட்ட திட்டத்தை நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா? விவசாயிகளுடைய நலனில் அக்கறை இருப்பதைப்போல வேடமிட்டு பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுபற்றிப் பேசுவது என்றால், இன்னும் நிறைய பேசிக் கொண்டிருக்க வேண்டும்; அதற்கு நேரம் இல்லை; அடுத்து வருகிற வாய்ப்புகளிலே பேசிக்கொள்ளலாம்.

அடுத்து, உணவுத் துறை. ஏற்கெனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் பல முறை சொல்லிவிட்டார்கள்; இன்றைக்குக் காலையிலும் சொல்லிவிட்டார்கள். பெருமையாக நாங்கள் இவ்வளவு டன் stock வைத்துவிட்டுப் போனோம்; stock வைத்துவிட்டுப் போனோம்

என்றார்கள். என்ன stock வைத்துவிட்டுப் போனார்கள்? எல்லாம் கடன். ஸ்டேட் பேங்குக்கு நாங்கள் கடன் கட்ட வேண்டும். 1500 கோடி ரூபாய் கடன் இருக்கிறது. அந்தப் பணத்தைக் கட்டினால்தான் மேற்கொண்டு இப்போது கடன் கொடுப்பார்கள். இல்லாவிட்டால், கடன் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அந்த அளவுக்கு நிதிநிலைமை இருப்பதை வெள்ளை அறிக்கை மூலமாக இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார் நமது நிதி அமைச்சர்; புரட்சித் தலைவி அவர்களும் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து ஒன்றே ஒன்று. நல்ல ஒரு அரசாங்கத்துக்கு இவ்வளவு உணவுப் பொருட்கள் கையிருப்புத் தேவையில்லை என்பதை நிதி அமைச்சர் சொல்லிவிட்டார். எங்கள் புரட்சித் தலைவி அதை உணர்ந்துதான் வெள்ளை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உணவுக் கொள்கையில் முந்தைய அரசுக்கு எவ்வளவு மோசமான தடுமாற்றம்? உணவுக் கொள்கையிலே ஒரு நிலையான கொள்கையை எடுத்து நடைமுறைப்படுத்துவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கத்திறகு உணவுக் கொள்கை இருந்ததா? இல்லையே. நிலைமைக்குத் தகுந்தபடி, நேரத்திற்குத் தகுந்தபடி தன்னுடைய நிலைமையை மாற்றிக்கொண்டு யாரோ பலன் அடைவதற்காக திட்டங்களைப் போட்டார்களேயொழிய, விவசாயிகளோ அல்லது வாங்கி உண்ணுகிற சாதாரண மக்களோ (மேசையைத் தட்டும் ஒலி) பலன் அடைவதற்கு ஏதாவது ஒரு திட்டம் போட்டார்களா? போடவில்லையே. அப்படிப் போடாமல் இன்றைக்கு நாங்கள் இவ்வளவு ஸ்டாக் வைத்துவிட்டுப் போனோம் என்றார்கள். யாருக்கு, எதற்காக ஸ்டாக் வைத்தார்கள்? அந்த உண்மைகளை எல்லாம் வெளிக்கொண்டுவர வேண்டும். அதற்காகத்தான் இப்போது எங்களுடைய தலைவி ஒவ்வொரு Godown-ஆகப் பார்த்து, அந்த Godown-ல் ஏன் இவ்வளவு ஸ்டாக் இருந்தது? எல்லாவற்றையும் கண்டுபிடிக்கச் சொல்லி, அதற்கு ஒரு D.V.A.C. Enquiry போட்டு. அது இன்றைக்குச் செயல்பாட்டிலே இருக்கிறது என்பதனை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இவ்வளவு அரிசி? ஏன் quality குறைவான அரிசி இவ்வளவு ஸ்டாக்? quality குறைவான அரிசி வருவதற்கு என்ன காரண்ம்? விவசாயிகளிடத்திலே வாங்குவதை நாங்கள் குற்றம் என்று சொல்லவில்லை. ஆனால், முதலில் வந்த அந்த quality அரிசியை முதலில் வெளியே அனுப்பி இருந்தால் எப்படி நிற்கும் stock? 1996-ல் வாங்கிய stock இன்றைக்கும் இருக்கிறதே? (மேசையைத் தட்டும் ஒலி). இது யார் செய்த தவறு? யாருக்காக நீங்கள் அதை ஒதுக்கி வைத்தீர்கள்? அப்படி



ஒதுக்கி வைத்ததன் விளைவு. இன்றைக்கு 1,25,000 டன் தமிழ்நாட்டு மக்களுக்கு விநியோகிக்க முடியவில்லை. அதனாலே non-issued rice என்று சொல்லி, 125 கோடி ரூபாய்க்கு உணவுப் பொருட்கள் இப்போது ஒதுக்கிவைக்கப்பட்டு மக்களுக்குப் பயன்படாத அளவிற்கு அது சீரழிந்து போனதற்கு யார் காரணம்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் காரணம் என்பதை என்னுடைய குற்றச்சாட்டாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-40

ரேஷன் கார்டைப் பற்றிப் பலபேர் சொன்னார்கள். யார் ரேஷன் கார்டை issue பண்ணினார்கள்? நாங்களா, எங்கள் ஆட்சியிலேயா issue பண்ணினோம்? தி.மு.க. அரசுதானே வெளியிட்டது. எத்தனை கார்டு போட்டார்கள்? திரு. கருணாகரன் அவர்களும் சொன்னார்கள், மூன்று கார்டுகளை அடித்தார்களாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கார்டு மஞ்சள் கார்டு, இன்னொரு கார்டு பிங்க். இன்னொரு கார்டு பச்சை. அந்தப் பச்சை வரவேயில்லை. (சிரிப்பு) எங்கே போயிற்று பச்சை? இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக இந்த நாட்டினுடைய பணத்தை விரயம் செய்தார்கள். முறையான ஒரு உணவுக் கொள்கை உங்களுக்கு இருந்திருக்கும் என்று சொன்னால், அன்றைக்கு அந்தக் கொள்கையில், கார்டு அடிப்பதிலே சரியாக அடித்திருப்பீர்களா, இல்லையா? கடைசியில் food policy தப்பாகத்தானே வந்தது. அரிசி வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம். வேண்டாமென்றால் சர்க்கரை வாங்கிக் கொள்ளலாம். ஒரு தெளிவில்லாத கொள்கை. இதனாலே இந்த தவறான கொள்கை. ஒரு தெளிவில்லாத கொள்கை. இதனாலே இந்த நாட்டு மக்களுக்கு அன்றைக்கு எவ்வளவு நஷ்டம்? பெருமையென்று சொன்னீர்களே, 'அண்டை வீட்டு நெய்யே, என் பொண்டாட்டி கையே' என்று. ரிசர்வ் வங்கியிடமிருந்து பணத்தை வாங்கி, நெல்லை வாங்கி வைத்துவிட்டு நான் வைத்துவிட்டுப் போனேன். களஞ்சியத்தை ரொப்பிவிட்டுப் போனேன் என்றால் என்ன நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஏதோ குறைவாக வைத்துவிட்டுப் போனதாக புள்ளிவிவரம் சொன்னீர்களே, நாங்கள் போகும்போது cash balance-ஐ வைத்துவிட்டுப் போனோம். எங்கள் அம்மா அவர்கள் ஆட்சியை விட்டுப்போகும்போது, cash balance வைத்துவிட்டுப் போனார்கள். நீங்கள் 1500 கோடி ரூபாய் கடனை வைத்துவிட்டுப் போய்விட்டீர்கள். நான் களஞ்சியத்தை ரொப்பிவிட்டுத்தான் போனேன் என்று சொன்னால் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை இந்த

மாமன்றத்திற்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, மாமன்ற உறுப்பினர்களே, இந்த stock எப்படி build ஆயிற்று தெரியுமா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** நான் சொல்கிறேன். அது பெரிய கதை. ஒரு சிறிய கதையாகச் சொல்கிறேன். அரிசியை விவசாயிகளிடமிருந்து வாங்கி stock பண்ணுகிறார்கள். கெட்டுப் போன அரிசி என்று சொல்லிவிட்டு டெண்டர் விடுவார்கள். டெண்டர் விட்டால், அந்த டெண்டர் எடுக்கும் Rice Mills — அவர்களுக்கு வேண்டுமென்ற Rice Mill-ஆக டெண்டர் எடுப்பார்கள். அதுதான் முக்கியம்—அந்த அரிசியை என்ன செய்வார்கள் என்று கேட்டால், எடுத்துக்கொண்டு போகமாட்டார்கள். Tender Condition என்ன என்றால், வெளியே எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள் எடுத்துக்கொண்டு போகமாட்டார்கள். அவர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டால், Tamil Nadu Civil Supplies Corporational-ல் நெல்லை வாங்கிக்கொண்டு போவார்கள். நெல்லை வாங்கிக்கொண்டு போய் நெல்லை அரைத்து பத்திரமாக அரிசியைக் கொண்டுவந்து தரவேண்டும். அதுதான் சட்ட விதி. அவர்கள் என்ன செய்வார்கள் என்றால், இந்த டெண்டர் அரிசியை இவர்கள் கொடுத்துக் கெட்டுப்போன அரிசியை அந்த hullers-ல் வாங்கிக் கொண்டுபோய்விட்டு நல்ல அரிசியை வெளி மார்க்கெட்டில் விற்றுவிடுவார்கள். சிவில் சப்ளைஸில் வாங்கிக்கொண்டு போன நெல்லை அரைத்து வெளியே விற்றுவிடுவார்கள். அதற்குப் பதிலாக இவர்கள் வாங்கிக்கொண்டு போன அந்த டெண்டர் அரிசியைக் கெட்டுப்போன அரிசி என்று சொல்லி, அந்த அரிசியைத் திரும்ப பாலிஷ் செய்து மீண்டும் அந்த அரிசிதான் இந்த அரிசி என்று கொண்டுவந்து கொடுப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாழைப்பழம் கதை இருக்கிறதே, அதுதான். எங்கே அந்தப் பழம் என்றால், இதுதான் அந்தப் பழம் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி), இந்த நாட்டு மக்களை ஏமாற்றி 1,25,000 டன் புழுத்த அரிசியாக இன்றைக்கு நாட்டு மக்களுக்கு வைத்துவிட்டுப் போய் விட்டார்கள் என்பதை பகிரங்கமாக குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல மாமன்ற உறுப்பினர்களே, இதிலே 13 hullers ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்காக



அவர்கள்மீது முழுமையான விசாரணை செய்து, எப்படி இந்த புழுத்த அரிசி வந்தது என்று கண்டுபிடிப்பதற்காக அந்த hullers 13 பேர் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து போலி கார்டுகள். 10 லட்சம் போலி கார்டுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த போலி கார்டுகள் யாரிடம் இருக்கிறது? யார் அந்தக் கார்டை issue செய்தார்கள்? தி.மு.க. அரசுதான் issue செய்தது. 10 லட்சம் போலி கார்டு அவர்களுடைய ஆட்களிடம்தானே இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 10 லட்சம் போலி கார்டில் வருகிற உணவுப் பொருட்களை அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். இன்னொரு தந்திரம், கெட்டுப்போன அரிசி என்று டெண்டர் எடுப்பதை வெளி மாநிலத்திற்கு அனுப்புவதில்லை. இங்கு ரேஷனில் ரூ. 3.50-க்கு அரிசி விற்கிறது. கர்நாடகாவில் 8 ரூபாய்க்கு மார்க்கெட் இருக்கிறது. அதுதான், தூத்துக்குடியிலிருந்து இரயிலில் போயிற்று பாருங்கள், கடத்தல் அரிசி (மேசையைத் தட்டும் ஒலி), அந்த அரிசிதான். அதைக் கடத்தியவர் யார்? இந்த நாட்டு மக்கள் கேட்கிறார்கள். அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறார்கள். வழக்கு என்று சொல்லி, உண்மைக் குற்றவாளியை விட்டுவிட்டு, பொய்யான ஆட்களைப் போட்டு வழக்கு போட்டிருக்கிறீர்கள். அதைப் பற்றி, முழு விவரம் தெரிந்துகொள்வதற்காக, அந்த அரிசியைக் கடத்தியது யார் என்று கண்டுபிடிப்பதற்காக, யார் கொண்டு போனார்கள், யார் செய்தார்கள் என்ற உண்மையைத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக இன்றைக்கு D.V.A.C. enquiry-க்கும், C.B.,C.I.D. enquiry-க்கும் எங்கள் தலைவி உத்தரவு போட்டு, இந்த உணவுக் கொள்கையிலே ஒரு நிலையான கொள்கையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மாமன்ற உறுப்பினர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-45

இப்போது உணவுக் கொள்கையில் எவ்வளவு நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது, இந்த 4 மாதத்திலே—எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலே—என்பது உங்களுக்குப் புரியும். உங்கள் ஆட்சியிலே அரிசி போட்டீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மக்கள் எப்படி திட்டிக்கொண்டே வாங்கிக்கொண்டு போனார்கள். இன்றைக்கு எங்களுடைய தலைவியை வாழ்த்திக்கொண்டு, வாங்கிக்கொண்டு

போகிறார்கள். அதன் விளைவாக இப்போது 25 ஆயிரம் டன் அரிசிகூட off-take வந்திருக்கிறது. 1 இலட்சத்து 60 ஆயிரம் டன்னாக இருந்தது, படிப்படியாக நான்கு மாதத்திலே உயர்ந்து இப்போது ஆகஸ்டு மாதத்திலே 1 இலட்சத்து 85 ஆயிரம் டன் அரிசி நியாய விலைக் கடைகளில் off-take-ஆக வந்திருக்கிறது என்று சொன்னால், நாட்டு மக்களிடையே இந்த அரசு வரவேற்பைப் பெற்றிருக்கிறது. புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே நல்ல அரிசி கொடுக்கிறார்கள் வாங்குவோம் என்று சொல்லி வாங்காதவர்கள் எல்லாம் வந்து வாங்குவதாலேதான் இப்போது இந்த அரிசி மக்களிடத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) அமோக வரவேற்பு பெற்று இருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு உதவி செய்கிறார்கள் என்பதனை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல நண்பர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குள்ளே உரையாற்றிக்கொண்டிருக்கக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அடுத்து, டி.கே.எம். 9 ரக நெல் வெளியில் போனதற்கு பின்னாலேதான் வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி. அதேபோல, நியாய விலைக் கடைகளிலே நடக்கும் குற்றங்களைக் கண்காணித்து கடுமையான நடவடிக்கை எடுத்து இந்த நான்கு மாதங்களுக்குள்ளே 25 பேரை தடுப்புக் காவல் சட்டத்திலே இந்த அரசாங்கம் உள்ளே வைத்திருக்கிறது என்று சொன்னால் நாட்டு மக்களுக்கு நியாய விலைக் கடைகளுக்கு உணவுப் பொருட்கள் சரியாகப் போய் சேரவேண்டும் என்பதிலே புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் எவ்வளவு எச்சரிக்கையோடு இருக்கிறது என்பதற்காக நான் இதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி உணவுக் கொள்கையிலே நீங்கள் தடுமாறிப் போனதனாலே நஷ்டம் ஏற்பட்டதாலே இதையெல்லாம் எப்படி ஈடுகட்டுவது என்பதெல்லாம் ஆராய்ந்து சீரான உணவுக் கொள்கை வகுக்க வேண்டும் என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமிக்க இருக்கிறார்கள். அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் குழு அவற்றையெல்லாம் ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுக்கும். அவர்கள் கொடுக்கின்ற அந்த அறிக்கையின் மேலே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



தெளிவான கொள்கையை இந்த நாட்டு மக்களுக்கு அறிவிப்பார்கள் என்பதனை இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே இந்த ஆண்டுக்கு என்னென்ன புதிய திட்டங்கள் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனை உங்களுக்கு இப்போது தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் என்று இருக்கிறது. சிறு வணிகர்கள் என்று சொன்னால், சாதாரண ஏழை மக்கள் அதைப் பயன்படுத்தமுடியாத அளவிற்கு அந்தத் திட்டத்தின் பயனைப்பெற முடியாத அளவிற்கு இருக்கிற காரணத்தினாலே அதை எளிமையாக்கவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டதன் விளைவாக புதிய வழிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அந்தக் கடனை வாங்கி வருகிற ஏழைத் தாய்மார்கள், மகளிர்கள், பூ விற்பவர்கள், கூடை முடைபவர்கள், சாதாரண' ஏழைகளுக்கு சேவைக் கட்டணத்தை இரத்து செய்யவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அது இரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்களுக்கு இப்போது 18 சதவிகித வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. அதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15 சதவீதமாகக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல திருப்பிச் செலுத்துகிற அந்தக் காலத்தை 118 நாட்களிலிருந்து 147 நாட்களாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த scheme என்னவென்றால் தினந்தோறும் இந்தக் கடனைக் கட்டவேண்டும். அதற்கு பதிலாக வாரத்திற்கு ஒரு முறை கட்டலாம் என்று புரட்சித் தலைவி அவர்கள் அந்த ஏழைத் தாய்மார்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, ஆயிரம் ரூபாய் கடன் பெறுபவர்கள் இதுவரை வட்டி மற்றும் சேவைக் கட்டணமாக ரூ.117 செலுத்திவந்தார்கள் இந்த தள்ளுபடியின் மூலமாக ரூ.31.21 பைசா செலுத்தினால் போதும். இதனால் ரூ. 141.80 பைசா அந்த ஏழைத் தாய்மார்களுக்கு இலாபமாக அமையும் என்ற வகையிலே இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு மகளிர் ஆண்டு. இந்த மகளிர் ஆண்டை பெருமையாகப் போற்றுகிற வகையிலே புரட்சித் தலைவி அவர்கள் மகளிர் வளர்ச்சிப் பிரிவு என்ற ஒரு பிரிவை தொடங்கி இருக்கிறார்கள். எல்லா மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் மகளிர் வளர்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்படும். இப்பிரிவு தொழில் முனைவோர்களைக் கண்டறிதல், சுயஉதவிக் குழுக்களைக் கண்டறிதல், அவர்களுக்குக் கடன் உதவி செய்தல் போன்ற பணிகளை மகளிர் வளர்ச்சிப் பிரிவும் ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியும் கண்டுபிடித்துச் செயல்படும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-50

அதேபோல அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு, மகளிர் வளர்ச்சி கடன் திட்டம், மகளிர் தொழில் முனைவோர்க்குத் திட்ட மதிப்பீட்டின் பேரில் 10 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும். இந்தக் கடனுக்கான வட்டி 15%, 16% என்று தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருக்கிறது. ஆனால் மத்திய கூட்டுறவு வங்கியிலே இனி மகளிருக்கு 1% குறைத்து கடனை வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோல உழைக்கும் மகளிருக்குச் சிறப்புக் கடன் திட்டத்தை புரட்சித் தலைவி அறிவித்திருக்கிறார்கள். மாத வருமானம் பெறும் மகளிருக்கு ரூ.20,000 அல்லது சம்பளத்தில் 5 மடங்கு இதில் எது குறைவோ அதை அவர்கள் ஆரம்பிக்கும் தொடர் வைப்புக் கணக்குத் தொகையின் அடிப்படையில் வழங்கப்படும். 3 ஆண்டுகளில் 15% வட்டியில், மாத சம தவணைகளில் கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

அதற்கடுத்து, ஒரு முக்கியமான புதிய பொருளாதாரக் கொள்கையை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் கருவூல நிதி மேலாண்மைப் பிரிவு, Treasury Management Cell என்று புதியதாக ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே உபரியாக இருக்கிற அந்தப் பணத்தை அந்த, Treasury Management Cell என்று சொல்லக்கூடியதன் மூலமாக கூட்டுறவு வங்கிகளிலுள்ள உபரி நிதியை இலாபகரமாகப் பயன்படுத்த அரசு கடன் பத்திரங்களாகிய குறுகிய கால Treasury Bills, நீண்டகால Government Securities ஆகியவற்றில் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அரசு கடன் பத்திரங்களில் அவசியமான



நேரத்திலே முதலீடு செய்யவும், வங்கியின் தேவையைப் பொறுத்து இப்பத்திரங்களை விற்பதற்கும் வழி உண்டு. இந்தப் பணிகளைச் சிறப்பாகச் செய்ய தனிப் பிரிவு ஆரம்பிக்கப்படும். இப்பிரிவு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியோடு ஒருங்கிணைந்து செயல்படும்.

இத்தனைத் திட்டங்களுக்குப் பின்னாலே தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அன்பு இருக்கிற தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள மொத்த மக்கள் தொகையிலே 20 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளனர். ஆனால் இந்த மக்கள் தொகைக்கேற்ப கூட்டுறவு வங்கிகளில் கடன் இதுவரை வழங்கப்படவில்லை. இம்மக்களுக்கு சிறு தொழில்கள், சிறு வணிகம் செய்ய 5,000 ரூபாய்வரைதான் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பதிலாக 10 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்க வேண்டும், அவர்களைக் கண்டறிந்து கொடுக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி, 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 5 கோடி வைப்பு நிதியுள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் ஆகிய வங்கிகளின் நடவடிக்கைகள் அனைத்தும், 3 ஆண்டுகளில் கணினிமயமாக்க புதியதாக கணினிமயப் பிரிவுகளைத் தொடங்கவிருக்கிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இங்கே பேசிய அத்தனைபேரும் நியாயவிலைக் கடைகளிலே இருக்கிற தொழிலாளர்கள், கடைகளுக்கு வருகிற பொதுமக்களிடத்திலே சரியாக நடந்துகொள்வதில்லை, அளவு சரியாகக் கொடுப்பதில்லை என்ற குறைகளை எல்லாம் சொன்னார்கள். அந்தக் குறைகளைப் போக்குவதற்காக தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பணிபுரியும் பணியாளர்கள் நுகர்வோர்களிடம் இனிமையாகவும், கனிவாகவும் அணுகவும், பொருட்களை எடை குறைவில்லாமல் வழங்கவும் அவர்களுக்கு ஒரு பணியிடைப் புத்தறிவுப் பயிற்சி, ஒரு புதிய பயிற்சி அளிப்பதற்கு இந்தத் துறை முழு மனதுடன் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, உணவுத் துறையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில திட்டங்களை அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். கிடங்குகள் இல்லை, கிடங்குகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அந்தக் குறையைப் போக்குகின்ற வகையிலே பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் சேமிப்புக்கென் நடப்பாண்டில் கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, நீடாமங்கலம், வேப்பன்தட்டை, பெரியகுளம், ஆண்டிப்பட்டி, போடிநாயக்கனூர் ஆகிய 7 வட்டங்களில் தலா ரூ. 33 இலட்சம் மதிப்பீட்டில் செயல்முறைக் கிடங்குகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய நெல் கொள்முதல் நிலையங்கள் கட்ட காவிரி நீர்ப்பாசன பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நலனுக்கென ஆண்டுதோறும் சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் இயக்கப்படுகின்ற 950 நேரடி கொள்முதல் நிலையங்களுக்கென சேமிப்பு மற்றும் உலர்கள வசதிகளுடன் நிரந்தரக் கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசு திட்ட நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு 197 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் 6 நிலையங்கள் கட்ட அரசு நிதி ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மண்டல அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட எல்லா தலைநகரங்களிலும் இருக்கிற கட்டடங்களையும் கட்டுவதற்கு எஞ்சி இருக்கிற மாவட்டங்களிலேயும் கட்டுவதற்கு புதிதாக 4 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும்.

கிடங்குகளில் அலுவலக அறைகள் மற்றும் சுமை தூக்குவோருக்கு ஓய்வு அறைகள். நடப்பாண்டில் குடவாசல், வேதாரண்யம், தஞ்சை, பிள்ளையார்பட்டி, பேராவூரணி, ஆலங்குடி, பாபநாசம், திருத்துறைப்பூண்டி, பெரம்பலூர், முசிறி மற்றும் வேலூர் ஆகிய 10 கிடங்கு வளாகங்களில் அலுவலக அறைகளும், மேலும் குடவாசல், வேதாரண்யம், தஞ்சை, பிள்ளையார்பட்டி, ஆலங்குடி, பாபநாசம், திருத்துறைப்பூண்டி, வேலூர் அரக்கோணம், திண்டிவனம் மற்றும் பொள்ளாச்சி ஆகிய 10 கிடங்கு வளாகங்களில் சுமைதூக்கும் பணியாளர்களுக்கு Gang-men-களுக்கு ஓய்வு அறைகள் ரூ.33 இலட்சம் செலவில் கட்டப்படும் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 2-55

இதுமட்டுமல்லாமல், பொதுவாக, புரட்சித் தலைவி அவர்கள். Godown-ல் பணியாற்றுகின்ற Gang-men மற்றும் அங்கேயிருக்கிற அலுவலர்களுடைய நலன்களைப் பேணிக் காக்கின்ற வகையிலே இந்த அரசாங்கம் அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிவோடு பரிசீலிக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதனை இந்த நேரத்திலே, இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரிவித்து, நீங்கள் சொல்லியிருக்கிற குறைகளை எல்லாம் இந்த அரசு ஆய்வு செய்து, பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இது புரட்சித் தலைவி அரசு, இந்த புரட்சித் தலைவி அரசு நிச்சயமாக ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், வாழ்க்கையிலே அடித்தட்டிலே இருக்கிற மக்களுக்கும் நியாயமாக உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுப்பதிலே முன்னணியிலே, முனைப்பாக இருந்து, எந்தவிதமான இடையூறுமின்றி, முறையாகச் செயல்படும் என்பதனையும் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கேயுள்ள மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் எங்களுடைய அதிகாரிகள் பரிசீலித்து முறையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறீர்கள். அவற்றை எல்லாம் முறையாகப் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்திலே நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியை உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரவிருக்கும் காலம் புரட்சித் தலைவி அவர்களுடைய காலம். அந்த நற்காலத்திலே இந்தத் துறைகள் முனைப்போடும், எழுச்சியோடும் செயல்படும் என்பதனை உங்களுக்கு அன்போடு தெரிவித்து, நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப்பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி உங்கள் அத்தனை பேரையும் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொண்டு, எனக்கு இப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்த என்னுடைய தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதத்திற்கு மீண்டும் ஒருமுறை வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பாரதி கமிஷன் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த பாரதி கமிஷனுடைய நடவடிக்கைக்கு அரசாங்கம் உத்தரவிட்டு, பிறகு இரத்து செய்ததாகவும் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வருவதற்கு முன்னாலேயே பாரதி கமிஷனுடைய விசாரணை எல்லாம் முடிவுற்று, அதை Tribunal-க்கு அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, Tribunal-ம் முடிவு எடுத்து, அதற்குப் பிறகு D.R. வரையிலும் மிச்சம் இருந்ததை விசாரிக்கச் சொல்லி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்பாகவே அவை அத்தனையும் இரத்து செய்யப்பட்டு விட்டது. எந்தக் குற்றமும் இல்லை என்று நிரூபிக்கப்பட்டது.

இன்னொன்று சொல்கிறேன். அதிலே போடப்பட்டிருக்கிற charges அத்தனையும் தேவையற்றது என்பதை சென்னை உயர் நீதிமன்றமும் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஒன்றே ஒன்று, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு வந்ததாகவும் ஒரு முதல் வகுப்பு டிக்கெட்டை இரயில்வேயிலே பெற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு காரிலே வந்ததாகவும், அது தவறு என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் விளக்கத்திற்குள்ளே போக வேண்டாம். பாரதி கமிஷனைப் பற்றி உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது என்று சொல்கிறீர்கள். அதோடு பேச்சை முடியுங்கள். சொற்பொழிவு ஆற்றுவதற்கான நேரம் இது இல்லை. விளக்கத்தை சொல்லி, நீங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு....

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன், அந்த அரசாணை எண் 65 என்பது போடப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. கோ.சி. மணி சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்டவன் நான். அதனாலே தன்னிலை விளக்கம் தரவேண்டும். உயர் நீதிமன்றத்



தீர்ப்புக் கூட, அந்த வங்கியினுடைய பொறுப்பை ஏற்றவர்கள் இந்திய சர்க்காரால் முதன்மையான வங்கி என்று பாராட்டப்படக்கூடிய அளவிற்கு நிருவாகம் செய்திருக்கிறது. இவ்வளவு சிறப்பான நிருவாகத்தில் 3,000 ரூபாய் தொலைபேசிக் கட்டணம் அதிகம் என்றும், 140 ரூபாய் இரயில்வே கட்டணம் அதிகம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வதும் தவறு. எனவே, இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். இன்றைக்கு, இதை ஒரு குற்றச்சாட்டாக அமைச்சர் கூறுகிறார்.

இன்னொன்று, நெல்லை வாங்கி வைத்துவிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி, முடியுங்கள். அமைச்சர் விளக்கம் சொல்ல வேண்டுமல்லவா? இதெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்டுவிட்டன. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் நியாயமற்றவர்களா, நல்லவர்களா, கெட்டவர்களா என்பதெல்லாம் பிரச்சினையல்ல. அந்த கமிஷன் என்னவாயிற்று என்பது பற்றிப் பிரச்சினையல்ல. நீங்கள் நியாயமானவர்களாக இருந்திருந்தால், முழுமையாக அந்த வழக்குகளை நடத்த விட்டு, அதிலே குற்றமற்றவர்கள் என்று நீங்கள் நீதிமன்றத்தைச் சந்திக்க வேண்டுமேயொழிய, அதற்கு மாறாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், அரசாங்க G.O. போட்டிருக்கிறது என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அதற்கு மாறாக, புழக்கடை வழியாக, அரசாங்கத்தினுடைய ஆணை 65-ஐப் போட்டு, வழக்குகளை நீங்கள் திரும்பப் பெற்றிருப்பதால், அதிலே நீங்கள் குற்றவாளிகள், முறைகேடாக அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றிருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய வாதம் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். அமைச்சர் சொல்வது, அதற்காக அரசாங்கம் G.O. போட்டிருக்கிறது என்று. உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பே போதுமே, ஏன் G.O. போட்டீர்கள் என்றுதான் கேட்கிறார்.

**திரு. கோ.சி. மணி:** அதற்கு ஒரு நீதி விசாரணை தேவையில்லை என்று. இறுதியாக இந்த ஆட்சி வந்த பிறகு தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 3-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, இரண்டும் ஒன்றுதான். அவ்வளவுதான். திரு. பொன்முடி சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற அரசாணையிடப்படுகிறது. தொடரப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற்றார்கள் என்பதுதான் இந்த ஆணையின் சாராம்சம்.

**டாக்டர் க. பொன்முடி:** நீதிமன்றத் தீர்ப்பை base பண்ணி ஜி.ஓ. போடுவார்கள். அது வழக்கம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் ஒன்றுதான். நீங்கள் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அமைச்சர் இப்படிப்பட்ட G.O. போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்.

**திரு. கோ.சி. மணி:** நான் சொல்வது வழக்குகள் நீதிமன்றம்வரை வந்து பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டதால் இது உண்மையாகப் போடப்பட்டதல்ல என்று அதற்குப் பிறகு ஆட்சி வந்து G.O. போடப்பட்டது. அதற்கு முன்னாலேயே வழக்கு முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. ப. தனபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ் கோர்ட்டிலே கொடுக்கப்பட்ட உத்தரவுகள் எல்லாம் உயர் நீதிமன்றத்திலே இருக்கிறபோது அந்த உயர் நீதிமனறத்தினுடைய வழக்குகளைத்தான் இந்த G.O. மூலம் திரும்பப்பெற்றார்கள் என்பதை நான் உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்குகளைத் திரும்பப் பெற்றார்கள் என்பதுதான் உண்மை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பேசுகிறபோது இங்கே வரலாற்றில் இல்லாத அளவுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரண்டு அமைச்சர்களைப் போட்டதாகச் சொன்னார்கள். கழகத்தினுடைய ஆட்சியிலேயும் 3 அமைச்சர்கள் இருந்தார்கள் என்பதை முதலிலே சுட்டிக்காட்டுகிறேன்.



அதுமட்டுமல்ல, இங்கே குறிப்பாக அரிசியைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அரிசியைப் பொறுத்தவரையிலே 1,25,000 டன் அரிசி புழுத்துப் போயிருக்கிறது என்ற ஒரு தவறான செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் நேரடியாகவே மறுபடியும் சொல்கிறேன். இப்போது போடுகிற அரிசி எல்லாம் நல்ல அரிசியாகப் போடுகிறோம் என்று சொன்னார்கள். அது முதலிலேயிருந்த stock-லேயிருந்து எடுத்துப் போடுகிறார்களா, இல்லை திடீர் என்று புதிதாகப் போய் வாங்கி ஹல்லரிலே கொடுத்து அரிசி குத்திக் கொடுக்கிறீர்களா. மூன்று மாதத்திலே எப்படி புது அரிசி, நல்ல அரிசி வருகிறது. இன்னொன்று ...(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்குத் தான் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாகச் சொல்லிவிட்டேன் என்னுடைய பதிலிலே, ஹல்லர்களிடமிருந்து நீங்கள் நல்லதை வாங்கவில்லை. உங்களுக்கு வேண்டிய ஹல்லர்களிடமிருந்து நீங்கள் வாங்கினீர்கள். நாங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்தவுடனே நடவடிக்கை எடுப்போம் என்று தெரிந்தவுடனே ஹல்லர்கள் எல்லாம் இன்றைக்கு நல்ல அரிசியாகக் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் உட்காருங்கள். திரு. பொன்முடி என்ன சொல்கிறீர்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். அவர் சொல்லி முடித்த உடனே சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளைச் சொன்னபோது நாங்கள் அமர்ந்திருந்தோம். நீங்கள் கடைசியிலே பேசலாம் என்று சொன்னீர்கள். குற்றச்சாட்டுகளுக்குக் குறைந்தபட்சம் இரண்டு வரியாவது ஒவ்வொன்றுக்கும் நாங்கள் பதில் சொல்ல வேண்டுமா, வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் நீங்கள் கேட்பதற்கு அவர் பதில் சொல்கிறார்.

**டாக்டர் க. பொன்முடி:** சொல்லட்டும், நான் சொன்னபிறகு சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1,25,000 டன் ஸ்டாக் இருந்தது என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அது ஒன்று. அதுபோல 1,25,000 டன் புழுத்த அரிசி இருக்கிறது என்று சொன்னால் எந்தெந்த godown-லே இருக்கிறது. வெள்ளை அறிக்கை வைக்கிறேன் என்றார்கள், வைக்கவில்லை. நானே நேரடியாகச் சென்று பார்த்தபோதுகூட, பத்திரிகையாளர்களுடன் சென்றபோதுகூட அவர்கள் குறிப்பிட்ட அந்த 234 டன் அரிசி அங்கே இல்லவே இல்லை என்பதை பத்திரிகையாளர்கள் முன் நிரூபித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** விளக்கம்தான். அப்புறம் என்ன? அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லணுமா, வேண்டாமா? இது போன்று ஒவ்வொரு இடத்திலேயும் தவறான செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். 14 லட்சம் டன் stock வைத்திருக்கிற அரிசியிலேயிருந்துதான் இந்த மூன்று மாதம் விநியோகம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அந்த நல்ல அரிசி எப்படி வந்தது? மூன்று மாதத்திற்குள் நல்ல அரிசி இப்போது திடீரென்று வருகிறதா. அதுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படி வந்தது என்று கேட்டு உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) திரு. பொன்முடி, மானியக் கோரிக்கையிலே விவாதம் செய்வதற்கு நேரம் கிடையாது. நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார். கேள்வியைக் கேட்க உங்களை அனுமதித்தேன். அதோடு உட்காருங்கள். அடுத்து திரு. ஞானசேகரன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** அவர்கள் கொடுத்துக்கொண்டிருந்த அந்த புழுத்த அரிசியைத்தான் நாங்கள் தனியாக ஒதுக்கிவைத்துவிட்டு இப்போது நாங்கள் அதிலே நல்ல அரிசியைக் கண்டுபிடித்து நல்ல



அரிசியை வழங்கிக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, ஏற்கெனவே ஹல்லர்களிடமிருந்து அவர்கள் வாங்கியது முழுவதும் தப்பான அரிசியை வாங்கினார்கள். Blended அரிசியை, கலந்த அரிசியை வாங்கினார்கள். இந்த ஆட்சியைப் பார்த்து அவர்கள் பயந்து, நாங்கள் கொடுக்கிற அரிசியை ஒழுங்காக அரைத்து நல்ல அரிசியாகக் கொடுக்கிறார்கள். அந்த நல்ல அரிசியை இப்போது நாங்கள் முறையாக கடைகளுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேர் விவாதம் செய்துமுடிக்கக்கூடிய நேரம் இல்லை இது. நீங்கள் கேட்ட கேள்விக்கு விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட்டுறவுச் சங்கங்களில் தொடக்க வேளாண்மை வங்கியாக இருந்தாலும் சரி அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமாக இருந்தாலும் சரி அல்லது மத்திய கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி, பல இடங்களிலே அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அமைப்பைச் சார்ந்த தலைவர்கள், Director போன்றவர்கள் எல்லாம் எல்லா வங்கிகளையும் பெரும்பான்மையாக திவாலாக்கி கோடி கோடியாகக் கொள்ளையடித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். நடந்தவை எல்லாம் நடந்தவையாகவே இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற காரணத்தால் கேட்கிறேன். பாரதி கமிஷனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போதாவது நீங்கள் கூட்டுறவு வங்கியிலே ஏற்கெனவே எங்கெங்கெல்லாம் எவ்வளவு களவாடப்பட்டிருக்கிறது, எவ்வளவு முறைகேடு நடந்திருக்கிறது, அங்கே தொடக்க வேளாண்மை வங்கியிலேயிருக்கக்கூடிய Secretary-ஐ மாற்ற முடியாமல்—G.O. போட்டார்கள்—ஆனால் இதுவரைக்கும் மாற்றவில்லை. மாற்றினாலாவது உண்மை தெரியும். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அங்கேயிருக்கக்கூடிய நீங்கள் C.B.,C.I.D.-ஐ வைத்தாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் எல்லா வங்கிகளையும் நீங்கள்—எதையும் விட்டு வைக்காதீர்கள், எல்லா வங்கிகளையும் நீங்கள்—தயவுசெய்து ஆய்வு செய்து

(மேசையைத் தட்டும் ஒலி). அதற்காக அறிக்கை வைத்து, யாரெல்லாம் தவறு செய்திருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாரா?

எங்களுடைய கற்பகம் சூப்பர் மார்க்கெட்டிலே கொள்ளையடித்த தலைவர், அந்த ஆட்சியிலே பலமுறை சொல்லிப் பார்த்து விட்டேன். 12 கோடி ரூபாய்க்குமேல் அங்கே களவாடப்பட்டு அந்தக் கற்பகம் சூப்பர் மார்க்கெட்டே அங்கே மூடப்பட்டுவிட்டது. ஆனால், இந்த அரசு நடவடிக்கை எடுத்தோம், நடவடிக்கை எடுத்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. 3 மாதமாகிவிட்டது. இன்றுவரை அதற்கான நடவடிக்கை இல்லை என்பதை நான் தெரிவித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 3-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லிவிட்டேன். இந்த ஆட்சி வந்துதான் அவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி வழக்கு மன்றத்திலே வழக்கே இந்த அரசு வந்துதான் பதிவு செய்திருக்கிறது. விரைவிலே நீங்கள் எதிர்பார்க்கின்ற அந்தக் காரியத்தை அந்தத் துறை முழுமையாகச் செய்து முடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, 100% verification செய்வதற்காக ஒரு விரிவான விசாரணைக்கு ஆங்காங்கே உத்தரவு இடப்பட்டிருக்கிறது. வருகிற அந்த அறிக்கையின் அடிப்படையிலே தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். யார் தவறு செய்திருந்தாலும், எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.



**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 174,29,63,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." என்னும் மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று மணிக்கு மேல் ஆகிறது. திரு. ஆஸ்டின், 4-30 மணிக்கு அங்கே வேறு போக வேண்டும்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த அவையில் பேச வாய்ப்பளிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(எம்.ஜி.ஆர். அ.இ.அ.தி.மு.க.-வின் சார்பில் ஆஸ்டின் வெளிநடப்பு செய்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் போவதற்கு கொஞ்சம் நேரத்திற்கு முன்னாலே போகிறார்; அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்படி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், தவறாகச் சொல்லவில்லை. நான் நேரம் ஆகிறது என்பதைக் குறிப்பிட்டு உங்கள் உறுப்பினரையே யாரையும் பேச விடாமல் அமர வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு மேலாகப் போய் திரு. ஆஸ்டின் அவர்கள் நேரத்தை வீணாக்குகிற வகையிலே ஒரு கேள்வியைக் கேட்க முற்படுகிறார். (குறுக்கீடுகள்) இப்போது நான் ஒன்றும் தவறாக விமர்சனம் பண்ணவில்லை. (குறுக்கீடு) தவறான விமர்சனம் ஒன்றும் பண்ணவில்லை. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் சொல்கிற குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு chance கொடுங்கள்.

[2001 செப்டம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள், சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உங்களிடத்திலே கேட்டேன். சரி என்று நீங்கள் ஒத்துக்கொண்டீர்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியில் வாய்ப்புத் தருவதாகச் சொன்னீர்கள், நானும் அமைதியாக இருந்தேன். இப்போது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆமாம். உங்களிடத்திலே கேட்டேன். நீங்கள் சரி என்று சொன்னீர்கள். ஆரம்பித்துவிடலாமா என்று கேட்டேன். (குறுக்கீடு) 4-30 மணி அளவிலே கூட்டம் வேறு இருக்கிறது. இருக்கின்ற நிலைமையை வைத்துத்தான் நான் சொன்னேன். 3-30 மணி அளவிலே அமைச்சரவைக் கூட்டம் வேறு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நிலைமை அதுதான். பிரச்சினை அதுதான். நேரம், நிகழ்ச்சி நெருக்கடிதான் பிரச்சினையே தவிர, மற்றபடி உங்களைப் பேசவிடக்கூடாது என்பது என்னுடைய கருத்தல்ல. எந்தக் கருத்தை வேண்டுமானாலும் பேசலாம். அதற்குத்தான் சட்டமன்றம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) சரி, என்ன சொல்ல வேண்டும் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய அவசரம் எனக்குப் புரிகிறது. நான் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. நான் முதலிலே கேட்டேன். கொடுத்தீர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அவர், கூட்டுறவு வங்கிகளில் நிறைய ஆட்களை எல்லாம் போட்டதாகச் சொன்னார். யார் என்ன தப்பு பண்ணினாலும் நடவடிக்கை எடுப்பதில் நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், 1991 முதல் 1996 வரையில் அப்படி ஏதாவது நியமிக்கப்பட்டதா என்பது ஒன்று.

இரண்டாவது G.O. ஒன்று சொன்னார். அதாவது டெண்டர் விட்டு கடைசி நேரத்தில் எல்லாம் பண்ணி இந்தமாதிரி பண்ணிவிட்டார்கள் என்று சொன்னார். அதுகூட தப்பாகத்தான் எடுத்துக்கொண்டோம். ஒன்றே ஒன்று. ஒரு G.O. போட்டு cancel பண்ணினீர்கள் என்று சொன்னார்.



2001 செப்டம்பர் 10] [திரு. துரைமுருகன்]

இன்னொரு G.O. 39 என்று பெயர். அது என்ன என்று கேட்டால் நீங்கள் டெண்டர் விடுகையில் நீங்கள் தான் L.1 ஆகிவிடுவீர்கள். Lowest ஆகிவிடுவீர்கள். Lowest என்றால் 2-க்குத்தான் contract கொடுக்க வேண்டும். அதுதான் சட்டம். L.1-க்கு அரசாங்கம் நினைத்தால்தான் அந்த L.1-க்குக் கொடுக்கும். இல்லை என்றால் கொடுக்காது. அப்படி ஒரு G.O.-வை டாமினில் போட்டு வைத்திருந்த ஆட்சி அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. அந்த G.O.-வை ரத்து செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, ஊழலைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்)

பிற்பகல் 3-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 39 G.O.-வை ரத்து செய்துவிட்டு டெண்டர் என்ற ஒரு போர்வையிலே வந்து ஆற்றிலே மணல் எடுப்பதிலே கட்சிக்காரர்களைத் தவிர யாருக்குமே கொடுக்கவில்லையென்று, யாரையுமே கேட்கவில்லை என்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலையை நடைமுறைப்படுத்தி ஆற்று மணலில் கொள்ளை அடிப்பதற்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) கருப்புக் கல்லிலே கொள்ளையடிப்பதற்காகவும் வசதியாக Tender-cum-Auction என்று கொண்டுவந்து அந்த டெண்டரிலே யாருக்குமே அனுமதி தராமல் கடந்த கால ஆட்சியில்தான் அந்த முறைகேடு நடந்தது, கொள்ளை அடிக்கப்பட்டது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

## (ஆ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.



திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திரு ஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

“நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1694,44,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிறகு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-9-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

65. 1999-2000-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

66. 1999-2000-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

94. மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 2001-2002 (தமிழ், ஆங்கிலம்).

95. மானியக் கோரிக்கை எண் 34—உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு-I

(57 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 23

### கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு

### 2001-2002

### அத்தியாயம் 1

### கூட்டுறவு ஒரு கண்ணோட்டம்

**1. முன்னுரை**

உலகெங்கிலுமுள்ள கூட்டுறவுகள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் செயலாக்கமிக்க, ஆற்றல் வாய்ந்த கருவிகளாக உருவெடுத்துள்ளன. தமிழகக் கூட்டுறவு இயக்கம் கடந்த பத்தாண்டுகளில், பொருளாதாரத்தின் பல்வேறு வகைப்பட்ட பகுதிகளில் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. பொருளாதார நடவடிக்கையில் கூட்டுறவுகள் தொடாத முக்கியத் துறை எதுவுமில்லை. வேளாண் கடன், சந்தைத் தலையீடு, வேளாண்மைப் பொருட்களுக்கான ஆதரவு விலை மற்றும் பொது விநியோகம் போன்ற பல முக்கிய கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கான கருவியாகக் கூட்டுறவுகள் கருதப்படுகின்றன.

சிறிய தொடக்கத்திலிருந்து தமிழகக் கூட்டுறவு இயக்கம் கடந்த ஆண்டுகளில் பலத்துடன் வளர்ந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 1904-ஆம் ஆண்டு திரூர் கிராமத்தில் தொடங்கப்பட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கம் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கத்தின் தொடக்கத்தை அறிவித்து, மாநிலத்தில், குறிப்பாக வேளாண்மைக் குடும்பங்களின் சேவையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்துள்ளது. தொடக்க வங்கிகளிலிருந்து விற்பனைச் சங்கம் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைவரை பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் மக்களுக்கு கூட்டுறவுகள் சேவை புரிகின்றன. 1.47 கோடி குடும்ப அட்டைதாரர்களை உள்ளடக்கி, கூட்டுறவுகள் நடத்தும் நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துடன் சேர்ந்து மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிக்கின்றன.

## 2. சாதனை மற்றும் திட்டம்

கூட்டுறவுத் துறையின் முதன்மையான பணிகள் வேளாண் கடன், விளை பொருட்களின் விற்பனை, உரம் மற்றும் நுகர்பொருள்களின் விநியோகம் போன்றவை ஆகும். இப் பணிகளில் 2000-2001-ஆம் ஆண்டில் எய்திய முன்னேற்றம் மற்றும் 2001-2002-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடுகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | விவரம் | அலகு | 2000-2001-ஆம் ஆண்டில் அடைந்த முன்னேற்றம் | 2001-2002-ஆம் ஆண்டுக்கான உத்தேச திட்டம் | 2001-2002-ஆம் ஆண்டில் ஜூன் 2001 வரை அடைந்த முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | குறுகிய கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | ரூபாய் கோடியில் | 1049.26 | 1200.00 | 261.30 |
| 2. | அ. நடுத்தர கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | ” | 69.06 | 110.00 | 14.20 |
| | ஆ. நகையீட்டுக் கடன் வழங்குதல் | ” | 3656.21 | 5000.00 | 907.97 |
| | இ. வேளாண் விளைபொருள் ஈட்டுக்கடன் | ” | 28.53 | 35.00 | 4.96 |
| 3. | நீண்ட கால வேளாண்மைக் கடன் வழங்குதல் | ” | 202.17 | 250.00 | 8.46 |
| 4. | தொழில் புரிவோர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்கள் | ” | 36.81 | 140.00 | 9.09 |
| 5. | வீடுகட்ட கடன் வழங்குதல் | ரூபாய் கோடியில் | 130.30 | 125.00 | 41.72 |
| 6. | இரசாயன உரங்கள் வழங்குதல் | ” | 252.00 | 290.00 | 53.50 |
| 7. | நுகர்பொருள்கள் சில்லறை விற்பனை செய்தல் | ” | 2166.48 | 2260.00 | 556.48 |
| 8. | கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சுப் பணி செய்தல் | ” | 20.11 | 26.00 | 4.57 |
| 9. | அ. விற்பனையுடன் இணைந்த கடன் வசதி | ” | 1.58 | 2.00 | 0.28 |
| | ஆ. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்த கடன் வசதி | ” | 6.37 | 10.00 | 1.34 |
| 10. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர்களுக்கு நிதியுதவி அளித்தல் (வாம்ப்ஸ்) | ” | 15.11 | 20.20 | 4.20 |
| 11. | கிடங்கு கொள்திறன் வசதியைப் பயன்படுத்துதல் | இலட்சம் மெ. டன்னில் | 5.53 | 6.00 | 5.79 |



## 3. வளர்ச்சித் திட்டங்களுக்கானச் செலவு

கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2000-2001-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள், 2001-2002-ஆம் ஆண்டின் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் 2001-2002-ஆம்

[2001 செப்டம்பர் 10

ஆண்டின் திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் விவரங்கள் | 2000-2001 ஆம் ஆண்டின் மொத்த செலவுகள். | 2001-2002 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 2001-2002 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| அ. மாநிலத் திட்டப் பணிகள் | | | |
| 1. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் | 0.0494 | 0.0478 | 0.0465 |
| 2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் பாதுகாப்பு நிதி மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களில் முதலீடு உட்பட) | 26.3798 | 1.5992 | 1.5938 |
| 3. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 0.1070 | 0.0661 | 0.2661 |
| 4. பழங்குடியினர் துணைத் திட்டம் | 0.9000 | 0.9000 | 0.9000 |
| 5. சிறப்பு கூறுகள் திட்டம் | 0.2500 | 0.2500 | 0.2500 |
| மொத்தம் .. | **27.6862** | **2.8631** | **3.0564** |
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய அரசும் மாநில அரசும் சமமாக பங்கேற்கும் திட்டங்கள் | 0.5550 | 0.1008 | 0.1008 |
| இ. தன்னாட்சி நிறுவனங்கள் நிதியுதவி பெறும் திட்டங்கள் | 6.4163 | 3.8423 | 3.8423 |
| ஈ. திட்டத்தில் சேராதது | 51.5141 | 64.0747 | 172.0059 |
| ஆக மொத்தம் .. | **86.1716** | **70.8809** | **179.0054** |



2001 செப்டம்பர் 10]

**4. 2001-2002 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள்**

**(i) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுக்கு விளிம்புத் தொகை நிதியுதவி :**

பொது விநியோகத் திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்திவரும் மொத்த விற்பனை பண்டக சாலைகளில் போதுமான உபரிநிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் அவை மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து தேவையான அளவு காசுக்கடன் பெற்று கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையை மேற்கொள்ள இயலவில்லை. எனவே அவை காசுக்கடன் பெற ஏதுவாக அரசு அவைகளுக்கு விளிம்பித்தொகை நிதியுதவி அளிக்கிறது. புதியதாக பதிவு செய்யப்பட்ட நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இத்தகைய நிதி உதவியுடன் அதன் வியாபாரத்தை மேம்படுத்த இயலும். எனவே, அதன் வளர்ச்சிக்காக 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் நிதியுதவி அரசால் வழங்கப்படவுள்ளது.

**(ii) 15 வட்டார துணைப் பதிவாளர்களின் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி :**

15 வட்டார துணைப்பதிவாளர்களின் அலுவலகங்களுக்கு இதுவரை தொலைபேசி வசதி செய்து தரப்படவில்லை. இவ்வாண்டு 5.73 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

**(iii) மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைத்தல் :**

9 ஆம் ஐந்தாண்டு திட்டத்தில் மாநிலம் முழுவதும் 500 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்படவேண்டும் என திட்டமிடப்பட்டிருந்தது. இதுவரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுகளும் சேர்ந்து நாடு முழுவதும் 269 நிலையங்களை அமைத்துள்ளன. இந்த ஆண்டு மேலும் 27 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் 60.75 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுறவுகளால் அமைக்கப்படவுள்ளன.

[2001 செப்டம்பர் 10

## அத்தியாயம் - 2

## கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேர்தல் நடத்துதல்

கூட்டுறவு நிறுவனங்களில் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களில் இருந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்ற நிலையில், அப்பதவிக் காலத்தை 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 33(10)(ஏஏ)-ன்படி நீட்டித்து வழங்கப்பட்டுள்ளவற்றுள், எந்தெந்த நிர்வாகக் குழு உறுப்பினர்கள் நீட்டிக்கப்பட்ட காலத்தில் உள்ளனரோ அவர்களின் பதவிக் காலத்தை அரசு அறிவிக்கும் நாளில், அதாவது 25-5-2001 நாளில், முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது என்று அரசாணை எண் 204. கூ.உ.(ம)நு.பா. துறை, நாள் 25-5-2001-ல் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. புதிய நிர்வாகக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் அந்த அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 89(1)-ன்படி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள 7,844 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள 124 மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், 6 தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்களை டிசம்பர் 2001-க்குள் இரண்டு கட்டமாக நடத்தி முடிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டவுடன், மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தலைமைக் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தப்படும்.

## அத்தியாயம் - 3

## கூட்டுறவுக் கடன்

*அ. குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன் :*

*1. கடன் கட்டமைப்பு*

மாநில அளவில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மை அல்லாத பிற திட்டங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு



2001 செப்டம்பர் 10]

வங்கி நீங்கலாக), கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலம் குறுகியக் கால மற்றும் மத்தியக் காலக் கூட்டுறவு கடன் கட்டமைப்பு மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றது.

**2. தமிழ் நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி :**

மாவட்ட அளவில் இயங்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905 ஆம் ஆண்டு முதல் அதன் உறுப்பினர் சங்கங்களின் வாயிலாக வேளாண் மற்றும் வேளாண் சாராக் கடன்களை வழங்கி வருகிறது. இது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி வழங்கும் நிதியை வேளாண்மைக்காக குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடனாக வழங்கி வருவதுடன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அவற்றின் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு தனது சொந்த நிதியிலிருந்து காசுக்கடன் வழங்குகிறது.

இந்த வங்கி, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலை/சர்க்கரை ஆலைகளுக்கு காலக்கடன் நிதியுதவியும், ஏனைய தலைமைக் கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடி நிதியுதவியும் அளித்துவருகிறது.

மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த "தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி" ஒன்றினைத் தலைமை வங்கி பராமரித்து வருகிறது. 31-3-2001 அன்றைய நிலவரப்படி இந்நிதியில் 689.25 இலட்சம் ரூபாய் இருப்பில் உள்ளது.

31-3-2001 ஆம் தேதியில் தலைமை வங்கியின் பங்கு மூலதனம் அரசின் பங்குத் தொகையான ரூ.0.26 கோடியுடன் சேர்த்து 28.25 கோடி ரூபாயாகவும், ஒதுக்கீடுகள் ரூ.193.23 கோடியாகவும், வங்கியின் வைப்புத் தொகை 2,744.58 கோடி ரூபாயாகவும் உள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 31-3-2001 வரை இவ்வங்கி 1,718.69 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளது.

**3. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் :**

மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கிளைகள் பெரும்பாலும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவை ஊரக மக்களுக்கு உதவும் வகையில் கூட்டுறவுகளுக்கும் கிராம மக்களுக்கும் பெரும் பணியாற்றி வருகின்றன.

[2001 செப்டம்பர் 10

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் பெற்றும், வேளாண் தேவைகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கடன் வழங்குகின்றன. தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடம் நிதியுதவி பெற்று, தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவை உதவுகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண் சாரா தொழில்களுக்கும், லாரிகள், பேருந்துகள், கணினிகள், மண்வாரும் இயந்திரங்கள் வாங்கவும், வீடுகட்டவும், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைக்கவும், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைக்கவும், உறுப்பினர்களின் குழந்தைகள், மருத்துவம், பொறியியல் தொழிற் கல்வி பயிலவும்கூட கடன் உதவி அளித்து வருகின்றன.

31-3-2001 ஆம் நாளன்று மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அரசுப் பங்குத் தொகையான ரூ.63.81 கோடியையும் சேர்த்து ரூ.253.20 கோடியளவிற்கு பங்குத் தொகை கொண்டுள்ளன. மேலும் இவ்வங்கிகளில் ஒதுக்கீடுகள் ரூ.584.81 கோடியாகவும், வைப்புத் தொகைகள் ரூ.6317.25 கோடியாகவும் உள்ளது. இவற்றின் நடைமுறை மூலதனம் ரூ.8967.27 கோடி அளவை எட்டியுள்ளது.

## 4. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

மாநிலம் தழுவிய அளவில் 4589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 15 மாதங்களில் திருப்பிச் செலுத்தக் கூடிய குறுகிய காலக் கடன்களையும், 3 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய, பால்பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை அமைத்தல் முதலான வேளாண் சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தர காலக் கடன்களையும் இவை வழங்கி வருகின்றன. நடுத்தர காலக் கடன்களில் ஏறத்தாழ 65 விழுக்காடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. 10 ஏக்கர் வரை பதிவு செய்யப்பட்ட கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு சொந்த ஜாமீன் பேரில் பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், பூச்செடிகள் மற்றும் பழவகை போன்ற பயிர்களுக்கும் 45,000 ரூபாய் வரையில் கடன் வழங்கப்படுகின்றது.



2001 செப்டம்பர் 10]

2001 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய வைப்புத்தொகை திரட்டும் பணியினை மேற்கொண்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 3196.99 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகை திரட்டியுள்ளன.

இவ்வங்கிகள், வேளாண் தொழில்களுக்கு மட்டும் அல்லாது, வேளாண் நிலம் வாங்கவும், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்கவும் கடன் வசதி அளிக்கின்றன. இவ்வங்கிகள், வீட்டு வசதிப்பொருட்கள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள், இரு சக்கர வாகனங்கள், டிரக்குகள், வீட்டுமனைகள் வாங்கவும், வீடுகளை பழுதுபார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்கு சேவை மையங்கள் துவக்கவும், தமது வைப்புத் தொகைகளை பயன்படுத்தி கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

## 5. கடன் வழங்கு பணிகள் முன்னேற்றம்

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் 1997-98, 1998-99, 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டு வரை குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள் வழங்கும் பணியில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:—

| ஆண்டு | குறுகிய கால பயிர்/சாகுபடிக் கடன்கள் | | துணைத் தொழில்களுக்கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப் பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய மற்றும் நடுத்தர) |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | குறியீடு | சாதனை | |
| | (ரூபாய் கோடியில்) | | | | |
| 1997-1998 | 800.00 | 697.99 | 70.00 | 100.74 | 798.73 |
| 1998-1999 | 925.00 | 732.12 | 100.00 | 117.13 | 949.25 |
| 1999-2000 | 1050.00 | 879.04 | 100.00 | 111.73 | 990.77 |
| 2000-2001 | 1200.00 | 1049.26 | 110.00 | 69.06 | 1118.32 |

மேற்கண்ட ஆண்டுகளில் வேளாண்மை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு வந்துள்ள கடன் தொகையின் அளவு சீராக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. வளர்ந்து வரும் வேளாண் கடன் தேவைகளை கருத்தில் கொண்டு 2001-2002 ஆம் ஆண்டில் 1200.00 கோடி ரூபாய்

அளவிற்கு குறுகியக் கால கடன்கள் வழங்கவும், 110.00 கோடி ரூபாய் அளவிற்கு நடுத்தரக் காலக் கடன்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதே போன்று பண்ணை சாரா நோக்கங்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக, 1997-98, 1998-99, 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட கடன் விபரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | பண்ணை சாராக் கடன்கள் வழங்குதல் | |
|---|---|---|
| | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் |
| 1997-1998 | 20.60 | 6.60 |
| 1998-1999 | 25.48 | 33.49 |
| 1999-2000 | 48.17 | 67.88 |
| 2000-2001 | 84.74 | 57.02 |

2001-2002 ஆம் ஆண்டு பண்ணை சாரா செயல்பாடுகளுக்கும் மற்றும் சிறு போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்கும் 200.00 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 6. நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குதல்.

மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நெறிமுறைகளின்படி வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்கு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 67 விழுக்காடு



அளவிற்கும் நடுத்தர காலக் கடனில் 95 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1997-98, 1998-1999, 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளில் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட குறுகியக் கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | ஆண்டு | குறியீடு (விழுக்காடு) | சாதனை நலிந்த பிரிவினருக்கு வழங்கப் பட்ட கடன் தொகை | வழங்கப் பட்ட மொத்த கடனின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1. | குறுகியக் காலக் கடன் | 1997-1998 | 67 | 429.47 | 61.5 |
| | | 1998-1999 | 67 | 461.13 | 63.0 |
| | | 1999-2000 | 67 | 554.14 | 63.0 |
| | | 2000-2001 | 67 | 652.01 | 62.1 |
| 2. | நடுத்தரக் காலக் கடன் | 1997-1998 | 95 | 89.97 | 89.3 |
| | | 1998-1999 | 95 | 99.52 | 85.0 |
| | | 1999-2000 | 95 | 90.48 | 81.0 |
| | | 2000-2001 | 95 | 54.37 | 78.7 |

2000-2001 ஆம் ஆண்டில் குறுகி[illegible]னில் 14 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 30 வி[illegible]ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கிடத் தி[illegible]து. 2001 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் இக்கட[illegible]யே 8.8 விழுக்காடு அளவிற்கும் 17.5 விழுக்காடு [illegible]வழங்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் குறுகிய[illegible]ில் 14 விழுக்காடும், மத்தியக் காலக் கடனில் 30 விழு[illegible]பிரிவினருக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 10

7. விவசாயி கடன் அட்டை திட்டம்

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட விவசாயி கடன் அட்டை திட்டத்தை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் விவசாயி கடன் அட்டை திட்டத்தை தற்போது செயல்படுத்தி வருகின்றன. 30-4-2001 வரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 5,18,425 விவசாயிகளுக்கு கடன் அட்டைகளை வழங்கி, அவற்றிற்கு 1,01,328.90 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வழங்கியுள்ளன.

8. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்

(அ) பயிர் சாகுபடிச் செலவிற்கென குறுகிய காலக் கடனும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தர காலக் கடன் வசதி பெற்று தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள, ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலிருந்தே செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பங்கு மூலதனம் செலுத்துவதற்காக, ஒவ்வொரு நபருக்கும் அரசு 100 ரூபாய் மானியமாக வழங்கி வருகிறது. இவ்வாறாக அரசு அளித்து வந்த 110.00 இலட்சம் ரூபாய் அளவிலான மானிய உதவியுடன், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1,10,000 ஆதிதிராவிடர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை 1988-89 முதல் மைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு வரையில் 1,25,092 பேர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு ரூ.125.092 இலட்சம் மானியமாக மத்திய அரசு வழங்கியுள்ளது. இதுவரை 2,35,092 ஆதிதிராவிடர்களுக்கு மாநில/மத்திய அரசால் உதவி வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டாலும் சேர்ந்து செயல்படுத்தப்பட்டு, 11,100 பேர்களுக்கு 22.20 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 10]

(ஆ) அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்:

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ. 250 வழங்கப்படுகிறது. இக்கடன் 5 ஆண்டுகாலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து 2000-2001 ஆண்டுவரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 80,000 நபர்களுக்கு 2 கோடி ரூபாய் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது. தற்போது 2001 ஆம் ஆண்டிலிருந்து இக்கடன் அளவினை ரூ.250-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. கூட்டுறவு கடன் அமைப்பினை வலுப்படுத்த வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கம்

ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்குப் போதிய நிதி உதவி அளிக்கப்பட வேண்டிய உயரிய நோக்கத்தின் அடிப்படையில், குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடனமைப்புகளை வலுப்படுத்த வகுக்கப்பட்டுள்ள மைய அரசின் கொள்கை முடிவின்படி, குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டங்கள் செயல்படுத்துவதற்கென வழிகாட்டி நெறிமுறைகளை தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அறிவித்திருந்தது. அதன் அடிப்படையில் கிராமப்புற அளவில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்கள், குறுகிய கால கடனமைப்பைப் பொறுத்தவரையில், 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரையிலும் நீண்டகாலக் கடனமைப்பைப் பொறுத்தமட்டில் 1994-95 முதல் 1997-98 ஆம் ஆண்டு வரையிலும் செயல்படுத்தப்படும்வகையில் வகுக்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி செயல் திட்டங்களை முழு அளவில் செயல்படுத்திடவும், கூட்டுறவுகளுக்கு நிதி மற்றும் பிற ஆதரவுகளைத் தொடர்ந்து அளிப்பதற்கு வகை செய்யவும், மாநில அரசு, மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிகளுடன் சேர்ந்து, தனித்தனியே தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி

[2001 செப்டம்பர் 10

வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வளர்ச்சி செயல் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில அளவில் திட்டங்கள் ஆய்வு செயயப்பட்டு வருகின்றன. ஒப்பந்தக் காலம் 31-3-1999 உடன் முடிவடைந்துள்ளதால், அரசின் அறிவுரைகளின்படி தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் குறுகிய காலக் கடன் அமைப்பைப் பொறுத்தவரை ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும், தன்னாற்றல் கொண்டவைகளாகச் செய்வதுவே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். இவை தன்னாற்றலுடன் செயல்பட மண்டல இணைப் பதிவாளர்களின் தலைமையில் மாவட்டம்தோறும் சிறப்பு பணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் மாநிலம் முழுவதும் உள்ள மொத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 118 வங்கிகள் தன்னாற்றல் குன்றியவை என அறுதியிட்டு, அவற்றை பிற வங்கிகளுடன் இணைத்துவிடவோ அல்லது அவற்றைக் கலைத்துவிடவோ பரிந்துரை செய்துள்ளன. இத்தகைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எதிர்காலச் செயல்பாடு குறித்து முடிவு செய்யும் பொருட்டு, அவை ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் செயலிழந்த 14 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஏற்கெனவே கலைக்கப்பட்டுவிட்டன. 15 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தன்னாற்றல் பெற்றுவிட்டன. 31-3-2001 அன்றைய தேதியில் 89 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்தான் தன்னாற்றல் குன்றியவையாக உள்ளன. தன்னாற்றல் குன்றிய வங்கிகளை வலுப்படுத்த தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1994-95-ல் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடங்கப் பெற்றபின், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பங்கு மூலதனத்தை வலுப்படுத்த அரசு நிதி உதவி அளித்து வருகிறது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நீண்டகால இயக்க நிதியிலிருந்து நிதி உதவி பெற்று, பங்குத் தொகையில் முதலீடு செய்யப்பட்ட தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



2001 செப்டம்பர் 10]

| ஆண்டு | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | | தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
| 1994-1995 | 8 | 4.71 | 705 | 4.76 | - | - |
| 1995-1996 | 5 | 2.65 | 1640 | 15.25 | 79 | 3.96 |
| 1996-1997 | 16 | 8.23 | 851 | 3.27 | 51 | 3.33 |
| 1997-1998 | 5 | 3.61 | 922 | 3.52 | 52 | 4.02 |
| 1998-1999 | 10 | 7.91 | 973 | 4.27 | 20 | 1.81 |
| 1999-2000 | - | - | - | - | - | - |
| 2000-2001 | - | - | 42 | 0.19 | - | - |

**10. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புத் தொகைக்கு உத்தரவாதம் அளித்தல்:**

மாநிலத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை உத்தரவாதத் திட்டம் ஒன்று 1-4-1992 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புத் தொகைகளுக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உத்தரவாதம் அளிக்கின்றன. தமது வைப்புத் தொகை பாதுகாப்பாக உள்ளது என்ற நம்பிக்கையை வைப்புத் தொகை செலுத்தியவர்களுக்கு ஏற்படுத்தி, அதன்மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அதிக அளவில் வைப்புத் தொகை திரட்டிட வழிவகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வங்கிகளின் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படவும், வைப்புத் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு வழிவகை செய்யவும் இதற்கென ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் உத்தரவாத நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வைப்புத் தொகைக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் உத்தரவாத நிதிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்:—

| | |
|---|---|
| அ. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | 0.15 விழுக்காடு |
| ஆ. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | 0.10 விழுக்காடு |
| இ. மாநிலக் கூட்டுறவு வங்கி | 0.05 விழுக்காடு |

[2001 செப்டம்பர் 10

1-4-1994 முதல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்டுள்ள வைப்புத் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| நாள் | வைப்புத் தொகை அளவு (ரூ. கோடியில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 31-3-1994 | 465.69 | 30 |
| 31-3-1995 | 598.60 | 29 |
| 31-3-1996 | 827.84 | 38 |
| 31-3-1997 | 1,180.75 | 43 |
| 31-3-1998 | 1,645.85 | 39 |
| 31-3-1999 | 2,045.47 | 24 |
| 31-3-2000 | 2,764.46 | 35 |
| 31-3-2001 | 3,196.99 | 16 |

**11. கடன் வசூல் பணி:**

எந்த ஒரு கூட்டுறவு கடன் நிறுவனமும், தான் வழங்கிய கடன்களை தவணை தேதிக்குள் வசூல் செய்வதைத் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். கூட்டுறவு கடன் நிறுவனங்களின் நிதிநிலை, கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதைப் பொறுத்துத்தான் அமையும். கடன் வழங்கு திட்டங்களில் ஓரளவிற்கு தவணை தவறிய கடன்கள் இருப்பது தவிர்க்க இயலாதது என்ற போதிலும், எந்த ஒரு கடன் வழங்கு நிறுவனமும், அதிக அளவு தவணை தவறிய கடன் நிலுவையைத் தாங்க இயலாது. தவணை தவறிய கடன் அளவினைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதிச் சுழற்சி செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, அதனால் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிவிடும் சூழ்நிலை உருவாகக் கூடும். அத்துடன், அவற்றின் வியாபாரத்தை மேம்படுத்த இயலாத நிலையும் ஏற்பட்டு விடும். தாம் பெற்ற கடனை தவணை தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான் அவர்களால் பருவகால வேளாண்மைத் தேவைகளுக்குத்



2001 செப்டம்பர் 10]

தொடர்ந்து மேலும் கடன் வசதி பெற இயலும். தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து முழுஅளவில் மறுநிதியுதவி பெற ஏதுவாக வசூல் பணியைத் தீவிரப்படுத்தவும், தவணை தவறிய கடன்களின் அளவைக் குறைப்பதற்கும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் முயற்சி செய்து வருகின்றன. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாவட்டத்தில் வெளிவரும் தினசரிகளில் விவசாயிகளைக் கூட்டுறவு நிலுவைகளுக்குச் செலுத்தப்படவேண்டிய தொகைகளைச் செலுத்துமாறு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், தவணை தவறிய கடன்களின் நிலுவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

| தேதியன்று | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அளவில் | | |
|---|---|---|---|
| | நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில் தவணை தவறிய நிலுவையில் சதவீதம் |
| 30-6-1992 | 1,114.32 | 444.06 | 41.4 |
| 30-6-1993 | 1,435.79 | 398.71 | 31.8 |
| 30-6-1994 | 1,533.63 | 397.62 | 27.5 |
| 30-6-1995 | 1,719.94 | 418.80 | 24.8 |
| 30-6-1996 | 2,048.95 | 576.30 | 29.8 |
| 30-6-1997 | 2,236.74 | 653.69 | 28.7 |
| 30-6-1998 | 2,982.01 | 835.83 | 32.4 |
| 30-6-1999 | 3,382.94 | 905.77 | 32.2 |
| 30-6-2000 | 3,985.15 | 974.99 | 28.8 |
| 30-6-2001 | 4,443.05 | 1,157.70 | 31.4 |

[2001 செப்டம்பர் 10

**12. விவசாயிகளுக்கு 2001 ஆம் ஆண்டின் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி திட்டம்:**

1992-ல் இதே அரசு பொறுப்பேற்றிருந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் பயன்பெறும்பொருட்டு ஒரு போனஸ் திட்டத்தை அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் 2001-ல் பொறுப்பேற்றவுடன் 1992-ல் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தின் அடிப்படையிலேயே "வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி திட்டம், 2001" என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு அரசு கீழ்க்கண்ட நிவாரணத் திட்டத்தை அறிவித்துள்ளது.

கூட்டுறவு வங்கிகளில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த குறுகிய கால, மத்திய கால மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களின் 30-6-2000 அன்றுள்ளபடியான தவணை தவறிய அசலையும், மற்றும் 1-7-2000 முதல் 31-8-2001 வரையில் ஏற்படும் தவணைத் தொகைகளையும் 30-9-2001-க்குள் முழுவதுமாகவோ அல்லது ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், 2001 ஆகிய மூன்று மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் கடன்தாரர்களுக்கு 30-6-2000 அன்றுள்ளபடியான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 31-8-2001 வரை 2,29,859 விவசாயிகளுக்கு 70.23 கோடி ரூபாய் அளவில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு, அரசு ஈடுசெய்யும். இவ்வாறு கடன் தொகையைச் செலுத்த முன்வரும் அனைத்து விவசாயிகளுக்கும் இவ்வுதவியை விரிவுபடுத்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

***13. நகைக் கடன்***

கிராமப்பகுதிகளில் வாழ்ந்து வரும் நலிவுற்ற பிரிவினர் தமது அவசரத் தேவைகளுக்காக அதிக வட்டிக்கு அடகு வணிகர்களிடம் கடன் பெற்று அவதியுறும் நிலையைக் களையும் நோக்கத்தில், அவர்கட்கு கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் 4400.00 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டு 3,656.21 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் நிதியாண்டில் 5000.00 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

***14. சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்***

இத்திட்டத்தின்கீழ், பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியனவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்வோர், மற்றும் பெட்டிக்கடை நடத்தும் மகளிரும், தேவைக்கேற்ப ரூ.100, ரூ.200, ரூ.500, ரூ.1500 என்ற அளவில்



2001 செப்டம்பர் 10]

அதிகபட்சம் ரூ.5000/- வரை கடன் வசதி பெறலாம். பயனாளிகளின் தேவைக்கேற்ப தினசரி காலை அல்லது மாலை நேரத்தில் கடன் வழங்கப்படும். நூறு ரூபாய் கடனுக்கு அவர்கள் தினசரி ஒரு ரூபாய் மட்டுமே செலுத்த வேண்டி வரும். இந்த ஒரு ரூபாயிலும் 85 காசுகள் அவர்களது சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். மீதமுள்ள 15 காசுகளில் 10 காசுகள் சேவைக் கட்டணமாகவும், 5 காசுகள் வட்டிக்காகவும் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். சேவைக் கட்டணமாக 10 காசுகளை வசூலிப்பது தற்போது இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் வங்கிகளின் முடிவுக்கே விடப்பட்டுள்ளது. வங்கிகள் சேவைக் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என முடிவெடுக்கும்பட்சத்தில், இந்த 10 காசும் பயனாளிகளின் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். ஆறு மாதங்களுக்குப் பிறகு பயனாளிகள் அவர்கள் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையை வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகள் ஒருவருக்கொருவர் கடனைத் திருப்பிச் செலுத்தப் பொறுப்பேற்று பிணை நிற்கலாம். பயனாளிகள் தமது வசதிக்கேற்ப அவர்களே நேரில் வந்து கடன் தொகையை வங்கியில் திருப்பிச் செலுத்தலாம் அல்லது அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்திலேயே வங்கி அலுவலரிடம் தொகை செலுத்தலாம்.

சிறுவணிகக் கடன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 31-7-2001 வரையில் 1,91,779 நபர்களுக்கு 27.89 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் 25 இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் வைப்புத் தொகை கொண்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 31-7-2001 வரையில் 20378 மகளிர் பயனாளிகளுக்கு 2.88 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, ஊரகப் பகுதிகளில், சுய உதவிக் குழுக்களுக்கு சிறு வணிகக் கடன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வங்கிகளில் 15,259 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, உறுப்பினராக ஆறு மாத காலத்தைப் பூர்த்தி செய்த 1,852 சுய உதவிக் குழுக்களுக்கு 7.85 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் மேலும் பலர் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும்கூட இந்த சுய உதவிக் குழுக்களை உறுப்பினர்களாகச் சேர்த்து கடன் பெறச் செய்யலாமென ஆணையிட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 10

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை நீக்கவும் மற்றும் அதிக மகளிர் பயன்பெறும்பொருட்டும், அரசு இத்திட்டத்தினைச் சீரமைக்க உத்தேசித்துள்ளது.

## 15. தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம்

இந்திய அரசு "தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை ராபி 1999-2000 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டில் இத்திட்டம் காரிப் 2000 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தின்கீழ் நெல், கேழ்வரகு, சோளம் போன்ற உணவுப் பயிர்களுக்கும், மணிலா, எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களுக்கும், பருத்தி மற்றும் உருளை போன்ற வணிகப் பயிர்களுக்கும் காப்பீடு செய்யப்படுகிறது. சாதாரணமாக காப்பீடு செய்யும் தொகை உத்தரவாத மகசூலுக்கு 100 சதவீதமும் கூடுதல் காப்பீடாக 150 சதவீதம் வரை செய்யப்படுகிறது. மேலும் கடன்பெறும் விவசாயிகளோடு கடன் பெறாத விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கை மூலம் காப்பீடு செய்யப்பட்ட பயிர்களும் வட்டாரங்களின் எண்ணிக்கை விவரமும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது:

| | பயிர் பருவம் | | பயிர் வகைகள் | திட்டம் நிறைவேற்றும் வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1. | நெல்-I (கார்/குறுவை/ சொர்ணவாரி, 2000) | | நெல் | 136 |
| 2. | காரிப்-2000 (மற்றவகைப் பயிர்கள்) | அ. | சோளம் | 79 |
| | | ஆ. | கம்பு | 44 |
| | | இ. | ராகி | 32 |
| | | ஈ. | நிலக்கடலை | 141 |
| | | உ. | எள் | 41 |
| | | ஊ. | பருத்தி | 9 |
| | | எ. | உருளை (கோடை காலம்) | 1 |
| 3. | நெல்-II சம்பா/தாளடி/ பிசானம் | | நெல் | 237 |
| 4. | பருத்தி (1-8-2000 - 30-11-2000) | | பருத்தி (பாசனம்) | 24 |



2001 செப்டம்பர் 10]

| | பயிர் பருவம் | பயிர் வகைகள் | திட்டம் நிறைவேற்றும் வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 5. | ராபி 2000-2001 நெல்-III நவரை/ கோடை | நெல் - III | 65 |
| 6. | ராபி 2000-2001 (மற்றவகைப் பயிர்கள்) | ராகி (பாசனம்) | 25 |
| | | சோளம் (பாசனம்) | 5 |
| | | கம்பு (பாசனம்) | 10 |
| | | நிலக்கடலை (பாசனம்) | 137 |
| | | காராமணி (பாசனம்) | 15 |
| | | கொள்ளு (பாசனம்) | 3 |
| | | உருளை (பாசனம்) | 1 |
| | | நெல் (தரிசுநிலம்) பருத்தி | 11 |
| | காரிப் 2001 | நெல்-I | 137 |
| | | சோளம் (பாசனமற்றவை) | 79 |
| | | கம்பு (பாசனமற்றவை) | 44 |
| | | ராகி (பாசனமற்றவை) | 32 |
| | | எள் (பாசனமற்றவை) | 41 |
| | | நிலக்கடலை (பாசனமற்றவை) | 14 |
| | | பருத்தி (பாசனமற்றவை) | 9 |
| | | பருத்தி (பாசனம்) | 24 |

| தோட்டக்கலை பயிர் வகைகள் | | மாவட்டங்கள் |
|---|---|---|
| | உருளை | ஊட்டி |
| | மிளகாய் | தூத்துக்குடி |
| | மஞ்சள் | ஈரோடு |
| | வெங்காயம் | நாமக்கல் |

2. சிறு மற்றும் குறுவிவசாயிகள் தங்களின் பயிர்களைக் காப்பீடு செய்யும்போது காப்பீட்டு நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அளிக்கப்படுகிறது. மேற்படி மானியத் தொகையை 1:1 என்ற விகிதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன.

[2001 செப்டம்பர் 10

## ஆ) நீண்ட காலக் கடன் வழங்கும் அமைப்பு

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மாநில அளவில் தலைமை வங்கியாகவும் 181 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்டம்/வட்டார அளவிலும் செயல்படுகின்றன. இவை தமது உறுப்பினர்களுக்கு வேளாண்மைக் காரியங்களுக்காகவும், சிறுபாசனத் திட்டம், தோட்டப் பயிர் மற்றும் மலைப் பயிர் வளர்த்தல், கோழி வளர்த்தல், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டி வாங்குதல், பட்டுப் பூச்சி வளர்த்தல் போன்ற வேளாண் சார்ந்த காரியங்களுக்காகவும் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன. மேலும் சாதாரணக் கடன் திட்டத்தின்கீழ் கிணறுகளைப் பழுது பார்த்தல், பாசனத்திற்கு நீர்க் குழாய்கள் அமைத்தல், டிராக்டர் மற்றும் விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல், கால்நடைத் தொழுவம் மற்றும் பண்ணை வீடு கட்டுதல் போன்ற காரியங்களுக்கும் நீண்ட காலக் கடன் வழங்குகின்றன. இத்தகைய கடன்களைத் திரும்பச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையாகும்.

### 1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியை சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் திரட்டுகிறது. மாநில மற்றும் மத்திய அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வணிக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் பிற மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சாதாரண கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாநில மற்றும் மத்திய அரசுகள் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன.

1995-96 முதல் 10 இலட்சம் ரூபாய் வரை அனுமதிக்கப்பட்ட மறுநிதி வசதியின் அளவு, தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் மறுநிதிபெறும் திட்டங்களுக்கும், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்களுக்கும் மட்டுமே தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் தேவைப்படும். தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி வங்கியால் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:



2001 செப்டம்பர் 10]

| வ. எண் | வருடம் | பரிந்துரைக் கப்பட்ட திட்டங்கள் | கேட்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | தேசிய வங்கியால் அனுமதிக்கப் பட்ட திட்டங் கள் | வழங்கப் பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 1997-1998 | 6 | 0.83 | 3 | 0.40 |
| 2. | 1998-1999 | 14 | 4.37 | 13 | 4.33 |
| 3. | 1999-2000 | 6 | 0.71 | 4 | 0.64 |
| 4. | 2000-2001 | 3 | 0.70 | 2 | 0.24 |

31-3-2001 அன்றைய நிலவரப்படி வங்கியின் சொந்த நிதி ஆதாரம் 228.68 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | பங்கு மூலதனம் | 37.90 |
| 2. | சட்டரீதியான காப்பீடு | 5.65 |
| 3. | மற்ற காப்பீடுகள் (தவணை கடந்த கடனுக்கான காப்பீடு உட்பட) | 185.13 |
| | மொத்தம் | 228.68 |

சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள் முதிர்வடையும்போது, அவற்றை மீட்க ஏதுவாக, இவ்வங்கி 'கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி' ஒன்றினைப் பராமரித்து வருகிறது. அந்நிதியில் 31-3-2001 அன்றைய தேதியில் ரூ.27.43 கோடி நிலுவை உள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் செயல்படும் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்தும், திட்டங்களினால் விவசாயிகளுக்கு கிடைக்கப்பெற்ற பலன்கள் குறித்தும் ஆய்வு செய்கிறது. 31-3-2001 வரையில் 436 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

[2001 செப்டம்பர் 10

2. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கத் தேவைப்படும் நிதி ஆதாரத்தை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளிக்கிறது.

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஒன்பதாவது திட்ட காலத்தில் அளித்துள்ள நீண்ட காலக் கடன்கள் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | குறியீடு (ரூ.கோடியில்). | சாதனை (ரூ. கோடியில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1997-1998 | 226.00 | 191.60 |
| 1998-1999 | 248.60 | 212.51 |
| 1999-2000 | 273.46 | 202.17 |
| 2000-2001 | 300.80 | 202.17 |

2001-2002ஆம் ஆண்டில் 250.00 கோடி ரூபாய் அளவிற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிற துறைகளிலும் கடன் வழங்க, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது:-

(I) பண்ணை சாரா துறைகளில் நிதி வசதி அளித்தல்:

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், கிராம கைவினைஞர், கைத்தொழில் வல்லுநர்கள் மற்றும் சிறுதொழில் செய்வோருக்கு பண்ணை சாராக் கடன்கள் வழங்கும் திட்டம் 1990-91 முதல் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் கிராம மக்கள்



2001 செப்டம்பர் 10]

வேலைவாய்ப்பு பெறுவதுடன், தமது வருமானத்தையும் பெருக்கி பயன் பெற முடியும். தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் பெறுவதற்கான தகுதிகளைப் பொருட்படுத்தாமல் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 100 சதவீதம் மறுநிதியளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2.00 இலட்சம் ரூபாய் வரை கூட்டுக் கடனாகவும் 15.00 இலட்சம் ரூபாய் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்கு வருடங்களில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் வழங்கப்பட்டுள்ள பண்ணை சாராக் கடன்கள் குறித்த விவரமும், 2001-2002ஆம் ஆண்டுக்கான குறியீடும் கீழே தரப்பட்டுள்ளன:-

| வருடம். | கடன் அளித்த விவரம் (ரூபாய் கோடியில்). |
|---|---|
| (1) | (2) |
| 1997-1998 | 75.54 |
| 1998-1999 | 83.07 |
| 1999-2000 | 75.57 |
| 2000-2001 | 61.09 |
| 2001-2002 (குறியீடு) | 80.32 |

(II) கிராமப்புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்கு கடன் வழங்குதல் :

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், சரக்குப் பேருந்து, வேன், கார், ஆட்டோ ரிக்ஷா முதலான வாகனங்கள் வாங்குவதற்கு பண்ணை சாராக் கடன் திட்டத்தின்கீழ் கடன் வழங்குகின்றன. இத்திட்டத்தின்கீழ் வாகன மதிப்பில் 85 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

[2001 செப்டம்பர் 10

### 3.' சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி

நலிந்த பிரிவினர்களுக்கு 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

| வருடம். | வழங்கப்பட்ட மொத்தக் கடன். | நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன். (ரூ. கோடியில்) | வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடனின் விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1997-1998 | 191.60 | 36.83 | 19.2 |
| 1998-1999 | 212.51 | 41.83 | 19.7 |
| 1999-2000 | 202.17 | 48.44 | 24.0 |
| 2000-2001 | 202.17 | 49.86 | 25.0 |

### 4. கடன் வசூல்

கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி, அவற்றின் கடன் வசூலைப் பொறுத்தே அமைகின்றது. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் சூன் திங்கள் 30 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டிற்குள், கடன் தவணையில் குறைந்தது 65 விழுக்காட்டிற்கும் குறையாமல் வசூல் செய்யாவிடில் அவை வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெற வாய்ப்பு இல்லை. தேசிய ஊரக வளர்ச்சி வங்கி, கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வரையறையற்ற மறுநிதி பெற நிர்ணயித்துள்ள வசூல் சதவீத வரம்பை 70 சதவீதமாக 2001-2002 ஆம் ஆண்டு உயர்த்தியுள்ளது.

அதிக அளவு கடன் வசூல் எய்துவதுவே கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாபத்துடன் இயங்குவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். இருப்பினும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கடன் பெற்றவர்கள் முன்வராத நிலை போன்றவை, தவணை தவறிய கடன் தொகை அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாகும். எனவே, இவ்வங்கிகள் கடன்தாரர்களை அடிக்கடி



2001 செப்டம்பர் 10]

நேரில் சந்தித்து அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த ஊக்கப்படுத்தி கடன் வசூல் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மட்டத்தில் 1999-2000ஆம் ஆண்டின் கடன் வசூல் 46.9 சதவீதமே ஆகும். இம்மாநிலத்தில் பெரும்பான்மையான இடங்களில் நிலவிய மோசமான பருவநிலை கடன் வசூலை இவ்வருடம் பாதித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட கடன்தாரர்களின் நடப்புக் கேட்புத் தொகையான 30.29 கோடி ரூபாய் மீதான கடன் தவணைத் தொகையை ஒத்திவைக்க ஒரு முன்மொழிவு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் தேசிய வங்கி அக்கோரிக்கையை ஏற்கவில்லை. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மட்டத்தில் 31-3-2001 தேதியன்று வசூல் 21.7 சதவீதமாகவே உள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் அளவில் கடன் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:—

| தேதியளவில் | கடன் நிலுவைத் தொகை (ரூ.கோடியில்). | தவணை கடந்த நிலுவைத் தொகை (ரூ. கோடியில்). | நிலுவை கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1997 ஜுன் 30 | 694.43 | 150.51 | 53.0 |
| 1998 ஜுன் 30 | 786.05 | 201.65 | 56.5 |
| 1999 ஜுன் 30 | 907.31 | 233.46 | 53.0 |
| 2000 ஜுன் 30 | 998.34 | 278.63 | 53.1 |
| 2001 ஜுன் 30 | 1068.38 | 353.11 | 62.9 |

### 5. பொய்த்த கிணறுகள் இழப்பீடு நிதி

"பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதித் திட்டம்" என்ற திட்டம் 1-7-1986 முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று,

கிணறுகள் தோண்டி அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகட்கும் 100 விழுக்காடு அளவிற்கு இந்நிதியிலிருந்து மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் அசலுக்கான மானியம் மாநில மற்றும் மத்திய அரசுகளினால் சரிசமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. வட்டிப் பகுதியைப் பொறுத்த மட்டில் தேசிய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திட்டங்கள் சார்ந்த கடனாக இருந்தால் அவ்வங்கியும், சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியும், செலவினை சம அளவில் பகிர்ந்து கொள்கின்றன. இதர சாதாரண திட்டம் சார்ந்த கடன்களாக இருந்தால் முழு வட்டித் தொகையையும் சம்பந்தப்பட்ட வங்கிகள் முழு அளவிலும் தள்ளுபடி செய்து தம் சொந்த நிதியிலிருந்து ஏற்றுக் கொள்கின்றன. 1993-94 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கான நிதியுதவியினை மத்திய அரசு நிறுத்தி விட்டது. இத்திட்டத்தின் கீழ் 366 பொய்த்த கிணறுகளுக்கு, 56.13 இலட்சம் ரூபாய் அளவிற்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### இ. நகர்ப்புறக் கடன்

தற்போது தமிழகத்தில் 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவ்வங்கிகள் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் தரப்புப் பிரிவினரிடமிருந்து வைப்புத் தொகைகளைச் சேகரித்து அவற்றைத் தெரிவு செய்யப்பட்ட காரணங்களுக்குக் கடனாக வழங்க பயன்படுத்தி வருகின்றன. நகரப் பகுதிகளைச் சார்ந்த சிறுவியாபாரிகள், கை வினைஞர்கள் ஆகியோருக்கும், நடுத்தர பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்கும், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடல் போன்றவற்றிற்கும் கடன் வழங்கி உதவி வருகின்றன. 1-4-2000 முதல் 31-3-2001 வரையில் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக ரூ.1738.12 கோடி அளவிற்கு கடன்களை இவ்வங்கிகள் வழங்கி உள்ளன. இவ்வங்கிகளின் வைப்புத் தொகை 31-3-2001 அன்றைய நிலவரப்படி ரூ.2760.40 கோடி ஆகும். இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி,



இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை துறைகளுக்கு வழங்கிட வேண்டும். அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும் இருந்திடல் வேண்டும்.

### 2. அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத்திட்டம்

நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1992-93 ஆம் ஆண்டிலிருந்து 2000-2001 ஆம் ஆண்டு வரை நகரக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 16,017 நபர்களுக்கு 80.00 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது.

அதேபோன்று நகரக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள பெண் உறுப்பினர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்க தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் வட்டியில்லாக் கடனாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு காலத்தில் சம தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் 1000 பெண் உறுப்பினர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 3. நகர்ப்புற கடன்கள் மூலம் வேளாண்மை சார்பற்ற கடன்கள்

நகரக் கூட்டுறவு வங்கிகள் வேளாண்மை சாரா பிரிவினைச் சார்ந்த குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் வேளாண்மை சாரா சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு 90.00 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்க திட்டமிடப்பட்டதில் 150.73 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 72,387 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

[2001 செப்டம்பர் 10

## அத்தியாயம் 4

### தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

புதுடில்லி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவியுடன் விவசாய மற்றும் தொடர்புடைய பிரதம கூட்டுறவுகளின் வணிக அளவை பன்முகப்படுத்தி பெருக்க, மாநிலத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாயத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி சார்ந்த அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், கூட்டுறவுகளின் உள்ளமைப்பு வசதிகளை செம்மைப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட முக்கியமான நோக்கங்களுக்கு உதவி அளிக்கப்படுகின்றது:

1. திட்ட அறிக்கை தயாரித்தல்

2. உள்ளமைப்பு வசதிகளை உருவாக்குதல்

3. நடைமுறை மூலதனத்தை அதிகரிக்க வங்கிகளிலிருந்து நிதி உதவி பெற விளிம்புத் தொகை உதவி அளித்தல்

4. தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் சம்பளம் பெறும் மேலாண்மையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

5. உறுப்பினர் கல்வி மற்றும் விளம்பரம் செய்தல்

6. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் செயல் மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை அளித்தல்; மற்றும்

7. மின்னணு விவர வகைப்பாட்டு முறை உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் திட்டச் செயலாக்கம்.

2. விருதுநகர், முன்னாள் தென்னாற்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு இதுவரை ஒப்பளித்துள்ளது.

3. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை 4 மாவட்டங்களில் செயல்படுத்தலாமென அரசு முடிவெடுத்துள்ளது. மாவட்டங்களின் பெயர்கள் விரைவில் முடிவெடுக்கப்படும்.



2001 செப்டம்பர் 10]

## அத்தியாயம் 5

### கூட்டுறவின் மூலம் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய நிறுவனங்கள், இரசாயன உரங்கள் மற்றும் இதர விவசாய இடுபொருட்களான விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய உபகரணங்களை 4,355 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 82 மேலாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நடத்துதல் மூலம் 5,678 சில்லறை உர விற்பனை நிலையங்கள் வழியாக தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்து வருகின்றன. இவ்விடு பொருட்கள் சங்க அங்கத்தினர்கள் பெறும் பயிர்க் கடனில் பொருட்பகுதியாகவும், சங்க அங்கத்தினர் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு ரொக்க விற்பனை மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன.

2. 1998-99, 1999-2000 மற்றும் 2000-2001ஆம் ஆண்டுகளில் விநியோகம் செய்யப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் இடுபொருட்கள் பற்றிய விவரங்களும், 2001-2002-ஆம் ஆண்டுக்கான திட்டக்குறியீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வருடம் | இரசாயன உரங்கள் | விதைகள் | பூச்சிக்கொல்லி மருந்துகள் | விவசாய உபகரணங்கள் |
|---|---|---|---|---|
| 1998-1999 | 237.49 | 2.38 | 2.98 | 0.57 |
| 1999-2000 | 263.71 | 3.05 | 3.24 | 0.82 |
| 2000-2001 | 252.00 | 2.42 | 3.05 | 0.79 |
| 2001-2002 (குறியீடு) | 290.00 | 4.50 | 3.75 | 1.32 |

## அத்தியாயம் 6

### கூட்டுறவு விற்பனை, பதனிடல் மற்றும் பண்டகச் சேமிப்பு

#### 1. கூட்டுறவு விற்பனை

தற்போது தமிழ்நாட்டில் 119 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1959 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் இயங்கி வரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வாயிலாக சேவை செய்து வருகிறது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத் தேவைகளை திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் நிறைவு செய்து வருகிறது.

#### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வாயிலாக இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை விநியோகித்து, மொத்த விற்பனை அமைப்பாக செயல்படுகின்றது. 1970ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் பாமணி என்ற இடத்தில் இவ்விணையத்தால் நிறுவப்பட்ட உரக்கலவை ஆலை நாளொன்றுக்கு 120 டன் என்.பி.கே. உரக்கலவையைத் தயாரித்து வருகிறது. இவ்விணையம் மாநிலத்தில் மேலும் 8 இடங்களில் உரக்கலவை மையங்களை நடத்தி வருகிறது. பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளை பொருட்களுக்கு ஆதரவு விலைகளை வழங்கும் வகையில் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாட்டில் இவ்விணையம் செயல்பட்டு வருகிறது. 26640 மெட்ன் கொள்திறன் கொண்ட 35 சொந்தக் கிடங்குகளையும், 21355 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 36 வாடகைக் கிடங்குகளையும், சென்னையில் பேசின் பிரிட்ஜில் 1350 மெ.டன் கொள்ளவு கொண்ட ஓர் குளிர்பதனக் கிடங்கினையும், சென்னைப் புறநகர் பகுதியிலுள்ள கோயம்பேட்டில் 2500 மெ.டன் கொள்ளளவுள்ள மற்றொரு குளிர்பதனக் கிடங்கினையும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நடத்தி வருகிறது.





2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்ற நிறுவனங்களும் விற்பனை செய்த வேளாண் இடுபொருட்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | பொருள் | கூட்டுறவு விற்பனை இணையம் | | மற்ற நிறுவனம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூ.இலட்சத்தில் | அளவு (என்.பி.கே. டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | அளவு என்.பி.கே. டன்னில் | மதிப்பு (ரூ.இலட்சத்தில்) |
| 1. | இரசாயன உரங்கள் | 174222 | 21696.86 | 25360 | 3501.82 | 199582 | 25198.68 |
| 2. | பாமணி உர உற்பத்தி (மெ. டன்னில்) | 14578 | 1074.39 | - | - | 14578 | 1074.39 |
| 3. | பாமணி உர விற்பனை 17:17:17 | 14578 | 1074.39 | - | - | 14578 | 1074.39 |
| 4. | பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கியது | - | 65.40 | - | 176.84 | - | 242.24 |
| 5. | விதைகள் வழங்கியது | - | 23.20 | - | 281.67 | - | 304.87 |
| 6. | வேளாண் கருவிகள் வழங்கியது | - | 4.22 | - | 75.21 | - | 79.43 |

#### அ. வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் அங்கத்தினர்களுக்கு விவசாய விளைபொருட்களை பதனிடுதல், சேமித்தல் தவிர மற்றும் இடைத்தரகர்களின் தலையீடின்றி நல்ல விலைக்கு அவர்களது வேளாண் விளைபொருட்களை விற்பதற்கும் உதவி புரிகின்றன. வேளாண் பொருட்களை ஏல விற்பனை மூலம் வியாபாரிகளுக்கு விற்கும் பணியிலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் பணியிலும் இச்சங்கங்கள் ஈடுபடுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண் விளைபொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமும் இருந்து கொள்முதல் செய்து, நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அவற்றை விற்பனை செய்வதுடன், சந்தை விலை சாதகமாக அமையும்போது வியாபாரிகளுக்கும் விற்பனை

[2001 செப்டம்பர் 10

செய்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வேளாண் விளைபொருட்களைப் பெரிய அளவில் விற்பனை செய்கிறது.

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு 2000-2001 ஆம் ஆண்டில் (தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்/தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் உட்பட) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடும் மற்றும் எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்களும் பின்வருமாறு:—

| வ.எண் | பொருள் | 2000-2001 ஆம் ஆண்டு குறியீடு (ரூ. இலட்சத்தில்) | 2000-2001 ஆம் ஆண்டுக் எய்திய முன்னேற்றம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | நெல் மற்றும் அரிசி | | 1883.90 |
| 2. | உணவு தானியங்கள் | | 145.17 |
| 3. | பருத்தி | | 12601.28 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | | 47329.36 |
| 5. | பருப்பு வகைகள் | 37500.00 | 566.04 |
| 6. | மிளகாய் மற்றும் புளி | | 157.64 |
| 7. | வாசனைப் பொருட்கள் | | 25.76 |
| 8. | காய்கறிகள் | | 1611.85 |
| 9. | மற்றவை | | 14578.57 |
| 10. | கரும்பு | 25000.00 | 38398.53 |
| | மொத்தம் | 62500.00 | 117298.10 |

### ஆ. விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில்



2001 செப்டம்பர் 10]

உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் வேளாண் விளைபொருட்களை அவர்கள் அதிக லாபம் பெறும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விலைக்கு பகிரங்க ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்வாறு பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்குச் செலுத்தி விடுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டிற்கு குறியீடு 1.78 கோடி ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டதில் 1.58 கோடி ரூபாய் கடன் தொகைகள் இத்திட்டத்தின் மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளன. 2001-2002-ஆம் ஆண்டுக் குறியீடு 2.00 கோடி ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### இ. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்பு

ஒருபுறம் உற்பத்தியாளர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகின்றன.

2000-2001ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 8.70 கோடி ரூபாய் ஆகும். ரூ.6.37 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் கூட்டுறவு மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன. இவ்வினத்தில் 2001-2002ஆம் ஆண்டுக்கான குறியீடு 10.00 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### ஈ. விளை பொருட்களை ஈடாகப் பெற்று கடன் வழங்குதல்

சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல லாபம் பெற ஏதுவாக, அதுவரை அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குத் தேவையான கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் 15.67 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டிற்கு 20.00 கோடி ரூபாய் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 10

## 2. பதப்படுத்தும் அலகுகள்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் கீழ்க்காணும் பலவகைப்பட்ட பதனிடும் அலகுகள் விவசாயிகளுக்குப் பதனிடும் வசதிகளைக் குறைந்த செலவில் செய்து தருகின்றன. அவற்றிற்குப் பங்கு மூலதனமாகவும் கடனாகவும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும் மாநில அரசும் நிதி உதவி அளித்து வருகிறது.

| வ. எண் | பதப்படுத்தும் அலகுகளின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரிசி அரைவை ஆலை | 34 |
| 2. | பருத்தி அரைவை ஆலை | 17 |
| 3. | கடலை உடைப்பு இயந்திரங்கள் | 11 |
| 4. | எண்ணெய் தொகுப்பு மற்றும் எண்ணெய் பிழியும் ஆலை | 14 |
| 5. | பழம் பதப்படுத்தும் அலகு | 3 |
| 6. | காப்பி அரைவை ஆலை | 3 |
| 7. | காப்பி சுத்தப்படுத்தும் ஆலை | 1 |
| 8. | மரவள்ளிக் கிழங்கு ஆலை | 1 |
| 9. | மஞ்சள் அரைவை ஆலை | 2 |
| 10. | மாவு ஆலை | 4 |
| 11. | பருப்பு ஆலை | 2 |
| 12. | சேமியா அலகு | 2 |
| 13. | குளிர்பதனக் கிடங்கு | 2 |
| 14. | புளி பதப்படுத்தும் அலகு | 1 |
| 15. | சீயக்காய் அரைவை ஆலை | 2 |
| 16. | விதை பதனிடும் அலகு | 2 |
| 17. | சோப்பு உற்பத்தி ஆலை | 1 |
| | மொத்தம் | **102** |



2001 செப்டம்பர் 10]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆலைகள் 1999-2000 ஆம் ஆண்டில் 36,586 மெ. டன் பொருட்களையும், 2000-2001 ஆம் ஆண்டில் 36,510 மெட்ரிக் டன் பொருட்களையும் பதப்படுத்தியுள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக கோயம்பேடு வணிக வளாகத்தில் 185.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,500 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட கூடுதல் குளிர்பதன கிடங்கு ஒன்றினையும் நிறுவ அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3. பண்டக சேமிப்பு கிராமிய மற்றும் விற்பனைக் கிடங்குகள்

தற்போதுள்ள கிடங்குகளின் எண்ணிக்கையும் கொள்ளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| எண்ணிக்கை | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு இலட்சம் மெ.டன்னில் |
|---|---|---|
| அ. ஊரகக் கிடங்குகள் | 5,055 | 5.75 |
| ஆ. விற்பனைக் கிடங்குகள் | 261 | 1.33 |
| இ. நுகர்வோர் கிடங்குகள் | 50 | 0.31 |
| மொத்தம் | **5366** | **7.39** |

## அத்தியாயம்-7

## நுகர்வோர் கூட்டுறவு

### அமைப்பு

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு கட்டமைப்பானது, தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 36 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளையும் தொடக்க நிலையில் 2,955 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் உள்ளிட்ட 3,550 தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலைகளையும் கொண்ட மூன்றடுக்கு அமைப்பாக இயங்கி வருகிறது.

[2001 செப்டம்பர் 10

## தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் தனது முக்கிய நோக்கத்திற்கு இணங்க அண்மையில் இதர மாநிலங்களிலிருந்து வேளாண் விளை பொருட்களை அதன் உற்பத்தியாகும் இடத்திலேயே கொள்முதல் செய்திட தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இவ்விணையம் மொத்த மற்றும் தொடக்க நிலையிலான பண்டக சாலைகளுக்கு பெரிய அளவில் பட்டாசு கொள்முதலுக்கு ஏற்பாடு செய்வதுடன் காகித கொள்முதல் மற்றும் வழங்குதல் பணியும் செய்து வருகிறது. மாநிலத்திலுள்ள கூட்டுறவு அச்சகத்தின் காகித கொள்முதலானது ஒருங்கிணைக்கப்பட்டு இவ்வியாபாரத்தில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

### கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள்

கூட்டுறவு மொதத விற்பனை பண்டகசாலைகள் கட்டுப்பாட்டுப் பொருட்கள் விற்பனை செய்வதுடன் கட்டுப்பாடற்ற பொருட்களையும் வாங்கி விற்பனையையும் செய்து வருகின்றன.

சில கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் நிதி பற்றாக்குறைவினால் நலிவுடைந்துள்ளன. அவற்றை புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக சரக்கு வைப்பு மேலாண்மை, விற்பனை மேலாண்மை, கொள்முதல் மேலாண்மை மற்றும் மேலாண்மை கணக்கு முறை, நிர்வாக கணக்கு வைப்பு முறை ஆகியவற்றில் பயிற்சியளித்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளில் கணிப்பொறி அறிமுகப்படுத்துவதற்காக அனைத்து கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும் பயன்படுத்தும் வகையிலான ஒருங்கிணைந்த ஓர் மென்பொருள் (சாப்ட்வேர்) உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### நுகர்பொருள் சில்லறை விற்பனை

நுகர்பொருள்களை பொது மக்களுக்கு விற்பனை செய்வது இத்துறையின் பெரும் நோக்கங்களில் ஒன்றாகும். 2000-2001 ஆம் ஆண்டில் 2,166.48 கோடி ரூபாய் அளவிற்கு நுகர்பொருள்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டது.



2001 செப்டம்பர் 10]

### மதுபான விற்பனை

கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 51 மதுக்கடைகளை நடத்தி வருகின்றன. நுகர்வோர் தரமான மதுவினை மலிவு விலையில் பெறும் பொருட்டு இக்கடைகள் நடத்தப்படுகின்றன.

## அத்தியாயம்-8

### பொது விநியோகத் திட்டம்

பொதுமக்கள் பெரும் அளவில் பயன்படுத்தும் அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் கோதுமை உபபொருட்களான ரவை, மைதா மற்றும் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை 147.20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 22,038 முழுநேர நியாயவிலைக் கடைகளின் மூலமாக விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

31-7-2001 அன்றுள்ளபடி கூட்டுறவுகளால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | முழுநேரக் கடைகள். | பகுதிநேரக் கடைகள். | மொத்தம் |
|---|---|---|---|
| கூட்டுறவுகள் | 21,714 | 4,278 | 25,992 |
| இதர கூட்டுறவுகள் (மீன், மலைப்பயிர் போன்றவை) | 139 | 130 | 269 |
| மகளிரால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் | 185 | 106 | 291 |
| நடமாடும் நியாயவிலைக் கடைகள் | - | - | 36 |
| **மொத்தம் ..** | **22,038** | **4,514** | **26,588** |

குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப்படுகின்றன. மண்ணெண்ணெய் விநியோகத்தை சீரமைக்க 233 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. நியாயவிலைக்

[2001 செப்டம்பர் 10

கடைகளை நடத்த தனியார் எவருக்கும் உரிமம் அளிக்கப்படவில்லை என்பது இம்மாநில பொதுவிநியோகத் திட்டத்தின் சிறப்பாகும்.

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1,388.54 கோடி மதிப்பிற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகித்துள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் இவை ரூ.1,547.86 கோடி மதிபபுள்ள அத்தியாவசிய பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு விநியோகித்துள்ளன:—

| வ.எண். | பொருள். | ஏப்ரல் 1999—மார்ச் 2000 | | ஏப்ரல் 2000—மார்ச் 2001 | |
|---|---|---|---|---|---|
| | | அளவு மெ. டன்னில். | மதிப்பு (ரூ.கோடியில்). | அளவு மெ. டன்னில். | மதிப்பு (ரூ.கோடியில்). |
| 1. | அரிசி | 20,43,841 | 727.96 | 19,42,920 | 680.00 |
| 2. | சர்க்கரை | 2,98,257 | 360.20 | 2,73,930 | 356.10 |
| 3. | கோதுமை | 77,595 | 56.91 | 1,79,760 | 16.91 |
| 4 | மண்ணெண்ணெய் (கி லிட்டரில்) | 7,44,768 | 208.53 | 7,39,515 | 487.53 |
| 5. | பாமாயில் | 317 | 0.93 | 1 | 0.002 |
| 6. | ரவை | 8,917 | 9.41 | 1,667 | 2.11 |
| 7. | மைதா | 24,490 | 24.60 | 4,228 | 5.21 |
| | மொத்தம் | | 1,388.54 | | 1,547.86 |

**மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள்**

நியாயவிலைக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்கும்போது ஏற்படக்கூடிய அளவுக் குறைபாடு, குறித்த காலத்தில் வழங்காமை போன்ற குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, மண்ணெண்ணெயை மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் மூலமாக வழங்கும் ஒரு புதிய திட்டத்தை 1997 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையமும், அருகில் உள்ள ஐந்து அல்லது ஆறு நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள சுமார் 5000 முதல் 10,000 வரையான குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெயினை வழங்கும்.



2001 செப்டம்பர் 10]

இத்திட்டம் முதலில் சென்னையில் 1997 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் அனைத்து மாநகராட்சி பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

**ஊட்டி டீ விற்பனை**

அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தமது ,பொதுவிநியோக நியாய விலைக்கடைகள் மூலமாக மாதம் ஒன்றுக்கு 170 மெட்ரிக் டன் ஊட்டி டீ விநியோகிக்க அனுமதியளித்துள்ளது. இத்திட்டம் பொது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொதுவிநியோகத் திட்டத்தின் மூலமாக இந்த டீயினை விற்பனை செய்ய தொடக்கி வைக்கப்பட்டு, நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகளின் துயரினை துடைத்துள்ளதால், அவர்கள் மத்தியிலும் இத்திட்டம் அமோக வரவேற்பினை பெற்றுள்ளது.

## அத்தியாயம்-9

## தனிவகைச் சங்கங்கள்

**1. கூட்டுறவு அச்சகங்கள்**

தமிழ்நாட்டில் மொத்தம் 26 கூட்டுறவு அச்சகங்கள் இயங்கிவருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப்பணிகளையும், அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் (ஊராட்சி ஒன்றியம், நகராட்சி முதலியன) ஆகியவற்றின் அச்சுப் பணிகளையும் மேற்கொள்கின்றன.

31-3-2000 தேதிய நிலவரப்படி, கூட்டுறவு அச்சகங்களில் மொத்தம் 11,524 உறுப்பினர்கள் இருந்தனர். செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ.139.43 இலட்சம் ஆகும். 2000-2001 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.25.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. அதில் ரூ.20.11 கோடி எய்தப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.26.00 கோடியாக நிர்ணயிக்கப்படவுள்ளது. பொதுமக்களின் அச்சுவேலைகளையும் இவை மேற்கொள்ளவேண்டுமென கருதப்பட்டுள்ளது.

கூட்டுறவு அச்சகங்களை நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ், அவை, நவீன கருவிகள், இயந்திரங்கள் வாங்குவதற்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது.

[2001 செப்டம்பர் 10

### 2. உப்புத் தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்

உப்பு உற்பத்தியாளர்களின் ஏழ்மை நிலையைப் போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உன்னத நோக்கத்துடன் உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கி வரும் 10 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 5 சங்கங்கள் ஆதிதிராவிட மக்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வகை உப்பு உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் 'அயோடின்' கலந்த உப்பினை உற்பத்தி செய்ய 'தாட்கோ' திட்டத்தின்கீழ் அரசால் நிதி உதவி அளிக்கப்படுகிறது. வேறு பல திட்டங்களுக்கும் உதவிகள் அளிக்கப்படுகின்றன.

### 3. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

தற்போது இம்மாநிலத்தில் 213 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 40 சதவிகித சங்கங்கள் தர்மபுரி, சேலம், திருச்சி, மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ளன. 40 தொழிலாளர் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக மட்டுமே இயங்கி வருகின்றன. ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்பினை அளித்து, அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் உயரிய பணியில் இவை ஈடுபட்டுள்ளன. இச்சங்களுக்குத் தேவையான பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை அளித்தல் முதலான பல்வேறு இனங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

### 4. இதர தனி வகைச் சங்கங்கள்

சமூகத்தில் முடிதிருத்துதல் மற்றும் சலவைத் தொழில்களைச் செய்யும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது 12 சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 5 முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

### 5. மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு

பழங்குடியினர் மக்களின் நலம் காத்திட தற்போது தமிழ்நாட்டில் 19 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் அப்பகுதிவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த



2001 செப்டம்பர் 10]

77745 நபர்களும், பழங்குடியினரால்லாத 6918 நபர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பழங்குடியின மக்களின் மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதி உதவியினை வழங்கி வருகின்றது. இச்சங்கங்கள் விவசாயம் மற்றும் பிற உற்பத்தி காரியங்களுக்காக வட்டியில்லாக் கடன்களை அளிக்கின்றன. இச்சங்கங்களின் மூலம் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில் இச்சங்க உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து மானியம், வாகன ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகன பராமரிப்பு மானியம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருகிறது. இச்சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சில புதிய திட்டங்களுக்கும் அரசு மானிய உதவி வழங்கி வருகிறது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், *1997-98* ஆம் ஆண்டில் ரூ. *84.64* இலட்சமும், *1998-99*-ஆம் ஆண்டில் ரூ. *90.00* இலட்சமும், *1999-2000*ஆம் ஆண்டில் ரூ. *90.00* இலட்சமும், *2000-2001* ஆம் ஆண்டில் ரூ. *90.00* இலட்சமும் ஆக மொத்தம் ரூ. *354.64* இலட்சம் அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு மற்றும் பல்வேறு நடவடிக்கைகளில் எய்திய முன்னேற்றம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கடன் வழங்கியது | வேளாண் விளை பொருள் கொள்முதல் ரூ. இலட்சத்தில் | வேளாண் இடுபொருள் வழங்கியது. | சிறுவனப் பொருள் சேகரம் | நுகர்-பொருள் விநியோகம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1997-1998 | 734.52 | 123.77 | 110.08 | 46.08 | 427.01 |
| 1998-1999 | 580.82 | 61.43 | 115.00 | 64.96 | 511.52 |
| 1999-2000 | 535.28 | 94.89 | 113.46 | 85.29 | 643.57 |
| 2000-2001 | 478.18 | 85.06 | 116.30 | 65.46 | 765.92 |

[2001 செப்டம்பர் 10

## அத்தியாயம்-10

### கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

#### 1. மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப் பணிகள்

கூட்டுறவு இயக்கம் செம்மையான முறையில் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்காணிக்கவும் பல்வேறு துறைகளில் கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், அலுவலர் அல்லாதவர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளிக்கவும், கூட்டுறவு பற்றிய விளம்பரங்கள் ஆகிய பணிகளைச் செய்திடவும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டங்களில் உள்ள 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும், கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றில் உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது பொது மக்களுக்கும் பயிற்சியளிக்கின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் (1) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (2) கூட்டுறவுக் கல்வி நிதி எனும் இரு நிதிகளைப் பராமரித்து வருகிறது.

அனைத்து மாநில தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கத்தினர்களாக உள்ளன. இவ்வங்கத்தினர் சங்கத்திடமிருந்து வசூலிக்கும் தொகையான வருடாந்திர சந்தா, கூட்டுறவு வெளியீடுகள் மூலம் கிடைக்கும் வருமானம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிகளுக்கு பிற சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படும் நிதிகளையும் கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தனது பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை திரட்டுகிறது.

கூட்டுறவினால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பயன்கள் குறித்து மக்கள் தெளிவுற அறிந்திட புத்தக வெளியீடுகள், கண்காட்சிகள், விளம்பரச்



2001 செப்டம்பர் 10]

சுவரொட்டிகள், திரை அரங்குகளில் ஸ்லைடுகள், திரைக் காட்சிகள் முதலான வசதிகளைப் பயன்படுத்தி, கூட்டுறவுக் கொள்கைகளைப் பரப்பும் நடவடிக்கைகளை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மேற்கொள்கின்றது. மேலும் உறுப்பினர் கல்வி நிகழ்ச்சிகளையும், மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளையும் கூட்டுறவு ஒன்றியம் வானொலி மற்றும் தொலைக் காட்சிகள் வழியாக நடத்தி வருகின்றது.

அனைத்துத் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு, கூட்டுறவு கொள்கை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றியும், கூட்டுறவுகளின் செயல்பாடு பற்றியும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளில் கூட்டுறவைப் பாடமாகப் படித்து சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வழங்குவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கல்லூரி அளவில் கூட்டுறவுப் கல்வியின் வளர்ச்சியைப் பெரிதும் ஊக்குவிக்கிறது.

#### 2. கூட்டுறவுப் பயிற்சி

இளநிலை அலுவலர்களுக்கு, கூட்டுறவுப் பயிற்சி அளிக்க மாநிலத்தில் 19 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் கூட்டுறவு தொடர்பாக பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவுத் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் கூட்டுறவுப் பாடத்தில் பட்டயப் பயிற்சியும், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக் கல்வி மூலம் கூட்டுறவு பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கு நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும் மதுரை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் 210 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு அவர்கள் கூட்டுறவு

[2001 செப்டம்பர் 10

நிறுவனங்களில் வேலைவாய்ப்பினைப் பெற ஏதுவாக இவ்விரு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் உயர்நிலை கூட்டுறவு பட்டயப் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டது.

சென்னையை அடுத்துள்ள மாதவரத்தில், விவசாய கூட்டுறவு பணியாளர்கள் பயிற்சி நிலையம் ஒன்று தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது. இது கூட்டுறவுக் கடன் சங்க அலுவலர்களுக்குத் தேவையான முழுநேர பயிற்சிகளையும், குறுகிய கால கூட்டுறவுப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களை உற்சாகப்படுத்தும் முகத்தான், அவர்கள் சுய வேலைவாய்ப்பு தேடிக்கொள்ளும் வகையில், ஏற்ற தொழில் பயிற்சியினை அளிக்கும் நோக்கத்துடன், தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், தொழில் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. 1-4-1997 முதல், இத்தொழில் பயிற்சிப் பள்ளிகளை நடத்தி வரும் கல்வி மற்றும் தொழில் கூட்டுறவுப் பயிற்சி சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

## அத்தியாயம்-11

**நிறைவுரை**

அனைத்துப் பிரிவு மக்களின் பொருளாதார மேம்பாட்டினையும் உறுதி செய்யும் பொருட்டு, விவசாயிகளுக்கு வேளாண் கடன் வழங்குதல், இடு பொருட்கள் வழங்குதல், வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல், சந்தை விலைகளை நிலைப்படுத்துதல், பொதுவிநியோகக் கடைகள் நடத்துதல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து மாநிலத்தில் கூட்டுறவு அமைப்புகள் ஆற்றி வரும் பணிகள் மகத்தானவை.



2001 செப்டம்பர் 10]

## இணைப்பு-1

**கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| வரிசை எண் | சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள் | 6 |
| 2. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 23 |
| 3. | மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் | 36 |
| 4. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 1 |
| 5. | மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் | 29 |
| 6. | கூட்டுறவு அச்சகங்கள் | 26 |
| 7. | கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் | 19 |
| 8. | தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 119 |
| 9. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்பட) | 4589 |
| 10. | பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 19 |
| 11. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 181 |
| 12. | கூட்டுறவு நகர வங்கிகள் | 128 |
| 13. | பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள் | 1892 |
| 14. | தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்பட) | 3550 |
| 15. | தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 212 |
| 16. | ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் | 3 |
| 17. | இதரவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 319 |
| | மொத்தம் | 11152 |

[2001 செப்டம்பர் 10

## இணைப்பு-2

31-3-2001 அன்றைய நிலவரப்படி பலவகையான கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்கு மூலதனம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | 31-3-2001-ல் பங்கு மூலதனம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | 15,78,68,500 |
| 2. | தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி | 26,00,000 |
| 3. | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் | 1,82,11,000 |
| 4. | தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் | 1,15,35,945 |
| 5 | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 10,25,000 |
| 6. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 44,19,66,893 |
| 7. | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை | 6,81,04,495 |
| 8. | பெரிய அளவிலான பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 59,45,123 |
| 9. | தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 11,74,114 |
| 10. | ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,68,000 |
| 11. | கட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் | 42,00,000 |
| 12. | பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,40,000 |
| 13. | உப்பு தொழிலாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் | 1,79,855 |
| 14. | உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,10,000 |
| 15. | கூட்டுறவு அச்சகங்கள் | 24,53,790 |
| 16. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் உள்பட) | 49,44,89,005 |
| 17. | தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் (மாணவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்பட) | 88,60,726 |
| 18. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 9,81,90,171 |
| 19 | நகரக் கூட்டுறவு வங்கிகள் | 5,77,096 |
| 20. | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 13,79,62,983 |
| 21. | விருதுநகர், (முன்னாள்) தென்னாற்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் | 28,86,89,925 |
| 22. | கால்நடைத் தீவனக் கூட்டுறவுச் சங்கம் | 40,000 |
| | மொத்தம் | **1,74,48,92,621** |
| | | **அல்லது 174.49 கோடி** |



2001 செப்டம்பர் 10]

## இணைப்பு-II

***(57 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

### கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்

### உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

### அத்தியாயம்-1

**முன்னுரை**

இன்றியமையாப் பொருட்களைக் கட்டுப்பாடான விலையில் அரசு நிறுவனங்கள் வாயிலாக வழங்குவதே தமிழ்நாடு அரசின் உணவுக் கொள்கையின் சிறப்பு இயல்பாக இருந்து வருகிறது. இது குறித்து, அரசின் நோக்கங்களாவன:

(அ) உணவுப் பொருட்களின் விலையேற்றத்திலிருந்து நலிந்த பிரிவு மக்களைப் பாதுகாத்தல்; மற்றும்

(ஆ) அவ்வப்போது மாறுபடும் விலைவாசியினை நியாயமான அளவில் நிலையாக வைத்தலும், தனி நபருக்குத் தேவைப்படும் உணவினைத் தங்குதடையின்றி கிடைக்க உறுதி செய்தலும் ஆகும்.

மேற்கண்ட நோக்கங்களை எய்துவதற்கு அரசு கையாளுகின்ற கருவிகள் பின்வருமாறு:—

1. விலை நிர்ணயம் செய்தல்.
2. கொள்முதல் செய்தல்.
   (அ) மாநிலத்திற்குள்ளாக கொள்முதல்.
   (ஆ) மையத் தொகுப்பு ஒதுக்கீடு.

(3) தாங்கி இருப்புத் தேவை. (Buffer stocking)

(4) கட்டாய லெவி முறை மூலம் உணவு தானியங்களை வெளியே எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு; மற்றும்

(5) பொது விநியோகத் திட்டம்.

[2001 செப்டம்பர் 10

1.1 இவ்வாறாக, "விலை சீராக இருத்தல்" மற்றும் "உணவுப் பொருட்களை நியாயமான அளவில் பகிர்ந்தளித்தல்" ஆகிய இந்த இரட்டை நோக்கங்களை "விலை நிர்ணயம் செய்தல்" மற்றும் "ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோகமுறை" ஆகியவற்றின் மூலமாகவே அடைய இந்த அரசு விரும்புகிறது. இச்சீரிய பணியில், பொது விநியோகத் திட்டம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதோடு, வறுமையை ஒழிக்கும் ஒரு திட்டமாகவும் செயல்படுகிறது.

1.2. இருப்பினும், தற்பொழுது நடைமுறையிலுள்ள பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாட்டுத்திறன், அதன் பயன்பாட்டு அளவிலும் நுகர்வோருக்கு எளிதில் உணவுப் பொருட்கள் கிடைக்கும் வகையிலும் செம்மையாக உள்ளதா என மதிப்பாய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. நிதி நிலைமை குறித்து, அண்மையில் சட்டமன்றப் பேரவையில், அரசால் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கை உணர்த்தியுள்ளவாறு, பொது விநியோகத் திட்டத்தினைச் சீரமைக்க முன்மொழியப்படும் எந்த ஒரு திட்டமும், கூடிக்கொண்டே வரும் உணவு மானியத் தொகையைக் குறைப்பதற்கான வழிவகைகளை வகுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். உணவு மானியத்திற்காக பெருமளவில் செய்யப்படும் நிதி ஒதுக்கீடு - வறியவர்களுக்கு உணவு பாதுகாப்பு அளித்தல் - நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஆதார விலை அளித்தல் என்ற முக்கிய நோக்கங்களுக்காகவே என்றாலும் அந்த நோக்கங்கள் எதுவுமே நிறைவேறியதாகத் தோன்றவில்லை என்றும், மாநிலத்தில் சுமார் 10 இலட்சம் போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளதால் கூடுதல் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் வெள்ளை அறிக்கை திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. மாநிலத்தில், நடைமுறையிலுள்ள, வறியோருக்கு மட்டுமே என்று இலக்கிடாத, உணவு மானியக் கொள்கை, அரசுக்கு பெரும் நிதி இழப்பை ஏற்படுத்துவதோடு மட்டமில்லாமல், மானிய விலையில் கிடைக்கும் பொது விநியோகத்திற்குரிய பொருட்கள், வெளிச்சந்தைக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தூண்டுவதால் உண்மையாகவே, தேவையுள்ள ஏழை எளியோருக்கு உணவுப் பொருட்கள் சென்றடைவதில்லை என்பதனையும் வெள்ளை அறிக்கை ஒப்புக்கொண்டுள்ளது. எனவே, தொலைநோக்குச் சிந்தனை நிறைந்த நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றுள்ள இப்புதிய அரசு, ஏழை எளிய மற்றும் தேவையுள்ள மக்கள் உண்மையாகப் பயன்பெறும் வகையில் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்க முடிவு செய்துள்ளது.



2001 செப்டம்பர் 10]

1.3. பொது விநியோகத் திட்டத்தில் உள்ள குறைகளைக் கண்டறிந்து அகற்றிடவும், அதன் செயல்பாட்டினை மேம்படுத்தவும், உணவு மானியத்தைச் சீரமைப்பதற்கான வழிவகைகள் காணவும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றினை அரசு விரைவில் அமைக்கும்.

1.4. பொது விநியோகத் திட்டத்தினைச் சீரமைத்து செம்மையாகச் செயல்படுத்துதல் என்பது மாநில உணவுக் கொள்கையில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். எனினும், இச்சீரமைக்கும் பணி, கருணை உள்ளத்தோடும் அனைத்துத் தரப்பினருக்கும் நியாயம் வழங்கும் வழியிலும் அமைந்தாக வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும், மக்களின் அடிப்படை ஊட்டச்சத்துத் தேவையினை நிறைவேற்ற, நிதி நெருக்கடியைக் காரணம் காட்ட இந்த அரசு அனுமதிக்காது.

1.5. இதனடிப்படையில், 2001-2002 ஆம் ஆண்டில், பின்பற்றத் தகுதியான உணவுக் கொள்கையின் பல்வேறு கூறுகளை பின்வரும் அத்தியாயங்கள் விளக்குகின்றன.

## அத்தியாயம் 2

## பொது விநியோகத் திட்டம்

2.1. ஏழை மக்களுக்கு உணவு தானியங்கள் தேவையான அளவிற்கு கிடைப்பதற்கு போதுமான அளவு தானிய இருப்பு வைத்திருப்பது மட்டுமே போதுமெனக் கருதவியலாது. தானியங்கள் போதுமான அளவு கிடைப்பதுடன் அவற்றை விலைகொடுத்து வாங்க ஏழை மக்களிடம் போதுமான வசதி இருக்க வேண்டும். ஏழை மக்கள் உணவு தானியங்களை வாங்க இரண்டு வழிகளில் அரசு உதவலாம். ஒன்று, அவர்களது வருவாயை உயர்த்தலாம் அல்லது பொருட்களைக் குறைந்த விலையில் அவர்களுக்கு வழங்கலாம். பொது விநியோகத் திட்டத்தின் முக்கிய நோக்கமே ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதாகும். எனவே, ஏழை எளிய மக்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாயவிலைக் கடைகளில் நல்ல பொருட்களை, மிகச் சுலபமாக அவர்களால் வாங்க இயலுகின்ற விலையில் விநியோகம் செய்வதே அரசின் நோக்கமாகும்.

2.2. தமிழ்நாட்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 27733 (31-7-2001 நிலவரப்படி)

நியாயவிலைக் கடைகள் மூலம் சுமார் 1.60 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன. தமிழ்நாடு மட்டும்தான் அனைத்து மக்களின் உணவுத் தேவையையும் பூர்த்தி செய்யும் பொருட்டு, மிக அதிக அளவில் மானியம் வழங்கி, மக்கள் அனைவருக்கும் பொது விநியோக முறை மூலம் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகித்து வருகிறது. எனவே, ஏழை மற்றும் தேவையுள்ள மக்கள் மட்டுமே பொது விநியோக முறையின் மூலம் அதிக அளவில் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென அரசு முடிவெடுத்துள்ளது.

## குடும்ப அட்டை விநியோகம்

*2.3.* வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டம் மத்திய அரசால் நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு, குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள்/வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் என இரண்டு வகையாக, மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கும் அரிசி மற்றும் கோதுமையை மத்திய அரசின் குறைந்த அடக்கவிலையில் பெறும் வகையில், பிரித்தது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், பொது விநியோக முறையில், மத்திய அரசு மற்றும் பிற மாநில அரசுகள் வகைப்படுத்தியுள்ளதைப் போன்று, வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் என்ற பாகுபாடு கிடையாது. முந்தைய அரசு, குடும்ப அட்டைகளை வழங்கும்போது, வருமானத்தைக் கணக்கில் கொண்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள் என்று பிரிக்காமல், மக்கள் விரும்பும் அத்தியாவசியப் பண்டங்களின் அடிப்படையிலேயே குடும்ப அட்டைகளை வழங்கலாமென ஒரு கொள்கை முடிவினை எடுத்தது. அவ்வாறே, பொது விநியோக முறையில் அரிசி பெற விரும்பும் குடும்பங்களுக்கு இளஞ்சிவப்பு நிற அட்டைகளும், அரிசி தேவைப்படாத குடும்பங்களுக்கு மஞ்சள் நிற அட்டைகளும் வழங்கப்பட்டன. மஞ்சள் நிற அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாகக் கூடுதலாக 3 கிலோ சாக்கரை அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.





*2.4. 31-7-2001* அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | இளஞ் சிவப்பு அட்டைகள் (அரிசி அட்டைகள்) | 1,36,21,300 |
| 2 | மஞ்சள் அட்டைகள் (மண்ணெண்ணெய் அட்டைகள்) | 13,09,937 |
| 3 | மஞ்சள் அட்டைகள் (சர்க்கரை அட்டைகள்) | 11,29,963 |
| 4 | காக்கி அட்டைகள் (காவலர் அட்டைகள்- மண்ணெண்ணெய் மட்டும்) | 26,000 |
| | மொத்தம் | **1,60,87,200** |

*2.5.* குடும்ப அட்டைகள் வழங்குவதென்பது தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு செயலாகும். தகுதியுடைய அனைத்து குடும்பங்களுக்கும் தாமதமின்றி குடும்ப அட்டைகளை வழங்கவும், அதே சமயத்தில் போலி குடும்ப அட்டைகளைக் களையவும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

*2.6.* குடும்ப அட்டைகளைத் தயாரிக்கும் பொறுப்பு 31-5-2001 வரையில் எல்காட் நிறுவனத்திடமும், 1-6-2001-லிருந்து உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்திடமும் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இப்பணி, ஆணையாளர் அலுவலகத்திலேயே செயல்படுத்தப்படுகிறது. விசாரணைக்குப்பின் தகுதியுள்ள குடும்பங்கள் என்று கண்டறியப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தை இது வெகுவாகக் குறைக்கிறது.

## நியாயவிலைக் கடைகள்

*2.7* இம்மாநிலத்தில் நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் மட்டுமே நடத்தபபட்டு வருகின்றன. தனியார் எவரும் நியாயவிலைக் கடைகளை நடத்த

அனுமதிக்கப்படுவதில்லை. 31-7-2001 நிலவரப்படி மாநிலத்தில் இயங்கி வரும் நியாயவிலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனங்கள் | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,092 | 53 | 1,145 |
| 2. | கூட்டுறவுச் சங்கங்கள் | 21,714 | 4,278 | 25,992 |
| 3. | பிற கூட்டுறவுகள் (மீன், மலைப்பயிர் போன்றவை) | 139 | 130 | 269 |
| 4. | பெண்களால் நடத்தப்படும் கடைகள் | 185 | 106 | 291 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நடமாடும் நியாயவிலைக் கடைகள் | — | — | 36 |
| | மொத்தம் | 23,130 | 4,567 | 27,733 |

2.8 ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடையாவது இயங்கவேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். அரசு அளித்துள்ள வழிமுறைகளின்படி, நியாயவிலைக் கடைகளைத் திறக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் அத்தியாவசியப் பண்டங்களைப் பெறுவதற்கு 2 கிலோ மீட்டருக்குமேல் நடக்கக்கூடாது என்பதும், நகர்ப்புறங்களிலுள்ள நியாயவிலைக் கடைகளில் 800 குடும்ப அட்டைகளுக்குமேல் இணைக்கப்படக்கூடாது என்பதும், கிராமப்பகுதிகளிலுள்ள நியாயவிலைக்கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்படக்கூடாது என்பதும் அரசின் நோக்கங்களாகும். எனினும், எளிதில் சென்றடைய முடியாத மற்றும் வெகுதூரத்தில் உள்ள பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் அத்தியாவசியப் பண்டங்களைப் பெறும் வகையில் 800 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக இணைக்கப்பட்டுள்ள 20,000 நியாயவிலைக் கடைகள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.



**பெண்கள் குழுக்களால் நடத்தப்படும் கடைகள்**

2.9 அத்தியாவசியப் பொருட்களை வாங்க மக்கள் 2 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டிய இடங்களிலும், அதிக அளவில் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள கடைகள் உள்ள பகுதிகளிலும் மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் தொடங்கப்படுகின்றன. இவ்வாறு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நியாயவிலைக் கடைகளை ஒப்படைப்பதற்குத் தேவையான வழிமுறைகள் ஏற்கெனவே அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய பொது நலச் செயல்களில் இந்த மகளிர் காட்டி வரும் ஆர்வத்தைக் கருத்தில்கொண்டும், மக்கள் நலத்தொண்டுகளில் மகளிரை ஈடுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டும், இந்த அரசு மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை முனைந்து எடுக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது.

2.10. கிராமப் பஞ்சாயத்துக்களும் நியாயவிலைக் கடைகளை நடத்தத் தேவையான அனுமதிகள் வழங்கப்பட்டு, இதற்கான வழிமுறைகள் ஊரக வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

2.11. புதிய முழுநேர அல்லது பகுதிநேரக் கடைகளைத் திறக்கும்போதும், பகுதிநேரக் கடைகளை முழுநேரக் கடைகளாக மாற்றும்போதும் அவற்றை நடத்தும் நிறுவனத்தின் நிதி நிலையையும், அவற்றின் செயல்திறனையும் கருத்தில் கொள்ள வேண்டும். இல்லையெனில், அது மாநிலத்தின் உணவு மானியத்தை இன்னும் அதிகரிக்கும்.

**பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

2.12. பொது விநியோக முறையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்குச் சென்று சேராமல் கடத்தப்படுவது குறித்தும், தரக்குறைவான பொருட்கள் விநியோகிக்கப்படுவது குறித்தும், அதிக அளவில் புகார்கள் பெறப்படுவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2002 ஆம் ஆண்டு ஜனவரிக்குள் பொது விநியோகமுறை சீரமைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். பொது விநியோகமுறையில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கவும், விநியோகத்தைச் சீர்படுத்தவும், உணவு மானியத்தைத் தேவையான அளவு குறைக்கவும், தங்களது அறிவுரைகளை வழங்கும்பொருட்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும். மாநிலத்தில் தற்போது நடைமுறையிலுள்ள விநியோகத்

[2001 செப்டம்பர் 10

திட்டத்தைச் சீரமைக்குமுன், பிற மாநிலங்களிலுள்ள பொது விநியோக முறைகள் ஆராயப்படும்.

### அரிசி

2.13. பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் வருடாந்திரத் தேவைக்கான அரிசி கீழ்க்கண்ட முறைகளினால் பெறப்படுகிறது:

1. மைய அரசின் ஒதுக்கீடு
2. மாநிலத்தில் நெல் கொள்முதல் செய்தல்
3. தேவைக்கேற்ப பிற மாநிலங்களிலிருந்து அரிசி வாங்குதல்

**(1) மத்திய அரசிடமிருந்து அரிசி ஒதுக்கீடு**

2.14. வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தை (Targeted Public Distribution System) மத்திய அரசு 1-6-1997 ஆம் நாளிலிருந்து கொண்டுவந்து இம்மாநிலத்திற்குக் கீழ்க்கண்டவாறு அரிசியை ஒதுக்கியது:

| | | |
|---|---|---|
| 1. | வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு (APL) | 38,440 மெ.டன் |
| 2. | வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு (BPL) | 45,790 மெ.டன் |
| 3. | கூடுதல் ஒதுக்கீடு [வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு (APL)] | 81,000 மெ.டன் |
| | மொத்தம் | **1,65,230** மெ.டன் |

2.15. மேற்சொன்ன வறுமைக் கோட்டிற்குக் கீழ்/வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான அரிசியின் அளவை மத்திய அரசு 1991ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயம் செய்தது. இதன்படி நமது மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் சுமார் 45.79 இலட்சம் குடும்பங்கள் உள்ளன என மைய அரசு மதிப்பிட்டது. இம்மாநிலத்தைப் பொறுத்தமட்டில் குடும்ப அட்டைகள் வருமானத்தின் அடிப்படையில் இல்லாமல் குடும்பதாரர்கள் விருப்பத்தின் அடிப்படையில் பொருட்களைப் பெறும்வகையில் வழங்கப்பட்டுள்ளன. அதாவது அரிசிக்குப் பதிலாக, கூடுதல் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் பெற விருப்பம் தெரிவித்த குடும்பங்கள், அவ்வாறே



2001 செப்டம்பர் 10]

பெறலாம். குடும்ப மொத்த நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரிசியின் அளவு நிர்ணயம் செய்யப்பட்டு கீழ்க்கண்ட அளவுகோலின்படி மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது:

| குடும்ப அட்டைகளில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை. | வழங்கப்படும் அரிசியின் அளவு. |
|---|---|
| வயது வந்த ஒருவருக்கு (ஒரு யூனிட்) | 12 கிலோ |
| வயது வந்த ஒருவர் + ஒரு குழந்தை (1+½ யூனிட்) | 14 கிலோ |
| வயது வந்த இருவர் அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் இரு குழந்தைகள் (இரண்டு யூனிட்) | 16 கிலோ |
| வயது வந்த இருவர் மற்றும் ஒரு குழந்தை அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் மூன்று குழந்தைகள் (2+½ யூனிட்) | 18 கிலோ |
| வயது வந்த மூவர் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு (3யூனிட் மற்றும் 3 யூனிட்டுக்கு அதிகமாக) | 20 கிலோ |

2.16 வறியோர் நலன் காக்கும் பொது விநியோக முறையை மத்திய அரசு 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருத்தி அமைத்தபோது, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்ப அட்டைகளுக்கான அரிசி ஒதுக்கீட்டை இரட்டிப்பாக்கியது. அதாவது 45,790 மெட்ரிக் டன்னில் இருந்து 91,580 மெட்ரிக் டன்னாக அதிகரித்தது. இதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதத்திற்கான ஒதுக்கீடு 10 கிலோவிலிருந்து 20 கிலோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மதிப்பீட்டின்படி, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கையின் உயர்வினைக் (45.79 இலட்சத்திலிருந்து 48.63 இலட்சமாக உயர்ந்தது) கணக்கில் கொண்டு, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களுக்கான அரிசி ஒதுக்கீட்டை மத்திய அரசு 91,580 மெட்ரிக் டன்னிலிருந்து 97,250 மெட்ரிக் டன்னாக டிசம்பர் 2000-ல் உயர்த்தியுள்ளது. மைய அரசின் அரசி ஒதுக்கீடு மற்றும் அதன் விலை விவரங்கள் பின்வருமாறு :—

[2001 செப்டம்பர் 10

| | மெட்ரிக் டன்களில். | விலை கிலோ ஒன்றுக்கு (ரூபாய்). |
|---|---|---|
| வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு | 97,256 | 5.65 (25-7-2000 முதல்) |
| வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு | 38,440 | 8.30 (12-07-2001 முதல்) |
| மொத்த ஒதுக்கீடு | ***1,35,696*** | |

**(2) மாநிலத்தில் நெல் கொள்முதல்**

2.17. பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்கு சராசரி மாதாந்திர தேவை 2.25 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1.36 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை வைத்து மாநிலத்தில் அனைத்துத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், மீதமுள்ள தேவையை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நெல் கொள்முதல் செய்வதன் மூலம் ஈடு செய்யப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசியின் அடிப்படையில் அரசு ஏகபோகக் கொள்முதல் அல்லது இணைக் கொள்முதல் முறையின்கீழ் நெல் கொள்முதல் செய்கிறது. விவசாயிகளின் நலன் கருதி, அரசு, மைய அரசு நிர்ணயித்துள்ள நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலைக்குமேல் ஊக்கத்தொகை அல்லது இடைநிகழ்ச் செலவு வழங்குகிறது.

**(3) பிற மாநிலங்களிலிருந்து வெளிச்சந்தை மூலம் கொள்முதல் செய்தல்**

2.18. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசியின் அனைத்துத் தேவையும் மைய அரசு ஒதுக்கீடு மற்றும் மாநிலத்தில் கொள்முதல் செய்வதன் மூலம் ஈடு செய்யப்படுவதால் வெளிமாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்ய வேண்டிய சூழ்நிலை கடந்த சில ஆண்டுகளாக ஏற்படவில்லை.

**நெல் கொள்முதல் முறைகள்**

2.19. மாநிலத்தில், இவ்வரசு, நெல் கொள்முதல் செய்வதில், இரு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.



2001 செப்டம்பர் 10]

1. ஏகபோகக் கொள்முதல்

2. இணைக் கொள்முதல்

ஏகபோகக் கொள்முதல் முறையில் விவசாயிகள் தங்களது நெல்லினை அரசால் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் மட்டுமே விற்கலாம். இத்திட்டம் காவிரிப் பாசனப் பகுதிகளில் மட்டுமே அமலில் இருக்கும். ஆனால், இத்திட்டத்தினை அமல்படுத்த மைய அரசின் அனுமதி வேண்டும்.

2.20. இணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்கள் நெல்லை, தங்களது விருப்பம்போல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திடமோ அல்லது தனியார் வியாபாரிகளிடமோ தங்களுக்கு அனுகூலமான விலையில் விற்கலாம்.

2.21. பொதுவாக, மைய அரசு ஒவ்வொரு வருடத்திலும் செப்டம்பர் மாதத்தில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையினை நிர்ணயம் செய்கிறது.

மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட 2000-2001-க்கான நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை பின்வருமாறு:—

| ரகம். | ரூபாய் குவிண்டால் ஒன்றுக்கு. |
|---|---|
| கிரேடு ஏ | 540 |
| சாதா ரகம் | 510 |

2.22. நெல் கொள்முதல், அதன் குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை மற்றும் இடைநிகழ்வுச் செலவு விவரங்கள் இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.23. மையத் தொகுப்பிலிருந்து, வறுமைக் கோட்டிற்குமேல்/வறுமைக் கோட்டிற்குக்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையினை மைய அரசு அவ்வப்போது மாற்றி அமைத்த போதிலும், மாநில அரசு 1-1-2000 முதல், பொது விநியோகத் திட்டத்தில் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 ஆகவே வழங்கி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் அரிசியின் அடக்க விலைக்கும் பொது விநியோகத் திட்டத்தில் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும் அரிசியின் விலைக்கும் இடையே ஏற்படும் வித்தியாசத்தினை அரசு மானியமாக வழங்கி ஈடுசெய்கிறது. இந்த நிதி ஆண்டுக்கு ரூ.1,540 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

2.24. இவ்வரசு பதவியேற்றதும், தற்போதுள்ள பொது விநியோகத் திட்டத்தினை தீவிரமாகப் பரிசீலனை செய்தது. வெளி மாநிலத்திற்கு அரிசி/நெல் கொண்டு செல்வதற்குத் தற்போதுள்ள 100 விழுக்காடு லெவியினை டி.கே.எம். 9 ரக நெல் மற்றும் அரிசிக்கு நீக்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இது காவிரி பாசனப் பகுதியில் உள்ள விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாகும். டி.கே.எம். 9 ரக அரிசி, கேரள மக்கள் பெருமளவில் விரும்புவதாலும், தமிழகத்தில் இந்த ரக அரசி மக்களால் விரும்பப்படாததாலும் இந்த ரக அரிசியை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்கு 100 விழுக்காடு லெவி செலுத்துவதிலிருந்து விலக்களிக்குமாறு வர்த்தகர்களும் கோரி வந்துள்ளனர். குறுவை அறுவடை காலத்தில் டி.கே.எம். 9 ரக நெல்லைக் கொள்முதல் செய்வதில் அரசு வழங்க வேண்டிய அதிக அளவு உதவித் தொகையையும் இது குறைக்கும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்க இயலாத இந்த ரக அரிசியின் அளவுக்கு மீறிய குவிப்பையும் வருங்காலத்தில் தவிர்க்க இது உதவும்.

2.25. பொதுமக்கள் அனைவரின் பயனுக்கான பொது விநியோகத் திட்ட கடைகள் மூலம் நல்ல தரமான அரிசியை வழங்குவது என்று இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது. எனவே பொது விநியோகத் திட்ட கடைகள் மூலம் சிறந்த தரமான அரிசியைக் கொள்முதல் செய்து வழங்க மிகுந்த கவனம் மேற்கொள்ள வேண்டும் என்று சம்பந்தப்பட்ட முகவர் அமைப்புகளுக்கு அரசு கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது.

**சர்க்கரை**

2.26. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஒரு நபருக்கு 500 கிராம் என்ற அளவில் ஒரு குடும்ப அட்டைக்கு உயரளவாக 2 கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது. விருப்பத்தின் அடிப்படையில் குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதால் அரிசிக்குப் பதிலாக கூடுதலாக சர்க்கரை விருப்பம் தெரிவித்துள்ள குடும்ப அட்டைதாரர்கள் வழக்கமான அளவோடு கூடுதலாக 3 கிலோ சர்க்கரை மாதந்தோறும் பெற்று வருகின்றனர். 31-7-2001 அன்றுள்ளவாறு சர்க்கரை விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 11,29,963 ஆகும். ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கூடுதலாக ஒரு கிலோ சர்க்கரை ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் வழங்கப்படுகிறது. 01-4-2001 முதல் மைய அரசு மாதந்தோறும் நபர் ஒருவருக்கு 500 கிராம்



வீதம் மொத்தம் 10,820 மெட்ரிக் டன்கள் சர்க்கரையை மட்டுமே தற்போது ஒதுக்கீடு செய்து வருகிறது. இவ்வொதுக்கீடு இம்மாநிலத்தின் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மொத்த மக்கள் தொகையின் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. வருமானவரி செலுத்துவோர் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் வறுமைக் கோட்டிற்கு மேலுள்ளவர்களுக்கும் மைய அரசு லெவி சர்க்கரை ஒதுக்கீடு தற்போது செய்வதில்லை. ஆனால் நமது மாநிலத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் லெவி சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. இம்மாநில முழுமைக்கும் மாதாந்திரம் தேவைப்படும் சர்க்கரை சுமார் 25,500 மெட்ரிக் டன்களாகும். மைய அரசு ஒதுக்கீடு போக மாதந்தோறும் ஏற்படும் பற்றாக்குறை சுமார் 14,680 மெட்ரிக் டன்களாகும். மேற்சொன்ன பற்றாக்குறை, தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திடமிருந்து, மாதந்தோறும் லெவி அல்லாத சர்க்கரையை வாங்குவதன் மூலம் ஈடு செய்யப்படுகிறது. இவ்வாறு வாங்குவதால் ஏற்படும் விலை வித்தியாசத்தினால் மாநில அரசுக்கு மாதந்தோறும் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு மானியச் செலவு ஏற்படுகிறது. மேலும் மைய அரசு 01-03-2001 முதல் லெவி சர்க்கரையின் சில்லறை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.13.00-ல் இருந்து 13.25க்கு உயர்த்திய போதிலும் மாநில அரசு தொடர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூ. 13.00 என்ற விலையிலேயே விற்பனை செய்து வருகிறது. இதனால் மாநில அரசுக்கு மாதந்தோறும் கூடுதலாக ரூ.63.75 இலட்சத்திற்கு மானியச் செலவு ஏற்படுகிறது. இதனால் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரை வழங்குவதன் மூலம் மாதந்தோறும் மாநில அரசுக்கு ரூ.3.64 கோடி அளவிற்கு மானியச் செலவு ஏற்படுகிறது.

**கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள்**

2.27. தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரை கோதுமை ஒரு துணை உணவுப் பொருளாகும். பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் மொத்த கோதுமையும் மைய அரசின் ஒதுக்கீட்டிலிருந்து அல்லது இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வாங்கி வழங்கப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் விலையில் முழுவதும் அரிசியாக எடுத்துக்கொள்ள மாநில அரசு விருப்பம் தெரிவித்ததால், 1-4-2000 முதல் திருத்தி அமைக்கப்பட்ட வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்ட வழிமுறைகளின்படி, இம்மாநிலத்திற்கு வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கான விலையிலோ,

[2001 செப்டம்பர் 10

வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான விலையிலோ கோதுமை ஒதுக்கீடு ஏதும் மைய அரசால் செய்யப்படவில்லை. இருப்பினும், 31-3-2001 முதல் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வெளிச்சந்தை கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.720 என்ற விலையில் 5,000 மெட்ரிக் டன் வாங்கி கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டது. தற்போது மைய அரசு, 12-7-2001 முதல் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்காக வழங்கப்படும் கோதுமையின் விலையினை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.830-லிருந்து ரூ.610 ஆக குறைத்துள்ளது. ஆகையால் இவ்வரசு மாதந்தோறும் 20,000 மெட்ரிக் டன் கோதுமையை மேற்காணும் விலையில் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. மேற்காணும் விலையில், கோதுமை ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடைகள் மூலம் கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

**மண்ணெண்ணெய்**

2.28. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் பொருட்களில் மண்ணெண்ணெயும் ஒன்றாகும். நாட்டின் மொத்தத் தேவைக்கேற்ப மண்ணெண்ணெயை மத்திய அரசே மாநிலங்களுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்து வருகிறது. மாநிலங்களில் உள்ள எரிவாயு இணைப்பு முகவர்கள், குடும்ப அட்டைகளுக்கு வழங்கியுள்ள ஒரு எரிவாயு உருளை மற்றும் இரண்டு எரிவாயு உருளை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, மத்திய அரசு 1-4-2001 முதல் மாத ஒதுக்கீட்டின் அளவை 77,108 கிலோ லிட்டரிலிருந்து 67,876 கிலோ லிட்டராகக் குறைத்து வழங்கி வருகிறது. மத்திய அரசின் மண்ணெண்ணெய் வழங்கல் அளவினைப் பொறுத்து குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டாலும், நமது மாநிலத்தில் அரிசிக்குப் பதிலாக கூடுதல் மண்ணெண்ணெய் வேண்டி விருப்பம் தெரிவித்துள்ள குடும்பங்களுக்கு ஏற்கெனவே அவர்களுக்கு வழங்கப்படும் மாத அளவுடன் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.



2001 செப்டம்பர் 10]

குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு (மாதம் ஒன்றுக்கு)

| இடங்கள் | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் | இரண்டு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|
| | | (லிட்டரில்) | |
| சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகள், மாவட்டத் தலைநகரங்கள், காரைக்குடி, ஒசூர் மற்றும் கும்பகோணம் | 10 | 3 | — |
| ஏனைய நகராட்சிகள் | 6 | 3 | — |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 5 | 3 | — |
| ஊரகப் பகுதிகள் | 3 | 3 | — |
| நீலகிரி மாவட்டம்— | | | |
| மாவட்டத் தலைநகரம் | 15 | 3 | — |
| ஏனைய நகராட்சிகள் | 15 | 3 | — |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 10 | 3 | — |
| கிராமப் பகுதிகள் | 10 | 3 | — |

அரிசிக்குப் பதிலாக, மண்ணெண்ணெய் வேண்டுமென்போருக்கு கூடுதலாக 5 லிட்டர் மண்ணெண்ணெய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

2.29. 1-1-2001 முதல் மாநில அரசு மண்ணெண்ணெய் விற்பனை விலையை லிட்டர் ஒன்றுக்கு 60 பைசாக்கள் குறைத்துள்ளது. இதன் காரணமாக மானியமாக மாதந்தோறும் சுமார் ரூ.4 கோடி அரசு ஏற்கிறது.

2.30. பொதுமக்களுக்கு மண்ணெண்ணெயை அளவு குறைவின்றி வழங்கவும், அதை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும், அதே நேரத்தில் நியாயவிலைக் கடைகளில் சேமித்து வைப்பதில் உள்ள சிரமத்தைத் தடுக்கும் வகையிலும், மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் (Kerosene Bunks), பெட்ரோல் வழங்கும் நிலையங்களைப்போல நிறுவப்பட்டு அவை 269 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் மேலும் 27 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைப்பதற்கு ரூ.60.75 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**பாமாலின்:**

2.31. வெளிச்சந்தையில் பாமாலின் எண்ணெய் தாராளமாக நியாயமான விலையில் கிடைப்பதால், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படுவதில்லை. மத்திய அரசும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாமாலினை மாநில அரசிற்கு தற்போது வழங்குவதில்லை. எனவே, இன்றைய நிலையில் பாமாலின் விற்பனை குறித்து வெளிச்சந்தை குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

2.32. நுகர்வு செய்யப்பட்ட பொது விநியோகப் பொருட்கள் குறித்த விவரங்கள் இணைப்பு-2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அயோடின் கலந்த உப்பு**

2.33 மாநிலத்தில் சில மாவட்டங்களில் நிலவி வரும் முன்கழுத்துக்கழலை நோயினை நீக்கும் வகையில், நியாயவிலைக் கடைகள் மூலம் பொட்டலமிடப்பட்ட அயோடின் கலந்த உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 என்ற விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

**பொது விநியோக முறையில் தேயிலை விநியோகம்:**

2.34. நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளின் இடர்களைக் களையவும், அங்கு விலையும் தேயிலைக்கு நல்ல விற்பனை விலை கிடைக்கும் வகையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு புதிய திட்டத்தின் மூலம், இண்டுகோசர்வ் நிறுவனம் தயாரிக்கும் "ஊட்டி-டீ" என்ற பெயரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் வாயிலாக விற்பனை செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28-8-2001 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. நியாயவிலைக் கடைகளில், 100 கிராம் கொண்ட ஒரு பாக்கெட் தேயிலைத் தூள் ரூ.9.00 என்ற விலையில் விற்கப்படும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாதம் ஒன்றுக்கு 30 டன்கள் தேயிலைத் தூளையும், கூட்டுறவுச் சங்கங்கள் 170 டன்கள் தேயிலைத் தூளையும் விற்பனை செய்யும்.





## அத்தியாயம்-3

**கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துதல்:**

3.1. ஒரு சில இன்றியமையாப் பொருட்களை பொதுமக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யவும், பதுக்கல், கள்ளச்சந்தை போன்றவற்றைத் தடுக்கவும், மைய அரசு 1955 ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தை இயற்றியது.

3.2. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் மாநில அரசு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள உணவுத் துறை தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் பின்வருமாறு:

1. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
2. 1977 ஆம் ஆண்டு பயிறு வகைகள், சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் சேமிப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணை.
3. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் இருப்பு நிலைகளைக் காட்டி வைத்தல் மற்றும் கணக்குகளை பராமரித்தல் ஆணை.
4. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தரம் நிர்ணயம்) ஆணை.
5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
6. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் (எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு) ஆணை.
7. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.
8. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.
9. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

[2001 செப்டம்பர் 10

10. 1993 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

11. 1993 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்சவிலை நிர்ணயம்) ஆணை.

12. 1998 ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை.

13. 1998 ஆம் ஆண்டு சமையல் எண்ணெய் உறையிடுதல் (ஒழுங்குமுறை) ஆணை (31-03-2002 வரை விலக்களிக்கப்பட்டுள்ளது).

14. 2000 ஆம் ஆண்டு நாப்தா (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

15. 2000 ஆம் ஆண்டு சால்வெண்ட், ரேபினேட் மற்றும் சிலாப் (கையகப்படுத்தல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

3.3. உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்தி வருகின்றனர். கள்ளத்தனமான வியாபாரிகள், கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகள் இன்றியமையாப் பொருட்களைப் பதுக்குவதிலிருந்து தடுப்பதற்காக, இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் மற்றும் அரசால் வெளியிடப்படும் பலதரப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகள், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையால் கடுமையாகச் செயல்படுத்தப்படுகிறது.

3.4. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள் இணைப்புகள்-3 மற்றும் 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 10]

## அத்தியாயம்-4

### நுகர்வோர் நல நடவடிக்கைகள்

4.1. நுகர்வோர் இயக்கம் இன்று மிக வேகமாக வளர்ந்து வருகிறது. பொது மக்களிடையே நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருவதால், நுகர்வோர் பாதுகாப்பு கோரும் மக்கள் அதிக அளவில் பயன்பெற அரசு போதிய ஊக்கமளித்து வருகிறது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பராமரிக்கப்பட்டு வரும் அட்டவணையின்படி தற்போது 147 அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள பொதுத் துறை நிறுவனங்களிலும் வேறு பல துறைகளிலும் நுகர்வோருக்கு உள்ள குறைகளைக் களைய, தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது. நுகர்வோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நுகர்வோர் கல்வி குறித்து மாநில அளவில் கருத்தரங்கம் நடத்தவும், தேசிய சேவைத் திட்ட தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், சிறு கையேடுகள் அச்சிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தில் சீரிய பணியாற்றுவோருக்கு அரசு ஒவ்வோர் ஆண்டும் மாநில விருதுகள் வழங்கி வருகின்றது. நுகர்வோர் பாதுகாப்பு குறித்து "நுகர்வோர் நலன்" என்ற இதழை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை வெளியிட்டு வருகிறது. நுகர்வோர் கல்வி தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ள 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.15.00 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

4.2. ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 15 ஆம் நாள் "உலக நுகர்வோர் உரிமைகள் தினம்" ஆகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 15-03-2001 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாட மாநில அரசு ரூ.1.50 இலட்சம் வழங்கியது.

### நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்:

4.3. 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படும் மூன்றடுக்கு முறை கொண்ட நீதிமுறைச் சார்புடைய அரசு அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

[2001 செப்டம்பர் 10

மேற்குறிப்பிட்ட சட்டத்தின்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராக கொண்ட மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை மாநில அரசு சென்னையில் அமைத்துள்ளது. இது தவிர, மாவட்டத் தலைநகர் ஒவ்வொன்றிலும் ஒரு நுகர்வோர் குறைதீர் மன்றம் செயல்பட்டு வருகிறது. சென்னை தெற்குப் பகுதிக்கு ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் சென்னை வடக்குப் பகுதிக்கு ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஆக இரு நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் உள்ளன. இவற்றில் ஒரு தலைவர் மற்றும் இரு உறுப்பினர்களைக் கொண்ட தனித்தியங்கும் 18 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களும், அருகருகே அமைந்திருக்கும் இரு மாவட்டங்களுக்கு ஒரு தலைவர் என்ற அடிப்படையில் சேர்ந்தியங்கும் 6 நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் 12 மாவட்டங்களிலும் கீழ்க்கண்டவாறு தற்போது செயல்பட்டு வருகின்றன:-

| வரிசை எண் | தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள் | வரிசை எண் | சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள் |
|---|---|---|---|
| 1. | சென்னை-தெற்கு | 1. | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 2. | சென்னை-வடக்கு | 2. | சேலம் மற்றும் தர்மபுரி |
| 3. | திருச்சிராப்பள்ளி | 3. | காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் |
| 4. | ஈரோடு | 4. | திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை. |
| 5. | மதுரை | 5. | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம். |
| 6. | விருதுநகர் (இருப்பிடம்) ஸ்ரீவில்லிப்புத்தூர் | 6. | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி |
| 7. | கன்னியாகுமரி (இருப்பிடம்) நாகர்கோவில் | | |
| 8. | கோயம்புத்தூர் | | |
| 9. | நீலகிரி | | |
| 10. | கடலூர் | | |
| 11. | தஞ்சாவூர் | | |



2001 செப்டம்பர் 10]

| வரிசை எண் | தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள் |
|---|---|
| 12. | நாகப்பட்டினம் |
| 13. | தேனி |
| 14. | திருவள்ளூர் |
| 15. | பெரம்பலூர் |
| 16. | கரூர் |
| 17. | திருவாரூர் |
| 18. | நாமக்கல் |

4.4 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரங்கள், இணைப்புகள் 5 மற்றும் 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-5

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

5.1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாநில அரசின் சார்பாக, உணவு தானியங்கள், உணவுப் பொருட்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தும், வாங்கியும், கிடங்குகளில் பாதுகாத்தும், பதப்படுத்தியும், பொதுமக்களுக்கு வழங்குவது என்ற அரசின் தீர்க்கமான கொள்கை முடிவினைச் செயற்படுத்த ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல், இக்கழகத்தின் கிடங்குகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு அதன்பின் இக்கழகத்தின் நவீன அரிசி அரவை ஆலைகள் வாயிலாகப் பதப்படுத்தப்பட்டு அரவை செய்யப்படுகிறது. மாநில அரசின் மொத்த முகவராகச் செயல்படும் இந்நிறுவனம், மைய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் அரசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவற்றை எடுத்து, நியாயவிலைக் கடைகள் வாயிலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, அவற்றைக் கூட்டுறவு முதன்மைச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

5.2. நிர்வாக வசதியை முன்னிட்டு இக்கழகம், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மண்டலம் என 30 மண்டலங்களாக (அரியலூர் நீங்கலாக) மற்றும் சென்னை மண்டலம், சென்னை (தெற்கு) மற்றும்

சென்னை (வடக்கு) என பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலமும் முதுநிலை மண்டல மேலாலளர்/மண்டல மேலாளர் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 23 முதுநிலை மண்டல மேலாளர்கள்/மண்டல மேலாளர்களும், மாவட்ட வருவாய் அலுவலர் தகுதியில் 6 முதுநிலை மண்டல மேலாளர்களும், துணை ஆட்சியர் தகுதியில் ஒரு மண்டல மேலாளரும் வருவாய்த் துறையிலிருந்து மாற்றுப் பணியில் பெறப்பட்டும் பணியாற்றுகின்றனர். இக்கழகத்தில் 13,959 நிரந்தரப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தலைமை அலுவலகத்தில் நிர்வாகம், சந்தை, வாணிபம், தொழில், தரக்கட்டுப்பாடு, போக்குவரத்து, பொறியியல் (நவீன அரிசி ஆலை), கட்டுமானம், கணக்கு, விழிப்புப்பணி என பல பிரிவுகள் கழகத்தின் பல செயல்பாடுகளைக் கவனிக்கின்றன.

5.3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியமான பணிகள் பின்வருமாறு:

(அ) ஏகபோகக் கொள்முதல்/இணைக் கொள்முதல் கொள்கை மூலம் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்து விவசாயிகள் குறைந்த விலையில் தங்கள் நெல்லை விற்பதைத் தடுப்பது.

(ஆ) கொள்முதல் செய்த நெல்லினை 23 நவீன அரிசி அரவை ஆலைகள் மற்றும் அவ்வப்போது நியமிக்கப்படும் சுமார் 300 தனியார் அரவை முகவர்கள் வாயிலாக பதப்படுத்தி அரவை செய்தல்.

(இ) மைய அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவற்றை முறையே இந்திய உணவுக் கழகம்/சர்க்கரை ஆலைகள்/மாநில வர்த்தகக் கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து எடுத்தல்.

(ஈ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை விடுதிகள், இலங்கை அகதிகள், காவல், தீயணைப்பு மற்றும் சிறைத் துறை அலுவலர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் பொருட்கள் வழங்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணியக் கழகம் மூலம் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளில் விற்பது போன்ற பல்வேறு திட்டங்களுக்கான,





பொது விநியோகத் திட்டத்தில் சேராத, பருப்பு போன்ற பொருட்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி விநியோகம் செய்தல்.

(உ) இந்தப் பொருட்களை கழகத்தின் சொந்த/வாடகைக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லுதல்.

(ஊ) 1145 நியாயவிலைக் கடைகளை நடத்துதல்.

(எ) பொது விநியோகத் திட்டப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் சில்லறைக் கடைகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்குவதற்கும், அரசின் நலத் திட்டங்களுக்கும், கழகத்தின் அமுதம் அங்காடிகளில் விற்கவும் பொது விநியோகத் திட்டத்தில் சேராத பொருட்களையும் வழங்குதல்.

**கொள்முதல்:**

5.4. காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒவ்வோர் ஆண்டும் சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் விவசாயிகளிடமிருந்து நெல்லினைக் கொள்முதல் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட ஒரே நிறுவனம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமே. ஒவ்வோர் ஆண்டும் அரசின் முடிவிற்கு ஏற்ப ஏகபோகக் கொள்முதல் அல்லது இணைக் கொள்முதல் முறை பின்பற்றப்படுகிறது. கொள்முதல் பகுதிகளில் ஒவ்வொரு கிராம அளவிலும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் நலனைப் பாதுகாப்பதற்காக மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆதார விலையுடன் இடைநிகழ் செலவாக/ஊக்குவிப்புத் தொகையாகக் கூடுதல் தொகை வழங்க அரசு ஆணையிடுகிறது. நெல்லின் தரத்தை நிர்ணயிக்கும் பொருட்டு, தர வெட்டு மற்றும் ஈரப்பத வெட்டு (18% ஈரப்பதத்திற்கு மேல் உள்ள நெல்லுக்கு) நிர்ணயிக்கப்படுகிறது. பணம் உடனடியாக வழங்கப்படுகிறது. சம்பா 2001 மற்றும் குறுவை 2000 பருவங்களில் முறையே, 19.18 இலட்சம் டன்கள் நெல்லும், 5.45 இலட்சம் டன்கள் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது.

**பதப்படுத்துதல்:**

5.5. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலைகள் மற்றும் சில விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு நியமிக்கப்படும் தனியார் அரவை முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைத்து அரிசியாக்கப்படுகிறது. அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் அரிசி பொது விநியோகத் திட்டம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை | 23 |
| இருப்பிடம் | அம்மாப்பேட்டை, திருநாகேஸ்வரம், திம்மாவரம், செய்யார், கள்ளக்குறிச்சி, போளூர், சிதம்பரம், நெய்வேலி, எருக்கூர், சித்தர்காடு, ஆக்கூர், திருவாரூர், சுந்தரக்கோட்டை, பட்டுக்கோட்டை, அடவத்தூர், பொள்ளாச்சி, மானாமதுரை, கடச்சனேந்தல் மற்றும் தாழையூத்து. |
| அரவைத் திறன்/அளவு | மாதம் ஒன்றுக்கு 43,600 டன்கள். |

| ஆண்டு | அளவு (இலட்சம் டன்கள்) |
|---|---|
| 1996-1997 | 2.62 |
| 1997-1998 | 3.21 |
| 1998-1999 | 3.31 |
| 1999-2000 | 3.60 |
| 2000-2001 | 3.62 |

5.6. எல்லாத் தொழிலாளிகளும் எந்நேரமும் புழுதிபடர்ந்த பகுதியிலேயே வேலை செய்வதால் அவர்கள் ஆரோக்கியம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, 1999-2000 மற்றும் 2000-2001-ஆம் ஆண்டுகளில் நவீன அரிசி ஆலைகளில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளிகளுக்கும் மருத்துவப்





பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இது 2001-2002-ஆம் ஆண்டுக்கும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. எல்லா ஆலைகளிலும் அரிசி உமியின் சாம்பல் சேர்வதால் மாசு தொடர்பான பிரச்சினை வருவதால் அருகில் உள்ள பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. காற்று மாசுபடுவதைத் தவிர்க்க நவீன அரிசி ஆலைகளில் உமியை எரிப்பதற்குப் பதிலாக இயற்கை வாயுவைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது இத் திட்டம் முடிவு செய்யப்பட்டு திருவாரூரில் ஊருக்கு நடுவே அமைந்துள்ள நவீன அரிசி ஆலையில் திருப்திகரமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தை திருவாரூர் மாவட்டத்திலுள்ள சுந்தரக்கோட்டையிலும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அமுதம் பல்பொருள் அங்காடிகள்:**

5.7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 37 அமுதம் பல்பொருள் அங்காடிகளை சென்னை மற்றும் கடலூர் பகுதிகளில் நடத்தி வருகிறது. அரிசி, மளிகை, எண்ணெய், அழகு சாதனங்கள் போன்றவை இந்த பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படுகின்றன. இவ்வங்காடிகளின் மொத்த மாதாந்திர வியாபார அளவு சுமார் ரூ. 1.85 கோடி ஆகும்.

**கட்டுமானப் பிரிவு:**

5.8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கட்டுமானப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இப் பிரிவு செயற் பொறியாளர் தலைமையில் இயங்கி வருகிறது. பொதுப் பணித் துறை மற்றும் மின்சார வாரியம் போன்றவற்றிலிருந்து அயற்பணியில் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 6,22,400 டன்கள் கொள்ளளவுள்ள கிடங்குகளை 136 வட்டங்களில் கட்டியுள்ளது.

5.9. காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 100 டன்கள் கொள்ளளவுள்ள கிடங்கு, உலர்களம், சாக்குக் கொட்டகை மற்றும் அலுவலக அறை ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய 195 நேரடிக் கொள்முதல் நிலையங்களைக்

[2001 செப்டம்பர் 10

கட்டியுள்ளது. இன்னும் இரண்டு கொள்முதல் நிலையங்கள் கட்டுமானத்தில் உள்ளன. ஆறு நேரடிக் கொள்முதல் நிலையங்கள் ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட 2001-2002-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவிரிப் பாசனப் பகுதிகளில் கொள்முதல் பருவங்களில் தேவைக்கேற்ப நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

5.10. பொது விநியோக முறை செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டு 29 மாவட்டத் தலைமையிடங்களிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மண்டல அலுவலகம் உள்ளது. சென்னையிலுள்ள தலைமையகத்தைத் தவிர 19 மண்டல அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மண்டல அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு :**

5.11. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வாங்கப்படும் அனைத்துப் பொருட்களின் தரத்தினையும் உறுதி செய்வதற்கு இப் பிரிவு உதவி செய்கிறது. கொள்முதல் செய்யப்படும் நெல் குறிப்பிட்ட தரத்தில் உள்ளதா என்பதை நிர்ணயம் செய்வதற்காக இப் பிரிவினைச் சார்ந்த அலுவலர்கள் நேரடிக் கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்கிறார்கள். கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் மாதிரி எடுக்கப்பட்டு தரம் குறைந்த நெல் வாங்கப்பட்டால், அதற்குக் காரணமானவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தரம் குறைந்த நெல் வாங்கியதற்கான பணத்தையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**நிதி :**

5.12. இக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் இக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது (1972-73) ரூ. 3 கோடியாக இருந்தது, தற்போது ரூ. 35 கோடியாக உயர்ந்துள்ளது. செலுத்தப்படும் பங்கு மூலதனம் ரூ. 32.59 கோடியாகும். 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 12 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வியாபார அளவு ரூ. 2,780 கோடியை எட்டியுள்ளது.



2001 செப்டம்பர் 10]

## அத்தியாயம் - 6

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

6.1. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், 1956-ஆம் ஆண்டைய வேளாண் உற்பத்தி (வளர்ச்சி மற்றும் சேமிப்பு) சட்டத்தின்கீழ் டிசம்பர் 1957-ல் தோற்றுவிக்கப்பட்டு, 2-5-1958 முதல் இயங்கி வருகிறது. மேற்படி சட்டம், 1962-ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம் என மாற்றப்பட்டது.

**முக்கிய கடமைகள் :**

(அ) உணவு தானியங்கள் மற்றும் பிற அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களை, அறிவியல் முறையில் சேமித்து வைக்க வசதிகள் செய்தல்.

(ஆ) முறையான விற்பனைக்கு ஏற்பாடு செய்தல், கழிவுகளை நீக்குதல் மற்றும் இடைத் தரகர்களைத் தவிர்த்தல்.

(இ) சேமிப்புக் கிடங்குகளில் அளிக்கப்பட்ட பற்றுச் சீட்டு அடமானத்தின் பேரில் கடன் வசதி செய்து கொடுத்தல்.

**நடவடிக்கைகள்**

1. இக் கழகம் மாநிலம் முழுவதும் 69 இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் நிறுவியுள்ளது.
2. இக் கழகம் இழப்பைத் தவிர்க்கும்பொருட்டு சந்தை ஆராய்வு செய்து, வளர்ச்சி வாய்ப்புள்ள இடங்களில் நிலத்தைத் தேர்ந்தெடுத்து, விஞ்ஞான முறையில் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுகிறது.
3. வங்கிகளில் கடன் பெறும் வகையில் விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் பிறருக்கும் உதவக்கூடிய சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை வழங்குகிறது.
4. இக் கழகம் சரக்கை எடுக்கவும், ஏற்றுதல்/இறக்குதல் மற்றும் சரக்கு வைத்திருப்பவரின் வசதிக்கேற்ப அவற்றைக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றைக் கவனிக்க தனியாக ஒப்பந்தக்காரர்களை நியமிக்கிறது.

[2001 செப்டம்பர் 10

5. இக்கழகம் பூச்சித் தொற்றுதலைத் தவிர்க்கும் சேவையையும் மேற்கொள்கிறது.

6. சேமிப்புக் கிடங்குகளை நிர்வகிக்கவும், கையாளவும் பயிற்சி அளிக்கிறது.

**நிர்வாக அமைப்பு**

6.2. இக்கழகம், ஒரு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் தலைமையகம் சென்னையில் உள்ள கிண்டியில் உள்ளது. மாவட்டங்களில் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 மண்டலங்களில் மண்டல மேலாளர்/முதுநிலை மண்டல மேலாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

**சேமிப்பு**

6.3. இக்கழகம் பெரும்பாலும், தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில், 69 சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் மொத்தக் கொள்ளளவு 6.95 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். இதில் இக்கழகத்தின் 92,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள வாடகைக் கிடங்குகளும் அடங்கும். இக்கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளை விவசாயிகள், உர உற்பத்தியாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், சிமெண்ட் உபயோகிக்கும் துறைகள் மற்றும் தனியார் வியாபாரிகள் ஆகியோர் உபயோகிக்கின்றனர். சமீப காலத்தில் 'டான்பெட்' மற்றும் 'நேபட்' நிறுவனங்களால் மத்திய அரசின் ஆதார விலை திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரையும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுகின்றது.

6.4. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதியாளர்களின் பயன்பாட்டிற்கென ஒரு சுங்கப்பிணை சேமிப்புக் கிடங்கினை நடத்தி வருகிறது.

**இதர நடவடிக்கைகள்**

6.5. இந்நிறுவனம், அறிவியல் முறையில் சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதுடன், உணவகம், திரையரங்கம், தனியார் கிடங்குகள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில்



2001 செப்டம்பர் 10]

பூச்சித் தொற்றுதலைத் தவிர்க்கும் பணியும் இந்நிறுவனத்தின் பூச்சித் தொற்றுதல் பிரிவின் மூலம் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, கட்டுமானப் பணிகள் தொடங்கும் முன்பும், பின்பும் எலித்தொல்லை, கரையான் தொல்லை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல், மேலும், கொசுத் தடுப்பு மற்றும் பொதுவான பூச்சித் தொற்றுதலைத் தடுக்கும் பணி ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்கிறது. மேலும், இக்கழகம் விஞ்ஞான முறை சேமிப்பு மற்றும் சரக்குகளைப் பாதுகாத்தல் பற்றிய பயிற்சியை இந்நிறுவனத்தின் மற்றும் பிற நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்குகிறது.

**நிதி**

6.6. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 800 இலட்சம் ஆகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 761 இலட்சம் ஆகும். இந்நிறுவனத்திற்கு மாநில அரசும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் 50:50 விகிதத்தில் பங்கு மூலதனம் அளித்துள்ளன.

## அத்தியாயம் - 7

## பொது

7.1. சாதாரண மக்களின் நலவாழ்வில் உணவுப் பொருட்களின் விலை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. உணவுப் பொருட்களின்மீது ஏற்படும் சிறிது விலை மாற்றம்கூட நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை நுகர்வோர்களது அடிப்படை ஊட்டச்சத்துத் தேவையினைப் பாதிக்கிறது. இதற்காக, தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள விலைவாசிக் கண்காணிப்புக் குழு வெளிச்சந்தை விலை நிலவரத்தை அவ்வப்போது ஆய்ந்து வருகிறது. இக்கொள்கைக் குறிப்பில், உணவுப் பொருட்களின் விலையை நிலையாக வைத்தல் மற்றும் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைப்பதால் பொதுமக்களுக்கு உணவு உத்தரவாதத்தினை மேலும் அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்து சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. தற்போதுள்ள பொது விநியோகத் திட்டத்தினை மேலும் பயன்தரும் வகையில் சீரமைத்து, புத்துயிரூட்டி, மாற்றியமைப்பதற்கு இத்துறை மிகவும் முக்கியத்துவம் அளிக்கும். பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தப்படுவதை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதோடு நியாயவிலைக் கடைகளில் விநியோகிக்கப்படுகின்ற பொருட்கள் நல்ல தரமுள்ளதாக அமைவதற்கும் உறுதியளிக்கப்படும். குடும்ப அட்டைகள் வழங்குவதிலுள்ள குறைபாடுகள்

[2001 செப்டம்பர் 10

களையப்படும். ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு அளிக்கப்படும் புள்ளிவிவரங்களைவிட, மக்கள் அன்றாடம் வாழும் வாழ்க்கைத் தரமே உண்மையான அளவுகோல் என்பதை ஏற்றுக்கொண்டு, இத்துறை, அந்தக் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் சரியான வழியில் மேற்கொண்டு வருகிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே, இத்துறை குறித்தும் தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் குறித்தும் ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொண்டதன் பயனாகக் குறைகள் கண்டறியப்பட்டு, நடைமுறையில் உள்ள பொது விநியோகத் திட்டத்தினைச் சீரமைக்க நல்ல ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது ஆணைகளை, முழுமையாகவும், விரைவாகவும் செயல்படுத்த இத்துறை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

7.2 விழிப்புணர்வுடைய தமிழக மக்களின் நல்லாதரவுடன் சிறப்பாகப் பணியாற்றி அவர்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற இத்துறை உறுதிபூண்டுள்ளது.



2001 செப்டம்பர் 10]

## இணைப்பு - 1

### நெல் கொள்முதல் விலை, கொள்முதல் முறை போன்ற விவரங்கள்

| வ. எண் | பருவம் | நெல் கொள்முதல் விலை (குவிண்டாலுக்கு) சாதாரணம் | சன்னம் | மிகச்சன்னம் | கொள்முதல் முறை | கொள்முதல் செய்த அளவு | ஊக்கத் தொகை, இடைநிகழ்வுச் செலவு கொடுக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | | (4) | (5) | (6) |
| 1. | சம்பா 1996 | 360 | 375 | 395 | இணைக் கொள்முதல் | 1,34,000 | 10 (வட்டாரக் கிடங்கு கொள்முதல்) 5 (நேரடிக் கொள்முதல் நிலையத்தால்) |
| | குறுவை 1996 | 360 | 375 | 395 | ஏகபோகக் கொள்முதல் | 1,11,366 | 40 (*) |
| | சம்பா 1997 | 360 | 395 | 415 | ஏகபோகக் கொள்முதல் | 9.77.426 | 50(*) |
| 2. | குறுவை 1997 | 415 | கிரேடு-ஏ 445 | | இணைக் கொள்முதல் | 7.00.659 | 35(**) |
| 3. | சம்பா 1998 | 415 | 445 | | இணைக் கொள்முதல் | 11,36,823 | 35(**) |
| | குறுவை 1998 | 440 | 470 | | இணைக் கொள்முதல் | 44,550 | 35(**) |
| 4. | சம்பா 1999 | 440 | 470 | | ஏகபோகக் கொள்முதல் | 10,50,099 | 50(*) |
| | குறுவை 1999 | 490 | 520 | | இணைக் கொள்முதல் | 1,63,180 | 35(**) |
| | | | | | ஏகபோகக் கொள்முதல் (23.12.1999 முதல் 20.03.2000) | 10,84.980 (20.03.2000 வரை) | 50(*) காவிரிப் பாசன பகுதிகள் 35(**) காவிரிப் பாசனப் பகுதியல்லாத இடங்கள் |
| 5. | சம்பா 2000 | 490 | 520 | | இணைக் கொள்முதல் (21.3.2000 முதல் 30.6.2000) | 82,020 (21.3.2000 முதல் 15.4.2000 வரை) | 35(**) அனைத்து பகுதிகள் |
| | குறுவை 2000 | 510 | 540 | | இணைக் கொள்முதல் (1.9.2000 முதல் 15.12.2000) | 5,50,000 | 35(**) அனைத்து பகுதிகள் |
| 6. | சம்பா 2001 | 510 | 540 | | இணைக் கொள்முதல் (16.12.2000 முதல் 1.9.2001) | 19,74,279 (27.8.2001 வரை) | 40(**) அனைத்து பகுதிகள் |

(*) ஊக்கத் தொகை (**) இடைநிகழ்வுச் செலவு

[2001 செப்டம்பர் 10

# இணைப்பு - 2

## 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டு ஜூலை வரையில் நுகர்வு செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விவரங்கள்

| வ. எண் | மாதம் | அரிசி (டன்களில்) 2000 | அரிசி (டன்களில்) 2001 | சர்க்கரை (டன்களில்) 2000 | சர்க்கரை (டன்களில்) 2001 | மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்) 2000 | மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்) 2001 | கோதுமை (டன்களில்) 2000 | கோதுமை (டன்களில்) 2001 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சனவரி | 181045 | 177755 | 24243 | 23568 | 77723 | 77051 | 6693 | 2217 |
| 2. | பிப்ரவரி | 172972 | 168005 | 24976 | 22536 | 78083 | 77001 | 5953 | 2255 |
| 3. | மார்ச் | 171102 | 167885 | 25010 | 22948 | 76460 | 76137 | 6617 | 2050 |
| 4. | ஏப்ரல் | 165037 | 166546 | 24490 | 23546 | 75465 | 75233 | 3703 | 1850 |
| 5. | மே | 168845 | 168417 | 24927 | 24057 | 73614 | 70340 | 2739 | 1813 |
| 6. | ஜூன் | 173358 | 171019 | 24439 | 24165 | 73461 | 69162 | 2164 | 2093 |
| 7. | ஜூலை | 180922 | 180477 | 24610 | 23621 | 73825 | 67913 | 1688 | 2022 |
| 8. | ஆகஸ்ட் | 183220 | .. | 25397 | .. | 75407 | .. | 984 | .. |
| 9. | செப்டம்பர் | 180738 | .. | 25431 | .. | 75000 | .. | 486 | .. |
| 10. | அக்டோபர் | 175860 | .. | 24273 | .. | 73203 | .. | 210 | .. |
| 11. | நவம்பர் | 180589 | .. | 22691 | .. | 74858 | .. | 1424 | .. |
| 12. | டிசம்பர் | 183073 | .. | 23007 | .. | 81078 | .. | 2309 | .. |
| | மொத்தம் | 2116761 | 1200104 | 293494 | 164441 | 908177 | 512837 | 34970 | 14300 |



2001 செப்டம்பர் 10]

# இணைப்பு - 3

## 2000 ஆம் ஆண்டில் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்

| மாதம் | அரிசி குவிண்டால் | அரிசி மதிப்பு ரூ. | வெளிச் சந்தை அரிசி குவிண்டால் | வெளிச் சந்தை அரிசி மதிப்பு ரூ. | நெல் குவிண்டால் | நெல் மதிப்பு ரூ. | மண்ணெண்ணெய் கிலோ லிட்டர் | மண்ணெண்ணெய் மதிப்பு ரூ. | இதர பொருட்கள் மதிப்பு ரூ. | மொத்த மதிப்பு ரூ. | சோதனைகளின் எண். | கைது செய்யப்பட்ட நபர்களின் எண். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சனவரி | 577 | 579009 | 1407 | 1506736 | 1442 | 1006001 | 7356 | 37146 | 298887 | 3426779 | 764 | 118 |
| பிப்ரவரி | 196 | 222837 | 2281 | 2410483 | 721 | 442019 | 5387 | 42586 | 767109 | 3885034 | 841 | 79 |
| மார்ச் | 1439 | 1453180 | 449 | 536412 | 219 | 128875 | 26454 | 225635 | 517623 | 2861725 | 312 | 13 |
| ஏப்ரல் | 1854 | 2212458 | 2024 | 2452967 | .. | .. | 11402 | 118011 | 1548180 | 6331616 | 732 | 132 |
| மே | 988 | 845239 | 28 | 29760 | 69 | 57856 | 6612 | 61553 | 217094 | 1211502 | 182 | 24 |
| ஜூன் | 902 | 780392 | 1405 | 1520272 | 262 | 112251 | 14549 | 185683 | 400607 | 2999205 | 276 | 26 |
| ஜூலை | 1131 | 1177175 | 112 | 165250 | 0 | 0 | 7190 | 74900 | 1090965 | 2508290 | 525 | 76 |
| ஆகஸ்ட் | 1078 | 824869 | 0 | 0 | 0 | 0 | 13306 | 132511 | 720496 | 1677876 | 636 | 129 |
| செப்டம்பர் | 811 | 841149 | 460 | 506360 | 0 | 0 | 7402 | 73793 | 360090 | 1781392 | 623 | 184 |
| அக்டோபர் | 1144 | 1424790 | 113 | 178065 | 163 | 164323 | 9598 | 116165 | 4382927 | 6266270 | 667 | 191 |
| நவம்பர் | 2227 | 2479868 | 801 | 1047300 | 170 | 124700 | 20427 | 265431 | 23771552 | 2768851 | 810 | 239 |
| டிசம்பர் | 1062 | 1226246 | 250 | 572955 | 324 | 287750 | 6125 | 420508 | 4943279 | 7450738 | 699 | 230 |
| மொத்தம் | 13409 | 14067212 | 9330 | 10926560 | 3370 | 2323775 | 135808 | 1753922 | 39018809 | 68089278 | 7067 | 1441 |

[2001 செப்டம்பா 10

# இணைப்பு-3(அ)

**2001 ஆம் ஆண்டு ஜூலை வரையில், 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்**

| | அரிசி | | வெளிச் சந்தை அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர பொருட்கள் | மொத்த | சோதனை | கைது செய்யப் பட்ட |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | குவிண டால | மதிப்பு ரூ. | குவிண் டால் | மதிப்பு ரூ. | குவிண் டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | மதிப்பு ரூ. | மதிப்பு ரூ. | களின் எண்ணிக்கை. | நபர் களின் எண். |
| சனவரி | 969 | 1070738 | 137 | 172075 | 0 | 0 | 28726 | 367702 | 4327116 | 5937631 | 664 | 232 |
| பிப்ரவரி | 1354 | 1357907 | 1020 | 1763279 | 0 | 0 | 46466 | 661392 | 4619361 | 8401939 | 764 | 227 |
| மார்ச் | 1227 | 1331019 | 1564 | 2467926 | 0 | 0 | 22309 | 312607 | 5490178 | 9601730 | 791 | 260 |
| ஏப்ரல் | 1061 | 1190580 | 107 | 132555 | 199 | 129825 | 12755 | 165919 | 4363668 | 5852722 | 802 | 215 |
| மே | 1331 | 1513441 | 228 | 389543 | 0 | 0 | 15776 | 216506 | 6114539 | 8234029 | 739 | 197 |
| ஜூன் | 1277 | 1358724 | 92 | 143000 | 916 | 906460 | 17375 | 266985 | 2207115 | 4882284 | 737 | 207 |
| ஜூலை | 2309 | 2420999 | 418 | 574210 | 104 | 52332 | 37838 | 542250 | 4851762 | 8441553 | 776 | 198 |
| மொத்தம் | 9528 | 10243408 | 3566 | 5642588 | 1219 | 1088617 | 181245 | 2533361 | 32932531 | 51351888 | 5273 | 1536 |



2001 செப்டம்பர் 10]

# இணைப்பு-4

**2000 ஆம் ஆண்டில், 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்**

| | பொ.வி.தி. அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர | மொத்த |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | குவிண் டால் | மதிப்பு ரூ. | குவிண் டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | பொருட்கள் மதிப்பு ரூ. | மதிப்பு ரூ. |
| சனவரி | 1,458 | 14,54,005 | 312 | 1,75,800 | 17,597 | 1,31,993 | 108278 | 1870076 |
| பிப்ரவரி | 662 | 6,65,158 | 489 | 2,17,160 | 4,590 | 37,704 | 689858 | 1609880 |
| மார்ச் | 1,709 | 16,80,579 | 120 | 60,435 | 15,505 | 1,50,321 | 22856 | 1914191 |
| ஏப்ரல் | 1,746 | 29,51,581 | 132 | 91,410 | 6,254 | 68,430 | 1,96,434 | 33.07,845 |
| மே | 1,059 | 9,27,370 | 18 | 11,030 | 6,283 | 62,585 | 1,39,792 | 11,40,777 |
| ஜூன் | 1,575 | 9,63,242 | 14 | 10,360 | 9,898 | 1,17,650 | 1,55,407 | 12,46,659 |
| ஜூலை | 1,634 | 13,00,195 | 0 | 0 | 7151 | 71,993 | 4,64,787 | 18.36,975 |
| ஆகஸ்ட் | 5,684 | 98,4117 | 0 | 0 | 6,940 | 49.610 | 1.55.358 | 11.89.085 |
| செப்டம்பர் | 881 | 7,65,023 | 0 | 0 | 7,946 | 95,114 | 1,87,929 | 10,48,066 |
| அக்டோபர் | 1,846 | 21,82,903 | 21 | 21,000 | 15,761 | 1,58,054 | 6,03,079 | 29,65,036 |
| நவம்பர் | 1,960 | 19.28,421 | 151 | 1,68,650 | 5,949 | 91,159 | 9,97,051 | 31,85,281 |
| டிசம்பர் | 1,767 | 18,66,392 | 510 | 3,73,908 | 19,647 | 1,96,730 | 10,43,403 | 34,80,433 |
| மொத்தம் | 21,981 | 1,76,68,986 | 1,767 | 11,29,753 | 1,23,521 | 12,31,343 | 4,76,42.32 | 24794304 |

[2001 செப்டம்பர் 10

## இணைப்பு-4(அ)

**2001-ஆம் ஆண்டு ஜூலை வரையில், 1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் வழங்கல் குற்றப். புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள்**

| மாதம் | பொ.வி.தி. அரிசி | | நெல் | | மண்ணெண்ணெய் | | இதர பொருட்கள் ரூ. | மொத்த மதிப்பு ரூ |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குவிண்டால் | மதிப்பு ரூ. | குவிண்டால் | மதிப்பு ரூ. | கிலோ லிட்டர் | மதிப்பு ரூ. | | |
| ஜனவரி | 2,028 | 21,45,440 | 364 | 2,95,286 | 15,662 | 2,07,876 | 5,03,299 | 31,51,901 |
| பிப்ரவரி | 1,290 | 13,48,783 | 17,404 | 1,42,507 | 16,092 | 1,89,714 | 4,72,828 | 21,53,832 |
| மார்ச் | 2,241 | 23,78,443 | 229 | 1,34,000 | 19,051 | 2,35,094 | 9,99,007 | 37,46,544 |
| எப்ரல் | 2,065 | 26,53,251 | 113 | 1,01,940 | 17,919 | 2,21,859 | 31,64,200 | 61,41,250 |
| மே | 3,498 | 24,49,685 | 102 | 98,840 | 27,525 | 3,13,902 | 22,53,210 | 51,15,637 |
| ஜூன் | 1,391 | 13,76,377 | 196 | 82,694 | 19,852 | 2,29,533 | 12,15,883 | 29,04,487 |
| ஜூலை | 1,216 | 12,45,230 | 184 | 1,00,801 | 36,052 | 5,39,630 | 10,83,780 | 29,69,441 |
| மொத்தம் .. | 13,729 | 1,35,97,209 | 18,592 | 9,56,068 | 1,52,153 | 19,37,608 | 96,92,207 | 2,61,83,092 |



2001 செப்டம்பர் 10]

## இணைப்பு-5

**மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தில் 2000 ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**

| மாதம் | மேல்முறையீடு மனு | | நுகர்வோருக்கு | | அசல் மனு | | நுகர்வோருக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடுக்கப் பட்டவை | தீர்ப்பு வழங்கப் பட்டவை | சாதகம் | பாதகம் | தொடுக்கப் பட்டவை | தீர்ப்பு வழங்கப் பட்டவை | சாதகம் | பாதகம் |
| ஜனவரி | 58 | 0 | 0 | 0 | 16 | 0 | 0 | 0 |
| பிப்ரவரி | 73 | 0 | 0 | 0 | 22 | 0 | 0 | 0 |
| மார்ச் | 87 | 0 | 0 | 0 | 19 | 0 | 0 | 0 |
| ஏப்ரல் | 26 | 38 | 28 | 10 | 19 | 6 | 4 | 2 |
| மே | 39 | 138 | 72 | 66 | 25 | 32 | 7 | 25 |
| ஜூன் | 46 | 131 | 46 | 85 | 11 | 100 | 8 | 92 |
| ஜூலை | 71 | 129 | 61 | 68 | 18 | 14 | 2 | 12 |
| ஆகஸ்ட் | 45 | 23 | 5 | 18 | 18 | 15 | 3 | 12 |
| செப்டம்பர் | 37 | 32 | 15 | 17 | 7 | 11 | 3 | 8 |
| அக்டோபர் | 87 | 58 | 26 | 32 | 25 | 10 | 3 | 7 |
| நவம்பர் | 80 | 32 | 5 | 27 | 15 | 6 | 1 | 5 |
| டிசம்பர் | 85 | 45 | 20 | 25 | 8 | 19 | 0 | 19 |
| மொத்தம் .. | 734 | 626 | 278 | 348 | 203 | 213 | 31 | 182 |

[2001 செப்டம்பர் 10

# இணைப்பு-5 (அ)

**மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தில் 2001-ஆம் ஆண்டு ஜூலை வரையில் தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**

| மாதம் | மேல்முறையீடு மனு | | நுகர்வோருக்கு | | அசல் மனு | | நுகர்வோருக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடுக்கப் பட்டவை | தீர்ப்பு வழங்கப் பட்டவை | சாதகம் | பாதகம் | தொடுக்கப் பட்டவை | தீர்ப்பு வழங்கப் பட்டவை | சாதகம் | பாதகம் |
| ஜனவரி | 33 | 44 | 15 | 29 | 15 | 12 | 5 | 7 |
| பிப்ரவரி | 77 | 52 | 20 | 32 | 10 | 9 | 4 | 5 |
| மார்ச் | 100 | 42 | 10 | 32 | 36 | 12 | 4 | 8 |
| ஏப்ரல் | 55 | 69 | 20 | 49 | 5 | 1 | 0 | 1 |
| மே | 45 | 59 | 19 | 40 | 15 | 8 | 3 | 5 |
| ஜூன் | 70 | 30 | 10 | 20 | 21 | 6 | 2 | 4 |
| ஜூலை | 50 | 30 | 10 | 20 | 14 | 6 | 5 | 1 |
| மொத்தம் .. | 430 | 326 | 104 | 222 | 116 | 54 | 23 | 31 |



2001 செப்டம்பர் 10]

# இணைப்பு - 6

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் 2000-ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**

| மாதம் | தொடக்கத்தில் நிலுவையில் உள்ளவை | தொடுக்கப் பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப் பட்டவை | நிலுவையில் உள்ளவை | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 7,433 | 355 | 7,788 | 391 | 7,397 | 150 | 241 |
| பிப்ரவரி | 7,397 | 428 | 7,825 | 381 | 7,444 | 266 | 115 |
| மார்ச் | 7,444 | 469 | 7,913 | 542 | 7,371 | 364 | 178 |
| ஏப்ரல் | 7,371 | 500 | 7,871 | 533 | 7,338 | 238 | 295 |
| மே | 7,338 | 422 | 7,760 | 521 | 7,239 | 281 | 240 |
| ஜூன் | 7,239 | 464 | 7,703 | 508 | 7,195 | 236 | 272 |
| ஜூலை | 7,195 | 473 | 7,668 | 619 | 7,049 | 235 | 384 |
| ஆகஸ்ட் | 7,049 | 601 | 7,650 | 546 | 7,104 | 249 | 297 |
| செப்டம்பர் | 7,104 | 421 | 7,525 | 409 | 7,116 | 225 | 184 |
| அக்டோபர் | 7,116 | 370 | 7,486 | 416 | 7,070 | 219 | 197 |
| நவம்பர் | 7,070 | 447 | 7,517 | 490 | 7,057 | 201 | 259 |
| டிசம்பர் | 7,057 | 402 | 7,459 | 397 | 7,062 | 170 | 227 |
| மொத்தம் .. | 86,813 | 5,352 | 92,165 | 5,753 | 86,412 | 2,834 | 2,889 |

[2001 செப்டம்பர் 10

## இணைப்பு-6 (அ)

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் 2001-ஆம் ஆண்டு ஜுலை வரையில் தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**

| மாதம் | தொடக்கத்தில் நிலுவையில் உள்ளவை | தொடுக்கப் பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப் பட்டவை | நிலுவையில் உள்ளவை | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 7,060 | 330 | 7,390 | 519 | 6,871 | 228 | 291 |
| பிப்ரவரி | 6,871 | 415 | 7,286 | 530 | 6,756 | 259 | 271 |
| மார்ச் | 6,756 | 507 | 7,263 | 478 | 6,785 | 239 | 239 |
| ஏப்ரல் | 6,785 | 414 | 7,199 | 443 | 6,756 | 186 | 257 |
| மே | 6,756 | 347 | 7,103 | 435 | 6,668 | 201 | 234 |
| ஜுன் | 6,668 | 552 | 7,220 | 471 | 6,749 | 233 | 238 |
| ஜுலை | 6,749 | 513 | 7,262 | 434 | 6,828 | 234 | 200 |
| மொத்தம் .. | 47,645 | 3,078 | 50,723 | 3,310 | 47,413 | 1,580 | 1,730 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223951.
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.